நமது

# வனாந்தரப் பிரயாணங்கள்



# நமது

# வனாந்தரப்

# பிரயாணங்கள்

# *Our Wilderness Wanderings*

***Bro. Anton Frey***

[தமிழாக்கம்]

**FFNC**
**Publications**

# முன்னுரை

இஸ்ரயேலின் ஆசரிப்புக்கூடாரம் தொடர்பான சத்தியக் காரியங்களை வெகுவாய்த் தியானித்து வந்த நியூயார்க்கின் ஸ்டேட்டன் தீவைச் சேர்ந்த சகோதரர் ஆண்டன் ஃப்ரே அவர்கள், ஆசரிப்புக்கூடாரம் பயன்பாட்டிலிருந்த காலத்தில் இஸ்ரயேலரின் நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்பது குறித்தும் ஆழமாகத் தியானித்திருந்தார். பின்னாட்களில் இவை இஸ்ரயேலின் "**வனாந்தரப் பிரயாணங்கள்**" எனும் தலைப்பின் கீழ்த் தொடர் பாடங்களாகப் பகிரப்படலாயின.

இப்புத்தகத்தில் அந்தப் பிரசங்கங்களை அப்படியே எழுத்து வடிவில் கொடுக்காமல், மாறாக அவற்றில் இடம்பெற்றுள்ள அதே சத்தியக் கருத்துகளைச் சுருக்கமான முறையில் வடித்துக் கொடுப்பதற்குப் பிரயாசம் ஏறெடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரயேல் சரித்திரத்தின் மிக முக்கியமான காலக்கட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட இந்தப் பாடங்கள், "விசுவாசக் குடும்பத்தாருக்கு" ஆவிக்குரிய வகையில் உதவியாக இருக்கும் என்கிற மனோவாஞ்சையின் பேரில் இப்புத்தகம் வெளியிடப்படுகின்றது.

**1 கொரிந்தியர் 10:11 – "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது."**

வெளியீட்டாளர் 2013

**Portland Area Bible Students**

# பொருளடக்கம்


**பாகம் ஒன்று** ........................................................................................ 1

**பாகம் இரண்டு** ........................................................................................ 6

**பாகம் மூன்று** – யாத்திராகமம் 12:37 – 39; 13:17 – 22; 14:1 – 31; எண்ணாகமம் 33:5 – 8 ................. 12

**பாகம் நான்கு** – யாத்திராகமம் 15:1 – 27; எண்ணாகமம் 33:8, 9 .............................................. 22

**பாகம் ஐந்து** – யாத்திராகமம் 16:1 – 35; எண்ணாகமம் 33:10, 11 .............................................. 33

**பாகம் ஆறு** – யாத்திராகமம் 17:1 – 16; எண்ணாகமம் 33:12 – 14 .............................................. 45

**பாகம் ஏழு** – யாத்திராகமம் 18:2 – 12; 19:1 – 8; எண்ணாகமம் 33:15 ......................................... 58

**பாகம் எட்டு** – யாத்திராகமம் 20:1 – 32:5 ............................................................ 71

**பாகம் ஒன்பது** – யாத்திராகமம் 32:7 – 29, 32 ........................................................ 83

**பாகம் பத்து** – யாத்திராகமம் 33:1 – 7; 31:1 – 6; 36:1 – 19 .................................................. 94

**பாகம் பதினொன்று** – லேவியராகமம் 8:1 – 36; யாத்திராகமம் 29:1 – 37 .................................. 113

**பாகம் பன்னிரெண்டு** – எண்ணாகமம் 9:15 – 23; 10:1 – 28 (எண்ணாகமம் 3:25, 26, 31, 32, 36, 37) .. 130

# பாகம் ஒன்று

அப்போஸ்தலனாகிய பவுல் **கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் (10:11)**, இஸ்ரயேலருக்குச் சம்பவித்த காரியங்கள் யாவும் நிழல்களாகச் சம்பவித்தன என்றும், அதேசமயம் உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு அவை எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கின்றார்.

எனவே, தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்பிற்குப் **பாத்திரமாய் நடப்பதற்கும்**, இஸ்ரயேலரைப் போல **பொல்லாங்கானவைகளை இச்சியாமல் இருப்பதற்கும் (1 கொரி. 10:6)**, அவநம்பிக்கை அல்லது கீழ்ப்படியாமையினால் **தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கத் தகுதியற்றவர்களாக மாறாமல் இருப்பதற்கும்** ஏதுவாக, மாம்சீக இஸ்ரயேலரின் அனுபவ பாடங்களைத் தங்களுக்கான புத்திமதிகளாக ஏற்றுக்கொள்ளுபவர்களுக்கு, அது சம்பந்தமான தியான ஆராய்ச்சி என்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்படியாக, வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இஸ்ரயேலரின் அனுபவங்களை உத்தம நிதானிப்போடு தியானித்து, அது வெளிப்படுத்தும் வெளிச்சத்தின்கீழ், எந்தளவுக்கு நாம் நமது இரட்சிப்பின் தேவனிடம் உண்மையாகக் காணப்படுகிறோம் என்கிற நோக்கில் நம்மை நாம் நிதானித்துப் பார்ப்பது நன்மை பயப்பதாக இருக்கும்.

நாம் நமது தியானத்தை, எகிப்து தேசத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த இஸ்ரயேலரிடமிருந்து தொடங்கப்போகிறோம்!



ஒருவேளை இஸ்ரயேலரின் கோத்திரப் பிதாக்கள் பாவம் செய்யாமல் இருந்திருந்தால், இஸ்ரயேலர் எகிப்து தேசத்தில் காணப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது எனத் தோன்றுகிறது! ஏனெனில் அதற்கு முன்பே, யோசேப்பும் அவரது சகோதரரும் தங்கள் தகப்பனாகிய யாக்கோபோடு, கானான் தேசத்தில்தான் வாழ்ந்து வந்தனர். **(ஆதி. 36:1,2)** அதுவே வாக்களிக்கப்பட்ட தேசமாகும்! ஆனால், யோசேப்பின் சகோதரரோ அவர் மீது பொறாமை கொண்டு, அவரை ஒழித்துக்கட்ட முடிவுசெய்து, அவரை அடிமையாக விற்றுப் போட்டனர். பின்னாட்களில் அதுவே தெய்வீக மேற்பார்வையின்கீழ் அவர்களும் எகிப்திற்கு வரக் காரணமாகியது. யோசேப்பு உயிரோடு இருந்த நாளளவும், அவர்கள் அந்தப் புறஜாதி தேசமாகிய எகிப்திலும் செழிப்பாக வாழ்ந்து வந்தனர். அதேசமயம், அவர்கள் கானான் தேசத்தின் மீதான பிடியையும் இழந்திருந்தனர். இப்படியாக, காலப்போக்கில் அவர்கள் பிள்ளைகளும், எகிப்து தேசத்தில் யோசேப்பு அடிமையாக இருந்ததைப் போலவே, அடிமைகளாக வாழ நேர்ந்தது.

அதுபோலவே, தேவனுடைய மெய்யான இஸ்ரயேலராகிய நாமும் நமது சொந்த தனிப்பட்ட பாவங்கள் நிமித்தமாக அல்லாமல், மாறாக நமது பிதாக்கள் நம்மை எகிப்திற்கு விற்றுப்போட்ட காரணத்தினால், உலகம் எனும் எகிப்தில் பிறந்து அடிமைகளாகக் காணப் படுகிறோம். பூர்வகால சங்கீதக்காரனும் **“இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்” (சங். 51:5)** என்று கூறியிருக்கிறானே! இது **“பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின” (எரே. 31:29)** என்பதன் அடிப்படையில் நடந்த ஒன்றாகும்!

தகப்பனாகிய ஆதாம் செய்த பாவம் எதுவாக இருந்தாலும்சரி, ஆனால் அது கீழ்ப்படியாமையாக இருந்ததே காரியம்! அதன் விளைவாக அவர் ஏதேன் தோட்டத்து **“இளைப்பாறுதலை”** இழந்து, இவ்வுலகத்தின் பார்வோனுக்கு அடிமையானார்; அந்தப் பார்வோனுக்காக அவர் தனது முகத்தின் வியர்வை சிந்தி உழைக்க வேண்டியதாயிற்று. அவருடைய பிள்ளைகள் அனைவரும் இவ்வுலகமெனும் எகிப்தில் பிறந்தபோது, அவர்களும் ‘பாவம் மற்றும் மரணம்’ எனும் கொடூரமான துஷ்ட அதிகாரிகளுக்குக் கீழ்ப்பட்ட அடிமைகளானார்கள். இதையே பரி. பவுல் **உரோமர் 5:12** – ஆம் வசனத்தில்: **“இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று”** என்று கூறியிருக்கிறார்.

யோசேப்பை அறியாத ஒரு பார்வோன் எழும்பி, தன் தேசத்தில் வாழும் இஸ்ரயேலர் மிகுதியாய்ப் பெருகிவிடுவார்கள் என அஞ்சி, அவர்களைக் கட்டுப்படுத்தவும் அவர்களின் பெருக்கத்தைத் தடைபண்ணவும் திட்டங்களைத் தீட்டினான். அதுபோலவே, எதிராளியும் (சாத்தான்) மெய்க் கிறிஸ்தவத்தின் பரவலைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் தான் ஏதாகிலும் செய்யாமல் இருந்தால், விரைவில் அது தனக்கே ஆபத்தாக மாறிவிடும் என்பதையும், தனது இராஜ்யமும் அதிகாரமும் தன்னைவிட்டுப் போய்விடும் என்பதையும் நன்கு அறிந்தவனாய்க் காணப்படுகிறான்.

எகிப்திலிருந்த மாம்சீக இஸ்ரயேலரின் விஷயத்தில், பார்வோன் அவர்கள் மீது

கொடூரமான அதிகாரிகளை நியமித்ததோடுகூட, பித்தோம் (Pithom) மற்றும் ராமசேஸ் (Raamses) என்கிற இரண்டு பெரிய பண்டசாலைப் பட்டணங்களையும் (Treasure Cities) தனக்காகக் கட்டச் செய்தான். **(யாத். 1:11)** அதுபோலத்தான், மாபெரும் நிஜமான பார்வோனும், கத்தோலிக்கம் மற்றும் புரோட்டஸ்டன்டிசம் எனும் தனது இரண்டு பெரிய பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டும் வேலையில் கிறிஸ்தவ ஜனங்களை ஈடுபடுத்தினான். இப்படியாக இம்மாபெரும் கட்டமைப்புகளைப் கட்டிப் பராமரிக்கும் பணியானது கிறிஸ்தவ மண்டலத்தினை ஓயாமல் இயங்க வைத்துக்கொண்டிருக்கிறது (busy) என்றால் அது மிகையாகாது.

**எகிப்தியர் இஸ்ரயேல் புத்திரரைக் கொடுமையாய் வேலைவாங்கினார்கள் என்றும்; சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் சகலவித வேலையினாலும், அவர்களுக்கு அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினார்கள் என்றும், அவர்களைக் கொண்டு செய்வித்த மற்ற எல்லா வேலைகளிலும், அவர்களைக் கொடுமையாய் நடத்தினார்கள்** என்றும் வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. **(யாத். 1:13, 14)** இருப்பினும், இந்தத் துன்பங்கள் மற்றும் கஷ்டங்களுக்கு மத்தியிலும் இஸ்ரயேலர் பலுகிப் பெருகியதாகவே தெரிகிறது. அதுபோலவே, தேவனுடைய மெய்யான இஸ்ரயேலரும்கூட அடிமைப்படுத்தப்பட்டுத் தங்களின் வீரியத்தையும், வைராக்கியத்தையும் குன்றச் செய்யும் காரியங்களைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டாலும், அந்தச் சூழலிலும் செழித்தோங்குவார்கள் என்பதாகத் தெரிகிறது. இருப்பினும், சாத்தான் நீண்ட காலத்திற்கு இந்நிலைமையை நீடிக்க விடமாட்டான் என்பதால், அவர்களின் சக்தியை உறிஞ்சி எடுக்கும் விதமாக, தனது பண்டசாலைப் பட்டணங்களைக் கட்ட வைப்பதோடுகூட, வேறு வழிமுறைகளையும் கையாளுவான்.

அங்கே மாம்சீக இஸ்ரயேலரைப் பொறுத்தவரையில் இது எவ்விதமாக நடந்ததெனில், பார்வோன் இஸ்ரயேலின் மருத்துவச்சிகளிடம் யூதருக்குப் பிறக்கும் பச்சிளங்குழந்தைகளைக் கொல்லும்படிக்குக் கட்டளை பிறப்பித்தான்; அவர்களோ மனுஷருக்குப் பயப்படுவதை விடவும் சர்வவல்ல தேவனுக்கு அதிகமாகப் பயந்த காரணத்தினால், குழந்தைகளைக் கொல்லாமல் தப்புவித்தனர். இதன் விளைவாக இஸ்ரயேல் ஜனங்கள் பெருகி மிகுதியும் பலத்துப் போனார்கள். **(யாத். 1:15 – 19)** அதுபோலவே, தேவனுடைய மெய்யான இஸ்ரயேலரின் பெருக்கத்தைத் தடுத்து நிறுத்த எதிராளியால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு திட்டமும் தோல்வியில் முடிந்தது. ஏற்ற வேளையில், இந்த மெய்யான இஸ்ரயேலர் இந்த உலகமாகிய எகிப்தை விழுங்கி, அதைத் தேவனுடைய நீதியின் இராஜ்யமாக மாற்றப்போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இருப்பினும், இந்த (ஆவிக்குரிய) இஸ்ரயேலர் தொடர்ந்து எகிப்திலேயே வசிக்க விரும்புவதில்லை; அவர்கள் வாக்குத்தத்த தேசமாகிய கானானைச் சுதந்தரிப்பதற்கு வாஞ்சையோடு காத்திருப்பதுடன், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடையவும் விரும்புகிறார்கள். இருப்பினும், அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ள ஏறெடுக்கும் எல்லா பிரயாசமும் தோல்வியடைவதால், சாத்தானுக்குச் சில வெற்றிகள் கிடைப்பது போல் தெரியலாம். ஆனால், அது வெறும் தற்காலிக வெற்றிகளே! ஏனெனில், தேவ ஜனங்களின் விடுதலை என்பது அவர்களின் சுய முயற்சியினால் அடையப்படுவதில்லை, மாறாக எகிப்தின் நடுவிலேயே மெய்யான இஸ்ரயேலன் ஒருவரை எழுப்பி, அவரைத் தம் ஜனங்களை

விடுவிக்கும் இரட்சகராகவும் மீட்பராகவும் நிலைநிறுத்திய தேவனாலேயே அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிடும்படிக்கும், பெண்பிள்ளைகளை எல்லாம் உயிரோடே வைக்கும்படிக்கும் கட்டளையிட்டதன்பேரில் பார்வோன் எப்பேர்ப்பட்ட மோசமான முயற்சிகளை ஏறெடுத்தான் என்பதை நாம் அறிவோம். **(யாத். 1:22)** இஸ்ரயேலர் விடுவிக்கப்படாமலேயே ஒரு ஜனமாக விரைவில் அழிந்துபோவதற்கு, இந்தவொரு காரியமே போதுமானதாக இருந்திருக்கும்! இருப்பினும், தேவன் அற்புதமாக மேற்பார்வையிட்டு, பார்வோனின் வீட்டிலேயே இரட்சகன் மோசேயை வளரச் செய்தார்.

அதுபோலவே தேவ ஜனங்களின் நிஜமான மீட்பராகிய இயேசுவும்கூட (தமது ஜனங்களின் இரட்சகர்), நிஜமான பார்வோனாகிய சாத்தானின் வீட்டிலேயே (உலகம்) பிறந்தார். ஏரோதைப் பயன்படுத்தி ஆண்பிள்ளைகளையெல்லாம் அழிக்கச் செய்து, இந்த மீட்பரின் உயிரைப் பறித்துவிட சாத்தான் எத்தனித்தபோதும், நம்முடைய இரட்சகர் காக்கப்பட்டார். ஆம், தேவனுடைய மேலான மேற்பார்வையின்கீழ், நிழலான மீட்பராகிய மோசேயின் உயிர் காப்பாற்றப்பட்டது போல, மாபெரும் நிஜமான மீட்பராகிய இயேசுவின் உயிரும் அங்கே காப்பாற்றப்பட்டது.

இங்கே கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், எப்படி எந்தவொரு பொருளின் “நிழலும்” (shadow), அந்தப் பொருளின் முழுமையான அல்லது துல்லியமான பிரதிபலிப்பாக இருக்க முடியாதோ, அதுபோலவே, வேதாகமப் “பதிவுகளில்” உள்ள அனைத்துமே நிழலென்று (typical) சொல்லிவிட முடியாது. ஒரு நிழல் பெரியதாக இருக்கலாம், சிறியதாக இருக்கலாம், கிழக்கே விழலாம் அல்லது மேற்கே விழலாம், ஆனால் அது எப்போதும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளின் நிழலே! அதில் எந்த மாற்றமுமில்லை. அதேபோல, ஒரு நிழலில் உருவ வேற்றுமைகளை அல்லது அங்க அடையாளங்களை வேறுபடுத்திக் காண்பிக்கும் விதமான தெளிவான கோடுகள் இருக்குமென்றும் சொல்ல முடியாது. எனவே, எதைச் சுட்டிக்காட்டுவதற்காக அந்த நிழல் கொடுக்கப்பட்டதோ, அதற்கு மிஞ்சி எதையும் தேட முயற்சிக்காதபடிக்கு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்படியாக, நமது தியான ஆராய்ச்சிகளில், சில நிழல்கள், சில சமயங்களில் மற்ற இடங்களை விடத் தெளிவாக இருப்பதையும், சில சமயங்களில் நிழலை உருவாக்கும் ஒளி வேறு கோணத்திலிருந்து வருவதையும் நம்மால் கவனிக்க முடியும். நிஜமான உருவம் எப்போதும் அதே பொருள்தான், அது மாற்றமடையாது என்றாலும், நிழல் என்பது பல மாறுபாடுகளுக்கு உட்படக்கூடிய ஒன்றாகும்.

உதாரணத்திற்கு, மோசே என்பவர் பல சமயங்களில் மாபெரும் மீட்பராகிய கிறிஸ்துவுக்கு நிழலாக இருப்பார், வேறு இடங்களில் அவர் தேவனுக்கே நிழலாக இருப்பார், இன்னும் சில இடங்களில் ‘இரண்டாம் மரண’ வகுப்பாருக்கு நிழலாக இருப்பார். எனவே, நிழலான இஸ்ரயேலின் அனுபவங்கள் பற்றின “பதிவுகளை,” தொடர்ச்சியாக ஒரே விதமாக கண்ணோக்கி, தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கான ஒரு தொடர்நிழலாக (continuous shadow) அவற்றைப் பொருத்திப் பார்க்க முடியாது என்பது தெளிவாகிறது. அப்படிச் செய்தால், நம்மில் பெரும்பாலானோர் கானானுக்குள் நுழைய முடியாதபடி முற்றிலும் தடுத்து

நிறுத்தப்படுவோம். இப்படியாக, நிழல்களை அவை பிரதிநிதித்துவப்படுத்தும் உண்மையான உருவத்திற்கு இணையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும், அவற்றை வெறும் நிழல்களாக மாத்திரம் அடையாளங்காண வேண்டும் என்பதையும் கவனத்தில் வைப்போமாக. எப்படி மோசே இஸ்ரயேலின் அனுபவங்களில், வெவ்வேறான மற்றும் பிரித்துவைக்கப்பட்ட (isolated) ஒரு நிழலாகக் காணப்படுகிறாரோ, அது போலவே நாம் நிழல்களிலிருந்து வெவ்வேறு பாடங்களையும், சில நேரங்களில் தனியே பிரித்துவைக்கப்பட்ட பாடங்களையும் (isolated lessons) எதிர்பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

# பாகம் இரண்டு

ஏற்கெனவே எகிப்து தேசத்தின் மீது ஒன்பது வாதைகள் வர அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், தேவனுடைய நிழலான இஸ்ரயேலர் இன்னும் அத்தேசத்தில் அடிமைப்பட்டே கிடந்தனர். மெய்யாகவே, அவை அனைத்தும் தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அவை இன்னும் முழு வீரியத்தை அடையாதிருந்தன. இது தேவன் முறியடிக்கப்பட்டார் அல்லது தேவனுடைய திட்டம் முறியடிக்கப்பட்டது என்பதை அர்த்தப்படுத்திடாது. மாறாக, தேவன் தம்முடைய ஆவிக்குரிய இஸ்ரயேலை மனதில் கொண்டே இக்காட்சிகள் அரங்கேற அனுமதித்தார்; அதிலும் குறிப்பாக, கர்த்தர் தாமே பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார் என்று பதிவானது கூறுகின்றது **(யாத். 9:12)**. இஸ்ரயேலரின் அனுபவங்கள் **“திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்து, நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டுள்ளபடியால்” (1 கொரி. 10:11)**, இவற்றின் ஆவிக்குரிய அர்த்தத்தைக் குறித்து நாம் தியானிப்பது நலமாக இருக்கும்.

இங்கே முதலில், பத்தாம் வாதையே விடுதலையைக் கொண்டுவந்தது என்பதையும், அதிலும் குறிப்பாக இஸ்ரயேலரின் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் “பஸ்கா ஆட்டுக்குட்டியின்” இரத்தம் தெளிக்கப்பட்டதன் மூலமே அந்த விடுதலை சாத்தியமானது என்பதையும் நாம் நினைவில் வைப்போமாக. இது நமக்கு எதை



உணர்த்துகிறது என்றால்: இவ்வுலக அடிமைத்தனத்திலிருந்து நாம் விடுதலை பெறும் நோக்கில் தேவனுடைய சகல மேற்பார்வையான ஏற்பாடுகளும் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், உண்மையான விடுதலை என்பது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழ் வருவதன் மூலமே சாத்தியமாகிறது.

ஒருபுறம் ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டது அவசியமாக இருந்தாலும், மறுபுறம் இஸ்ரயேலர் தாங்களாகவே அந்த இரத்தத்தின்கீழ் வர வேண்டியிருந்தது. அதுபோலவே, ஆவிக்குரிய இஸ்ரயேலரும் தாங்களாகவே அந்த இரத்தத்தின்கீழ் வர வேண்டியிருக்கிறது. 'இயேசு உலகத்தின் பாவங்களுக்காக மரித்தார்' என்ற உண்மையை ஏதோ "தகவலாக நம்புவதால்" மாத்திரம் இரட்சிப்பு கிடைக்கப்போவதில்லை, மாறாக அவர் "எனக்காக" மரித்தார் என்ற விசுவாசமே ஒருவனுக்குத் "தீமை குறித்த மன உணர்வையும்," விசுவாசத்தினால் வரும் நீதிமானாக்கப்படுதலையும், சாபத்திலிருந்து மீட்பையும் கிடைக்கச் செய்கிறது. இருப்பினும், விசுவாசத்தினால் உண்டாகும் இந்த விடுதலை என்பது இறுதி விடுதலை கிடையாது, மாறாக அந்த இலக்கை அடைவதற்கான ஒரு வாய்க்காலே ஆகும். நாம் "**துர்மனசாட்சி** (தீய மனச்சான்று – F463) **நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாய்**" இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் மிகவும் குறிப்பாகத் தெரிவிக்கிறார். **(எபி. 10:22)**

இது ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை ஏதோ மேலோட்டமாக ஏற்றுக்கொண்டு கடந்து போவதால் வருவது கிடையாது, மாறாக அந்த இரத்தத்தின் மீது ஆழமாக வைக்கும் விசுவாசத்தாலேயே வருகின்றது. இரத்தத்தைப் பற்றிய தகவல்ரீதியான நம்பிக்கை என்பது நம்மை நீதிமானாக்கப்படுதல் எனும் பிரகாரத்திற்கு வெளியே காணப்படவைக்கிறது, ஆனால் இரத்தத்தின் மீது வைக்கும் உண்மையான விசுவாசமோ, கிறிஸ்து இயேசு என்னும் வாசல் வழியாக நம்மை உள்ளே அழைத்துச் செல்கிறது.

இயேசுவின் இரத்தத்தின் மீதான இத்தகைய விசுவாசம் ஒரு மகிமையான நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல், "**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதி**" என்று தெரிவிக்கிறார். **(எபி. 11:1)** அப்படியானால், நாம் எதை நம்பிக்கையோடு எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்? ஆம்! இந்தப் பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து முழுமையாக விடுதலையடையும்படிக்கே நாம் காத்திருக்கிறோம்:

**கலா. 1:4 – "அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி … நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்."**

மேலும் இந்த மரண சரீரத்திலிருந்து முழுமையாக விடுதலையடையவும் நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்!

**உரோமர் 7:24 – "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?"**

ஆம்! நாம் விடுதலையடைந்து தேவனுடைய புத்திரருக்குரிய அந்த அதி மகிமையான சுயாதீனத்திற்குள் பிரவேசிக்கவே காத்திருக்கிறோம். அந்தப்பிரகாரம், நமது தற்போதைய

நிலையும்கூட அதன் ஒரு முன்சுவையே என்று சொல்லலாம். அப்பேர்ப்பட்ட மகிமையைக் குறித்து தேவனுடைய வசனம் என்ன கூறுகிறதெனில்:

**1 கொரி. 2:9 – "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை."**

தேவன் ஏற்கெனவே இவற்றைத் தமது ஆவியினால் நமக்கு வெளிப்படுத்தியிருப்பது உண்மைதான் என்றாலும், நமது விடுதலை முழுமையடையும்போது மட்டுமே இவற்றின் மதிப்பை நம்மால் முற்றும் முழுமையாக உணர்ந்துகொள்ள முடியும். இஸ்ரயேலரும்கூட விசுவாசத்தினால் **"வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைத்"** தூரத்திலிருந்து பார்த்திட்டாலும், அவர்கள் காத்திருந்து அதற்குள் உண்மையில் பிரவேசித்த பின்னரே அதன் நன்மைகளை ருசிபார்க்க முடிந்தது.

இப்படியாக, இந்தப் புண்ணியத்தின் ஆதாரமாக இயேசுவின் இரத்தம் இருந்தாலும், தேவன் வழங்கிய அந்த ஏற்பாட்டின் மீது நாம் வைக்கும் விசுவாசத்தினாலேயே அந்தப் புண்ணியம் நமக்குரியதாகிறது. விசுவாசம் நமது இரட்சிப்பின் முடிவல்ல, மாறாக அது அந்த முடிவை எட்டுவதற்கான ஒரு கருவியேயாகும். ஆம்! அதனிமித்தம் உண்டாகும் மகிமையான நம்பிக்கையே அதற்கு அத்தாட்சி! இந்த நம்பிக்கையே நம்மை அந்த மகிமையின் நிறைவை நோக்கி நகர்த்தும் உந்துசக்தியாகும். இதுகுறித்து நாம் வாசிப்பது என்னவெனில் –

**1 யோவான் 3:3 – "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்."**

இதன் அடிப்படையில் பார்த்தால், விசுவாசம் என்பதே தேவன் பார்த்து நமக்குக் கொடுத்த ஓர் ஈவு என்று சொல்லலாம். ஏனெனில், பிதா தாமே ஏற்பாடு செய்துகொடுத்த இயேசுவின் இரத்தம் இல்லையெனில், நாம் விசுவாசிப்பதற்கென்று எதுவுமே இருந்திருக்காதே! எனவே விசுவாசம் என்பது **"தேவனுடைய ஈவாகும்."** இதையே அப்போஸ்தலனாகிய பவுலும் பின்வரும் வசனத்தில் நமக்குச் சொல்கிறார்:

**எபே. 2:8 – "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு."**

நம்மை நாமே "இரத்தத்தின் கீழ்" கொண்டு வருவதற்கான ஒரு வழிமுறையே விசுவாசமாகும். இருப்பினும், அந்த விசுவாசத்தோடு மற்ற குணநலன்களையும் சேர்க்க வேண்டியுள்ளது; சொல்லப்போனால், அந்த விசுவாசத்தால் தூண்டப்பட்ட நம்பிக்கையின் நிமித்தம் மேற்கொள்ளப்படுகிற சுத்திகரிப்பு வேலையின் விளைவாகவே இவ்வாறு கூட்டிச் சேர்க்கப்படும் காரியம் நடைபெறுகிறது. இப்படியாகவே நாம் நமது விசுவாசத்துடனேகூட தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம் மற்றும் அன்பு ஆகியவற்றைக் கூட்டிக்கொள்கிறோம். **(2 பேது. 1:4 – 8)** இவ்வாறு செய்வதன் மூலமாக மாத்திரமே ஒருவனுடைய அழைப்பும் (எகிப்திலிருந்து வெளியேறுதல்), தெரிந்துகொள்ளுதலும் (இராஜ்யத்தின் மகிமையில் கிறிஸ்துவுடன் ஒன்றாக்கப்படுதல்) உறுதியாக்கப்படுகிறது.

அப்போஸ்தலனும் தொடர்ந்து கூறுகையில், "**இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்**" என்கிறார். **(2 பேது. 1:11)**

தேவனுடைய திட்டத்தின் இந்த அம்சத்தை மாத்திரம் நாம் இவ்வளவு தூரம் தியானிப்பதற்கு ஒரு காரணம் உள்ளது: இரத்தம் மட்டும் ஒருவனுக்கு விடுதலையையோ இரட்சிப்பையோ அருளுவதில்லை; மாறாக, விசுவாசத்தின் மூலம் நம்மை நாமே அந்த இரத்தத்தின் கீழ் கொண்டு வந்தால் மட்டுமே அது பலன் தரும் என்ற உண்மையை வலியுறுத்துவதற்கே நாம் இவ்வளவு தூரம் இதனைத் தியானித்துக் கொண்டிருக்கிறோம். அதிலும் இந்த விசுவாசத்தின் அடியை நாம் எடுத்து வைப்பதென்பது, தேவனுடைய "**கானான் இளைப்பாறுதல்**" நோக்கிய நமது பிரயாணத்தின் ஆரம்பப்படி மாத்திரமே! ஆம்! உலகம் எனும் எகிப்திலே, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தின் கீழ் வந்துள்ள நாம், "**வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள்**" முழுமையாக உட்பிரவேசிக்கும் வரைக்குமே, நாம் பயணிக்கும் வனாந்தரப் பாதையெங்கிலும், அநேக சோதனைகளும், அனுபவங்களும் வைக்கப்பட்டுள்ளன என்பது திண்ணம்.

ஆனால், இஸ்ரயேலர் தங்களுடைய கீழ்ப்படியாமை மற்றும் அவநம்பிக்கையின் காரணமாகவே அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கவில்லை என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் கூறுகிறது. **(எபி. 3:10 – 19)** இஸ்ரயேலருக்கு நிழல்களாகச் சம்பவித்த காரியங்கள் நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டிருப்பதாலும் **(1 கொரி. 10:6 – 11)**, இந்த "**இளைப்பாறுதலுக்குள்**" செல்லும் வாய்ப்பு இன்னும் வைக்கப்பட்டிருப்பதாலும், அதற்குள் உட்பிரவேசிக்கவே நாம் முயற்சி செய்ய வேண்டும்.

அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின்கீழ் வந்த பிறகே, அவர்களுக்கு எகிப்திலிருந்து விடுதலையும், கானானுக்குள் சம்பூரணமாக உட்பிரவேசிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. ஆனால், இரத்தத்தின்கீழ் வந்தது மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை. அவர்கள் தாங்கள் விலைக்கு வாங்கப்பட்டவர்கள் என்பதையும், தாங்கள் இனி தங்களுடையவர்கள் அல்ல என்பதையும் உணர்ந்தவர்களாய், அதற்கேற்ற ஜீவியத்தைத் தொடர்ந்து ஜீவித்தால் மாத்திரமே, அந்த இரத்தமானது அந்தத் தேசத்திற்குள் உட்பிரவேசிக்கும்படியான முழுமையான விடுதலையை அவர்களுக்கு உறுதிப்படுத்தும் என்பதே காரியமாக இருந்தது. ஆனால், இஸ்ரயேலர் அவ்வாறு ஜீவிக்கவில்லை; யோசுவா மற்றும் காலேப் ஆகியோரைத் தவிர, மற்ற அனைவரும் <u>எகிப்திலும் அல்லாமல், கானானிலும் அல்லாமல்</u> அவற்றுக்கு இடையே <u>வனாந்தரத்திலேயே</u> மரித்துப்போனார்கள்.

ஆக, நாம் ஒரு காலத்தில் இரத்தத்தின் கீழ் வந்ததன்பேரில், இந்த உலக அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம் என்பதற்காக, அதன் அடிப்படையில் வருங்காலத்தில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் சுதந்தரித்துக்கொள்ளுவோம் என்று சொல்லிவிட முடியாது, அதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதை நாம் இங்கே நினைவில் வைக்க வேண்டும். வேதாகமப் பதிவானது **அவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் தேவன் பிரியமாய் இருக்கவில்லை** என்றே கூறுகிறது. **(1 கொரி. 10:5)**

எனவே, நாமும் அவர்களைப் போல வனாந்தரத்திலே விழுந்துபோய்விடாதபடிக்கு

ஜாக்கிரதையாய் இருப்போமாக. நமது உருவம் இன்னதென்றும், நம்முடைய பலவீனம் இன்னதென்றும் தேவன் அறிந்திருப்பதால், அவர் எப்போதும் நம்மோடு போராடிக் கொண்டே இருப்பார் என்று நாம் அவரிடம் துணிகரமாக இருந்துவிடக்கூடாது. அவர் அவ்வாறு செய்வதை நிறுத்திவிடவும் ஒரு காலம் வரும் **(ஆதி. 6:3)**; ஏனெனில், இத்தகைய துணிகர மனநிலையிலேயே தொடருவது என்பது தேவனுடைய வார்த்தையை முழுமையாக நம்பவில்லை (அவநம்பிக்கை) என்பதையும், கீழ்ப்படியாமையையுமே குறிக்கும்!

அவர் நமக்கு ஜெயத்தை வாக்களித்திருந்தாலும் **(உபா. 7:2)**, அதை சொந்தமாக்கிக் கொள்வது என்பது நம் கையில்தான் உள்ளது. இஸ்ரயேலரோ அதில் தோல்வியடைந்தனர்; ஏனெனில் அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தின் வாசலை அடைந்தபோது சந்தேகப்பட்டனர், சகாயம் தேவைப்படும் காலங்களில் தேவன் வாக்களித்துள்ள கிருபையை அவர்கள் மறக்கலாயினர்; அதற்குப் பதிலாக, அவர்கள் தேசத்தை உளவு பார்க்க வேவுகாரரை அனுப்ப முற்பட்டனர். **(உபா. 1:19 – 26)** இப்படியாக, தேவனை முழுமையாக நம்பத் தவறியதால், அவர்கள் மீண்டும் எகிப்திற்கல்லாமல், மாறாகக் கொடிய வனாந்தரத்திற்கே திருப்பி அனுப்பப்பட்டார்கள். **(எண். 14:26 – 45)**

ஆவிக்குரிய இஸ்ரயேலனும், தேவனுடைய வார்த்தையை முழுமையாக நம்பத் தவறினால், அவனும் **"வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள்"** நுழையாதபடிக்கு விலக்கப்படுவான். ஒருவேளை இஸ்ரயேலர் தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு சரியாகப் பயிற்றுவிக்கப்பட்டு, ஊற்றெடுக்கும் தேவ கிருபையை அடையாளம் கண்டு கொண்டு, தாங்கள் அந்தக் கிருபைக்கும் இரக்கத்திற்கும் பாத்திரர் அல்ல என்ற உண்மையை எப்போதும் மனதின் முன்பாக வைத்திருந்தால், தங்கள் மறைவான குற்றங்களிலிருந்து தங்களைச் சுத்திகரிக்கும்படிக்கு தேவனிடம் உதவி கேட்டு ஓடியிருப்பார்கள்! அவ்வாறு செய்யாத காரணத்தினால், அவர்களின் மறைவான குற்றங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து, துணிகரமான பாவங்களாக மாறி, அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தி, அவர்களைப் பெரும் பாதகத்திற்கு ஆளாக்கியது. இதனால் தேவன் அவர்களுக்காகப் போராடுவதை நிறுத்திவிட்டு, அவர்களை மீண்டும் கொடிய வனாந்தரத்திற்கே அனுப்பினார். **(சங். 19:12, 13 – வாசிக்கவும்)**

இஸ்ரயேலர் தங்கள்மேல் அதீத நம்பிக்கை வைத்தனர்; தங்களால் தேவனுக்கு முன்பாக நிற்கவும், தொடர்ந்து நிலைநிற்கவும் முடியும் என்று சுய பெலத்தை உறுதியாக நம்பினர். இதனால் அவர்கள் கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும், துணிகரமாகவும் நடந்துகொண்டு, இறுதியில் இடறிவிழுந்தார்கள். இரட்சிப்பும் மீட்பும் தங்களால் உண்டானதல்ல, அது தேவனுடைய கிருபையினால் உண்டான ஈவு என்பதை அவர்களுக்கு நினைப்பூட்டும் விதமாக அந்த இரத்தம் காணப்பட்டது; இருப்பினும் அவர்கள் அதை நினைவில் வைக்கத் தவறிய காரணத்தினால், அந்த இரத்தத்தினால் அவர்களைக் கானானுக்குள் கொண்டுசெல்ல முடியாமல்போனது. அப்படியானால், அப்போஸ்தலன் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு நம்மை எச்சரித்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை எனலாம்:

**1 கொரி. 10:12 – "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்."**

இரத்தத்தைப் பொறுத்தவரையில், இந்த இரட்சிப்பு என்பது நிறைவேற்றி முடிக்கப்பட்ட

(accomplished) ஒரு விஷயமாகக் காணப்பட்டாலும், அந்த  இரட்சிப்பை அடைய "**பயத்தோடும் நடுக்கத்தோடும்**" பிரயாசப்பட வேண்டியிருக்கிறது. **(பிலி. 2:12)**

தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலர் இப்பாடங்கள் அனைத்தையும், ஆவிக்கேற்றபடி, அவரவர் இருதயத்தில் பதிய வைக்க வேண்டும். விடுதலை மற்றும் மீட்பின் இரத்தமாகிய நமக்காகப் பலியிடப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் வெளிப்படுத்தப்பட்ட தெய்வீகக் கிருபையின் செல்வாக்கின்கீழ் நிலைத்திருப்பதற்கே நாம் அனைவரும் பிரயாசப்பட வேண்டும்.

பஸ்கா ஆசரிப்பைத் தொடர்ந்து வந்த காலையில், முழு இஸ்ரயேல் தேசமும் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டாலும், அந்த ஆட்டுக்குட்டி விசேஷமாக முதற்பேறானவர்களுக்காகவே கொல்லப்பட்டது என்பதை நாம் கவனத்தில் வைக்க வேண்டும். இவ்வாறு, மரண தூதன் கடந்து போகவும், முதற்பேறானவர்கள் காப்பாற்றப்படவும் காரணமாயிருந்த அதே இரத்தம்தான், சமஸ்த இஸ்ரயேலரும் விடுதலை அடைவதற்கும் காரணமாயிருந்தது. இது எப்பேர்ப்பட்ட ஒரு நிழல்! இயேசு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகவும், அதேசமயம் அவர் நமக்காகப் பலியிடப்பட்ட நமது பஸ்கா ஆட்டுக்குட்டியாகவும் இருப்பதும் எப்பேர்ப்பட்ட உண்மை அன்றோ!

# பாகம் மூன்று

## யாத்திராகமம் 12:37 - 39; 13:17 - 22; 14:1 - 31; எண்ணாகமம் 33:5 - 8

“இஸ்ரயேல் புத்திரர் ராமசேசை விட்டுக் கால்நடையாய்ப் பிரயாணம் பண்ணி, சுக்கோத்துக்குப் போனார்கள்; அவர்கள், பிள்ளைகள்தவிர ஆறுலட்சம் புருஷராயிருந்தார்கள். அவர்களோடேகூடப் பல ஜாதியான ஜனங்கள் அநேகர் போனதும் அன்றி, மிகுதியான ஆடுமாடுகள் முதலான மிருகஜீவன்களும் போயிற்று. எகிப்திலிருந்து அவர்கள் கொண்டுவந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லா அப்பங்களாகச் சுட்டார்கள்; அவர்கள் எகிப்தில் தரிக்கக் கூடாமல் துரத்திவிடப்பட்டதினால், அது புளியாதிருந்தது; அவர்கள் தங்களுக்கு வழிக்கென்று ஒன்றும் ஆயத்தம்பண்ணவில்லை.” (யாத்திராகமம் 12:37 – 39)

“பார்வோன் ஜனங்களைப் போக விட்டபின்: ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி; பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் ஜனங்களைச் சுற்றிப் போகப்பண்ணினார். இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டுப்போனார்கள். மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு போனான். தேவன் நிச்சயமாய் உங்களைச் சந்திப்பார்; அப்பொழுது உங்களோடேகூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போங்கள் என்று யோசேப்பு சொல்லி, இஸ்ரயேல் புத்திரரை உறுதியாய் ஆணையிடும்படி செய்திருந்தான். அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு, வனாந்தரத்தின் ஓரமாய் ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள். அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங் காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார். பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை.” (யாத்திராகமம் 13:17 – 22)

“கர்த்தர் மோசேயை நோக்கி: நீங்கள் திரும்பி மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கவேண்டும் என்று இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல்லு; அதற்கு எதிராகச் சமுத்திரக்கரையிலே பாளயமிறங்குவீர்களாக. அப்பொழுது பார்வோன் இஸ்ரயேல் புத்திரரைக் குறித்து: அவர்கள் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள்; வனாந்தரம் அவர்களை அடைத்துப்போட்டது என்று சொல்லுவான். ஆகையால், பார்வோன் அவர்களைப் பின்தொடரும்படிக்கு, நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்தி, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறியும்படி, பார்வோனாலும் அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன் என்றார்; அவர்கள் அப்படியே செய்தார்கள். ஜனங்கள் ஓடிப்போய்விட்டார்கள் என்று எகிப்தின் இராஜாவுக்கு அறிவிக்கப்பட்டபோது, ஜனங்களுக்கு விரோதமாகப் பார்வோனும் அவன் ஊழியக்காரரும் மனம் வேறுபட்டு: நமக்கு வேலை செய்யாதபடிக்கு நாம் இஸ்ரயேலரைப் போகவிட்டது என்ன காரியம் என்றார்கள். அவன் தன் இரதத்தைப் பூட்டி, தன் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு, பிரதானமான அறுநூறு இரதங்களையும், எகிப்திலுள்ள மற்ற சகல

இரதங்களையும், அவைகள் எல்லாவற்றிற்கும் அதிபதிகளான வீரரையும் கூட்டிக்கொண்டு போனான். கர்த்தர் எகிப்தின் இராஜாவாகிய பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரயேல் புத்திரரைப் பின்தொடர்ந்தான், இஸ்ரயேல் புத்திரர் பலத்த கையுடன் புறப்பட்டுப் போனார்கள். எகிப்தியர் பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் அவனுடைய குதிரைவீரரோடும் சேனைகளோடும் அவர்களைத் தொடர்ந்துபோய், சமுத்திரத்தண்டையிலே பாகால்செபோனுக்கு எதிரே இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டினார்கள். பார்வோன் சமீபித்து வருகிற போது, இஸ்ரயேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன? நாங்கள் எகிப்திலே இருக்கும் போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலைசெய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள். அப்பொழுது



மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல்லு. நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போவார்கள். எகிப்தியர் உங்களைப் பின் தொடர்ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன். இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார். அப்பொழுது இஸ்ரயேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்; அவர்களுக்கு முன் இருந்த மேக ஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது. அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரயேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது, இஸ்ரயேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று. மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று. இஸ்ரயேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. அப்பொழுது எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள். கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து, அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும்பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரயேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி: ஜலம் எகிப்தியர்மேலும் அவர்களுடைய இரதங்கள்மேலும் அவர்களுடைய குதிரைவீரர் மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டு என்றார். அப்படியே மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய் திரும்பி வந்தது; எகிப்தியர் அதற்கு எதிராக ஓடும்போது, கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழ்த்துப்போட்டார். ஜலம் திரும்பிவந்து, இரதங்களையும் குதிரைவீரரையும் அவர்கள் பின்னாக சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை. இஸ்ரயேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்துபோனார்கள்; அவர்கள் வலது புறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரயேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரயேலர் கண்டார்கள். கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரயேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள்." (யாத்திராகமம் 14:1 – 31)

**“பின்பு இஸ்ரயேல் புத்திரர் ராமசேசிலிருந்து புறப்பட்டுப்போய், சுக்கோத்திலே பாளயமிறங்கினார்கள். சுக்கோத்திலிருந்து புறப்பட்டுப்போய், வனாந்தரத்தின் எல்லையிலிருக்கிற ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள். ஏத்தாமிலிருந்து புறப்பட்டுப்போய், பாகால்செபோனுக்கு எதிராக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடிக்குத்திரும்பி, மிக்தோலுக்கு முன்பாகப் பாளயமிறங்கினார்கள். ஈரோத்தை விட்டுப் புறப்பட்டு, சமுத்திரத்தை நடுவாகக் கடந்து வனாந்தரத்திற்குப்போய், ஏத்தாம் வனாந்தரத்திலே மூன்றுநாள் பிரயாணம்பண்ணி, மாராவிலே பாளயமிறங்கினார்கள்.” (எண்ணாகமம் 33:5 – 8)**

எகிப்தியரின் தலைச்சன் பிள்ளை சங்காரத்தைத் தொடர்ந்து, பார்வோன் தங்களைப் போகவிட்ட பிறகு, மறுநாள் காலையிலே, தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்கு வாக்களித்திருந்த கானான் தேசம் நோக்கிப் புறப்படுவதற்காக இஸ்ரயேலர் அனைவரும் ராமசேசில் (ராம்சேஸ்) ஒன்றுகூடினார்கள்.

இந்த “ராமசேஸ்” பார்வோனுக்காக இஸ்ரயேலர் கட்டிய “பண்டசாலைப் பட்டணங்களில்” (treasure cities) ஒன்றாகும். மேலும் இது அவர்களை ஒடுக்கிய பார்வோனுடைய மறுபெயராகவும் இருந்தது! பார்க்கப்போனால், “கானானின் இளைப்பாறுதலை” நோக்கிய அவர்களது பிரயாணத்தின் ஆரம்பப் புள்ளியாக இருந்த இப்பட்டணத்தின் பெயரும்கூட மிகவும் பொருத்தமாக இருக்கிறது. எகிப்தியர் தங்கள் சூரிய கடவுளாகிய “ராவை” (Ra) வணங்குபவர்கள். அப்படிப் பார்க்கையில், இந்தப் பார்வோன் தன்னை “ராமசேஸ்” (“சூரிய குமாரன்”) என்று அழைத்துக்கொண்டதில் எந்த ஆச்சரியமுமில்லை. ஆம்! பார்வோனும்கூடப் பிரகாசமான மகிமை பொருந்தியவனாகவே காணப்பட்டான்.

இஸ்ரயேல் புத்திரர் விடுதலைக்காகக் கூக்குரலிட்டதைக் கேட்டு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன் தாமே மனமிரங்கி அவர்களை விடுவிக்க முன்வருமளவுக்கு, அவர்களைக் கொடுமையாய் அடிமைப்படுத்தியது இந்தச் “சூரிய குமாரனாகிய” இரண்டாம் ராமசேசே! அதுபோலவே, நம்மையும் அடிமைப்படுத்தி, தனது இரண்டு பெரிய பண்டசாலைப் பட்டணங்களைத் தனக்காகக் கட்டும்படிச் செய்து, நம்மை ஒடுக்கிய பார்வோனுடைய பெயர் “லூசிபர்” (பொருள்: ஒளி ஏந்தி / light bearer) என்பதை நாம் அறிவோம். ஆம்! “இது ஆச்சரியமல்ல, சாத்தானும் “**ஒளியின் தூதனுடைய**” வேஷத்தைத் தரித்துக்கொள்வானே” **(2 கொரி. 11:14)**.

பார்க்கப்போனால், தேவ ஜனங்களில் பெரும்பாலானவர்கள்கூட, பரலோகக் கானானை நோக்கிய தங்களது வனாந்தரப் பிரயாணத்தை, சாத்தானின் மாபெரும் பண்டசாலைப் பட்டணங்களில் ஏதோ ஒன்றிலிருந்துதான் தொடங்கியிருப்பார்கள்; அவற்றில் ராமசேஸ் புரோட்டஸ்டன்ட்டு அமைப்பையும், பித்தோம் பட்டணம் கத்தோலிக்க அமைப்பையும் குறிக்கக்கூடும். “தும் கடவுளின் (மறையும் சூரியன்) நகரம்” என்று பொருள்படும் இந்தப் பித்தோம் பட்டணமும் சூரியனோடு தொடர்புடையதாக இருக்கிறது. இந்த மகா வனாந்தரப் பிரயாணத்தின் தொடக்கப் புள்ளியாக ராமசேசுடன் பித்தோம் குறிப்பிடப்படவில்லை என்பது, கத்தோலிக்க அமைப்பில் அடிமைப்பட்டுக்கிடந்த தேவ ஜனம், தங்கள் கானான் பிரயாணத்தைத் தொடங்குவதற்கு முன்பே கிட்டத்தட்ட புரோட்டஸ்டன்ட்டுகளாக மாறி, ராமசேசுக்கு வந்தவர்களே என்பதைக் குறிக்கக்கூடும்.

இங்கே சில விஷயங்களைக் கவனிக்க வேண்டியுள்ளது: ராமசேஸ் வழியாக, எகிப்தை விட்டு வெளியேறிய அனைவரும், ஏற்கெனவே எகிப்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் பலனின்கீழ் வந்தவர்களாவார்கள்; மேலும் ஒன்பது வாதைகளைக் காட்டிலும், பத்தாவது வாதையே அவர்களுக்கு விடுதலையைக் கொண்டுவந்தது. எப்படி இந்த இரண்டு பட்டணங்கள் மட்டுமே முழு எகிப்து கிடையாதோ, அதுபோல நிஜமான எகிப்து என்பது இந்த இரண்டு சபை அமைப்புகளை மட்டும் குறிப்பதில்லை. பொதுவாக, எகிப்து என்பது உலகத்தை அல்லது "அந்தகாரம் மற்றும் மரணத்தின் இராஜ்யத்தைக்" குறிக்கும்; இதில் பித்தோம் மற்றும் ராமசேஸ் (கத்தோலிக்கம் மற்றும் புரோட்டஸ்டன்டிசம்) என்பவை ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நம்மை முன்னொரு காலத்தில் ஓயாமல் இயங்க வைத்த கள்ள அமைப்புகளை அடையாளப் படுத்துகின்றன – அந்த அமைப்புகளினால்தான் நம்மால் விடுதலை மற்றும் அர்ப்பணிப்பு போன்ற மேலான கனத்திற்குரிய விஷயங்களைப் பற்றி யோசிக்கக்கூட நேரம் கிடைக்காமல் போனது. அதில் அடிமைப்பட்டுக் கிடந்தவர்களால்கூட எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது!

நிழலில், தேவனுடைய அநுக்கிரகத்தால்தான் அவர்களால் எகிப்திலிருந்து விடுதலை அடைய முடிந்தது; அதுபோலவே, நிஜத்திலும், தேவனுடைய மேலான மேற்பார்வையான ஏற்பாடாகிய பஸ்கா ஆட்டுக்குட்டியின் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாகவே நமது விடுதலையும், மீட்பும் சாத்தியமாகிறது. மீண்டும் ஒருமுறை நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது என்னவெனில், இரத்தத்தின் கீழ் வந்ததினால் இஸ்ரயேலருக்கு எகிப்திலிருந்து விடுதலை கிடைத்தது உண்மைதான் என்றாலும், அது அவர்களைக் கண்டிப்பாக வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் கொண்டு சேர்க்கும் என்பதை அர்த்தப்படுத்திடாது; அதுபோலத்தான் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும்!

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாகத் தங்களை விடுவித்த தேவன் மீது தொடர்ந்து விசுவாசம் வைத்தால் மாத்திரமே அவர்களால் கானான் தேசத்திற்குள் நுழைய முடியும் என்றிருந்தது. இஸ்ரயேலர் தங்கள் நிலைக்கால்களிலும் நிலையின் மேற்சட்டத்திலும் இரத்தத்தைத் தெளித்து, இப்படியாக அந்தத் இரத்தத்தின் மீதான தங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்தியபோது, தேவன் அதனைக் கீழ்ப்படிதலாகக் கருதினார். அதேசமயம், இந்த விசுவாசத்தை அவர்கள் செயல்படுத்தத் தவறியபோதோ தேவன் அதனைக் கீழ்ப்படியாமையாகக் கருதினார். அவர்கள் உருவம் இன்னதென்பதையும் அவர்கள் மண் என்பதையும் அறிந்தவராய், தேவன் அவர்களுடன் சிறிது காலம் தொடர்ந்து போராடினாலும்கூட, அவர்கள் தொடர்ந்து சந்தேகப்பட்டு, தங்கள் சொந்த இரட்சிப்பின் தேவனையே மறந்த காரணத்தால், ஏற்ற வேளையில், தேவன் அவர்களுடன் போராடுவதையே நிறுத்திவிட்டார். அதன் பிறகே, அவர்களுடைய சந்தேகம், அவிசுவாசம் மற்றும் தம்மை நினைவுக்கூரத் தவறியது என்பதையெல்லாம் அவர் கீழ்ப்படியாமையாகக் கருதத் தொடங்கினார்! இப்படியாக, அவர் அவர்களை எகிப்திற்கு அல்லாமல், மாறாக மரிப்பதற்காக அந்தப் "பயங்கரமான வனாந்தரத்திற்கே" திருப்பி அனுப்பினார்.

பிரியமானவர்களே! அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் பின்வரும் வார்த்தைகளை நன்கு நினைவில் வைப்போமாக: **"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கின்றன." (1 கொரி. 10:11)**. நாம் சர்வவல்ல தேவனைச் சாதாரணமாக

எடுத்துக்கொண்டு, அஜாக்கிரதையாக அவரிடம் நடந்துகொள்ளாமலும், அவர் நமக்காகச் செய்த காரியங்கள் சாதாரணமானவைதானே என்று எண்ணாமலும் இருப்போமாக. முன்பு நாம் பாவத்தில் இருந்தபோது, அவர் கிருபையாக நம்மிடம் இடைப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலம் நமக்கு விடுதலை அளித்தார் என்பதற்காக, நாம் என்னதான் நன்றியிலும் விசுவாசத்திலும் வளர்ச்சிக் குன்றி காணப்பட்டாலும்கூட, அவர் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் எப்போதும் நம்மோடு உறவாடுவார் என்று நாம் மெத்தனமாக நினைத்துவிடக் கூடாது.

இந்த விஷயத்தைக் கவனமாகப் பகுத்துப்பார்க்கும்போது, 'இம்மட்டும் தேவன் செய்த சகல உபகாரங்களின் மதிப்பினை உணர்ந்து நன்றி பாராட்டுகிறோம் என்பதைக் காண்பிப்பதற்கு நமக்கிருக்கும் ஒரே வழி இனியும் அவர்பேரில் விசுவாசம் வைப்பதே ஆகும்' (**குறிப்பு** : இம்மட்டும் பராமரித்தவர் இனியும் பராமரிப்பார் என்கிற விசுவாசம்) என்பது புலப்படும். சந்தேகத்திற்கிடமின்றி, இதனை அர்த்தப்படுத்தும் விதமாகவே அப்போஸ்தலன் பின்வருமாறு கூறியிருக்க வேண்டும்: **"...விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்..." (எபி. 11:6).** தேவன் மீதான நமது விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்கான ஒரு கருவியாக இவற்றை நாம் பயன்படுத்தவில்லை என்றால், தேவன் தொடர்ந்து நம்மேல் தமது ஆசீர்வாதங்களைப் பொழிவார் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றதாயிருக்கும்.

இஸ்ரயேலர் அனைவரும் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குப் புறப்படவும், தேவன் அவர்களுக்கு வழங்கிய மீட்பை ஏற்றுக்கொள்ளவும் ஆயத்தமாகக் காணப்பட்டார்கள் எனக் காண்கிறோம். அதன்படி அவர்கள் ராமசேசில் ஒன்றுகூடி, சுக்கோத்திற்குப் பிரயாணம் செய்தார்கள். சுக்கோத்து என்றால் "கூடாரங்கள்" (booths) என்று பொருள்; இது எதனைச் சுட்டிக்காட்டுகிறதெனில், கானானை நோக்கிய அவர்களது பிரயாணம் ஒருபுறம் அவர்களுக்கு எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையையும் சுதந்திரத்தையும் அளித்தாலும், மறுபுறம் எகிப்திலிருந்த வீடுகள் வழங்கிய பல வசதிகளையும் அடிப்படைத் தேவைகளையும் சுய மறுப்புடன் (self-denial) விட்டுக்கொடுக்கவும் வைத்தது. இப்படியாக, அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தைச் சுதந்தரிக்கும் வரைக்குமே, அவர்களால் இனி, தங்கள் தலைக்கு மேல் கூரையுள்ள வீடுகளின் பாதுகாப்பை அனுபவிக்க முடியாமல்போனது.

ஆவிக்குரிய இஸ்ரயேலரைப் பொறுத்தவரையில், இந்த உலகம் எனும் எகிப்திலிருந்து, பரம கானானை நோக்கிய அவர்களது யாத்ரீகப் பிரயாணத்தின்போது, பாதையின் கடுமையிலிருந்தோ காலநிலையின் சீற்றத்திலிருந்தோ தங்களைப் பாதுகாக்க எந்த நகரமும் அல்லது வீடும் இருக்காது என்பதையே இது அர்த்தப்படுத்துகின்றது. தேவன் காட்டும் பாதையில் அவர்கள் விசுவாசத்தோடு / உண்மையோடு பயணிக்கையில், அவர்களது ஒரே பாதுகாப்பு பரமனின் மேற்பார்வையின் கீழிருக்கும் அந்தச் "சிறிய கூடாரம்" ("little booth") மட்டுமே. ஆம்! அவர்களைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை. பரலோகமே (Heaven) அவர்களின் தலைக்கு மேலிருக்கும் பாதுகாப்புக் கூரையாகும். சொல்லப்போனால், வனாந்தரத்தின் கடுமைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தவனாய், ஒரு வீட்டின் பாதுகாப்பையும் தலைக்கு மேலிருக்கும் கூரையையும் தனக்கு வேண்டாம் என்று மறுக்கின்ற ஒருவன், தேவனுடைய கிருபை அளவில்லாமல் செயல்படுவதற்கு இடமளிக்கிறான்.

இந்தக் கிருபையைத் தடுக்கவோ முடக்கவோ கூடாது. அது தடுக்கப்பட்டால், நாம் துன்பப்படுவோம்! இவ்வாறு விசுவாசத்தில் வனாந்தரத்தின் கடுமைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துப் பயணிக்கும்போது, அது தேவ கிருபை கிரியை செய்வதற்கு இடமளிப்பதாக அமைகிறது.

உதாரணத்திற்கு, ஒரே வகையான இரண்டு செடிகளை எடுத்துக் கொள்ளுங்கள், ஒன்றை வெளிக் காற்றும் வெளிச்சமும் இல்லாத பாதாள அறையில் (cellar) வளர விடுங்கள், மற்றொன்றைத் திறந்தவெளியில் உள்ள தோட்டத்தில் வளர விடுங்கள். சில வாரங்களுக்குப் பிறகு இரண்டு செடிகளுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கவனியுங்கள். ஒன்று ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் இருக்கும், மற்றொன்று பலவீனமாகவும் வாடியும் இருக்கும். என்னதான் பாதாள அறையில் உள்ள செடியானது காற்று, மழை மற்றும் பெரும் புயல்களிலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கும் என்பது உண்மைதான் என்றாலும்கூட, அப்படிப் பொத்தி வைத்ததினால் அது வலிமையடைவதில்லையே! மறுபுறம், செயற்கையான பாதுகாப்பு எதுவும் இல்லாத செடியோ, சூரிய வெளிச்சம் கிடைக்கப்பெற்று, இயற்கை சக்திகளுக்கு எதிராக எதிர்த்து நின்று போராடிப் பலமுள்ளதாய்ச் செழித்தோங்கி நிற்கும்.

அப்படிப் பார்க்கையில், சுக்கோத்து என்கிற “கூடாரங்கள்” ஆபத்துகளுக்கு ஆளாகக்கூடிய திறந்திருக்கும் நிலையைக் (exposure) குறிப்பதாக உள்ளது, ஏனெனில் இயற்கை சக்திகளுக்கு எதிராக, ஒரு வீடோ இல்லமோ அளிக்கும் இயற்கையான பாதுகாப்பினை ஒரு தற்காலிகக் கூடாரம் அளிப்பதில்லை. உண்மையான இஸ்ரயேலனுக்கும் கூட, இந்தக் “கூடார” வாழ்க்கை என்பது, செயற்கை பாதுகாப்பற்ற அந்தச் செடியைப் போலவே – ஆபத்துகளுக்கு ஆளாகக்கூடிய திறந்திருக்கும் நிலையைக் குறிக்கிறது! இருப்பினும், ஏற்கெனவே குறிப்பிட்டது போல, இது ஒருபுறம் இயற்கை சக்திகளுக்கு / ஆபத்துகளுக்குத் திறந்திருக்கும் நிலையைக் குறித்தாலும், மறுபுறம் தேவனுடைய கிருபைக்கும் தயவுக்கும் திறந்திருக்கும் நிலையையும் குறிப்பதாக உள்ளது. தேவனுடைய பரிசுத்தவானின் இந்தத் திறந்தநிலை, இந்தப் பரதேசிபோன்ற வீடற்ற நிலைதான் உண்மையில் அந்நபரை வலிமையானதாக்குகின்றது.

ஒரு மரத்தின் மீது வீசும் எதிர் காற்று, அதன் வேர்களை நிலத்தில் இன்னும் ஆழமாக வேரூன்றச் செய்து, அதனை மேன்மேலும் பலம்வாய்ந்ததாக்குகின்றது. அதேசமயம், மரத்திற்குப் புயல்களைத் தாங்கி நிற்கும் திறனை / சக்தியை உண்மையில் அளிப்பது சூரிய வெளிச்சமே என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். நாமும்கூட தீமையான அனைத்தையும் எதிர்த்து நிற்பதன் மூலம் பலம்வாய்ந்தவர்கள் ஆகிறோம் என்றாலும், அப்படி எதிர்த்து நிற்பதற்கான திராணியை/சக்தியைத் தமது பரிசுத்த ஆவியின் மூலம் நமக்குத் தருவது தேவனே!!!

பூர்வகால இஸ்ரயேலரைப் போலவே நாமும் மிகுந்த வைராக்கியத்தோடு நமது யாத்திரையைத் தொடங்கினாலும், அது வெகு நாட்களுக்கு நீடிப்பதில்லை எனக் காண்கிறோம்! அது பெரும்பாலும் வனாந்தரத்தின் எல்லை வரை மட்டுமே நம்மைக் கொண்டு செல்கிறது. நிழலான இஸ்ரயேலருக்கும் அப்படியே நடந்தது: **“சுக்கோத்திலிருந்து புறப்பட்டுப்போய், வனாந்தரத்தின் எல்லையிலிருக்கிற ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள்.” (எண். 33:6)**. இங்கே இஸ்ரயேலர் முதலில் வடக்கு நோக்கியும், பின்னர் கிழக்கு நோக்கி ஏத்தாமுக்கும் சென்றதாகத்

தெரிகிறது, அங்கே அவர்கள் திடீரென்று தெற்கு நோக்கி நகரும்படிக்கு வழிநடத்தப் படுகிறார்கள். ஒருவேளை அவ்வாறல்லாமல், அவர்கள் தொடர்ந்து கிழக்கு நோக்கியே பிரயாணம் செய்து இருந்தால், செங்கடலுக்கு வடக்கே ஆற்றினை நடந்தே கடக்கக்கூடிய ஆழமில்லாத பகுதியை அவர்களால் அடைந்திருக்க முடியும் – பார்க்கப்போனால், இந்தப் பகுதி கடப்பதற்கு எளிதான பகுதியாகவும், தங்களின் இலக்காகிய கானானுக்குச் சரி நேர்க்கோட்டில் காணப்பட்ட பகுதியாகவும் இருந்தது. ஆனால், தேவன் அவர்களுக்குத் தேர்ந்தெடுத்து கொடுத்த பாதையோ மிகவும் முரணானதாக இருந்தது; ஏனெனில், அப்பாதை பார்வோனின் ஆட்சி எல்லைக்கும் அவர்களுக்கும் இடைப்பட்ட தூரத்தை அதிகரிக்கச் செய்வதற்குப் பதிலாக, அது அதனைக் குறைத்துக் கொண்டிருந்தது; அதிலும் விசேஷமாக, வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கும் அவர்களுக்கும் இடைப்பட்ட தடையான தூரத்தை அது இன்னும் அதிகரிக்கச் செய்தது. இருப்பினும், இப்பேர்ப்பட்ட நகர்வு தேவனால் வழிநடத்தப்பட்ட ஒன்றாகும்! விந்தையிலும் விந்தை! பதிவானதும் அவ்வாறே கூறுகிறது: "**அவர்கள் சுக்கோத்திலிருந்து பிரயாணப்பட்டு, வனாந்தரத்தின் ஓரமாய் ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள். அவர்கள் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர்... அவர்களுக்கு முன் சென்றார்...**" **(யாத். 13:20 – 21)**.

ஆவிக்குரிய இஸ்ரயேலர் வாழ்க்கையிலும்கூட, அவர்கள் மாம்சமானது எங்கு அதிக முன்னேற்றத்தையும் குறைந்த எதிர்ப்பையும் எதிர்பார்க்குமோ, அந்தத் திசையில் தேவன் அவர்களை வழிநடத்தாமல், தமது கிருபையும் வல்லமையும் இன்னும் அதிகமாக வெளிப்படக்கூடிய நேர் எதிர்த் திசையில் வழிநடத்திச் செல்லுகின்ற இது போன்ற பல (திருப்பு முனையான) '**ஏத்தாம்கள்**' இருக்கக்கூடும். **ஆம் பிரியமானவர்களே! நாம் எப்போதும் நமது சொந்த வழியைத் தேர்ந்தெடுக்கக்கூடாது; ஒரு சில நேரங்களில் தேவன் காண்பிக்கும் பாதை மிகவும் அபாயகரமானதாகத் தோன்றினாலும்கூட, அவரே நமது பாதையை வழிநடத்தட்டும் என்று ஒப்புக்கொடுத்துவிட வேண்டும். "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரணம்." (நீதி. 14:12)** [அதன் முடிவோ முற்றும் முழுமையான விடுதலையாக இருக்காது, மாறாக மரணமாகவே இருக்கும்.]

நமது சுபாவ போக்குகளும், மாம்சத்தின் வழியும் குறைந்த எதிர்ப்புள்ள பாதையையே (பிரச்சினை குறைவாயுள்ள பாதையையே) பின்பற்ற விரும்பும் என்பது திண்ணம். ஆனால் இத்தகைய வழியினால் தேவனுக்கு மகிமை சேர்க்க முடியாது, நமது விசுவாசத்தையும் நிரூபித்துக் காண்பிக்க முடியாது. தூரத்தில் கரையைக் காண முடிகிற வரைக்கும் விசுவாசம் கொண்டிருப்பது எளிது (இப்படிப்பட்ட நம்பிக்கை விசுவாசம் என்று சொல்ல முடியுமா என்பது கேள்விக்குறியே); ஆனால், மூடுபனி சூழ்ந்து நம்மால் பார்க்க முடியாமல் போகும்போதுதான், நாம் பயப்படுகிறோமா அல்லது விசுவாசத்தைப் பயன்படுத்துகிறோமா என்கிற நிலை வரும்.

உதாரணத்திற்கு, சூரிய ஒளி நன்கு பிரகாசிக்கும் நாளில், ஸ்டேட்டன் தீவு படகில், ஏறக்குறைய 4-½ மைல் தூரம் கொண்ட நியூயார்க் விரிகுடாவைக் கடக்கும்போது, மாலுமியின் படகோட்டும் திறமையையும் சாமர்த்தியத்தையும் பற்றி எவரும் அவ்வளவாய்ச் சிந்திப்பதில்லை. ஆனால், அடர்த்தியான 'பட்டாணி சூப்' போன்ற மூடுபனி சூழும்போது, நமக்கு நன்கு தெரிந்த நில அடையாளங்கள்கூட (landmarks) கண்ணுக்குத் தெரியாமல் போகும்போதுதான், மாலுமியையும், நம்மைப் பத்திரமாக நாம் விரும்பும் இளைப்பாறுதலின் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லும் அவரது திறனையும் சாமர்த்தியத்தையும் நாம் மதித்துணருகிறோம். அத்தகைய சூழ்நிலையில் நம்மால் என்னதான் செய்ய முடியும்? ஒன்றுமே செய்ய முடியாது!

நமது கவலை, பதற்றம், பயம் அல்லது எரிச்சல் என எதுவுமே உதவாது. மாலுமி நம்மைப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்க்கும் வரை, நாம் அமைதிகாத்து இருப்பதே ஏற்புடையதாக இருக்கும்.

நமது ஆவிக்குரிய பிரயாணங்களுக்கும் இது எவ்வளவு உண்மையாக உள்ளது! தேவனுடைய மேற்பார்வையின்கீழாக, கடினமான சூழ்நிலைகளிலிருந்து நம்மால் நம்மை விடுவித்துக்கொள்ள முடியாத சமயங்கள் இருக்கவே செய்கின்றன. அத்தகைய சமயங்களில் **நாம் நமது சுய முயற்சிகளைக் கைவிட்டுவிட்டு, கட்டுப்பாட்டைத் தேவனிடம் ஒப்படைக்க வேண்டும்!** (Let go and let God!) **நமக்கு ஏற்படும் உச்சக்கட்ட இக்கட்டுகள் தேவன் இடைப்படுவதற்கான வாய்ப்புகளாகும்** (Our extremities are God's opportunities). தேவன் அவ்வாறே மாம்சீக இஸ்ரயேலரையும் அப்படிப்பட்ட ஓர் **உச்சக்கட்ட** இக்கட்டான நிலைக்குக் கொண்டு வந்தார். ஏத்தாமில் அவர்களைத் திசைதிருப்பி, '**பிககிரோத்துக்கு**' (Pihahiroth) அழைத்து வந்தார், அதன் பொருள் "கோரைப்புற்கள் வளரும் இடம்" என்பதாகும். சொல்லப்போனால், மாம்சத்தின்படி அவர்கள் சிக்கிக்கொள்ளக்கூடிய ஓர் இடமாக இருந்தது; எகிப்திலிருந்து தங்களுக்கு முழுமையான விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்த்த ஓர் இடத்திற்குப் பதிலாக, அவர்கள் பிரயாணத்தைத் தொடங்கியபோது இருந்ததை விடவும் மோசமான இடமாக உணரக்கூடிய ஓர் இடமாக அது இருந்தது. சரி! அப்போதாவது அவர்கள் ஏற்கெனவே தங்களுக்கு அநேக காரியங்களைச் செய்துகொடுத்த தேவனை நினைத்துப் பார்த்தார்களா? என்றால், 'இல்லை!' என்பதே பதிலாகும்; அவர்கள் முறுமுறுக்கவும் கூக்குரலிடவுமே செய்தார்கள். தங்களுக்கு முன்னால் சிவந்த சமுத்திரம், தங்களுக்குப் பின்னால் எகிப்தியர், தப்பிக்க எந்த வழியுமே இல்லை என்பதே அவர்கள் மன ஓட்டமாக இருந்தது!

தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நாமும்கூட, எத்தனை தரம் பிககிரோத்தின் சிக்கலான கோரைப்புற்களுக்கு இடையே இக்கட்டான நிலையில் காணப்பட்டிருப்போம்! நமக்கு முன்னால் கடக்க முடியாத தடைகளையும், செங்கடலையும், தப்பிப்பதற்கான எல்லா வழியையும் அடைத்து நிற்பது போன்ற ஒரு பெரிய மலைத்தொடரையும் கண்டிருப்போம். அதேசமயம் வரவிருக்கும் அழிவைக் கண்டு நாம் எவ்வளவாய்ப் பயந்து நடுங்கியிருப்போம்! ஆனால், இங்கேதான் தேவன் இடைப்பட்டுப் பராக்கிரமம் செய்வதற்கான மாபெரும் வாய்ப்பு வருகிறது! விடுதலை என்பது நம்மால் உண்டாவது கிடையாது என்ற மிகவும் இன்றியமையாத பாடத்தை நாம் கற்றுக்கொள்வதற்கேதுவாக, பூர்வகால இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்டதைப் போலவே நமக்கும் கொடுக்கப்படுகின்ற கட்டளை யாதெனில்: "**பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்!**" என்பதேயாகும் **(யாத். 14:13)**. நாம் அவரிடம் கட்டுப்பாட்டை ஒப்படைத்துவிட்டால், அந்த க்ஷணமே அவர் நமக்குப் புகலிடக் கோட்டையாகவும், நம்முடைய பெலத்த துருகமாகவும் மாறுகின்றார்.

**உதாரணத்திற்கு, ஒரு காட்டில் நாம் தொலைந்து போய் வெளியேறும் வழி தெரியாமல் அலைந்துதிரியும்போது, திடீரென்று பரிச்சயமான ஒரு கோபுரத்தைக் காண நேர்ந்தால், அது எவ்வளவு நன்றாக இருக்குமல்லவா! அங்கே சென்று விட்டால் நமக்குப் பாதுகாப்பு நிச்சயம் என்றே தோன்றுமல்லவா! சொல்லப்போனால், அந்த உச்சக்கட்ட இக்கட்டான நிலையில் அந்தக் கோபுரமே நமது ஒரே இரட்சிப்பாக இருக்கும்.**

தேவன் இஸ்ரயேலரை **"மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே"** உள்ள பிகிரோத்துக்கு வழிநடத்தினார் என்று வேதாகமப் பதிவானது கூறுகிறது **(எண். 33:7; யாத். 14:2)**. மிக்தோல் என்றால் "கோபுரம்/கோட்டை" (Tower) என்று பொருள். எவ்வளவு பொருத்தமான பெயர்! இங்கேதான் தேவன் தம்மை அவர்களுக்கு ஒரு புகலிடக் கோட்டையாக வெளிப்படுத்தி, அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து மோசேக்கு அறிவுறுத்தினார். அந்த அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிந்ததினிமித்தம் சற்று நேரத்திற்கு முன்பாக தப்பிப்பதற்கு மாபெரும் தடையாகத் தெரிந்த அந்தச் சமுத்திரமே விடுதலைக்கான வழியாக மாறியது.

ஆவிக்குரிய இஸ்ரயேலரின் அனுபவங்களும் பலமுறை அவ்வாறே அமைகின்றன. இல்லையெனில், **"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபே. 2:8, 9)** என்ற உண்மையை நம்மால் வேறு எப்படித்தான் கற்றுக்கொள்ள முடியும்? சில சமயங்களில், நமது இறுதி விடுதலையை அடைவதற்கு, தரித்து நின்று கர்த்தர் செய்யும் இரட்சிப்பைப் பார்ப்பதே முக்கியமானதாக இருக்கும்! அதேசமயம், முன்னேறிச் செல்லுங்கள் என்று கர்த்தரிடமிருந்து கட்டளை வரும் வேளையில், நாம் தரித்து நின்று கொண்டிருக்கக்கூடாது; ஏனெனில் **தேவன் "தரித்து நில்" ("stand still") என்று சொல்லும்போது முன்னேறிச் செல்வது எவ்வளவு தோல்வியைத் தருமோ, அவ்வளவு தோல்வியை, "முன் செல்" என்று சொல்லும்போது நாம் தரித்து நின்றுவிடுவதும் கொடுக்கும்.**

C.H.M. (Charles Henry Mackintosh) அவர்களின் "Notes on Exodus" (யாத்திராகமத்தின் மீதான குறிப்புகள்) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் மேற்கோள் நமது ஜெபத்துடன்கூடிய தியானத்திற்கு ஏற்றதாயிருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்:

> "...தேவன் தமது மகா இரக்கத்தினால் வழியைத் திறக்கும்போது, விசுவாசம் இருந்தால் மாத்திரமே அதில் நடக்க முடியும். தேவன் காண்பிக்கும் வழியில் நடக்க விரும்பும்போது, அது மனித வழியைப் பின்பற்றுவதை நிறுத்தி விடுகிறது. (**'அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல்லு.'**) நாம் தரித்து நிற்கக் கற்றுக்கொண்டால் மாத்திரமே, நம்மால் பயனுள்ள வகையில் முன்னேறிச் செல்லவும் முடியும். தரித்து நிற்கக் கற்றுக்கொள்வதற்கு முன்பாகவே, முன்னேறிச் செல்ல முயற்சிப் போமேயானால், அது நமது அறியாமையையும் பலவீனத்தையும் வெளிப்படுத்தி, நம்மை ஆபத்திற்குள்ளாக்கச் செய்திடும். **எனவே, எல்லா கஷ்டமான மற்றும் குழப்பமான சமயங்களிலும் 'தரித்து நிற்பதே' – தேவனுக்காகக் காத்திருப்பதே – உண்மையான ஞானமாகும்; அவர் நிச்சயமாக நமக்காக ஒரு வழியைத் திறப்பார்; அப்போது நம்மால் அதில் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் 'முன்னேறிச் செல்ல' முடியும். தேவன் நமக்காக ஒரு வழியை உண்டாக்கும்போது, அங்கு நிச்சயமில்லாத தன்மைக்கே இடமிருக்காது; அதேசமயம், சுயமாய் வகுக்கப்பட்ட எந்தவொரு பாதையுமே சந்தேகம் மற்றும் தயக்கம் நிறைந்த பாதையாகவே காணப்படும். ... நம் கண்கள் தேவனுடைய இரட்சிப்பைக் காணும்போதுதான் நம்மால் அதில் நடக்க முடியும்; ஆனால், நாம் நமது சொந்த அற்ப முயற்சிகளை முடிவுக்குக் கொண்டு வரும் வரைக்குமே, நம்மால் அதை தெளிவாகக் காண முடியாது.**" (பக்கங்கள் 181,182)

# பாகம் நான்கு

## யாத்திராகமம் 15:1 - 27; எண்ணாகமம் 33:8, 9

“அப்பொழுது மோசேயும் இஸ்ரயேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்துபாடின பாட்டு: கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார். கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்; கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம். பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்திலே தள்ளி விட்டார்; அவனுடைய பிரதான அதிபதிகள் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து போனார்கள். ஆழி அவர்களை மூடிக்கொண்டது; கல்லைப்போல ஆழங்களில் அமிழ்ந்து போனார்கள். கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பலத்தினால் மகத்துவம் சிறந்திருக்கிறது; கர்த்தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிவிட்டது. உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உமது முக்கியத்தின் மகத்துவத்தினாலே நிர்மூலமாக்கினீர்; உம்முடைய கோபாக்கினியை அனுப்பினீர், அது அவர்களைத் தாளடியைப்போலப் பட்சித்தது. உமது நாசியின் சுவாசத்தினால் ஜலம் குவிந்து நின்றது; வெள்ளம் குவியலாக நிமிர்ந்து நின்றது; ஆழமான ஜலம் நடுக்கடலிலே உறைந்துபோயிற்று. தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆசை அவர்களிடத்தில் திருப்தியாகும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சங்கரிக்கும் என்று பகைஞன் சொன்னான். உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக்கொண்டது; திரளான தண்ணீர்களில் ஈயம்போல அமிழ்ந்துபோனார்கள். கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? நீர் உமது வலதுகரத்தை நீட்டினீர்; பூமி அவர்களை விழுங்கிப்போட்டது. நீர் மீட்டுக்கொண்ட இந்த ஜனங்களை உமது கிருபையினாலே அழைத்து வந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்துக்கு நேராக அவர்களை உமது பலத்தினால் வழிநடத்தினீர். ஜனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிப்பார்கள்; பெலிஸ்தியாவின் குடிகளைத் திகில் பிடிக்கும். ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள்; மோவாபின் பராக்கிரமசாலிகளை நடுக்கம் பிடிக்கும்; கானானின் குடிகள் யாவரும் கரைந்துபோவார்கள். பயமும் திகிலும் அவர்கள்மேல் விழும். கர்த்தாவே, உமது ஜனங்கள் கடந்துபோகும்வரையும், நீர் மீட்ட ஜனங்களே கடந்துபோகும்வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள். நீர் அவர்களைக் கொண்டுபோய், கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்கு நியமித்த ஸ்தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ஆண்டவராகிய தேவரீருடைய கரங்கள் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் அவர்களை நாட்டுவீர். கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் இராஜரிகம் பண்ணுவார். பார்வோனின் குதிரைகள் அவனுடைய இரதங்களோடும் குதிரைவீரரோடும் சமுத்திரத்தில் பிரவேசித்தது; கர்த்தர் சமுத்திரத்தின் ஜலத்தை அவர்கள் மேல் திரும்பப்பண்ணினார்; இஸ்ரயேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்’’ என்று பாடினார்கள்.

**ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப்போனார்கள். மிரியாம் அவர்களுக்குப் பிரதிவசனமாக:**

**“கர்த்தரைப் பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார்” என்று பாடினாள்.**

**பின்பு மோசே இஸ்ரயேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப் படுத்தினான். அவர்கள் சூர் வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; அதினால் அவ்விடத்துக்கு மாரா என்று பேரிடப்பட்டது. அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள். மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று. அவர் அங்கே அவர்களுக்கு ஒரு நியமத்தையும் ஒரு நியாயத்தையும் கட்டளையிட்டு, அங்கே அவர்களைச் சோதித்து: நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையான வைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். பின்பு அவர்கள் ஏலிமுக்கு வந்தார்கள்; அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது; அங்கே தண்ணீர் அருகே பாளயமிறங்கினார்கள்.” (யாத்திராகமம் 15:1 – 27)**

**“ஈரோத்தை விட்டுப் புறப்பட்டு, சமுத்திரத்தை நடுவாகக் கடந்து வனாந்தரத்திற்குப்போய், ஏத்தாம் வனாந்தரத்திலே மூன்றுநாள் பிரயாணம்பண்ணி, மாராவிலே பாளயமிறங்கினார்கள். மாராவிலிருந்து புறப்பட்டு, ஏலிமுக்குப் போனார்கள்; ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது, அங்கே பாளயமிறங்கினார்கள்.” (எண்ணாகமம் 33:8, 9)**

நமது கடந்த பாடத்தில், செங்கடலின் மேற்குக் கரையில் இஸ்ரயேலர் நம்பிக்கை இழந்து மனம்தளர்ந்த நிலையில் காணப்பட்டதைக் கண்டோம். அவர்கள் தங்களுக்கு முன்னால் செங்கடலும், இருபுறமும் மலைகளும், பின்னால் துரத்தி வரும் எகிப்தியரும் இருப்பதை அறிந்து, தாங்கள் மிகவும் இக்கட்டான சூழலில் அகப்பட்டுள்ளோம் என்பதை உணரலாயினர். தேவனே அவர்களை அந்த இடத்திற்கு வழிநடத்தினார் என்பதை நாம் இங்கே நினைவில் வைக்க வேண்டும்; ஏனெனில், வனாந்தரத்தின் எல்லையாகிய ஏத்தாமில் (Etham) இருந்த இஸ்ரயேலரை, அவர்களுக்கு முன்பிருந்த தடைகளை இன்னும் அதிகப்படுத்துவது போல, தெற்கு நோக்கி பிகககிரோத்துக்குத் (Pihahiroth) திருப்பியது தேவனே! **(யாத். 14:2)**. செங்கடலுக்கு வடக்கே இருந்த சிறிய ஆழமற்ற ஆற்றுப் பகுதிகள், பிககிரோத்தில் காணப்பட்டதைப் போன்ற கடினமான தடையாக இருந்திருக்காது என்பது உண்மைதான். ஆனால், தேவன் ஒருவேளை அவர்களை இப்படியாக ஏத்தாமிலிருந்து கிழக்கு நோக்கியே பயணிக்க அனுமதித்திருந்தால், தங்கள் உச்சக்கட்ட விடுதலை தங்கள் பிரயாசத்தினால் அல்லாமல், மாறாக முற்றிலும் தேவனால் உண்டானது என்பதை அவர்கள் ஒருக்காலும் உணர்ந்திருக்க மாட்டார்கள்!

இதேபோல் "**தரித்து நின்று கர்த்தர் செய்யும் இரட்சிப்பைப் பார்க்க**" வேண்டிய அநேக அனுபவங்களுக்குள்ளாக தேவன் நம்மையும் நடத்திக் கொண்டு போயிருப்பார். இந்த அனுபவங்கள் யாவும் நமது விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்காகவே தேவனால் அனுமதிக்கப் படுகின்றன. இஸ்ரயேலருக்கும் அவ்வாறே நடந்தது. அங்கே தேவன் அவர்கள் முன்பாக சமுத்திரத்தின் ஜலத்தைப் பிளந்து நிற்கச் செய்தார் – ஒருவேளை, இயற்கை நிகழ்வுகளாகிய கடல் உள்வாங்குதல் (ebb tide) மற்றும் பலமான வடகாற்று என்பவை மூலம் – ஒரு மணல் திட்டுச் சிறிது நேரத்திற்கு வெளியே காணப்பட்டு, அதன் வழியாக இஸ்ரயேலர் அக்கரைக்குக் கடந்து சென்றிருக்கலாம்.

இஸ்ரயேலர் சமுத்திரத்தின் நடுவே இருபுறமும் பார்த்துக்கொண்டே கடந்து செல்லுகையில், தற்காலிகமாகப் பிரிந்து நின்ற தண்ணீர் சீக்கிரமே ஒன்று சேரப்போகிறது என்பதை உணர்ந்திருப்பார்கள். இருப்பினும், எகிப்திலிருந்தபோது தேவன் எவ்வாறு தங்களை வழிநடத்தினார் என்பதையும், பார்வோனின் கையிலிருந்து அவர் எவ்வாறு தங்களை விடுவித்தார் என்பதையும் **நினைவுகூர்ந்தவர்களாய்**, அவர்களால் இப்போது சரியான விதத்தில் செயல்பட முடிந்தது; தண்ணீர் மீண்டும் ஒன்று சேருவதற்கு முன்பாக அதே தேவன் தங்களை அக்கரைக்குக் கொண்டு சேர்ப்பார் என்று நம்புவதன் மூலம், அவர்களால் தங்கள் விசுவாசத்தை (கடந்த கால தயவுகளுக்கான நன்றியுணர்வையும்) வெளிப்படுத்திக் காண்பிக்க முடிந்தது மற்றும் நிரூபிக்கவும் செய்தார்கள். இப்படியாக அவர்கள் அந்தப் பிளவுண்ட பாதையில் இறங்கி நடக்க, தேவனுடைய கரத்தினால் செங்கடலின் கிழக்குக் கரைக்குக் கொண்டு வரவும்பட்டார்கள்.

இங்கேதான் அவர்கள் பின்னோக்கிப் பார்க்கவும், "**தரித்து நின்று தேவனுடைய இரட்சிப்பைக் காணவும்**" அனுமதிக்கப்பட்டார்கள்! விசுவாசத்தைப் பயன்படுத்தி, அதனிமித்தம் கிடைத்த வெற்றியால் பலனடைந்த அவர்கள், எகிப்தை ஏக்கத்துடன் பின்னோக்கிப் பார்க்காமல், மாறாக விடுதலையடைந்த சந்தோஷத்தில் களிகூரச்செய்தார்கள்; அவர்கள் பின்னோக்கிப் பார்க்கையில், அந்த விசுவாசப் பாதையில் தகுதியற்ற முறையில் உட்புக முயற்சித்தவர்களுடைய முழுமையான அழிவைக் கண்டார்கள். ஆம்! துரத்தி வந்த எகிப்தியர் அழிக்கப்பட்டார்கள்! விசுவாசத்தின் இந்த வெற்றி இனி இந்த எகிப்தியரால் தங்களுக்கு ஒருபோதும் தொல்லை இல்லை என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்தியது. அந்த ஜெயத்தின் முழு மகிமையில் அவர்கள் மோசேயின் பாடலைப் பாடினார்கள். அவர்கள் எப்பேர்ப்பட்ட உற்சாகத்தோடும், சொல்லொண்ணா மகிழ்ச்சியோடும் அப்பாடலைப் பாடியிருப்பார்கள்! தேவ கரத்தினால் வழிநடத்தப்பட்டு, வாக்களிக்கப்பட்ட கானானை நோக்கிய தங்கள் பிரயாணத்தைத் தொடருவதற்கு இது எப்பேர்ப்பட்ட உந்துசக்தியாக இருந்திருக்கும்!

குறைந்தபட்சம் இந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது அவர்கள் தேவனைத் துதித்தார்கள் என்று சொல்லலாம். அந்தச் சமயத்தில் அவர்கள் மெய் மறந்து பாடியதாகவே தெரிகிறது, அவர்கள் பாடிய பாடலின் அழகைப் பாருங்கள்:

**யாத். 15:1, 2 – "கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றிசிறந்தார்; குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார். கர்த்தர் என் பெலனும் என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், அவருக்கு**

**வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்…"**

இருப்பினும், அவர்கள் இந்த மகிமைவாய்ந்த தேவனை வெகு விரைவிலேயே மறந்து, தங்கள்மேல் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள்; அதன் விளைவாகத் துதிப் பாடல்களுக்குப் பதிலாக முறுமுறுப்புகளே வெளிவரலாயின. விளைவு! "**தேவன் அவர்களை அரோசித்தார் (அருவருத்தார்)**," "**கானானும் இழக்கப்பட்டது.**" **(எபி. 3:10, 17 – 19; 1 கொரி. 10:5).**

பிரியமானவர்களே, இன்று நாமும் கூட, பூர்வகால இஸ்ரயேலரைப் போலவே தேவனுடைய பராமரிப்பின்கீழாக இக்கட்டான இடங்களுக்கு, அதாவது, மாம்சீகக் கண்ணோட்டத்தில் பார்த்தால் தப்பிக்க வழியே இருக்காது எனத் தோன்றும் இடங்களுக்குக் கொண்டு வரப்படுகிறோம். நாம் அதைப் பற்றி ஏதாகிலும் செய்தாக வேண்டும் என்று விரும்பினாலும், நம்மால் ஒன்றும் செய்ய இயலாத நிலையிலேயே காணப்படுவோம். இரட்சிப்பு வரவேண்டுமானால், அது தேவனிடமிருந்தே வர வேண்டும் என்பதே ஒரே தீர்வாக இருக்கும்! மிக்தோலுக்கும் சமுத்திரத்திற்கும் இடையில் அந்தப் பிகிரோத்தில் நின்றுகொண்டு, அவரை நமது பலத்த கோபுரமாகவும், நமது இரட்சிப்பின் தேவனாகவும் உற்றுநோக்க வேண்டியிருக்கும்.

ஆனால், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, "முன் செல்" என்கிற அவர் கட்டளைக்காக நாம் பொறுமையோடே தரித்து நிற்போமேயானால், (இஸ்ரயேலருக்காகச் செங்கடல் நீர் பிரிந்தது போல) இயற்கையின் விதிகள் செயல்படாமல் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தப்படுவதையும், விசுவாசம் நமக்கு முன்பாக ஒரு வழியைத் திறந்து வைப்பதையும் நாம் விரைவிலேயே காணத் தொடங்குவோம் – அந்த வழியில் நடப்பதற்கு நமக்கு விசுவாசம் தேவைப்படும். "**இனி நான் அல்ல, தேவனே செயல்படட்டும்!**" என்பதாக இருக்க வேண்டும் (Let go, and let God – நம் கட்டுப்பாட்டிலிருந்து கையை எடுத்துவிட்டு, தேவனிடம் கட்டுப்பாட்டை ஒப்படைப்பதாகும்.) இப்படியாக நம்மை முழுமையாக அவருடைய கரங்களில் ஒப்படைக்கும் போது, விசுவாசத்தின் ஜெயம் விரைவிலேயே நமக்குரியதாகும், நம்மாலும் விடுதலையின் பாடலைப் பாட முடியும்!

ஆனால், பெரும்பாலான சமயங்களில் நாம் தேவனையும் அவர் நமக்காகச் செய்த வல்லமையான செயல்களையும் எண்ணிப் பார்க்காமல், சுயத்தை அதிகமாகச் சிந்திக்கவும், சுயபச்சாதாபம் கொள்ளவும் ஆரம்பித்துவிடுகிறோம்; பாவத்திற்கு அடிமையாகக் காணப் பட்டாலும், கடந்த கால சிற்றின்பங்களுக்காக இயல்பாகவே ஏங்க ஆரம்பித்துவிடுகிறோம் – இதன் விளைவாக – நாமும் இஸ்ரயேலரைப் போல முறுமுறுத்து, குறைசொல்லத் தொடங்குகிறோம். இஸ்ரயேலர் அவரை அடிக்கடி மறந்துவிடும் பழக்கமுடையவர்களாய் இருந்தபோதிலும், தேவன் அவர்களைத் தொடர்ந்து நீடிய சாந்தத்தோடும் தயவோடும் கையாண்டார் என்பதைக் கவனிப்பது நலமாக இருக்கும். நம்மிடமும்கூட அவர் அவ்விதமே நடந்துகொள்கிறார். இருப்பினும், காதேஸ் பர்னேயாவில் (Kadesh Barnea), அவர்களைக் கானானுக்குள் கொண்டு செல்ல அவர் தொடர்ந்து முயற்சி செய்து வந்ததை நிறுத்திக் கொள்ளவும் ஒரு காலம் வந்தது என்பதை சிந்தையில் வைத்தவர்களாய், நாமும் தொடர்ந்து அவிசுவாசத்தோடு உண்மையற்றவர்களாய் ஜீவித்து, இந்த "இளைப்பாறுதலை" அடையாமல்

போகாதபடிக்கு ஜாக்கிரதையாக இருப்போமாக. அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை நாம் ஜெபத்தோடு கருத்தில் கொள்வோமாக:

**எபி. 3:12 – "சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்." (எபி. 4:8 – ஆம் வசனத்தையும் காண்க).**

நமக்கு முன்னால் இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன: ஒன்று, நம்மை மறந்து தேவனை மட்டுமே சிந்தித்துக்கொண்டிருப்பது; மற்றொன்று, தேவனை மறந்து நம்மைப் பற்றி மட்டுமே சிந்தித்துக்கொண்டிருப்பது. இதில் முதலில் உள்ளது விசுவாசமாகும், அதற்குத் தேவன் பலன் அளிப்பார்; மற்றொன்றோ அவிசுவாசம் மற்றும் கீழ்ப்படியாமையாகும், இதனிமித்தம் நாம் அவருடைய கடும் அதிருப்திக்கே ஆளாக நேரிடும். செங்கடலின் கிழக்குக் கரையில் இஸ்ரயேலர் பாடிய பாடல் ஒரு துதிப்பாடலாகும் (a hymn of praise), ஆனால் பாருங்கள், அவர்கள் தங்களை/சுயத்தை மறந்து, தேவனை நினைவுகூர்ந்ததால் மட்டுமே அவர்களால் அதனைப் பாட முடிந்தது. **ஆம் பிரியமானவர்களே, நாமும்கூட அந்த மறு கரையிலே மோசே மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலைப் பாட வேண்டுமானால், ஒவ்வொரு நாளும், கூடுமான அனைத்து வழிகளிலும் நம்மை / சுயத்தை மறந்து, தேவனையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை மனதில் வைப்போமாக**.

வேதாகமப் பதிவானது, மோசே அவர்களைச் செங்கடலிலிருந்து சூர் (Shur) வனாந்தரத்திற்கு அழைத்துச் சென்றார் என்றும், **"மூன்று நாள்"** அந்த வனாந்தரத்தில் பிரயாணம் செய்தார்கள் என்றும் நமக்குத் தெரிவிக்கின்றது **(யாத். 15:22)**. **"இப்பொழுதும் நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி எங்களைப் போகவிட வேண்டும்" (யாத். 3:18)** என்கிற காரணத்திற்காகவே இஸ்ரயேலர் எகிப்திலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டியுள்ளதென பார்வோனுக்குச் சொல்லப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். ஒருவேளை பார்வோனிடம் மோசே குறிப்பிட்ட அந்த வனாந்தரம் இந்தச் சூர் வனாந்தரமாக இருக்கலாம் (ஏத்தாம் வனாந்தரம் என்றும் அழைக்கப்படுகிறது – **எண். 33:8**). இங்குதான், "**மூன்று நாள் பிரயாணம்**" என்பது முதன்முதலில் குறிப்பிடப்படுகிறது. அவர்கள் செங்கடலின் அக்கரைக்குச் சென்ற பின்னரே எகிப்தியரின் கைகளிலிருந்து உண்மையில் தப்பினார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளும் போது, இதுவே அந்த வனாந்தரம் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

- ஆனால், அவர்கள் சொன்னபடி கர்த்தருக்குப் பலியிட்டார்களா? வாருங்கள் பார்க்கலாம்!

அவர்கள் மத்தியில் ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப்பாடால், அவர்கள் தாகத்தோடு காணப்பட்ட சூழலொன்று ஏற்பட்டது. இதுகுறித்து நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

**யாத். 15:22 – 24 – "...அவர்கள் சூர் வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்று நாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். அவர்கள் மாராவிலே வந்தபோது, மாராவின் தண்ணீர் கசப்பாயிருந்ததினால் அதைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; ... அப்பொழுது ஜனங்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: என்னத்தைக் குடிப்போம் என்றார்கள்."**

மனித இருதயம் எப்பேர்ப்பட்டது என்பதை எவ்வளவு அருமையாக இது சித்தரிக்கிறது! தேவனையும் அவர் செய்த பலத்த செய்கைகளையும் மனித இருதயம் எத்துணை சீக்கிரத்தில் மறந்துவிடுகிறது! தேவனுடைய முகப்பிரகாசத்தின் மகிமையான ஒளியில், விசுவாசத்தின் மலை உச்சியில் தங்கியிருப்பதற்குப் பதிலாக, உலகம், மாம்சம் அல்லது பிசாசின் கண்ணியினால், அந்தகார மரண இருளின் பள்ளத்தாக்கிற்குள் அது தன்னைத்தானே விழத்தள்ளிக் கொள்கிறது. தேவனுக்கு ஸ்தோத்திர பலிகளைச் செலுத்துவதற்குப் பதிலாக, அது முறுமுறுத்து குறை கூறுகிறது; ஏன்? ஏனெனில், இருதய சிங்காசனத்தில் தேவன் வீற்றிருக்க வேண்டிய இடத்தில் 'சுயம்' வீற்றிருப்பதால்தான் இந்தச் சிரமமே!

சங்கீதக்காரன் இதை எவ்வளவு அழகாகப் பின்வரும் வசனத்தில் கூறியிருக்கிறார்:

**சங். 107:21, 22 – "அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே (எபிரெயு பாஷையில் – பாடிக்கொண்டே) விவரிப்பார்களாக."**

இஸ்ரயேலர் தேவனை மறந்துவிட்டு, சுயத்தை நினைத்தார்கள்; இதனால் துதி மற்றும் ஸ்தோத்திர பலிகளுக்குப் பதிலாக மாம்சத்தின் முறுமுறுப்புகள் வெளிவரலாயின. ஆனாலும் தேவன் தமது மகா கிருபையினால் அவர்களுடன் தொடர்ந்து போராடி (பிரயாசப்பட்டு) வந்தார்.

தமது மேற்பார்வையின்படி அவர்களை மாராவிற்கு வழிநடத்தினது தேவன் தான் என்றாலும், அவர் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அந்தக் கசப்பான தண்ணீரையும், கடினமான பாதையையும் அவர் தடைசெய்திருக்கலாமே? அவரால் முடியும்தானே?! அவரால் முடியாதது ஒன்றுமில்லையே! ஆனால் பாருங்கள், **தேவனை மையமாகக் கொண்ட இருதயத்திற்கோ, இவை யாவும் அவரை இன்னும் நெருங்கிச் சேருவதற்கான படிக்கற்களே!**

தேவன் தமது ஜனத்தை மறக்கவில்லை, அவர்களே அவரை மறந்தார்கள். இப்படியாக, பிரயாணம் தொடங்கிய சில நாட்களிலேயே, இரண்டாம் முறையாக அவர்கள் மீண்டும் முறுமுறுத்தார்கள். அவர்கள் மிகவும் தாகமாக இருந்ததும், அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்ததும் உண்மைதான். அந்தச் சமயத்தில், திடீரென்று அவர்கள் முன்பாக ஒரு நீரோடை தென்பட, அதில் தாகம் தீர்த்துக்கொள்ள எத்தனித்தனர். ஆனால், தங்களை அந்த நீரோடைக்கு வழிநடத்திய தேவனைத் துதிப்பதற்குப் பதிலாக, அவர்கள் இன்னுமே தங்களைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. நிச்சயமாக, இத்தகைய எண்ணங்கள் இந்த யாத்ரீகப் பிரயாணத்தில் முன்னேறிச்செல்வதற்கு ஏற்புடையதல்லவே!

ஒருவேளை அவர்கள் விசுவாசத்தைப் பயிற்றுவித்து, அந்தக் கானானை ஏற்கெனவே அடைந்துவிட்டதுபோல நினைத்திருந்தால், மாம்சத்திற்கு ஏற்பட்ட கஷ்டங்கள் யாவும் அவர்களுக்கு இலேசான உபத்திரவங்களாகவே தோன்றியிருக்கும், அவற்றை அவர்களால் எளிதில் சகித்திருக்கவும் முடியும். ஆனால், மாராவில் அவர்கள் கண்டடைந்த தண்ணீர் கசப்பாக இருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள்; பார்க்கப்போனால் அது

தேவனுக்கு விரோதமான முறுமுறுப்பாகும். இருப்பினும், கிருபை பொருந்திய தேவன் அவர்களுக்குச் செவிகொடுத்தார், தமது அன்பு மற்றும் உருக்கமான இரக்கத்தினால் அவர்களுக்குப் புத்துணர்ச்சி அளித்து ஆசீர்வதித்தார். "**கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன் தண்ணீரில் போட்டவுடனே, அது மதுரமான தண்ணீராயிற்று**" **(யாத். 15:25).**

பிரியமானவர்களே, பல நேரங்களில் நம்மையும் தேவன் சில கசப்பான தண்ணீரண்டைக்குக் கொண்டு வர வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. ஆனால், அந்தச் சமயத்தில் நாம் தேவனை நினைவுகூருவோமானால், அந்தக் கசப்புகளும்கூட இயேசுவின் சிலுவை மரத்தினால் மதுரமாக்கப்படுவதை நம்மால் காண முடியும். ஆம்! **அந்தச் சிலுவையே, அடிக்கடி கசப்பு கலந்துவிடும் நமது வாழ்க்கையின் நீரோட்டத்தில் வீசப்படும் மரமாகும்**; எப்படியெனில், 'ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் நமது நித்திய சுதந்திரமாகிய தேவனுடைய கானான் இளைப்பாறுதலுக்கு நெருக்கமாய் நாம் கொண்டு வரப்படுகிறோம்' என்கிற எண்ணத்தால் அந்தக் கசப்பு நம் வாழ்விலிருந்து நீக்கப்படுகிறது. இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்தச் சந்தர்ப்பத்தில், இஸ்ரயேலர் மகா கிருபை பொருந்திய தங்கள் தேவனுக்கு ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தியதாக ஒரு வார்த்தை கூட



பதிவு செய்யப்படவில்லை. அவர் இரக்கப்பட்டு, தங்கள் பேரில் காண்பித்த கிருபைகளை, (அவர் தங்களுக்குச் செய்தாக வேண்டிய கடமை என்பது போல) அவர்கள் சர்வசாதாரணமாக எடுத்துக் கொண்டார்கள்.

அந்தப் பூர்வகால இஸ்ரயேலரைப் போலவே, நாமும் தேவன் நமக்குப் பாராட்டும் இரக்கங்களையும் தயவுகளையும் மதித்துணரத் தவறுகிறோம் என்றே நான் நினைக்கிறேன். 'இவற்றையெல்லாம் செய்வது அவருடைய கடமை!' என்பது போல நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம். நாம் அடிக்கடி தேவனை மறந்து, குறைந்தபட்ச நன்றியுணர்வைக்கூட வெளிப்படுத்தத் தவறிவிடுகிறோம். **நமது முறுமுறுப்புகளுக்கெல்லாம் தேவன் கிருபையாகப் பதிலளித்ததைக் கண்டு, அவர் எப்போதும் அப்படியே கிருபை செய்வார் என்று நாம் எண்ணிவிடக் கூடாது.** பூர்வகால இஸ்ரயேலரிடம் செய்தது போலவே, நம்மை கானானுக்குள் கொண்டு வர அவர் தரப்பில் பிரயாசப்படுவதை நிறுத்த வேண்டிய ஒரு காலம் வரும். தேவனுடைய மெய்யான இஸ்ரயேலராகிய நமக்கு வரும் அனைத்துச் சோதனைகளும் அனுபவங்களும் அவராலேயே அனுமதிக்கப்படுகின்றன; அவை எல்லாம் நம்மை ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்திரத்திற்குப் பாத்திரவான்களாக மாற்றுவதை மாத்திரமே நோக்கமாகக் கொண்டு அனுமதிக்கப்படுகின்றன **(கொலோ. 1:12)**. **எனவே, அவரை மறவாமல் எப்போதும் போற்றித் துதிப்போமாக; இதுவே வனாந்தரப் பிரயாணத்தில் நாம் செலுத்த வேண்டிய ஏற்புடைய பலியாக இருக்கும்.**

அடுத்து, தேவன் இஸ்ரயேல் ஜனங்களை வழிநடத்திச் சென்ற இடம் **ஏலிம்** (Elim). அங்கே "**பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்ச மரங்களும் இருந்தன**" **(யாத். 15:27)**. அவர்கள் "**அங்கே தண்ணீர் அருகே பாளயமிறங்கினார்கள்**" என்று வேதாகமம் கூறுகிறது. இங்கே அவர்கள் முறுமுறுத்ததாக எந்தப் பதிவுமில்லை. அதே சமயம், தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், அவர்கள் அதற்காக துதித்தார்கள் என்பதாகவும் எந்தப் பதிவுமில்லை. '**ஒருவேளை நமது வாழ்க்கையில் நமக்கு அனைத்தும் நன்றாகப் போய்க்கொண்டிருந்தால், தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுக் காணப்பட்டால், நாம் யேகோவா தேவனுக்கு முன்பாக அதிக ஏற்புடைய வாழ்க்கை வாழ்ந்துவிடலாம்**' **என்று ஒருபோதும் தவறாக நினைத்துவிட வேண்டாம் சகோதர சகோதரிகளே. இதற்கு முற்றிலும் மாறான ஒரு பாடத்தையே அனுபவம் நமக்குப் போதிக்கின்றது.**

சிகாகோவைச் சேர்ந்த பேராசிரியர் வீமன் (Wieman) என்பவர் தனது கல்லூரி கால நண்பன் (roommate) சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தைக் குறித்து பொதுவாகச் சொல்லுவார். ஒரு சமயம் அந்த நண்பன் தன் அறிவுத்திறனை மேம்படுத்த எண்ணி, இரவு நேரத்தில் மனதை ஒருமுகப்படுத்திப் படிக்க நினைத்தாராம். அதற்காகச் சௌகரியமான ஒரு நாற்காலி, படிக்கும்போது அணியும் காலணிகள் (slippers), மற்றும் ஒரு தளர்வான மேலங்கி (lounging jacket) ஆகியவற்றையும் வாங்கிக்கொண்டாராம். கண்களுக்குச் சரியான கோணத்தில் புத்தகத்தை வைக்க உதவும்படியாக ஒரு புத்தகத் தாங்கியும் (book rack) நாற்காலியின் பக்கவாட்டில் பொருத்தப்பட்டது. கண்கள் கூசாமல் இருப்பதற்காகத் திரையிடப்பட்ட விசேஷித்த விளக்கு ஒன்றும் பொருத்தப்பட்டது, பென்சில்கள், காகிதத்தாள்கள் மற்றும் சுழலும் புத்தக அலமாரி என அனைத்தும் ஆயத்தம் செய்யப்பட்டன. அந்த நண்பன் மாலையில் வீட்டிற்கு வந்து, மேலங்கியைக் கழற்றிவிட்டு, சட்டையையும், காலணிகளையும் அணிந்துகொண்டு,

நாற்காலியில் வசதியாக அமர்ந்து, கண் திரையைச் சரிசெய்த பின் – படிப்பாராம், இல்லை இல்லை, “தூங்கிவிடுவாராம்!” என்பதே அந்தச் சம்பவமாகும்.

நமக்கும்கூட அப்படியாகத்தான் உள்ளது; நமது (ஆவிக்குரிய) சோம்பலிலிருந்து நம்மை எழும்பச் செய்வதற்கு நமக்குச் சில அசௌகரியமான அனுபவங்கள் தேவைப் படுகின்றன. **“பாலுந் தேனும் ஓடுகிற வாக்களிக்கப்பட்ட தேசத்தின்”** மீது அதிக வாஞ்சையை அவர்களில் உண்டுபண்ணுவதற்காக, தேவன் இஸ்ரயேலருக்கு வழியைக் கடினப்படுத்த வேண்டியிருந்தது. இதுவே மோசேயின் பின்வரும் வார்த்தைகளின் கருத்தாகும் என்பதில் சந்தேகமில்லை:

**உபா. 32:10 – 12 – “பாழான நிலத்திலும் ஊளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார், அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப்போலக் காத்தருளினார். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டுபோகிறதுபோல, கர்த்தர் ஒருவரே அவனை வழி நடத்தினார்.”**



ஆம்! தூரத்து மலையுச்சி இடுக்கினில், மனிதர் எவரும் எட்ட முடியாத உயரத்தில் ஒரு சிறிய கூட்டில் இருக்கும் கழுகுக் குஞ்சுகள், தங்கள் கூட்டிற்குள் மிகவும் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருக்கும். அந்த வசதி அவற்றுக்கு மிகுந்த திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும்; தாய்க் கழுகே அவற்றுக்கு உணவையும் கொண்டு வந்துவிடும் என்பதால், அந்தச் சௌகரியமான கூட்டை விட்டு அவை வெளியே வர என்ன தேவை இருக்கப்போகிறது? ஆனால், தன் குஞ்சுகள் தொடர்ந்து இப்படிப்பட்ட சூழலில் காணப்பட்டால், அவை ஒருபோதும் பறக்கக் கற்றுக்கொள்ளாது என்பதைத் தாய்க் கழுகு உள்ளுணர்வாக அறிந்திருப்பாள்; எனவே, அவற்றை வெளியேற்று வதற்காக அவள் தன் கூட்டைக் கலைக்க முற்படுவாள். ஒருவேளை சிறிய கூர்மையான குச்சிகளையோ அல்லது முட்களையோ கொண்டு வந்து, தன் குஞ்சுகளுக்கு அசௌகரியத்தை உண்டாக்கும்படியாக கூட்டின் பக்கவாட்டில் சொருகி வைக்கக்கூடச் செய்வாள். என்ன ஆனாலும் சரி, அவள் தன் கூட்டைக் கலைக்கவே முற்படுவாள்.

இப்படிப்பட்ட சூழலில், அந்தக் கழுகு குஞ்சுகள் சௌகரியமான இடத்தைத் தேடித் தேடி கூட்டின் விளிம்பிற்கே வந்துவிடும்; அப்போது தாய்க் கழுகு, திடீரென்று தன் சிறகுகளைப் படபடவென்று அடிக்கத் தொடங்குவாள், குஞ்சுகளோ கூட்டின் விளிம்பிற்கு அப்பால் தள்ளப்பட்டு, ஏதோ அதலபாதாளத்தில் விழுவது போல, விழத் தொடங்கும். அப்பொழுது அவை பறப்பதற்கு முயற்சி செய்யும், இதுதான் அத்தாய்க் கழுகுக்கும் தேவை; உடனே அவள் தன் சிறகுகளை விரித்து, விழுந்துகொண்டிருக்கும் தன் குஞ்சுகளுக்கு அடியில் சென்று, அவற்றைத் தாங்கிப்பிடித்து, பாதுகாப்பாக மீண்டும் கூட்டிற்கே கொண்டு வந்துவிடுவாள். இப்படித்தான் அவை பறக்கக் கற்றுக்கொள்கின்றன. இவ்வாறே தேவனும் யாக்கோபை (அதாவது இஸ்ரயேல் புத்திரரை) அவர்களின் வனாந்தரப் பயணத்தில் நடத்தினார், நம்மையும் அவ்வாறே நடத்துகின்றார்! (தேவனுக்கு ஸ்தோத்திரம்!)

உண்மைதான், நாம் நமது பரம கானானை அடைவதற்கு முன்பே, தேவன் நமக்குப் பல சமாதானமும், இளைப்பாறுதலும், மனநிம்மதியும் நிறைந்த தருணங்களைக் கிருபையாக வழங்குகின்றார் – ஆம்! நம்மில் ஒவ்வொருவருக்கென்று ஏலிம்கள் (Elims) இருக்கவே செய்கின்றன. ஆனால் இவற்றின் நோக்கம், நாம் இப்பேர்ப்பட்ட சமயங்களில் சுயதிருப்தி அடைந்து, சௌகரியமாக நேரத்தை விரயம் செய்யலாம் என்பதல்ல; மாறாக, … மாறாக … நாம் இன்னும் கடக்க வேண்டியுள்ள எஞ்சிய வனாந்தரப் பாதையின் கடினத்தன்மையைச் சிறப்பாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆவிக்குரிய ஆற்றலைப் புதுப்பித்துக்கொள்வதே இவற்றின் நோக்கமாகும். எனவே, நமது ஜீவியம், நமது விசுவாசம் மற்றும் அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பது எனும் பாடலினால் நாம் அவரைப் போற்றித் துதித்து, அவருடைய தயவுகளையும் உருக்கமான இரக்கங்களையும் நாம் எவ்வளவாய் மதித்துணருகிறோம் என்பதை ஜீவித்து மெய்ப்பிப்போமாக!

இந்த ஆசீர்வதிக்கப்பட்ட பாலைவனச் சோலைகளை (Oases) விட்டு வெளியேறி, அந்தப் பயங்கரமான வனாந்தரத்திற்குள் நுழைய வேண்டிய நேரம் வரும்போது, நாம் இளைப்பாறுதலான ஏலிமை விட்டுப் பிரிவதற்குத் தயங்கவே கூடாது; மாறாக, அதிலிருந்து பெற்றுக்கொண்ட புத்துணர்ச்சியோடு, “நம்மை வழிநடத்துவது தேவனே!” என்ற முழு நிச்சயத்தோடு கடினமான பாதையில் அடுத்த அடியை எடுத்து வைத்து முன்செல்வதே சாலச்சிறந்ததாகும். அவருடைய பரிசுத்த நாமத்திற்கே துதி உண்டாவதாக!

சுயத்தை மறந்து, தேவனை மட்டுமே நினைவில் வையுங்கள்; அப்போது உங்களுக்கு நேரிடும் சோதனைகள் மற்றும் கஷ்டங்களுக்கு மத்தியிலும்கூட, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்; ஏனெனில், **“உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை!” (பிலி. 4:7; சங். 119:165).** ஆமென்!

# பாகம் ஐந்து

## யாத்திராகமம் 16:1 - 35; எண்ணாகமம் 33:10,11

“இஸ்ரயேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் ஏலிமைவிட்டுப் பிரயாணம் பண்ணி, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே, ஏலிமுக்கும் சீனாய்க்கும் நடுவே இருக்கிற சீன்வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். அந்த வனாந்தரத்திலே இஸ்ரயேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப் பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன். ஆறாம் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம்பண்ணி வைக்கக்கடவர்கள் என்றார். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரயேல் புத்திரர் எல்லாரையும் நோக்கி: கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள்; விடியற்காலத்தில் கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள். பின்னும் மோசே: சாயங்காலத்தில் நீங்கள் புசிக்கிறதற்குக் கர்த்தர் உங்களுக்கு இறைச்சியையும், விடியற்காலத்தில் நீங்கள் திருப்தியடைகிறதற்கு அப்பத்தையும் கொடுக்கையில் இது விளங்கும்; கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றான். அப்பொழுது மோசே ஆரோனைப் பார்த்து; நீ இஸ்ரயேல் புத்திரராகிய சபையார் எல்லாரையும் நோக்கி: கர்த்தருடைய சந்நிதியில் சேருங்கள், அவர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டார் என்று சொல் என்றான். ஆரோன் இஸ்ரயேல் புத்திரராகிய சபையாருக்கெல்லாம் இதைச் சொல்லுகிறபோது, அவர்கள் வனாந்தரதிசையாகத் திரும்பிப்பார்த்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை மேகத்திலே காணப்பட்டது. கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரயேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்; நீ அவர்களோடே பேசி, நீங்கள் சாயங்காலத்தில் இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திருப்தியாகி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார். சாயங்காலத்தில் காடைகள் வந்து விழுந்து பாளயத்தை மூடிக்கொண்டது. விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றி பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது. இஸ்ரயேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று

அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம். கர்த்தர் கட்டளையிடுகிறது என்னவென்றால், அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக்கொள்ளக்கடவன் என்றான். இஸ்ரயேல் புத்திரர் அப்படியே செய்து, சிலர் மிகுதியாயும் சிலர் கொஞ்சமாயும் சேர்த்தார்கள். பின்பு, அதை ஓமரால் அளந்தார்கள்: மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியானதும் இல்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள். மோசே அவர்களை நோக்கி: ஒருவனும் விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் வைக்கக் கூடாது என்று அவர்களுக்குச் சொல்லியும்; மோசேயின் சொல் கேளாமல், சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. அவர்கள்மேல் மோசே கோபங்கொண்டான். அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள், வெயில் ஏறஏற அது உருகிப்போம். ஆறாம் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதமாக இரண்டத் தனையாய் ஆகாரம் சேர்த்தார்கள்; அப்பொழுது சபையின் தலைவர் எல்லாரும் வந்து, அதை மோசேக்கு அறிவித்தார்கள். அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றான். மோசே கட்டளையிட்டபடியே, அதை மறுநாள்வரைக்கும் வைத்துவைத்தார்கள்; அப்பொழுது அது நாறவும் இல்லை, அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை.



**அப்பொழுது மோசே: அதை இன்றைக்குப் புசியுங்கள்; இன்று கர்த்தருக்குரிய ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே காணமாட்டீர்கள். ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது என்றான். ஏழாம்நாளில் ஜனங்களில் சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; அவர்கள் அதைக் காணவில்லை. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்? பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால், அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டுநாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்; ஏழாம்நாளில் உங்களில் ஒருவனும் தன்தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்கவேண்டும் என்றார். அப்படியே ஜனங்கள் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்கள். இஸ்ரயேல் வம்சத்தார் அதற்கு மன்னா என்று பேரிட்டார்கள்; அது கொத்துமல்லி அளவாயும் வெண்மைநிறமாயும் இருந்தது, அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது. அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால், நான் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, வனாந்தரத்தில் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியார் பார்க்கும்படிக்கு, அவர்களுக்காக அதைக் காப்பதற்கு, அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்கவேண்டும் என்றான். மேலும், மோசே ஆரோனை நோக்கி: நீ ஒரு கலசத்தை எடுத்து, அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப் போட்டு, அதை உங்கள் சந்ததியாருக்காகக் காப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியிலே வை என்றான். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அது காக்கப்படும்படி ஆரோன் அதைச் சாட்சி சந்நிதியில் வைத்தான். இஸ்ரயேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பது வருஷமளவும் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேரும் வரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள்.'' (யாத்திராகமம் 16:1 – 35)**

**“ஏலிமிலிருந்து புறப்பட்டு, சிவந்த சமுத்திரத்தின் அருகே பாளயமிறங்கினார்கள். சிவந்த சமுத்திரத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், சீன் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.'' (எண்ணாகமம் 33:10, 11)**

இஸ்ரயேலர் ஏலிமிலே 70 பேரீச்ச மரங்களின்கீழ் இளைப்பாறி, 12 நீரூற்றுகளிலிருந்து தாகம் தீர்த்துக் கொண்டபோதிலும், தேவன் தங்களுக்குச் செய்த சகல இரக்கங்களுக்காகவும் உபகாரங்களுக்காகவும் அவர்கள் துதித்ததாகவோ நன்றி செலுத்தினதாகவோ பதிவு செய்யப்படவில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். அவர்கள் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கிய நாள் முதற்கொண்டு, ஒரேயொரு முறை மட்டுமே தங்கள் குரல்களை உயர்த்தி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; மிகுந்த உற்சாகத்தோடு அவர்கள் அதனைப் பாடியிருந்தாலும், அந்தப் பாடலையும்கூட மோசேதான் அவர்கள் வாயில் போட வேண்டியதாயிருந்தது: **“அப்பொழுது மோசேயும் இஸ்ரயேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடின பாட்டு...'' (யாத். 15:1)**. இருப்பினும், அவர்கள் பிககிரோத்திலும் **(யாத். 14:10 – 12)**, மாராவிலும் **(யாத். 15:24)** முறுமுறுக்கவே செய்தார்கள்!

மனித இருதயத்தைப் படம்பிடித்துக் காட்டும் எப்பேர்ப்பட்ட படம் இது! நமது இருதயம் ஒரு தோட்டத்தைப் போன்றதாகும்; அங்கே அழகான, மணம் வீசும் மலர்கள் வளர வேண்டுமானால், அங்கே அதிகப்படியான பண்படுத்துதல், பராமரிப்பு மற்றும் கவனம் தேவைப்படும் (**ஆம்! துதி**

செலுத்துவதற்கு விசேஷித்த தூண்டுதல் தேவைப்படுகிறது); மறுபுறம், களைகளோ எந்தவொரு பராமரிப்பும் இல்லாமலே ஏராளமாய்ப் பெருகிடும் (ஆம்! இயல்பாகவே பண்படுத்தப்படாத மனித இருதயம் எனும் மண்ணிலிருந்து முறுமுறுப்புகள் வெளிப்படும்).

இன்றைய பாடத்தில், ஏலிமுக்கும் சீனாய்க்கும் இடையில் காணப்பட்ட சீன் வனாந்தரத்திற்குள் இஸ்ரயேலர் உட்பிரவேசிப்பதாகக் காண்கிறோம். அவர்கள் "**எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு**," பிரயாணம் செய்யத் தொடங்கி, சரியாக ஒரு மாதம் ஆகியிருந்தது **(யாத். 16:1)**. பதிவு என்ன சொல்கிறதெனில்: "**அந்த வனாந்தரத்திலே இஸ்ரயேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் நாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்து வந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள்**." **(யாத். 16:2, 3)**.

நிச்சயமாக அவர்கள் பசியாயிருந்தார்கள் என்பது உண்மைதான், மறுப்பதற்கில்லை! ஆனால், தங்களை அற்புதமாக விடுவித்து, இம்மட்டும் வழிநடத்தி வந்த சர்வவல்ல தேவனிடமே தங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திக்கும்படி அவர்கள் விண்ணப்பித்து இருக்கலாம் அல்லவா? எவ்வளவு சீக்கிரத்தில் தங்கள் தேவனை மறந்துபோனார்கள்! மெய்யாகவே! அவர்கள் "**தங்கள் இருதயங்களிலே எகிப்துக்குத் திரும்பினார்கள்**" **(அப். 7:39)**. மனவருத்தமடைந்த தேவன் அவர்கள்பேரில் வெறுப்புக்கொண்டதில் எந்த ஆச்சரியமும் இல்லை. "**ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி; என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்**" **(எபி. 3:10, 11)**. ஆம்! ஒவ்வொரு முறுமுறுப்பும் உள்ளத்தின் முறுமுறுப்பாக இருந்தன!

எகிப்தில் தாங்கள் அனுபவித்த உபத்திரவங்களையோ, தங்களை ஒடுக்கினவர்களின் கொடுமையினிமித்தம் தாங்கள் இட்ட கூக்குரலையோ, தங்கள் தேவனின் கரத்தினால் இவற்றிலிருந்து எல்லாம் தாங்கள் பயங்கரமாய் விடுவிக்கப்பட்டதையோ அவர்கள் நினைவுகூரவில்லையே! **(யாத். 3:7, 8)** பிககிரோத்தில் தேவன் அவர்களைச் சிவந்த சமுத்திரத்தின் வழியே கடந்து போகச் செய்து, எகிப்திய சேனையின் முழுமையான அழிவைக் காணச் செய்த அந்த அற்புதமான இரட்சிப்பை அவர்கள் மறந்துபோனார்களே! **(யாத். 14:29, 30)** தேவன் மாராவின் கசப்பான நீரை மதுரமாக மாற்றித்தந்ததையும் மறந்துபோனார்களே! **(யாத். 15:23 – 25)** ஆச்சரியம் என்னவெனில், இந்த அற்புதங்கள் யாவும் வெறும் ஒருமாத காலத்திற்குள்ளாக நிகழ்ந்தவையாகும். நிச்சயமாக, இவற்றையெல்லாம் மறந்துவிடுவதற்கு இது ஒன்றும் நீண்ட காலம் கிடையாதே!

ஆனால், மனித இருதயம் எத்துணை மாறுபாடானது / தாறுமாறானது (perverse) என்பதை இப்போது பார்க்கலாம். (சரி! அவர்கள் தேவனை நினைக்கவில்லை என்றால்,) வேறு எதைதான் நினைவில் வைத்திருந்தார்கள்? ஆச்சரியம் என்னவெனில் அவர்கள் தங்களை ஒடுக்கிய அதே எகிப்தைத்தான் நினைவில் வைத்திருந்தார்கள்; அதிலும் "**நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்து**

**தேசம்**" என்பது மட்டுமே நினைவிருந்தது **(யாத். 16:3)**. ஒருவர் இதனை மிகவும் சரியாகப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> **"ஒரு சிறிய அற்ப விஷயம் நமக்குக் குறைவுப்படும்போது, அதற்கு முன்பு நாம் அனுபவித்த பத்தாயிரம் கிருபைகள் யாவையும் மறந்து போகிறோம். பாருங்கள்! நமது பாவங்கள் தாராளமாக மன்னிக்கப்பட்டு, 'பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு,' தேவனுக்குச் சுதந்தரராகவும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் ஆக்கப்பட்டு, நித்திய மகிமையை எதிர்நோக்கி இருக்கிறவர்களாய் நாம் காணப்படுகிறோம்; இவை அனைத்திற்கும் மேலாக, நமது வனாந்தரத்தின் பாதையெங்கிலும் எண்ணற்ற கிருபைகள் பொழியப்படுகின்றன. இத்தனை இருப்பினும், நமது உள்ளங்கை அளவே உள்ள சிறு மேகமொன்று அடிவானத்தில் தோன்றினால் போதும் – இறுதியில் அது "நம் தலையில் ஆசீர்வாதங்களையே பொழியக்கூடும்" என்றாலும் – அந்தச் சிறு மேகத்தைக் கண்டு இதற்கு முன் நாம் அனுபவித்த அநேக இரக்கங்களை உடனே மறந்து போகிறோம்."**

இஸ்ரயேலர் பசியுடன் இருந்ததோ, அல்லது அதற்கான போஜனத்தை விரும்பியதோ தவறு கிடையாது, தேவனும் அதற்காக அவர்களைக் கண்டிக்கவுமில்லை. மாறாக, கடந்த காலங்களில் தாம் அவர்கள் மேல் பொழிந்தருளின நன்மைகளையும் உபகாரங்களையும் அவர்கள் மதித்துணராமலும் நினைவுக்கூராமலும் போனதே தேவனுடைய மனதைத் துக்கப்படுத்தியது. இதுவே இறுதியில் அவர்களின் வீழ்ச்சிக்குக் (பின்மாற்றத்திற்கு) காரணமாக அமைந்தது. தொடர்ந்து அவர் வழங்கிய நன்மைகளை மதித்துணராமலும் நன்றி செலுத்தாமலும் அவரை நினைவுகூராமலும் இருப்பதென்பது, தேவனுடைய பார்வையில் உண்மையற்றத்தன்மையின் (unfaithfulness) அளவுகோலாகக் காணப்படுகிறது; ஆம்! அவநம்பிக்கையும் கீழ்ப்படியாமையும் ஒருவருக்குக் கூடுதல் கிருபையும், தனக்கான "**கானான் இளைப்பாறுதலையும்**" கிடையாதபடிக்குத் தடுத்து நிறுத்திவிடும் காரணிகளாகும்.

தேவன் அவர்களுடைய தேவைகளை அறிந்திருந்தார் என்பது உண்மைதான் என்றாலும், ஏன் அவர் அவற்றை (முன்கூட்டியே) வழங்கவில்லை என்கிற கேள்வி எழுகிறது. ஏனெனில், விசேஷமாய் ஆபிரகாமிடம் காணப்பட்ட அப்பேர்ப்பட்ட ஜெயங்கொள்ளும் விசுவாசத்தை அவர்களுக்குள்ளும் வளரச் செய்ய வேண்டுமென தேவன் விரும்பினார்! அவர்கள் தங்கள் தகப்பனாகிய ஆபிரகாமின் விசுவாசத்தைப் போன்ற ஒன்றை வெளிப்படுத்தி, அவருடைய கிரியைகளைச் செய்தால் மாத்திரமே, அவர்களால் உண்மையில் அவருடைய பிள்ளைகளாக இருக்க முடியும்! **(யோவான் 8:39)** முறுமுறுப்பதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும், அவர்கள் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்தியிருக்கலாம்.

பிரியமானவர்களே, இந்த வாய்ப்புகள் தேவனாலேயே வடிவமைக்கப்பட்டுத் தரப்பட்டவை என்பதை நாம் மனதில் வைப்போமாக. எப்பேர்ப்பட்ட பாடம் இதில் நமக்கு இருக்கிறது! **நாம் சோதனைகளையும் ஏமாற்றங்களையும் சந்திக்கும் போது, அவற்றின் மூலம் நாம் நம் விசுவாசத்தைச் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகளையே அவர் நமக்கு வழங்குகிறார் என்பதை நினைவில் வைப்போமாக; அதே சமயம், அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி நாம்,**

**பூர்வகால இஸ்ரயேலரைப் போல, மாம்ச புயத்தின் மீது அதீத நம்பிக்கை வைத்து, முறுமுறுப்பதற்கும், குறை கூறி புலம்புவதற்கும்கூட வாய்ப்புள்ளது என்பதையும் நினைவில் வைப்போமாக.** அவர்களுக்கு நேரிட்ட காரியங்கள் திருஷ்டாந்தங்களாக அல்லது நிழல்களாகச் சம்பவித்தன என்பதையும், யுகங்களின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி அவை எழுதப்பட்டன என்பதையும் நாம் நம் மனதில் வைப்பது நன்மை பயப்பதாக இருக்கும். **(1 கொரி. 10:11)**

அவர்கள் **"மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக"** முறுமுறுத்தார்கள் என்று பதிவானது தெரிவிக்கிறது. பார்க்கப்போனால், அவர்களின் இக்கட்டான நிலைக்கு இவர்கள் இருவரும் இரண்டாம் நிலை காரணிகளே (secondary causes), ஏனெனில் முதன்மையான பெரிய காரணர் தேவனே!

**தேவனால் நியமிக்கப்பட்ட அந்த ஊழியருக்கு விரோதமான எந்தவொரு கூக்குரலும் சரி, குறை கண்டறிதலும்சரி, குறிப்பாக அவர்கள் யாருடைய பிரதிநிதியாக இருந்தார்களோ அந்தப் பேரண்ட மகா தேவனுக்கு எதிராகவே அவை காணப்பட்டன.**

தேவன் அருளிய பன்மடங்கு ஆசீர்வாதங்களும் அவர்கள் நிமித்தம் அவர் செய்த அற்புதங்களும் ஒருபுறம் இருந்தாலும், அவர்கள் இதுவரை கற்றுக்கொள்ளத் தவறிய ஏதோவொரு விசேஷித்த பாடத்தை அவர்கள் இன்னும் கற்க வேண்டியதாயிருந்தது என்பது தெளிவாகிறது. உண்மையில் தாங்கள் எவ்வளவு பாக்கியவான்கள் என்பதை அவர்கள் உணராதிருந்தனர்! இந்தச் சோதனைகளும் சிரமங்களும் தேவன் அவர்களோடு இன்னமும் போராடுகிறார் (பிரயாசப்படுகிறார்) என்பதற்கான ஆதாரங்களாக இருந்தன. எப்பேர்ப்பட்ட பாடம் இங்கே நமக்கு இருக்கிறது! நிஜமான இஸ்ரயேலராகிய நாமும் சீன் வனாந்தரத்திற்குள் பிரவேசித்து சோதனைகளையும் சிட்சைகளையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஒருவேளை தேவனே அவற்றை அனுமதிக்கிறார் எனும் பட்சத்தில், அவரே அவற்றின் பிரதான காரணர் என்று சொல்லலாம் அல்லவா! இருந்தும், இரண்டாம்நிலை காரணங்களுக்கு (secondary causes) எதிராக நாம் முறுமுறுக்கவும் குறைகூறவும் செய்து, அதன் மூலம் நாம் அதற்குப் பின்னுள்ள தேவனுடைய மேற்பார்வைகளுக்கு எதிராகவே கலகம் செய்கிறோம் என்பதை உணராதவர்களாய் இருக்கிறோம்.

**ஆ! இத்தகைய தருணங்களில், நம் கண்களை, காணக்கூடியவற்றிலிருந்து விலக்கி, கண்ணுக்குப் புலப்படாத நித்தியமானவற்றின் மீது வைக்கும் விசுவாசத்தை நாம் பெற்றிருந்தோமேயானால், இந்தச் சோதனைகள் மற்றும் சிட்சைகள் மூலம் தேவன் நம்மை "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்திற்குத்" தகுதியடைய செய்யும்படிக்கே இன்னமும் நம்மோடு போராடிக்கொண்டிருக்கிறார் (பிரயாசப்பட்டு வருகிறார்) என்பதை உணர்ந்திருப்போம்.** நிச்சயமாக, அப்பேர்ப்பட்ட விசுவாசமானது நம்மைத் தேவனுக்கும் நமது கானான் இளைப்பாறுதலுக்கும் நேராய்க் கிட்டிச் சேரச் செய்யும் கசப்பான **சோதனைகளுக் காகவும்கூட "ஸ்தோத்திர பலிகளை" (சங். 107:22)** ஏறெடுக்க வைக்கும்.

**"...என்னை உயர்த்துவது கொடுஞ்சிலுவையானாலும்,**
**உமக்கு இன்னும் நெருக்கமாய் இருப்பதே என் பாடலாகும்."**

மோசே ஜனங்களுக்காகத் தேவனிடம் சென்று பேசினார் என்று எங்குமே குறிப்பிடப் படவில்லை, இருப்பினும், அத்தகைய விண்ணப்பத்தைத் தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்றே தோன்றுகிறது, ஏனெனில் பதிவானது என்ன கூறுகிறதெனில்:

**யாத். 16:4, 12 – "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன். ... இஸ்ரயேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்; நீ அவர்களோடே பேசி, நீங்கள் சாயங்காலத்தில் இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்தில் அப்பத்தால் திருப்தியாகி, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்று சொல் என்றார்."**

தகுதியே இல்லாதவர்களுக்காகத் தேவன் பொழிந்தருளும் அருங்கிருபை மற்றும் தயவு குறித்த எப்பேர்ப்பட்ட அருமையான வெளிப்பாடு இது! மோசே இஸ்ரயேலின் தேவைகளுக்காகத் தேவனிடம் விண்ணப்பிப்பதற்கு முன்னதாகவே, தேவன் அவர்கள் தேவைகள் சந்திக்கப்படும் என்று உறுதியளித்திட்டார். நம் பரமபிதா இப்போது நம்மிடமும் அவ்வாறே நடந்து கொள்கிறார். "**அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.**" **(ஏசா. 65:24)** அதற்கென்று, நாம் ஏதோ முறுமுறுத்ததினால் தேவன் இப்படியாக நம்மைக் கையாளுகிறார் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, நாம் அவருடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக இருக்கின்ற காரணத்தினால், நம்மிடம் பலவீனங்கள் காணப்பட்டாலும்கூட, அவர் நம்மோடு போராடிக்கொண்டிருக்கிறார் (கைவிடாதிருக்கிறார்) என்பதை மறவாதிருப்போமாக; கர்த்தரே காரணர் என்பதை மறவாதிருப்போமாக; ஏனெனில், **இப்படிப்பட்ட நம்பேரில், அவரைத் தவிர வேறு யாராலும், இவ்வளவு நீடிய சாந்தத்தோடும் தயவோடும் இருக்க முடியாது**.

நிழலான இஸ்ரயேலரின் வாஞ்சைகளைத் தேவன் எவ்வளவு துல்லியமாக நிறை வேற்றினார் என்பதைக் கவனியுங்கள். அவர்கள் எகிப்தின் **இறைச்சிப்** பாத்திரங்களையும், "**திருப்தியாக**" **சாப்பிட்ட அப்பத்தையும்** எண்ணி முறுமுறுத்தார்கள். தேவனோ அவர்களுக்கு அவற்றைக் கொடுப்பேன் என்று உறுதியளித்ததோடுகூட, **சாயங்காலத்தில் இறைச்சியையும் விடியற்காலையில்** அப்பத்தையும் கொடுத்து உதவினார். ஒருவேளை அவர்கள் தங்கள் போஜனம் குறித்த விஷயத்தை முற்றிலும் தேவனிடமே விட்டிருந்தால், அவர்களுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு 'மன்னாவே' போதுமானதாய் இருந்திருக்கும். ஆனால் இல்லை! அவர்கள் இறைச்சியை விரும்பினார்கள், எப்படியோ அதனைப் பெற்றுக்கொள்ளவும் செய்தார்கள்.

**இறைச்சி (Flesh) என்றால் மாம்சத்தை அடையாளப்படுத்தும், மேலும் மாம்சம் மாம்சத்தையே தின்று அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும். எனவே, இறைச்சி என்பது உயிர்ச்சக்தியைக் குறைக்கும் ஓர் உணவாக அங்கே காணப்பட்டது; வனாந்தரப் பாதையின் கடினத்தன்மையைச் சமாளிப்பதற்குத் தேவையான பலமும் மனவுறுதியும் தேவைப்படும் ஒரு மீட்கப்பட்ட ஜனங்களுக்கு இது பொருத்தமான உணவாக இருக்க முடியாது. அவர்களுக்குத்**

**தேவைப்பட்டதெல்லாம், உயிர்ச்சக்தியைத் (germ of life) தன்னுள் கொண்ட ஓர் உணவேயாகும்; அத்தகைய உணவை எகிப்தோ அல்லது வனாந்தரமோ வழங்க முடியாது. ஆகையால், தேவன் தாமே அதற்கேற்றாற்போல் இந்தப் போஜனமாகிய "வானத்திலிருந்து வந்த அப்பமாகிய" – மன்னாவை அவர்களுக்கு வழங்கினார்!**

இருப்பினும், இந்த மன்னாவைப் பற்றி விரிவாகத் தியானிப்பதற்கு முன்பாக, இஸ்ரயேலருக்கு வழங்கப்பட்ட "**இறைச்சியைப்**" பற்றிச் சற்று சிந்தித்துப் பார்க்கலாம். பிரயாணத்தின்போது தேவன் இரண்டு முறை மட்டுமே இந்த "இறைச்சியை" (காடைகள்) உண்ண அவர்களை அனுமதித்தார்; அதில் ஒருமுறை **(யாத். 16:12 – 14)**, மோசே விண்ணப்பம் பண்ணாமலேயே வழங்கினார். மறுமுறையோ **(எண். 11:31)**, **கிப்ரோத் அத்தாவா** என்ற இடத்தில் மோசேயின் பரிந்துபேசுதலின் பேரில் வழங்கினார். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், முதல் முறை வழங்கியபோது தேவன் அவர்கள் மேல் வாதையை அனுமதிக்கவில்லை, மாறாக இரண்டாம் முறையே அனுமதித்தார் – அது பலரையும் அழித்தது.

நாம் இங்கே ஒரு விஷயத்தைக் கவனிப்பது நலமாக இருக்கும்: என்னவெனில், தேவனே தம்முடைய ஞானத்தினால் அதுவரை இறைச்சியை அவர்களுக்குத் தடுத்திருந்தார் எனும்போது, இறைச்சி இல்லாமல் இருப்பதுதான் நன்மையாக இருந்திருக்கும்... இருப்பினும், முதல் சந்தர்ப்பத்தின்போது, அவர்கள் எகிப்திலிருந்து கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் வெளியே வந்திருந்தபடியாலும், அதன் தாக்கங்களிலிருந்து இன்னும் முழுமையாக விடுபடாமல் காணப்பட்டதாலும், அந்தச் சந்தர்ப்பத்தில் தேவன் அவர்களைப் பொறுத்துக் கொண்டார் என்பது தெளிவாகிறது. அவர்கள் சீனாய்க்கு வந்து, தேவன் அவர்கள் மத்தியில் தமது வாசஸ்தலத்தை (Tabernacle) அமைத்த பிறகோ, நிலைமை வேறு; இந்தச் சந்தர்ப்பத்தில் தேவன் நியாயமாக அவர்களிடம் மிகுந்த விசுவாசத்தையும், தம்முடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து காணப்பட வேண்டுமெனவும் மிகவும் எதிர்பார்த்தார். அதனால்தான் இரண்டாம் முறை "**இறைச்சி**"க்கான அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியதோடுகூட, அவர்களுக்குத் தேவையான பாடத்தையும், தமது கடுமையான அதிருப்தியின் அடையாளமாகிய அந்த அழிவுண்டாக்கும் வாதையையும் சேர்த்துக் கொடுத்தார். **(எண். 11:33)**

இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் ஒரு காரியத்தை நாம் கவனிக்கலாம்: **"எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே" (1 கொரி. 15:39)**. தேவன் இஸ்ரயேல் புத்திரருக்கு அனுமதித்த இறைச்சி, இரண்டு முறையுமே பறவைகளுடையதாய் (காடைகள்) இருந்ததைக் கவனியுங்கள். இதில் மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில்: **"மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறது" (கலா. 5:17)** என்பதால், ஒருவரைச் சோர்வடையச் செய்யும் அளவிலும் (enervating), பலவீனப்படுத்தும் அளவிலும் (debilitating) மிருகங்களின் மாம்சத்திற்கும் பறவைகளின் மாம்சத்திற்கும் இடையே வேறுபாடு இருப்பதாக இந்த நிழல் காட்டுகிறது.

பாருங்கள்! பறவைகளை விடவும் மிருகங்கள் பூமியோடு ஒட்டியே வாழ்கின்றன, அதே சமயம் பறவைகள் சிறகுகளைக் கொண்டிருப்பதால், அவைகளால் ஒரு குறிப்பிட்ட சமயமளவும் புவியீர்ப்பு விசைக்கு எதிரிடையாக உயர மேலே பறக்க முடிகிறது. அதாவது, மாம்சத்தின் எல்லா

இயல்பான விருப்பங்களும் அல்லது நாட்டங்களுமே ஒரேமாதிரியான சீரழிவை ஏற்படுத்துவது (degrading) கிடையாது என்பதை இந்த வித்தியாசம் நமக்குச் சொல்வது போலிருக்கிறது. சிலது இயல்பாகவே மற்றவற்றை விட அதிக சீரழிவானவையாக இருக்கின்றன, வேறு சிலதோ ஒரு "மேல்நோக்கிய" திருப்பத்தைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது – உலகத்தார் சொல்வது போல – அவை "மனமகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் தரும் (பொழுதுபோக்கு) அம்சம்" (Recreational value) கொண்டவையாக இருக்கின்றன. இவற்றில் தீங்கற்ற சிற்றின்பங்கள் என அழைக்கப்படுபவையும், கேளிக்கைகள், சமுதாயத்திற்காகக் கலந்துகொள்ள வேண்டிய நிகழ்ச்சிகள், இலக்கியத் தேடல்கள், சில தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் போன்றவையும் அடங்கும். ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு, இவை 'பறவைகளின் இறைச்சி' யாக இருக்கும்.

இவை முற்றிலும் ஏற்புடைய/நியாயமான உணவாகவும், மற்ற உணவுகளை விடச் சிறந்தவையாகவும் இருக்கலாம்; இருப்பினும், இவை பூமிக்குரியவை மற்றும் உலகப் பிரகாரமானவை என்பதால், தேவனால் மீட்கப்பட்ட இஸ்ரயேலருக்கு இவை ஏற்றது கிடையாது. இந்த யாத்ரீகப் பிரயாணத்தின் தொடக்கத்தில், நமது ஆவிக்குரிய வாழ்க்கையைச் சமநிலைப்படுத்த (balance) இத்தகைய சில மாம்சீகப் பற்றுகள்/நாட்டங்கள் அவசியம் என்று நாம் நினைத்திருந்தோம், தேவனும் தமது பெரிய கிருபையினால் அவற்றுக்கு அனுமதி அளித்திருந்தார் – அதிலும்கூட, **காலம் செல்லச் செல்ல நாம் கிருபையிலும், (வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பமாகிய) நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளரும்போது, இந்த அனுமதிக்கப்பட்ட மாம்சீக நாட்டங்களும்கூட, நம்முடைய உயிர்ச்சக்தியைக் குறைத்துவிடக்கூடியவை என்பதை அடையாளம் கண்டுகொள்ளுவோம் என்கிற எதிர்பார்ப்பினிமித்தமே அவற்றுக்கும்கூட அனுமதி அளித்திருந்தார்.**

ஆனால், பூர்வகால இஸ்ரயேலரைப் போலவே, **நாம் "இந்தப் பாதையில்" சில காலம் கடந்துவந்த பிறகும் இன்னும் இவற்றுக்காக ஏங்கினோமேயானால், தேவன் அவற்றை நமக்கு மறுப்பார் என்றெல்லாம் நாம் அஞ்சத் தேவையில்லை, மாறாக ... மாறாக ... அவற்றோடுகூட அழிவின் வாதையாகிய இரண்டாம் மரணத்தையும் அனுமதிப்பார் என்றே நாம் அஞ்சிட வேண்டும்!** இரவின் அந்தகாரத்திற்குள் செல்லப்போகிறவர்களுக்குச் சாயங்காலமே முதலில் வருகிறது, ஆனால் பகலுக்குரியவர்களுக்கோ, இரவு சென்றுபோயிற்று, காலை சமீபமாயிற்று. எனவேதான், **"சாயங்காலத்தில் புசிக்கிறதற்கு இறைச்சியையும், விடியற்காலத்தில் திருப்தியடைகிறதற்கு அப்பத்தையும்" (யாத். 16:8)** கொடுப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

நிழலான இஸ்ரயேலர் புசிக்க வேண்டிய அப்பமானது, வானத்திலிருந்து இறங்கி வருவது (பொழியப்பட்டது) போல இருந்தது. இதுகுறித்து நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

**எண். 11:9 – "இரவிலே பாளயத்தின்மேல் பனிபெய்யும்போது, மன்னாவும் அதின்மேல் விழும்."**

மற்றும்

**யாத். 16:14, 15 – "பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும்**

**உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது … அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்."**

இந்த மன்னாவின் அற்புதத்தை விளக்குவது நமது நோக்கமல்ல, அதை நம்மால் செய்யவும் முடியாது; இந்த உணவை உருவாக்க என்ன வகையான இரசாயன எதிர்வினை நடந்திருக்கும் என்று ஊகிக்கக்கூட நாம் இங்கே முயற்சிக்கப்போவதில்லை. கொடுக்கப் பட்டுள்ள கூற்றுகளை அப்படியே ஏற்றுக்கொள்வதிலும், கூடுமானால் அவற்றின் ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்றுக்கொள்வதிலுமே நாம் திருப்தியடைகிறோம்.

நமது வளிமண்டலத்தில் எப்போதும் ஒரு குறிப்பிட்ட அளவு நீர் (ஈரப்பதம்) கலந்திருக்கும், பொதுவாக அது கண்ணுக்குத் தெரியாது. வளிமண்டலம் போதுமான அளவு குளிர்ச்சியடையும் போது, இந்த ஈரப்பதம் குளிர்ச்சியடைந்து பனியாக வெளிப்படுகிறது. உதய சூரியனின் வெப்பத்தில், இந்தப் பனி ஆவியாகி, ஈரப்பதம் மீண்டும் கண்ணுக்குத் தெரியாமல் போய்விடுகிறது. தண்ணீர் 'சத்தியத்தைக்' (TRUTH) குறிக்கும். வளிமண்டலத்தில் காணப்படும் ஈரப்பதத்தைப் போலவே, சத்தியமும் எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்கும், ஆனால் மனுஷருடைய பார்வைக் குறைப்பாட்டினால் அது அடையாளங்காணப்படுவதில்லை.

இருப்பினும், பூமியின் மேல் ஒரு குளிர்ச்சி பரவி, தெய்வீகச் சத்தியம் எனும் இந்த நீராவி போன்ற தண்ணீர்களை, கண்ணுக்குப் புலப்படும் உண்மைகளாக வெளிப்பட வைத்திட்ட காலங்களும் இருக்கவே செய்தன. எப்படியெனில், கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முந்தைய யுகம் முழுவதும், (காற்றில் கண்ணுக்குத் தெரியாமல் கலந்திருக்கும் ஈரப்பதம் போல) தீர்க்கதரிசன சத்தியம் மேசியாவின் வருகையை முன்னறிவித்து வந்தது. இருப்பினும், இந்தத் தீர்க்கதரிசன சத்தியம், அதன் இலேசான மற்றும் மென்மையான தன்மையால், மனுஷரால் அடையாளம் காணப்படவோ மதிக்கப்படவோ இல்லை. இப்படியாக அந்த யுகத்தின் முடிவோடு அதன் இராப்பொழுதும் வந்தது; புதிய விடியலை வரவேற்கும் அதின் குளிர்ச்சியானது, இந்தத் தீர்க்கதரிசன சத்தியங்கள் யாவும் உண்மையே என்பதை வெளிப்பட வைத்தது (Condensation) – அதாவது, நசரேயனாகிய இயேசுவின் வருகையில் இந்தச் சத்தியங்கள் யாவும் நிறைவேறினதை அடையாளம் காணச் செய்தது.

நிழலில், அந்தப் பனியே மன்னா என்று சொல்லப்படவில்லை; மாறாக, மன்னா என்பது பனியின் மேல் விழுந்து கிடந்ததாகத் தோன்றுகிறது, அல்லது பனி மீண்டும் ஆவியான பிறகு அது தரையில் படிதலாக (deposit) காணப்பட்டது. தீர்க்கதரிசன சத்தியங்களும் அவ்வாறே இருந்தன; அவை இயேசுவின் வருகையில் நிறைவேறவும் செய்தன. இருப்பினும், இந்த நிறைவேற்றம் பற்றின அறிவே பரம கானானை அடையும் வரைக்கும் கிறிஸ்துவின் சீஷர்கள் புசிக்க வேண்டியிருந்த அந்த மேலான மன்னாவாக இருக்கவில்லை. மாறாக, அந்தத் தீர்க்கதரிசன சத்தியங்கள் (குறைந்தபட்சம் அவற்றின் நிறைவேற்றம்) எனும் பனித்துளி, இயேசுவின் சிலுவை மரணத்தோடு மீண்டும் காற்றில் ஆவியாகிப் போனபோது, அதற்குப்பின் எஞ்சியிருந்தது எதுவோ அதுவே மன்னாவாக இருந்தது. **"அவரே இஸ்ரயேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்…" (லூக்கா 24:21).**

■ அப்படியானால் அங்கே எஞ்சியிருந்தது என்ன?

ஆம்! **கிறிஸ்து இயேசுவின் ஈடுபலியே!** அதன்பிறகு மனுஷரால் அவருடைய ஜீவனையும் நீதியையும் தங்களுடையதாக்கிக் கொள்ள முடிந்தது. இதுவே மெய்யான மன்னாவாகும் – வானத்திலிருந்து வந்த அப்பமாகும். **(யோவான் 6:32, 33, 35, 38, 41, 48, 50)**. இயேசுவும்: **"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்... நான் கொடுக்கும் அப்பம் என் மாம்சமே..." (யோவான் 6:51)** என்று சொல்லியிருக்கிறார். இப்படியாக கிறிஸ்து இயேசுவில் வெளிப் படுத்தப்பட்ட தேவகிருபையை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம்.

இந்தப் பரலோக மன்னாவை நமது அன்றாட தேவைக்கேற்ப நாமே அவற்றைச் சேகரிப்பதன் மூலம், அதனை நம்மால் நமதாக்கிக் கொள்ள முடியும். இஸ்ரயேலர் ஒவ்வொரு நாள் காலையிலும் தங்கள் மன்னாவைச் சேகரிக்க வேண்டும் என்பதும், அன்று சேகரிக்கப்பட்ட அளவு அடுத்த நாளுக்குப் பயன்படாது என்பதும் கவனிக்கத்தக்க ஒன்றாகும் (குறிப்பு: ஆறாம் நாள் மட்டும் விதிவிலக்கு, அன்று ஏழாம் நாளுக்கும் சேர்த்துச் சேகரிக்கப்பட்டது – அவ்வாறே இந்தச் சுவிசேஷ யுகத்தின் நிஜமான இஸ்ரயேலரும் ஏழாம் நாளில் எதையும் சேகரிக்க வேண்டி இருக்காது).

■ இதன் பொருள் என்ன?

அவர்கள் சேகரித்ததை அன்றைய தினமே பயன்படுத்த வேண்டும், புசிக்க வேண்டும் என்பதாகும். இது எப்பேர்ப்பட்ட ஒரு பாடமாகும்! **நாம் ஒவ்வொரு நாளும் இயேசுவின் ஜீவனையும் நீதியையும் புசித்து, நமதாக்கிக் கொள்ள வேண்டும்; நேற்று நாம் அவற்றை நமக்குரியதாக்கிக்கொண்டோம் என்பதற்காக, அவை இன்றும் நாளைக்கும்கூட நமக்குப் போதுமானதாயிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இயேசுவும், அவரில் பொதிந்துள்ள தெய்வீகச் சத்தியமும் ஒவ்வொரு நாளும் சேகரிக்கப்பட்டு, நமக்குரியதாக்கப்பட வேண்டும்; "நாம் அவருடைய பிரமாணத்தின்படி நடப்போமா இல்லையா"** என்று தேவன் நம்மைச் சோதித்துப் பார்க்கும் பரீட்சை இங்குதான் உள்ளது.

> "இயேசுவில் மன்னிப்பையும் சமாதானத்தையும் கண்டடைந்ததாகப் பலர் அறிக்கை செய்கிறார்கள், ஆனால் யதார்த்தத்திலோ அவருக்கு எந்த வகையிலும் சம்பந்தமில்லாத பலதரப்பட்ட விஷயங்களையே அவர்கள் புசித்து வருகிறார்கள். அவர்கள் செய்தித்தாள்களாலும், நவீன கால பயனற்ற, மேலோட்டமான இலக்கியங்களாலும் தங்கள் சிந்தைகளைப் போஷித்து வருகிறார்கள். அவர்களால் அதில் கிறிஸ்துவைக் காண முடியுமா? இத்தகைய கருவிகள் மூலமாகவா பரிசுத்த ஆவி நம் ஆத்துமாவுக்கு கிறிஸ்துவைப் பகிர்ந்தளிக்கும்? மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் வனாந்தரத்தில் பராமரிக்கப்படுவதற்காக எந்தப் பனித்துளிகள் மேல் பரலோக மன்னா இறங்கி வந்ததோ, அந்தத் தூய பனித்துளிகளாக இந்த இம்மைக்குரிய விஷயங்கள் இருக்க முடியுமா? அந்தோ! இல்லை; அவை விழுந்துபோன மாம்ச சிந்தை பிரியப்படும் மோசமான காரியங்களாகும். ... எனவே, கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்பவன் தனது வேதாகமத்தைத் தியானிக்காமல், தனது பொன்னான நேரத்தை செய்தித்தாள் களுக்காகச் செலவிடுவதை நான் காண்பேனானால், அவனது ஆத்துமாவின்

உண்மையான நிலை என்ன என்பதை என்னால் உடனே தீர்மானித்துவிட முடியும். **நிச்சயமாக அவன் ஆவிக்குரியவனாக இருக்க முடியாது – அவனால் கிறிஸ்துவைப் புசித்து, அவருக்காக வாழ்ந்து, அவருக்குச் சாட்சியாக இருக்க முடியாது.**''

பிரியமானவர்களே, **ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவும் அவரில் பொதிந்துள்ள தெய்வீகச் சத்தியமும்**, பரம கானானை நோக்கிய நமது வனாந்தரப் பிரயாணம் முழுவதும் நம்மைச் சுமந்து செல்வதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கையில், **நாம் ஏன் அற்ப இறைச்சிக்காக முறுமுறுக்க வேண்டும்?** இந்த மனப்பான்மை, பின்னாளில் ''**இந்த அற்பமான உணவு (this light bread) எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது'' (எண். 21:5)** என்று கூறிய பூர்வகால இஸ்ரயேலின் மனப்பான்மைக்கு ஒத்ததாக இருக்குமே! **ஆகையால், கிறிஸ்து இயேசுவில் அருளப்பட்டுள்ள தெய்வீகக் கிருபையைப் புசிக்க மறவாதிருப்போமாக, மேலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரயேலராகிய நமக்குக் கிடைத்துள்ள மாபெரும் சிலாக்கியங்களின் மதிப்பினை உணர்ந்து நன்றி மறவாதிருப்போமாக!**

# பாகம் ஆறு

## யாத்திராகமம் 17:1 - 16; எண்ணாகமம் 33:12 - 14

“பின்பு இஸ்ரயேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம்பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது. அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி: நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தரவேண்டும் என்றார்கள். அதற்கு மோசே: என்னோடே ஏன் வாதாடுகிறீர்கள், கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள் என்றான். ஜனங்கள் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியால், அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர் என்றார்கள். மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே என்றான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரயேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்; அப்படியே மோசே இஸ்ரயேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான். இஸ்ரயேல் புத்திரர் வாதாடினதினிமித்தமும், கர்த்தர்



**எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா என்று அவர்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு மாசா என்றும் மேரிபா என்றும் பேரிட்டான். அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரயேலரோடே யுத்தம்பண்ணினார்கள். அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்துகொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான். யோசுவா தனக்கு மோசே சொன்னபடியே செய்து, அமலேக்கோடே யுத்தம் பண்ணினான். மோசேயும் ஆரோனும் ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், இஸ்ரயேலர் மேற்கொண்டார்கள்; அவன் தன் கையைத் தாழவிடுகையில், அமலேக்கு மேற்கொண்டான். மோசேயின் கைகள் அசந்துபோயிற்று, அப்பொழுது அவர்கள் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின்மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரும் ஒருவன் ஒரு பக்கத்திலும் ஒருவன் மறு பக்கத்திலும் இருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இவ்விதமாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்வரைக்கும் ஒரே நிலையாயிருந்தது. யோசுவா அமலேக்கையும் அவன் ஜனங்களையும் பட்டயக்கருக்கினாலே முறிய அடித்தான். பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார். மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு, அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான்.'' (யாத்திராகமம் 17:1 – 16)**

**''சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப்போய், தொப்காவிலே பாளயமிறங்கினார்கள். தொப்காவிலிருந்து புறப்பட்டுப்போய், ஆலூசிலே பாளயமிறங்கினார்கள். ஆலூசிலிருந்து புறப்பட்டுப்போய், ரெவிதீமிலே பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது.'' (எண்ணாகமம் 33:12 - 14)**

கடந்த பாடத்தில், இஸ்ரயேல் புத்திரர் **''ஒவ்வொரு நாளுக்கு வேண்டிய''** மன்னாவைச் சேகரித்த காரியத்தில், அவர்கள் **''என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ'' (யாத். 16:4)** என்று தேவன் அவர்களைச் சோதிக்க விரும்பியிருந்ததாகப் பார்த்திருந்தோம்.

வேதாகமப் பதிவின்படி, ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பத்தின் தேவைக்கு ஏற்ப ஒவ்வொரு நாளும் (அதிகமாக அல்லாமல்) போதுமான அளவு மன்னாவைச் சேகரிக்க வேண்டும், **''விடியற்காலம்மட்டும்''** அதில் ஒன்றும் வைக்கக்கூடாது **(யாத். 16:16, 19)** என்று கூறப்பட்டிருந்தாலும்: **''மோசேயின் சொல் கேளாமல், சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது...'' (யாத். 16:20)** என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படியாக தேவன் கொடுத்த கட்டளையின்படி நடப்பதற்கான வாஞ்சையையும், அவரது கிருபையும் தயவும் தொடர்ந்து கிடைப்பதற்கான பாத்திரத்தன்மையையும் அவர்கள் நிரூபிக்க வேண்டியிருந்தது.

இந்த மன்னாவை **''விடியற்காலம்மட்டும்''** வைத்திருப்பது என்பது இரண்டு

காரியங்களைக் குறிக்கிறது; ஒன்று, ஒவ்வொரு நாளின் தேவைக்கும் மேலாய்ச் சேகரித்து வைத்திருப்பதைக் குறிக்கிறது; இரண்டு, அடுத்த நாளுக்காய் மன்னாவைச் சேகரிக்கக்கூடாது என்கிற தீர்மானத்தைக் குறிக்கிறது. இது சோம்பேறித்தனத்தினால் அடுத்த நாள் சேகரிப்பதற்குப் பதிலாக, இன்றைக்கே கூடுதலாகச் சேகரித்து வைத்துக்கொள்வதைத் தவிர வேறெதையும் குறிக்க முடியாது! நிச்சயமாக இது தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி ஏற்புடையதாய் இருக்க முடியாது. தேவன் தமது அநந்த **ஞானத்திலும் அன்பிலும்** இளைப்பாறுதலுக்காக (ஈவாக) ஓய்வுநாளைக் கொடுத்திருந்த காரணத்தினால், ஆறாம் நாளில் ஏழாம் நாளுக்கும் தேவையான ஆகாரத்தைச் சேர்த்துக் கொடுத்தார். இந்தக் கட்டளை, ஏழாம் நாள் தவிர மற்ற நாட்களுக்குப் பொருந்தாது.

ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு இங்கே எப்பேர்ப்பட்ட ஒரு மகிமையான கருத்து உணர்த்தப்படுகிறது! கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிற அந்த நீதியையும் நீதிமானாக்கப் படுதலையும் நம்முடைய அனுதின தேவைக்கேற்ப ஒவ்வொரு நாளும் நாம் நமக்கென்று சேகரிக்க அல்லது நமக்குரியதாக்கிக்கொள்ள வேண்டும். இன்னும் பெரிய அர்த்தத்தில் பார்க்கையில், ஏழாம் நாளுக்கும் சேர்த்தே நாம் இந்த ஆறாம் நாளில் சேகரித்துக் கொண்டிருக்கிறோம்; அந்த ஏழாம் நாளில் பரலோக மன்னாவைச் சேகரிப்பது அவசிய மற்றதாயிருக்கும்; சொல்லப்போனால், அன்றைக்கு அது சாத்தியமற்றதாயிருக்கும். ஆம்! அந்த ஏழாம் நாள் மகா தேவன் கொடுக்கும் பரம "**ஓய்வுநாளாக**" இருக்கப்போகிறது.

ஏற்கெனவே தேவன் நமக்கென்று கொடுத்துள்ள "**ஓய்வுநாளாகிய ஓய்வோடும்**," நாம் தேவனுடைய பிரமாணத்தில் நடப்போமா இல்லையா என்கிற சோதனையோடும் தொடர்புடையதாயிருக்கிற மற்றுமொரு கருத்தினை இங்கே தியானிக்கப்பட வேண்டியிருக்கிறது.

ஓய்வுநாள் ஏதேனில் ஸ்தாபிக்கப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம், "**தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி... ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் ... அதைப் பரிசுத்தமாக்கினார்...**" **(ஆதி. 2:2, 3)**. ஆனால், அதையும்கூட மனுஷன் இழந்துபோனான். அதன்பிறகு, அவனால் தேவன் அருளிய ஈவாகிய இந்த "**ஓய்வுநாளாகிய ஓய்வை**" அனுபவிக்க முடியாமல்போனது; "**பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்... அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்... நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி. 3:17 – 19)**.

வனாந்தரத்தில் தேவன் மீட்கப்பட்ட தமது ஜனமாகிய இஸ்ரயேலருக்கு இந்த "**ஓய்வுநாளாகிய ஓய்வை**" ஏற்படுத்தித் தரும் வரைக்குமே, அதுகுறித்து எங்குமே சொல்லப்படவில்லை! அப்படியிருந்தும்கூட, அவர்கள் அதில் பிரவேசிப்பதற்கு எவ்வளவு தயக்கம் காட்டினார்கள். அவர்கள் இன்னும் சீனாய் மலையை அடைந்திருக்கவில்லை, அங்குதான் அவர்கள் ஏற்ற சமயத்தில் பத்துக் கட்டளைகளைப் பெற்றுக்கொண்டார்கள். அதுவரைக்குமே ஓய்வுநாள் என்பது தேவன் அவர்களுக்கு அருளிய ஓர் ஈவாக இருந்தது; பின்னர், சீனாயில்தான் அது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஒரு பகுதியாக மாறியது; அங்கே அது கட்டாயமாக்கப்பட்டது – கிருபை முடிந்து கிரியைகள் தொடங்கலாயின.

ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு கிறிஸ்தவ "**ஓய்வுநாள்**" என்ற ஒன்றுள்ளது, அது ஏதோ வாரத்தில் ஒரு நாள் மாத்திரம் கிடையாது, மாறாக கிறிஸ்து இயேசுவின் ஈடுபலியில் நிறைவேற்றப்பட்ட மீட்பின் மூலமாக, அவர்களுக்கு ஒவ்வொரு நாளுமே "**தேவன் கொடுத்த**" ஓய்வின் நாளாக இருக்கிறது. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட ஒருவன் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசித்து, தன் கிரியைகளிலிருந்து ஓய்ந்தும் இருக்கிறான்.

**உரோமர் 4:23 – 5:1**

**"அது... அவனுக்கு மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்."**

**எபிரெயர் 3:19; 4:3, 4, 9, 10**

**"ஆதலால், அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் பிரவேசிக்கக்கூடாமற்போனார்களென்று பார்க்கிறோம். ... விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்... தேவன் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று ஏழாம் நாளைக்குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்... ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்."**

கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் "**கிரியைகள்**" மூலமாக அல்லாமல், விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப்படுகிறோம். இவ்வாறாக, ஆதாமின் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து மீட்கப்பட்டதன் மூலமாகக் கிடைக்கும் இந்த "**ஓய்வுநாள் ஓய்வானது**" தேவன் கொடுக்கும் ஈவாகவே இருக்கிறது. அப்போஸ்தலனும்: "**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபே. 2:8, 9)** என்றே தெரிவிக்கிறார்.

இருப்பினும், தேவனுடைய கிருபையினால் கிறிஸ்து இயேசுவுக்குள் வழங்கப்பட்டுள்ள இந்த "**இளைப்பாறுதலில்**" பிரவேசிக்க மறுக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலர் பலர் இருக்கின்றனர். தேவனுடைய பார்வையில் தங்களை நீதிமான்களாக்கிக்கொள்ளும்படிக்கு, தாங்கள் பெரிய காரியங்களையும், வல்லமையான கிரியைகளையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், தேவன் ஓய்வுக்காகப் பரிசுத்தப்படுத்திய நாளில் வேலை செய்வது என்பது அவநம்பிக்கை மற்றும் கீழ்ப்படியாமைக்கான அடையாளமாகும்; அவ்வாறு "கிரியைகளினால்" சேகரிக்க முற்படுபவர்களுக்குப் பரலோகத்திலிருந்து வரும் அப்பம் கிடைக்கப்பட மாட்டாது! இருப்பினும், இதன் மூலமாகவே தேவன் தம்முடைய ஜனங்கள் தம்முடைய பிரமாணத்தில் நடப்பார்களா மாட்டார்களா என்பதைச் சோதித்துப் பார்க்கிறார்.

ஆம்! பிரியமானவர்களே, நாம் நமது கிரியைகளிலிருந்து ஓய்ந்து, கிறிஸ்து

இயேசுவுக்குள் அருளப்படுகிற "தேவனுடைய ஓய்வுநாள் இளைப்பாறுதலை" அனுபவிப்போமாக.

ஆனால், இந்த "**ஓய்வு**" சோம்பேறித்தனத்தைக் குறிப்பதாக நினைத்துவிட வேண்டாம்; ஏதேனில் தேவன் பரிசுத்தப்படுத்திய ஓய்வுநாளை அனுபவித்துக் கொண்டிருந்த ஆதாம், "**பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்த**" **(ஆதி. 1:28)** வேண்டியிருந்தது என்ற உண்மையையும் ஞாபகத்தில் வைப்போமாக.

அதுபோலவே, தேவனுடைய ஓய்வுநாள் "**இளைப்பாறுதலை**" அனுபவிக்கும் ஒவ்வொரு பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவ பிள்ளையும் சோம்பேறியாக இருக்க முடியாது; மாறாக, **அவன் தன் சரீரத்தை ஒடுக்கி, அதனைக் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதிய சிந்தைக்குக் கீழ்ப்படியச் செய்யும்படிக்கே அதிகத் தீவிரம் காண்பிக்க வேண்டும்!** ஒரு தேவ பிள்ளை என்பவர் அவ்வாறே காணப்படுவார்! **(1 கொரி. 9:27)** இதுவும் ஒரு "**கிரியை**"தான் என்றாலும், இது ஆதாமுக்குரிய சாபத்திலிருந்து நம்மை மீட்கும் அல்லது நீதிமானாக்கும் கிரியை கிடையாது, ஏனெனில் விசுவாசத்தினால் மட்டுமே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். இருப்பினும், சரீரத்தை ஒடுக்கி, அதைப் புதிய சிந்தைக்குக் கீழ்ப்படியச் செய்யும் கிரியையானது, நம்பிக்கையினால் தூண்டப்பட்ட ஒன்றாக இருப்பதினால், அது நமது விசுவாசம் இன்னும் ஜீவனோடு இருப்பதையே நிரூபிக்கிறது.

அப். யோவான் **1 யோவான் 3:3** ஆம் வசனத்தில், "**அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்**" என்று கூறியிருக்கிறார்.

பார்க்கப்போனால், இப்படியாக விசுவாச "**கிரியைகளைச்**" செய்வதென்பது தேவனுடைய ஓய்வுநாளை மீறுவதாக இருக்காது, மாறாக அது அந்த ஓய்வுநாளில் பரலோக மன்னாவைப் புசிப்பதாகவே அமையும் என்பது நிரூபணமாகிறது. உண்மையாகவே, சரீரத்தை ஒடுக்கி, அதனைப் புதிய சிந்தைக்குக் கீழ்ப்படியச் செய்வதில் போடப்படும் பிரயாசமானது, கிறிஸ்து இயேசுவை நமக்கென்று சொந்தமாக்கிக் கொள்வதை உறுதிப்படுத்துகிறது; ஏனெனில், "**கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே** [மேன்மேலும்] **விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை** [எப்பொழுதும்] **எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்**" **(2 கொரி. 4:10)** என்றால் அது இதுதானே!

உணவியல் (Dietetics) விதிகளின்படி, நாம் எதை உண்கிறோமோ, ஏறக்குறைய அதுவாகவே நாம் ஆகிறோம் என்று சொல்லப்படுகிறது! இந்த விதியை ஆவிக்குரிய காரியங்களுக்குப் பயன்படுத்தும்போது, 'நாம் எவ்வளவு அதிகமாக கிறிஸ்துவின் ஜீவனை நமக்குரியதாக்கிக்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவைப் போல மாறுவோம்' என்பதை அர்த்தப்படுத்திடும். இவ்வாறாக இந்தப் பரலோக மன்னாவைப் புசிப்பதென்பது பழைய மனுஷனுக்கு மரணத்தையும், புதிய மனுஷனுக்கு ஜீவனையும் அளிக்கிறது; ஏனெனில், "**எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது**" **(2 கொரி. 4:16)**.

அப்படியானால், நாம் ஆதாமின் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து மீட்கப்படுவதற்காகவோ அல்லது அதன் விளைவாக வரும் நீதிமானாக்கப்படுதலுக்காகவோ பிரயாசப்பட வேண்டியதில்லை; ஏனெனில், இவை ஏற்கெனவே கிறிஸ்துவின் ஈடுபலியில் நிறைவேற்றப் பட்டுள்ளன; மாறாக, நாம் அந்த ஈடுபலியின் மீது விசுவாசம் வைத்து, அதன் மூலம் நாம் தேவனுடைய ஓய்வுநாள் இளைப்பாறுதலில் நிலைத்திருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அந்த இளைப்பாறுதலின் முழுமைக்குள் பிரவேசிப்பதற்கு நாம் விசுவாசத்தின் கிரியைகளைத் தவிர, வேறெந்தக் கிரியைகளைச் செய்தாலும் அது தேவனுடைய பிரமாணத்தை மீறுவதாக இருக்கும். இவ்விதமாகவே, பரலோக மன்னாவைச் சேகரிக்கும் காரியத்திலும், கிருபையான **"ஓய்வுநாளை"** ஆசரிக்கும் காரியத்திலும் தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலரைச் சோதித்துப் பார்க்கிறார் – **"நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்... ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது" (யாத். 16:4, 26).**

* * * * * * * * * *

**எண்ணாகமம் 33:12 – 14** வரையிலான வசனப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரயாணத் திட்டத்தின்படி, இஸ்ரயேல் புத்திரர் சீன் வனாந்தரத்தை விட்டுப் புறப்பட்ட பிறகு, அடுத்த இடமாகிய ரெவிதீமுக்கு வருவதற்கு முன்பாக, ஆலூசிலும் தொப்காவிலும் பாளயமிறங்கினார்கள். ஆலூஷ் அல்லது தொப்காவில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் குறித்து எதுவும் பதிவு செய்யப்படாத காரணத்தால், நாம் இந்தப் பாளயமிறங்குதல்களைக் குறித்து அதிக விளக்கங்கள் ஏதுமின்றிக் கடந்து செல்ல வேண்டுமானால் செல்லலாம். இருப்பினும், இந்த நிறுத்தங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதை வைத்துப் பார்க்கும்போது, இங்கே பரிசுத்த ஆவி நமக்கென்று ஏதோவொரு பாடத்தை வைத்திருப்பதாக உணர்கிறோம். அது என்னவாக இருக்கக்கூடும் என்பதே கேள்வி! ஒருவேளை அவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மிகவும் விரைவாக நகர்ந்த விதமானது, ஜனங்களிடையே இருந்த அமைதியற்ற பரபரப்பான நிலையைத் தெரிவிப்பதாக இருக்கலாம்.

சைரஸ் ஏ. பாட்ஸ் (**Cyrus A. Potts**) என்பவர் தொகுத்த "Dictionary of Bible Proper Names" என்கிற அகராதியிலிருந்து, ஆலூஷ் (ALUSH) என்பதற்கு: 'மனுஷர் கூட்டம், ஒன்றுகூடுதல்' என்றும்; தொப்கா (DOPHKAH) என்பதற்கு: 'தண்ணீரின் அழுத்தம்; கால்நடைகளை ஓட்டுதல்' என்றும் பொருள் கிடைக்கின்றது. ஒருவேளை இஸ்ரயேலரின் அமைதியற்ற பரபரப்பான நிலைமை மறைமுகமாக இந்த அர்த்தங்களில் சுட்டிக்காண்பிக்கப் பட்டிருக்கலாம். அங்கே திரளான ஜனங்களும் கால்நடைகளும், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் காணப்பட்டனர். தாகத்திற்கும், உயிரைத் தக்கவைப்பதற்கும் தண்ணீர் தேவை என்பதால், அதனைத் தேடிச் செல்ல வேண்டிய அழுத்தம் ஏற்பட்டது. இப்படியாகவே அவர்கள் **"ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது" (யாத். 17:1)**.

பதிவானது என்ன கூறுகிறதெனில், **“அப்பொழுது ஜனங்கள் மோசேயோடே வாதாடி... அவர்கள் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து: நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் (தாகத்தினால்) கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டுவந்தீர் என்றார்கள்” (யாத். 17:2, 3)**. மோசேயின் நிலை அந்தோ பரிதாபம்! அவர்கள் அவரைக் கல்லெறியவும் தயாராக இருந்தார்கள்! **(யாத். 17:4)**.

காரியம் என்னவெனில், **வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளுக்கான விருப்பம் என்பது பாவம் ஆகாது, மாறாகத் தேவனுடைய பராமரிப்புகளுக்கு விரோதமாக முறுமுறுப்பதே பாவம்** என்பதை நாம் மீண்டும் நினைப்பூட்ட விரும்புகிறோம். இது விசுவாசக் குறைச்சலையும், அதன் விளைவாக “**நம்முடைய பிதாவானவர்**” **(மத். 6:9)** நமக்கு “**இன்னது தேவை**” என்பதை அறிந்திருக்கிறார் **(மத். 6:8)** என்ற உண்மையை மதிக்கத் தவறுவதையுமே காட்டுகிறது. பூலோகத் தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நல்ஈவுகளைக் கொடுக்க விரும்புவதைப்பார்க்கிலும் அதிகமாகவே, பரமபிதா “**தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையான வைகளைக் கொடுப்பதற்கு**” **(மத். 7:11)** சித்தமுள்ளவராக இருக்கிறார். வனாந்தரப் பாதையில் நமக்கு ஏற்படும் எல்லா சோதனைகளும் அனுபவங்களுமே, தந்தை–பிள்ளை உறவை வளர்ப்பதற்காகவே தேவனால் வடிவமைக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன – அப்பேர்ப்பட்ட உறவில், நாம் தகப்பனையே முற்றிலும் சார்ந்திருந்து, எது வேண்டுமானாலும், அவரிடமே சென்று **கேட்டுப் பெற்றுக்கொள்ளுவோம்**. ஆனால், முதலில் அவரை நினைவில் வைத்திருந்தால்தான், அவரிடம் சென்று கேட்பதற்கு மறவாதிருப்போம்! மாம்சீக இஸ்ரயேலர் என்றைக்கும் தங்களை மறந்ததில்லை; ஆனால், தவறாமல் தேவனை மறந்தார்கள். **இங்கே, தேவன் எவ்வாறு முழுவதுமாக மறக்கப்பட்டு, சுயமே நினைவுக்கூரப்படுகிறது என்பதைக் கவனியுங்கள்:**

**யாத். 17:3 – “நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினால் கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து ஏன் கொண்டு வந்தீர்?”**

இருப்பினும், தேவன் அன்பாகவே இருக்கின்றபடியால் **(1 யோவான் 4:16)**, நீடிய சாந்தமுள்ள தயவோடு **(1 கொரி. 13:4)**, இஸ்ரயேலோடு தொடர்ந்து போராடி வந்தார் (பிரயாசப்பட்டார்). **நாம் நமது சொந்த இருதயங்களில் காணப்படும் மோசமான தீய குணம், அலட்சியம் மற்றும் விசுவாசக் குறைச்சல் பற்றி சற்றும் உணர்வில்லாது இருப்போமேயானால், இங்கே தகுதியே இல்லாத தங்களுக்குத் தேவன் பாராட்டிய மாபெரும் கிருபைக்கேற்றபடி இஸ்ரயேலர் நடந்துகொள்ளாமல் தவறினதையும் நம்மால் உணர்ந்துகொள்ள முடியாது!**

தேவன் இஸ்ரயேலோடு போராடுவதை நிறுத்திவிட்டு, அவர்களை அந்தப் பயங்கரமான வனாந்தரத்திற்கே திருப்பி அனுப்பிய ஒரு காலம் வந்தது என்பதையும் நினைவில் கொள்வோமாக. எப்போதெனில், வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு நுழைவிடமாகக் காணப்பட்ட காதேஸ் பர்னேயாவுக்கு அவர்கள் வந்தபோது, அவர்கள் அனுப்பிய வேவுகாரரில் பெரும்பாலானோர் கொடுத்த துர்ச்செய்தியினால், **“சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள். இஸ்ரயேல் புத்திரர் எல்லாரும் ... முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும்**

**பிள்ளைகளையும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டுவந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள்" (எண். 14:1 – 3).**

அவர்களுடைய இருதயம் **இன்னும்** பொல்லாததாகவும், அவிசுவாசமுள்ளதாகவும் காணப்பட்டது! **தேவனோடு** சேர்ந்து அந்தத் தேசத்திற்குள் செல்வதை விடவும், அவர் **இல்லாமல்** எகிப்திற்குத் திரும்பவே அவர்கள் விரும்பினார்கள் **(எண். 14:4)**. இங்கே தேவன் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்: "**நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை... உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும்" (எண். 14:30, 32).**

ஆம்! நண்பர்களே! "**ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக்குள்ளும் இராதபடிக்கு**" நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக **(எபி. 3:12).**

* * * * * * * * * *

**யாத். 17:5, 6 – "கர்த்தர் மோசேயை நோக்கி... உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார்."**

அப்போஸ்தலனாகிய பவுல் **1 கொரிந்தியர் 10:4** ஆம் வசனத்தில், பூர்வகால இஸ்ரயேலரைக் குறித்துப் பேசும்போது, அவர்கள் "**எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே**" என்று கூறுகிறார். பரிசுத்த ஆவியின் ஏவுதலின்பேரில் காரியம் இவ்வளவு தெளிவாக இருக்கும்போது, மோசே அடித்த அந்தக் கன்மலை கிறிஸ்துவுக்கு நிழலாக இருந்ததைச் சந்தேகிக்க முடியாதல்லவா? தேவனுடைய எல்லையில்லாத கிருபையைச் சித்தரிக்கும் எப்பேர்ப்பட்ட மகிமைவாய்ந்த காட்சி இது! சகோதரர் ரசல் அவர்கள் கூறுகையில்:

> "கர்த்தருடைய ஏற்பாட்டின்படியே – உத்தம இஸ்ரயேலராகி, எகிப்தினின்று – உலகத்தினின்று – பாவத்தினின்று – எதிராளியின் இராஜ்யத்தினின்று – கீழ்ப்படிதலுக்குள்ளும், கர்த்தருடன் ஐக்கியத்திற்குள்ளும் – கடந்து வருபவர்களாகிய ஆதாமின் சந்ததியார் யாவருக்கும், ஜீவத்தண்ணீரானது, இயேசுவிடமிருந்து வரத்தக்கதாக இந்த "நித்திய கன்மலை" அடிக்கப்பட்டது." (R5957:3)

இஸ்ரயேலர் ரெவிதீமுக்கு வந்தபோது "**ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது" (யாத். 17:1)** என்பதைக் கவனித்திருப்போம். இதிலிருந்து அவர்கள் சில காலமாக தண்ணீர் இல்லாமல் இருந்தார்கள் என்பது தெளிவாகிறது. அப்படியானால், அவர்கள் "**மரணத்திற்குச் சமீபமாய்**" இருந்திருக்க வேண்டும், ஒருவேளை தேவன் அவர்களுக்கு கன்மலையின் தண்ணீரை வழங்காது போயிருந்தால், அவர்கள் நிச்சயமாக

மரித்திருப்பார்கள் என்றே தோன்றுகிறது. இங்கே அலட்சியத்திற்கு இடமில்லாதிருந்தது: உயிர்வாழ வேண்டுமானால், அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீரைக் குடித்தே தீர வேண்டும் என்கிற நிலையே காணப்பட்டது.

முழு மனுக்குலத்திற்கும் இது பொருந்தும்! ஆதாம் தேவனுடைய தயவாகிய ஏதேனை விட்டு வெளியேறி, பாவம் எனும் வனாந்தரத்திற்குள் நுழைந்தபோது, ஜீவத்தண்ணீரின் தடயத்தை அவனது சந்ததியாரும் இழந்துபோனார்கள். அன்று தொடங்கி, ஜீவத் தண்ணீருக்கான தாகத்தினிமித்தம் அவர்கள் யாவரும் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். மரணம் – நிர்மூலமாக்கப்படுதல் – வந்தே தீர்ந்தது! ஆனால், தேவன் ஏற்ற சமயத்தில் கன்மலையை அடித்தார் – அவருடைய ஏகசுதனாகிய கிறிஸ்து இயேசுவை கல்வாரி சிலுவையில் அடித்தார்; அதுமுதல் அங்கிருந்தே ஜீவத்தண்ணீர் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. இந்த ஜீவ ஊற்றிலிருந்து பானம்பண்ணும் சிலாக்கியம் ஆதாமின் சந்ததியாரில் அனைவருக்கும் இன்னும் கிடைக்கவில்லை என்றாலும், “**பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்...” (யோவான் 5:28, 29)** என்று கிறிஸ்துவே நமக்கு உறுதியளித்திருக்கிறார் அல்லவா! அப்போது அவர்கள், “**ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்” (வெளி. 22:17)** என்கிற அழைப்பைக் கேட்பார்கள்.

ஆனால், இந்தச் சுவிசேஷ யுகத்தின் தேவனுடைய இஸ்ரயேலருக்கு, அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் ஒரு கருத்து முக்கியமானதாக இருக்கும்; பூர்வகாலத்தவர்கள் இந்தக் கன்மலையிலிருந்து பானம்பண்ணும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய பிறகு அவர் பின்வருமாறு கூறுகிறார்: **“அப்படியிருந்தும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை, ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்” (1 கொரி. 10:5)**. அவர்கள் ஏன் அழிக்கப்பட்டார்கள்? இஸ்ரயேலின் பரிசுத்தராகிய தேவனுடைய கிருபையை அவர்கள் வீணும் விருதாவாகவும் பெற்றுக்கொண்டதினால் அல்லவா!

**“அவர்கள் இச்சித்ததுபோல நாமும் ... இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது. ... விக்கிரகாராதனைக்காரர் ... ஆகாதிருங்கள். ... வேசித்தனம்பண்ணாதிருப்போமாக. ... கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. ... முறுமுறுக்காதிருங்கள்” (1 கொரி. 10:6 – 10)**. தேவனுடைய கடந்தகால தயவுகளை நாம் மதித்துணர்கிறோம் எனும்போது, அது தேவனுக்கு முன்பான நமது நிகழ்கால மற்றும் எதிர்கால நடக்கையிலும்கூட வெளிப்படுவதாக இருக்கும். எனவே நாம் “அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடக்கக்கடவோம்” **(எபே. 4:1)**.

அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீரினால் இஸ்ரயேலர் புத்துயிர் பெற்ற பிறகு, **“அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரயேலரோடே யுத்தம்பண்ணினார்கள்” (யாத். 17:8)**. பிரியமானவர்களே, இங்கே ஒன்றைக் கவனித்தீர்களா! அமலேக்கியர் **<u>முன்னரே</u>** வந்திருந்தால், இஸ்ரயேலரை எளிதில் பிடித்திருக்க முடியும். இஸ்ரயேலின் மீதான தேவனுடைய மேற்பார்வையான பராமரிப்பு இங்கே வெளிப்படுகிறது. இருப்பினும், தேவன் ஏன்

அமலேக்கியரை இஸ்ரயேலருக்கு விரோதமாக வர அனுமதித்தார் என்று நீங்கள் கேட்கலாம். நிச்சயமாக இஸ்ரயேலர் அழிக்கப்பட வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாகத் தாம் இஸ்ரயேலைக் காக்க வல்லவர் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தவும், தமது **சத்துவத்தின்** வல்லமையினால் அவர்கள் பலப்படுவதற்கு ஒரு வாய்ப்பை வழங்கவுமே அவ்வாறு செய்தார்.

**துன்பங்களை எதிர்த்து நின்று சகிக்கும்போதே மனவலிமை அதிகரிக்கின்றது**, ஆனால், **எபேசியர் 6:10** ஆம் வசனத்தில், அப்போஸ்தலனாகிய பவுல், நாம் முதலில் "**கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்பட**" வேண்டும் என்றே அறிவுறுத்துகிறார். ஆனால் விந்தை என்னவெனில், **அத்தகைய பலம் வளர்ச்சி அடைய வேண்டுமானால், அதற்கு முன்தேவைப்படுவது நமது சொந்த பலவீனமே ஆகும்**.

அப்போஸ்தலனாகிய பவுல், தனது ஊழியத்தில் கர்த்தருடைய வல்லமையையும் பலத்தையும் அதிகமாகப் பெற்றுக்கொள்ள விரும்பினவராய், தனது சரீரத்தில் காணப்பட்ட முள்ளை நீக்கும்படி மூன்று முறை அவரிடம் வேண்டிக்கொண்டபோது, அவருக்குக் கிடைத்த பதில்: "**என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி. 12:9, 10**) என்பதாகும். இப்படியாக பதில் கிடைத்த பிறகு, அவர் தன்னைத் தேவ சித்தத்திற்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்துவிட்டதைக் கவனியுங்கள்: "**கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால், கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.**"

இஸ்ரயேலர் தண்ணீரைப் பருகி புத்துயிரடைந்த பின்னரே அமலேக்கியர் வந்தனர். நமக்கு இதில் ஒரு விசேஷித்த பாடம் உள்ளது. அடிக்கப்பட்ட கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவிடமிருந்து புறப்பட்டு வரும் ஜீவத்தண்ணீரை இதுவரை நாம் மட்டுமே பானம் பண்ணியிருக்கிறோம். இந்த ஜீவத்தண்ணீரைப் பருகியதன் விளைவாக அல்லது நமக்குரியதாக்கிக்கொண்டதன் விளைவாக, அவருடைய இரத்தத்தின் மீது வைக்கும் விசுவாசத்தினால் உண்டாகும் ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல் நமக்குக் கிடைத்தது; அத்துடன் இந்த அடிக்கப்பட்ட கன்மலையின் மூலம் நம்மை மரணத்திலிருந்து மீட்டவருக்கென்று (பிதாவாகிய தேவன்) ஜீவிப்பதற்கான அர்ப்பணிப்பையும் நம்மால் செய்ய முடிந்தது. அதன் பிறகே, மாம்சத்திற்கு மிகச்சிறந்த நிழலாக விளங்கும் அமலேக்கியர் நம்மோடு போரிட வருகிறார்கள்.

கூழுக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவின் பேரனே இந்த அமலேக்கு (**ஆதி. 36:12**). எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட பிறகு, இஸ்ரயேலரோடு முதலில் போராட வந்தவனும் இந்த அமலேக்குதான். **உபாகமம் 25:17 – 19** வரையிலான வசனப்பகுதியில் இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிக்கையைப் பின்வருமாறு வாசிக்கிறோம்:

"**எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல்**

> **உனக்கு எதிராக வந்து, நீ இளைத்து விடாய்த்திருக்கையில், பின்வருகிற உன் பாளயத்திலுள்ள பலவீனரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு. உன் தேவனாகிய கர்த்தர் நீ சுதந்தரித்துக்கொள்ள உனக்குக் கொடுக்கும்தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன்னுடைய சத்துருக்களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் விலக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணும்போது, நீ அமலேக்கின் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய்; இதை மறக்கவேண்டாம்."**

அது மட்டுமல்லாது, அமலேக்கை அழிக்கத் தவறியதன் விளைவாகவே சவுல் இஸ்ரயேல் இராஜ்யத்திலிருந்து தள்ளிவிடப்பட்டார் என்பதும் தங்களுக்கு நினைவிருக்கலாம் **(1 சாமு. 15)**.

அமலேக்கு என்பவன் '**மாம்சத்திற்கான**' மிகச்சரியான நிழல் என்பதை உறுதிப்படுத்த இதைக்காட்டிலும் மேலான சான்றுகள் தேவைப்படாது! கானானை நோக்கிய நமது வனாந்தரப் பிரயாணத்தை முற்றிலும் நாசம்செய்ய முடியாவிட்டாலும், அதைத் தாமதப்படுத்தவேனும் செய்கிற இந்த எதிராளியோடு (மாம்சம்) நமக்குத் தொடர்ச்சியான போராட்டம் இருக்கிறது அல்லவா? இந்தத் தந்திரமான எதிராளியை எதிர்த்துப் போராட நமக்குள் போதுமான பலம் இருக்கிறது என்று நம்மால் சொல்ல முடியாது. ஏனெனில், அங்கே மோசே அவர்களுக்காக இடைப்படாமல் இருந்திருந்தால், இஸ்ரயேலர் நிர்மூலமாக்கப்பட்டிருப்பார்கள். நமக்கும் அப்படியே! **தேவனே கிறிஸ்து இயேசுவின் மூலம் நமக்கு ஜெயம் கொடுக்கிறவர்! "மலையுச்சி" எனும் உயர்த்தப்பட்ட ஸ்தானத்தில் காணப்படுகிற கிறிஸ்துவின் உதவி இல்லாமல் நாம் செய்யும் அனைத்துப் போராட்டங்களும் வீணே! ஆம்! ஒன்றுக்கும் உதவாது!**



இந்தக் காட்சி நம் கண்களுக்கு முன்பாக எவ்வளவு அழகாக விரிவடைகிறது! நிழலைப் பாருங்கள், மோசே தன் கைகளை உயர்த்தியிருக்கும்போது இஸ்ரயேலர் மேற்கொண்டார்கள்; அவர் தன் கைகளைக் கீழே தாழ்த்தும்போது அமலேக்கு மேற்கொண்டான் **(யாத். 17:11)**. இது தேவனுடைய வல்லமை இல்லாமல் தங்களால் ஒன்றும் செய்ய இயலாத இஸ்ரயேலரின் பலவீனத்தையும் இயலாமையையும் காட்டுகிறது. **அவர்களுடைய பலம் அவருடைய சத்துவத்தின் வல்லமையில் மட்டுமே காணப்பட முடிந்தது**; அதிலும் மோசேயின் தலையீடு இல்லாமல் இது நடந்திருக்க வாய்ப்பேயில்லை. இது நமக்கு எப்பேர்ப்பட்ட பாடமாக இருக்கிறதல்லவா! இருப்பினும், நாம் எத்துணை தரம் நமது சொந்த பலத்தில் மாம்சத்திற்கு எதிராகப் போராடச் சென்றிருக்கிறோம் மற்றும் செல்கிறோம்! அப்படியாகச் சென்று எவ்வளவு பரிதாபமாகத் தோற்றும் போகிறோம்! **"என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது" (யோவான் 15:5)** என்ற இயேசுவின் வார்த்தைகள் எத்துணை உண்மையானவை!

அங்கே மோசேயின் கைகள் சோர்ந்து போனதால், அவை தாங்கப்பட வேண்டியிருந்தது; ஒருவேளை அவர் கரங்கள் கீழே இறங்கினால், என்னதான் மோசே மலை உச்சியில் இருந்தாலும், இஸ்ரயேலர் அமலேக்கியரிடம் தோற்றிருப்பார்கள். ஆம்! நமது கர்த்தருடைய புயம் ஒருபோதும் சோர்ந்து போகாது என்பது உண்மைதான்! ஆனால், நாம் அவருக்கு ஒத்துழைப்பு (support) கொடுத்தால் ஒழிய, அவை நமக்காக உயர்த்தப்பட மாட்டாது என்பதே காரியம்.

- இதன் பொருள் என்ன?

பிரியமானவர்களே, நமது இருதயங்களில் நாம் "**நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்க**" வேண்டும் **(எபி. 1:9)** என்பதே இதன் பொருளாகும். இங்கே கர்த்தருடைய ஒரு கை 'அவர் நீதியை விரும்புவதையும்,' மறு கை 'அவர் அக்கிரமத்தை வெறுப்பதையும்' குறிப்பது போலுள்ளது. அந்த இரண்டு கைகளுமே உயர்த்தப்பட வேண்டும். நாம் நீதியை விரும்புவது மட்டும் போதாது, அக்கிரமத்தையும் வெறுக்க வேண்டும். இவ்வாறாக, இயேசுவின் குணாதிசயத்தை நமது இருதயங்களில் ஏற்றுக்கொள்ளும்போது, அதாவது, அவருடைய முன்மாதிரியைப் பின்பற்ற நம்மால் முடிந்த மிகச்சிறந்த முயற்சிதனை ஏறெடுக்கும்போது, நிச்சயமாய் அவர் நமக்காகத் தேவனுக்கு முன்பாக விண்ணப்பிக்கவும் பரிந்துபேசவும் செய்திடுவார். **அப்போதுதான், நம்மால் மாம்சத்தை ஜெயங்கொள்ள முடியும், அதிலும் குறிப்பாகக் கிறிஸ்து இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய கிருபையினால் மாத்திரமே அது சாத்தியமாகும்.**

அமலேக்கு முறியடிக்கப்பட்டான், ஆனால் அழிக்கப்படவில்லை என்பதை இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இப்படியாக அவன் இஸ்ரயேலரின் சரித்திரத்தில் மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருந்தான். நமக்கும் அப்படியே. **மாம்சத்தின் மீது இன்றைக்கு கிடைக்கும் வெற்றி என்பது அதை அழிப்பதன் மூலமாக அல்லாமல், மாறாக அதை மேற்கொள்வதன் மூலமாக மாத்திரமே கிடைக்கிறது.** நாம் அமலேக்குடன் மீண்டும் மீண்டும் போரிட வேண்டியிருக்கும். மரணத்தில் இறுதி வெற்றி கிடைக்கும் வரை இது ஒரு தொடர்ச்சியான போராட்டமாக இருக்கும். **யாத்திராகமம் 17:16** ஆம் வசனத்தில் பின்வருமாறு வாசிக்கிறோம்: "**அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும்.**" எப்பேர்ப்பட்ட

அர்த்தமுடையது! ஆனால், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்! இறுதியில் தம்முடைய உண்மையான இஸ்ரயேலரே வெற்றி பெறுவார்கள் என்பதை உறுதி செய்துள்ளார்.

ஆகையால், **"விழித்திருந்து ஜெபம்செய்வோமாக"**!

* * * * * * * * * * *

இஸ்ரயேலருக்காக மோசேயின் கைகள் உயர்த்தப்பட வேண்டியிருந்தது போலவே, அமலேக்கு எனும் மாம்சத்தின் மீது வெற்றி பெறுவதற்கு கிறிஸ்துவின் கைகள் நமக்காக உயர்த்தப்பட வேண்டியுள்ளது என்று பார்த்தோம். அவ்வாறு பார்க்கையில், **நிழலிலுள்ள "ஆரோன்" மற்றும் "ஊர்" (Hur) என்பவர்கள் நமக்குள் இருக்கும் "மிக உயர்ந்த" (highest) மற்றும் "மிக உன்னதமான" (noblest) நற்பண்புகளை அடையாளப்படுத்த வேண்டும்** என்பதாகத் தோன்றுகிறது. ஆரோன் மற்றும் ஊர் இருவருமே மோசேக்கு உறவினர்கள்: ஆரோன் மோசேயின் சகோதரர், (வரலாற்றாசிரியர் ஜோசபஸ் கூற்றுப்படி,) ஊர் மோசேயின் மைத்துனர் (மிரியாமின் கணவர்).

Cyrus A. Potts என்பவரின் "Dictionary of Bible Proper Names" என்ற அகராதியின்படி, ஆரோன் என்றால் "மிக உயர்ந்த / மிகவும் உயர்த்தப்பட்ட" (very elevated) என்று பொருள், ஊர் என்றால் "உன்னதமான" (noble) என்று பொருள். நிச்சயமாக, நமக்குள் இருக்கும் மிக உயர்ந்த மற்றும் உன்னதமான நற்பண்புகள் கிறிஸ்து இயேசுவுக்கு உறவினர்களாகும்; இவற்றின் மூலமாகவே நமது இருதயங்கள் இயேசுவின் குணாதிசயத்தை ஏற்றுக்கொண்டு, உயர்த்திப் பிடிக்கின்றன. அப்படிச் செய்யும்போது, தேவ வல்லமை நமது நிமித்தம் கிரியைசெய்திடும். இவ்வாறு நிஜமான மோசேயாகிய கிறிஸ்துவின் கரங்களை நாம் உயர்த்திப்பிடிப்பதன்மூலமாக, அமலேக்கின் மீதான வெற்றி நமக்கு உரித்தாக்கப்படுகிறது; வேத வாக்கியத்தின்படி, இந்தக் கிறிஸ்துவே **இரட்சிப்பு உண்டாவதற்குத் தேவபெலனாயிருக்கிற "கர்த்தருடைய புயம்" (ஏசா. 53:1)** என்று குறிப்பிடப்பட்டுள்ளார் **(யோவான் 12:38; ஏசா. 51:5, 9; 52:10; 59:15 – 20)**.

# பாகம் ஏழு

### யாத்திராகமம் 18:2 - 12; 19:1–8; எண்ணாகமம் 33:15

"மோசேயின் மாமனாகிய எத்திரோ, மோசேயினாலே திருப்பி அனுப்பிவிடப்பட்டிருந்த அவன் மனைவியாகிய சிப்போராளையும், அவளுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக் கொண்டு பிரயாணப்பட்டான். நான் அந்நிய தேசத்திலே பரதேசியானேன் என்று மோசே சொல்லி, ஒரு மகனுக்குக் கெர்சோம் என்று பேரிட்டிருந்தான். என் பிதாவின் தேவன் எனக்குத் துணைநின்று பார்வோனின் பட்டயத்துக்கு என்னைத் தப்புவித்தார் என்று சொல்லி, மற்றவனுக்கு எலியேசர் என்று பேரிட்டிருந்தான். மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயின் குமாரரோடும் அவன் மனைவியோடுங்கூட, அவன் பாளயமிறங்கியிருந்த தேவ பர்வதத்தினிடத்தில் வனாந்தரத்துக்கு வந்து: எத்திரோ என்னும் உம்முடைய மாமனாகிய நானும், உம்முடைய மனைவியும், அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உம்மிடத்திற்கு வந்திருக்கிறோம் என்று மோசேக்குச் சொல்லியனுப்பினான். அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டுபோய், அவனை வணங்கி, முத்தஞ்செய்தான்; ஒருவரை ஒருவர் சுகசெய்தி விசாரித்துக்கொண்டு, கூடாரத்துக்குள் பிரவேசித்தார்கள். பின்பு மோசே கர்த்தர் இஸ்ரயேலினிமித்தம் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்த எல்லாவற்றையும், வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும், கர்த்தர் தங்களை விடுவித்து இரட்சித்ததையும் தன் மாமனுக்கு விவரித்துச் சொன்னான். கர்த்தர் இஸ்ரயேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அவர்களுக்குச் செய்த சகல நன்மைகளையுங்குறித்து எத்திரோ சந்தோஷப்பட்டு: உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்; அவர்கள் இடும்பு செய்த காரியத்தில் அவர்களை மேற்கொண்டார் என்று சொல்லி; மோசேயின் மாமனாகிய எத்திரோ சர்வாங்க தகனபலியையும் மற்ற பலிகளையும் தேவனுக்குக் கொண்டுவந்து செலுத்தினான். பின்பு ஆரோனும் இஸ்ரயேல் மூப்பர் அனைவரும் வந்து மோசேயின் மாமனுடனே தேவசமுகத்தில் போஜனம்பண்ணினார்கள்." (யாத்திராகமம் 18:2 – 12)

"இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாளிலே, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் ரெவிதீமிலிருந்து பிரயாணம் புறப்பட்டு, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்து, அந்த வனாந்தரத்தில் பாளயமிறங்கினார்கள்; இஸ்ரயேலர் அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள். மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரயேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர் களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய இராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய்

**இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார். மோசே வந்து ஜனங்களின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான். அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை மோசே கர்த்தரிடத்தில் தெரிவித்தான்.'' (யாத்திராகமம் 19:1 – 8)**

**''ரெவிதீமிலிருந்து புறப்பட்டுப்போய், சீனாய் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.'' (எண்ணாகமம் 33:15)**

வனாந்தரப் பிரயாணத்தில் நமது அடுத்த நிறுத்தம் சீனாய் ஆகும். இந்தச் சீனாயில் இஸ்ரயேலருக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி தியானிப்பதற்கு முன்பாக, ஒரு சம்பவத்தைக் குறித்து தியானிப்பது நமக்குப் பயனுள்ளதாக இருக்கும். மோசே எகிப்தில் பார்வோனின் வீட்டில் காணப்பட்டபோதே, தன் சகோதரருக்கு முன்பாக தன்னை ஓர் இரட்சகனாக (deliverer) முன்வைத்ததை நாம் அறிவோம். இதுகுறித்து நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

**யாத். 2:11, 12 – ''மோசே பெரியவனான காலத்தில், அவன் தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமை சுமக்கிறதைப் பார்த்து, தன் சகோதரராகிய எபிரெயரில் ஒருவனை ஒரு எகிப்தியன் அடிக்கிறதைக் கண்டு, அங்கும் இங்கும் பார்த்து, ஒருவரும் இல்லை என்று அறிந்து, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே புதைத்துப் போட்டான்.''**

நியாயமாக இச்சம்பவத்திற்குப் பிறகு, தங்களின் அநீதியைக் குறித்து கேள்வி கேட்கப்பட்டாலும் பரவாயில்லை, மோசேயிடமிருந்து இன்னுமதிக இரக்கமும் தயவும் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்கிற ஆவலோடே இஸ்ரயேலர் அவரை அடிக்கடி அணுகியிருப்பார்கள் என்றே நாம் நினைப்போம். ஆனால், நடந்ததோ வேறு! இதுகுறித்து பின்வருமாறு வாசிக்கிறோம்:

**யாத். 2:13, 14 – ''அவன் மறுநாளிலும் வெளியே போனபோது, எபிரெய மனுஷர் இருவர் சண்டை பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவன் அநியாயஞ்செய்கிறவனை நோக்கி: நீ உன் தோழனை அடிக்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவன்: எங்கள்மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்று போட்டது போல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ என்றான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான்.''**

ஒருவேளை மோசேயின் பெருந்தன்மையான செயல்களினால் பயனடையும் ஓராயிரம் இஸ்ரயேலரால்கூட அந்த இரகசியத்தைப் பார்வோனிடமிருந்து எளிதில் மறைத்திருக்க முடியும்; ஆனால், **தன் அநீதியான பெருமையினிமித்தம் புண்பட்ட** ஒரேயொரு இஸ்ரயேலன் மோசேயின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கப் போதுமானவனாய் இருந்தான். இதனால் மோசே தப்பி ஓட வேண்டியதாயிற்று. அதன் பிறகு, வாசிக்கலாம் –

**யாத். 2:15 – ''பார்வோன் அந்தக் காரியத்தைக் கேள்விப்பட்டபோது, மோசேயைக்**

**கொலைசெய்ய வகைதேடினான். மோசே பார்வோனிடத்தினின்று தப்பியோடி, மீதியான் தேசத்தில் போய்த் தங்கி...**"

இப்படியாக மோசே புறக்கணிக்கப்பட்டவராய், எகிப்திலிருந்து தப்பியோடி, மீதியான் தேசத்தில் போய்த் தங்கியிருந்த சமயத்தில்தான், அவர் சிப்போராளை மணந்துகொண்டார். அவள் இஸ்ரயேல் ஸ்திரீ கிடையாது!

அதுபோலவே, இயேசு கிறிஸ்துவும் தமது முதலாம் வருகையில், "**தமக்குச் சொந்தமானவர்களிடத்தில்**" **(யோவான் 1:11)** வந்தபோது, அவர்களும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரும் தம்முடைய தயாளச் செயல்கள் நிமித்தமாக அல்லாமல், மாறாக அவர்களின் அநீதியை நியாயந்தீர்த்த / கேள்விகேட்ட காரணத்திற்காகவே புறக்கணிக்கப்பட்டார். இப்படியாக இஸ்ரயேலர் மேசியாவைப் புறக்கணித்த காரணத்தினால், அவரும் தமக்கான மணவாட்டி வகுப்பாரை, குறிப்பாகப் புறஜாதிகளிடமிருந்து ஏற்றுக்கொள்ளச் சித்தம்கொண்டார்.

மோசே இரண்டாம் முறை இஸ்ரயேலரிடம் வந்த சமயத்தில், அவர்கள் அவரைத் தங்களது இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்; அது போல, கிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவரைப் புறக்கணித்த இஸ்ரயேலரும், அவருடைய இரண்டாம் வருகையில் அவரைத் தங்களது மேசியாவாகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்வார்கள். இது நம்மை **யாத்திராகமம் 18**ஆம் அதிகாரத்தில் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டுள்ள அந்த மகத்தான **ஆயிரமாண்டு அரசாட்சி** காட்சிக்கு இட்டுச் செல்கிறது! அங்கே இஸ்ரயேல், மோசே மற்றும் அவருடைய மணவாட்டி ஆகிய அனைவர்மேலும் ஒன்றாகக் கவனம் குவிக்கப்படுகிறது.

> "இது மிகவும் சுவாரஸ்யமான ஒரு காட்சியாகும். முழுச் சபையும் கர்த்தருக்கு முன்பாக ஜெயம்பெற்றவர்களாய் ஒன்றுகூடியிருக்கிறார்கள்; புறஜாதியான் பலி செலுத்துகிறான்; மேலும், இக்காட்சியை முழுமையாக்கும் வண்ணமாக, இரட்சகனின் மணவாட்டியும், தேவன் அவருக்குக் கொடுத்த பிள்ளைகளும் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், இந்தக் காட்சியை மட்டும் தனியாக எடுத்துப் பார்த்தால், இது வரப்போகும் இராஜ்யத்தின் ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் வியக்கத்தக்க முன்நிழலாகக் காணப்படுகின்றது..." (Charles Henry Mackintosh Commentary)

**யாத். 19:1, 2 – "இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாளிலே, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் ரெவிதீமிலிருந்து பிரயாணம் புறப்பட்டு, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்து, அந்த வனாந்தரத்தில் பாளயமிறங்கினார்கள்; இஸ்ரயேலர் அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள்.**"

எகிப்திலிருந்து புறப்பட்டு இரண்டு மாதங்கள் கழித்து, இப்போது அவர்கள் "**தேவ பர்வதத்தினிடத்தில்**" வந்து சேர்ந்திருந்தார்கள். அங்கேதான் தேவன் அவர்கள் குறித்த தமது சித்தம் என்ன என்பது குறித்தும், அவர்களின் பிரதிஷ்டை குறித்தும் அவர்களுக்கு வெளிப்படுத்தவிருந்தார்: "**இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச்**

**சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய இராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்." (யாத். 19:5, 6).**

எகிப்தில் அவர்கள் கிட்டத்தட்ட ஜீவன் இழந்துபோன – 'மரித்துப்போன' – ஒரு தேசமாகவே காணப்பட்டார்கள். அவர்களால் தங்களைத்தாங்களே மீட்டுக்கொள்ள இயலவில்லை. அப்போது தேவன் தாமே மனமிரங்கி, அவர்களைக் கொடிய பார்வோனின் கைக்கு மீட்டு இரட்சித்தார். பின் உடனே அவர் அவர்களை ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்களித்திருந்த கானான் தேசத்திற்குக் கொண்டு செல்லவில்லை என்பது உண்மைதான் என்றாலும், இம்மட்டும் அவர்கள் கடந்து வந்த வனாந்தர அனுபவங்கள் அனைத்திலும், தேவன் அவர்களைத் தம்முடையவர்களாகவும், மீட்கப்பட்ட ஜனங்களாகவும், **தமது உண்மையுள்ள சிநேகிதனாகிய ஆபிரகாமின் பிள்ளைகளாகவுமே** எண்ணி நடத்தியிருந்தார் என்பதையும் நம்மால் மறுக்க முடியாது. இது குறித்து பாஸ்டர் ரசல் அவர்கள் R5285 ஆம் ரீப்பிரிண்டில் பின்வருமாறு கூறுகிறார்:

> "...'உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்' என்று ஆணையிட்டு, ஆபிரகாமுடன் செய்துகொண்ட தமது மாபெரும் உடன்படிக்கைக்கு இசைவாகவே தேவன் இஸ்ரயேலரைக் கையாண்டார்."

இஸ்ரயேலரோ இந்த உண்மையை மதித்துணரத் தவறினார்கள். ஆபிரகாமோடு தங்களை இணைத்திருந்த அந்த ஆவிக்குரிய இணைப்பின் பிடியை அவர்கள் துரிதமாகவே நழுவவிட்டுக்கொண்டிருந்தனர். இன்று வரையிலும் சரி, ஒருவன் தனது விசுவாசத்தைச் செயல்படுத்திக் காண்பித்தாலன்றி, அவன் ஆபிரகாமின் சந்ததி என்று உண்மையில் கூறப்பட முடியாது **(யோவான் 8:37 – 40)**. இனி ஒருக்காலும் ஆபிரகாமின் உடன்படிக்கையை ஒரு தூண்டுகோலாகப் பயன்படுத்தி, இஸ்ரயேலரைத் தேவன்பேரில் வைராக்கியத்தோடும், விசுவாசத்தோடும் (உண்மையோடும்) இருக்கும்படிக்குச் செய்ய முடியாது என்கிற நிலையே நிலவியது. காலப்போக்கில் ஆர்வமும் பற்றும் குறையத் தொடங்கியது!

சொல்லப்போனால், ஏற்கெனவே துணிகரமான பாவமாக மாறியிருந்த அவர்களின் மறைவான குற்றமே அதற்குக் காரணமாகும். இந்தத் துணிகரமான பாவம் அவர்கள் மேல் மாபெரும் ஆதிக்கம் செலுத்திய காரணத்தினால், காலப்போக்கில் அந்த மாம்சீகச் சந்ததியில் எவருமே "**ஆசீர்வாதத்தின் சந்ததியாக**" இருப்பதற்குத் தகுதியானவர்கள் கிடையாது என்கிற நிலை வந்தது. இதுவே சீனாய் மலையில் பிரதிபலிக்கப்பட்டதாகக் காண்கிறோம்; அங்கே "**வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது (நியாயப்பிரமாணம்) அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டது" (கலா. 3:19).**

இஸ்ரயேலரைப் பூரணப்படுத்துவதற்காக அல்லாமல், மாறாக அவர்களுக்குப் பாவத்தைப் பற்றிய மன உணர்வைக் (consciousness of sin) கொடுப்பதற்காகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இப்படியாக, தங்களுக்கு தேவனுடைய கிருபை முற்றும் முடிய தேவைப்படுகிறது என்பதையும், கர்த்தர் தங்களுக்குச் செய்த சகல உபகாரங்களையும் தாங்கள் மதித்துணர வேண்டும் என்பதையும் அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே அது

கொடுக்கப்பட்டது. அத்தகைய மதித்துணருதலோடு விசுவாசமும் கலந்திருக்கையில், பின்வருமாறே வார்த்தைகள் வெளிப்படும்: "**கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?... நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்**" **(சங். 116:12, 14)**.

இப்படியாக, முதலில் எது பாவம் என்பதைத் திட்டவட்டமாக வெளிப்படுத்துவதற்காகவும், பின்னர் பாவியின் உள்ளத்தில் தேவனுடைய கிருபை மற்றும் தயவின் மீதான வாஞ்சையைத் தூண்டி எழுப்புவதற்காகவுமே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதாகக் காண்கிறோம். அது எது பாவம் என்பதை வெளிப்படுத்தியதே ஒழிய, அது பாவத்தை உண்டாக்கவுமில்லை, அகற்றவுமில்லை என்பதை இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இதுகுறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில்:

**உரோமர் 7:7 – 13 – "...நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே. பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணமில்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே. முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான்**




இஸ்ரயேலரைப் பூரணப்படுத்துவதற்காக அல்லாமல், மாறாக அவர்களுக்குப் பாவத்தைப் பற்றிய மன உணர்வைக் கொடுப்பதற்காகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது.

**ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன். இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக்கண்டேன். பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது. ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது. இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல; பாவமே எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று.**"

திருவிவிலியம் – "**அப்படியானால் என்ன சொல்வோம்? திருச்சட்டமும் பாவமும் ஒன்றுதானா? ஒருபோதும் இல்லை. ஆயினும் திருச்சட்டம் வழியாய் அன்றிப் பாவம் என்ன என்று நான் அறிந்திருக்கமாட்டேன். எப்படியானால், "பிறருக்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே" என்று சட்டம் சொல்லாமல் போயிருந்தால், அவ்விருப்பம் என்ன என்றே அறிந்திருக்க மாட்டேன். ஆனால், கட்டளை தந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பாவம் என்னுள் எல்லாவகை ஆசைகளையும் தூண்டிவிட்டது. ஏனெனில், சட்டம் இல்லையேல் பாவத்திற்கு உயிரில்லை. ஒரு காலத்தில் சட்டம் இல்லாதபோது நான் உயிர் உள்ளவனாயிருந்தேன். கட்டளை தரப்பட்டபோது பாவம் உயிர்பெற்றது: நான் உயிரிழந்தேன். வாழ்வுக்கு வழியாய் இருக்கவேண்டிய கட்டளை எனக்குச் சாவுக்கு வழியாயிற்று என்று கண்டேன். கட்டளை தந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பாவம் என்னை ஏமாற்றி அந்தக் கட்டளை வழியாகவே என்னைக் கொன்றும் விட்டது. திருச்சட்டம் தன்னிலே தூயதுதான்: அவ்வாறே கட்டளையும் தூயது, நேரியது, நல்லது. அவ்வாறாயின், நல்லது என் சாவுக்குக் காரணமாக மாறிவிட்டதா? ஒருபோதும் இல்லை. எல்லாம் பாவத்தின் வேலைதான்! பாவம் தன் இயல்பை வெளிப்படுத்துவதற்காக நல்லதொன்றைக் கொண்டு எனக்குச் சாவை விளைவித்து, இவ்வாறு கட்டளையின் வழியாகப் பாவம் தன் கொடிய இயல்பை அளவுகடந்த முறையில் வெளிப்படுத்தியது.**"

அப்போஸ்தலர் முன்பே கூறியது போல, "**மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது" (உரோமர் 5:20).** ஒருவர் இதைப் பற்றி மிக அழகாகப் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

> "பாவத்தின் அளவுகடந்த கொடிய இயல்பை எடுத்துக்காட்டும்படிக்கே 'நியாயப் பிரமாணம்' இடையில் கொடுக்கப்பட்டது. பார்க்கப்போனால், இது மனிதனுடைய சீர்கேடுகளை அவனுக்கு வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக, பரலோகத்திலிருந்து இறக்கிவிடப்பட்ட ஒரு கண்ணாடியைப் போன்று இருந்தது. கலைந்த தலைமுடியுடன் நான் கண்ணாடி முன்பாக நின்றால், அது முடி கலைந்திருப்பதைக் காட்டுமே ஒழிய அதை சரி செய்யாது. ஒரு கோணலான சுவரை, தூக்குநூல் (Plumb-line) கொண்டு அளந்தால், அது கோணலை வெளிப்படுத்துமே ஒழிய அதை சீர்செய்யாது. இருட்டு நேரத்தில் நான் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு போனால், அது எனக்கு வழியில் உள்ள தடைகளையும் அசௌகரியங்களையும் காட்டுமே ஒழிய அவற்றை நீக்காது. சொல்லப்போனால், அந்தக் கண்ணாடி, தூக்குநூல் மற்றும் விளக்கு என்பவை தாங்கள் சுட்டிக்காட்டும் குறைகளை/தீமைகளை தாங்களாக உருவாக்கி நமக்குக்

**காண்பிப்பதில்லை; ஆம்! அவை அவற்றை உண்டாக்குவதுமில்லை, நீக்குவதும் இல்லை, மாறாக ஏற்கெனவே இருக்கிற குறைகளைத்தான் அவை துல்லியமாக வெளிப்படுத்துகின்றன! (நியாயப்)பிரமாணமும் அப்படித்தான்: அது மனிதனுடைய இருதயத்தில் தீமையை உருவாக்குவதுமில்லை, அதை நீக்குவதுமில்லை; மாறாக, ஏற்கெனவே காணப்படுகின்ற தீமையைச் சரியான துல்லியத்தோடு வெளிப்படுத்தவே செய்கின்றது!" (Charles Henry Mackintosh Commentary)**

இவ்வாறு நியாயப்பிரமாணம் பாவத்தை வெளிப்படுத்தியதோடுகூட, நீதியையும் ஜீவனையும் வாஞ்சிப்பதற்கேதுவாகத் தூண்டவும் செய்தது. இருப்பினும், அதினால் விழுந்துபோன எந்த மனுஷனுக்கும் அவன் நாடித்தேடிய அந்த ஜீவனைக் கொடுக்க முடியாமல் போனது.

இங்கே ஒரு விஷயத்தை நாம் கவனத்தில் வைக்க வேண்டியுள்ளது: **தன்னை முழுமையாகக் கைக்கொள்கிற மனுஷனுக்கு, நியாயப்பிரமாணம் முடிவிலே ஜீவன் தருவதாக உறுதியளித்திருந்தாலும், "முதலில் அம்மனுஷனிடம் ஜீவன் இருந்தால்தான், அதை வைத்துக்கொண்டு, அவனால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியும்"** என்பதே காரியமாக இருந்தது. (That which the Law promised in the end – life, to the man that would keep it, was the very thing that we would need at the beginning, in order to keep it.)

**எபிரெயர் 7:19** ஆம் வசனத்தில், "**நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப் படுத்தவில்லை**" என்றே நாம் வாசிக்கிறோம்.

இருப்பினும், அது (தன்னைக் கைக்கொள்ள முடிகிற) ஒரே மனுஷனைச் சுட்டிக்காட்டியது – அவர் தமது பரிபூரணத்தினாலும் நீதியினாலும், பாவத்திற்கு விலகினவராய் இருந்ததாலும், நியாயப்பிரமாணத்தின் எழுத்தைக் கைக்கொண்டு, அதன் ஆவியையும் நிறைவேற்றி, இப்படியாக ஜீவனில் நிலைத்திருக்கும் உரிமையைப் பெற்றுக்கொண்டார். அந்த மனுஷன் கிறிஸ்து இயேசுவே! **உலகத்தின் பேரில் பிதா வைத்திருக்கும் மாபெரும் அன்பை வெளிப்படுத்துவதற்காக, அவர்கள் பிழைக்கும் பொருட்டு, இயேசு தம்முடைய ஜீவனையே மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்குத் துதி உண்டாவதாக!**

* * * * * * * * * *

இஸ்ரயேலரோடு கர்த்தர் கொண்டிருந்த உறவில், அவர்கள்பேரில் அவர் காண்பித்த நீடிய சாந்தமுள்ள இரக்கத்தைக் குறித்துச் சிந்தித்துப் பார்ப்போமாக. எத்துணை பொறுமை! எத்துணை சகிப்புத்தன்மை! அழிவுக்கு நேராய்க் கடந்துபோன மற்ற தேசங்களைப் போலல்லாமல், இவர்களைக் காப்பாற்றும்படிக்கு, அவர் அவர்களுக்கு நியாயப்பிரமாண உடன்படிக்கை எனும் தூண்டுகோலை வழங்கினார். ஆபிரகாமிடம் செய்யப்பட்ட உடன் படிக்கையில் பொதிந்திருந்த அந்த நம்பிக்கையை அவர்கள் தொடர்ந்து கைவிட்டு வந்தனர். குறைந்தபட்சம், அந்த நம்பிக்கையை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கேனும் இந்த நியாயப்பிரமாணம் உதவியது என்று சொல்லலாம்.

அவர்கள் தேவனை வெகு எளிதாக மறந்துவிட்டதால், அவர் **தம்மைக் குறித்து அவர்களுக்கு நினைப்பூட்டுவது** அவசியமெனக் கண்டு, "**நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள்**" **(யாத். 19:4)** என்று கூறினார். அவர்கள் தொடர்ந்து தேவ தயவில் நிலைத்திருப்பதற்கு, **அவரை மறக்காமல் இருப்பது** மிகவும் அவசியமாக இருந்த காரணத்தினால், அவர் அதனைப் பத்துக்கட்டளைகளின் முன்னுரையிலேயே பின்வருமாறு உட்புகுத்தியிருந்தார்: "**உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.**" **(யாத். 20:2; உபா. 5:6).**

ஆம் பிரியமானவர்களே! **நாம் தொடர்ந்து தேவனுடைய தயவில் நிலைத்திருக்க வேண்டுமானால், நாம் அவரை மறவாதிருக்க வேண்டும். நாம் எப்போதும் கர்த்தரை நமக்கு முன்பாக வைத்திருக்க வேண்டும்.** இதன் மூலமாகவே, நம்மால் "**உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக**" **(மத். 22:37)** என்பதின்படிச் செயல்பட முடியும்.

பூர்வகாலத்து இஸ்ரயேலர், தேவ தயவை வாஞ்சித்தவர்களாய், ஆர்வமாக "**கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்**" **(யாத். 19:8)** என்று உறுதி அளித்ததைக் கவனியுங்கள். ஆம்! அவர்கள் சகல ஜனங்களிலும் மேலாகத் தாங்களே தேவனுக்குச் சொந்த சம்பத்தாகவும், ஆசாரிய இராஜ்யமாகவும், பரிசுத்த ஜாதியாகவும் இருக்க விரும்பினார்கள் என்பது உண்மைதான். இருப்பினும், **மிகவும் முக்கியமான தேவ சித்தத்தைச் செய்யப் பிரியப்படுவதைப்பார்க்கிலும், அந்த இறுதி ஆசீர்வாதங்களின் / வெகுமதிகளின் (ultimates) மீதிருந்த ஆசையே அவர்களைக் கிரியைகளின் உடன்படிக்கைக்குள் உட்பிரவேசிக்கும்படிக்கு உந்தித்தள்ளியது.** ஒருவேளை அவர்கள் கடந்த காலங்களில் தங்களுக்குக் கிடைத்த அநேக வாய்ப்புகளையும் சிலாக்கியங்களையும், அவற்றுக்கேற்ப சரியாக ஜீவிக்காமல் படுதோல்வியடைந்ததையும் குறித்து ஒரு கணமேனும் நிதானித்துப் பார்த்திருந்தால், தங்களால் பலன்கொடுக்க முடியாமல் போனதை உடனே அவர்களால் உணர்ந்திருக்க முடியும்.

அவர்களோ "செல்லும் செலவைக் கணக்குப்பார்க்கவில்லை." இதன் விளைவு? இரட்டை / இருமடங்கு சாபமே மிஞ்சியது; எப்படியெனில், ஆதாமுக்குள் வந்த ஆதிகால ஆக்கினைத்தீர்ப்பு அவர்கள் மீது இன்னுமே காணப்பட்டது, அந்த ஆக்கினையிலிருந்து விடுதலையை வாக்களித்த நியாயப்பிரமாணம், அதைக் கைக்கொள்ளத் தவறியதால் அவர்களை இன்னுங்கூடுதலானதொரு ஆக்கினைக்குள்ளாகத் தள்ளியது. அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல், "**ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக்கண்டேன்**" என்றார் **(உரோ. 7:10).** **சீனாய் மலையில் இஸ்ரயேலர் செய்தது போன்ற ஓர் உடன்படிக்கைக்குள்ளாக நுழைவது என்பது, தேவ சித்தம் செய்வதற்கு முழு நம்பிக்கையோடு தன்னை ஒப்புக்கொடுப்பதையும்; அவ்வாறு செய்யத் தவறினால் சாபம் – அதாவது மரணம் – உண்டாகும் என்பதையுமே அர்த்தப்படுத்தியது.**

பிரியமானவர்களே, இதில் நமக்கான மிக முக்கியமானதொரு பாடம் உள்ளது. கல்வாரியின் மீட்பின் மேல் விசுவாசம் வைத்து, நாம் தற்காலிகமாக (tentatively)

நீதிமான்களாக்கப்பட்டுக் காணப்பட்ட ஒரு காலம் இருந்தது. ஆனால், கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட (?) பலரைப் போலவே, நாமும் நம்பேரில் காண்பிக்கப்பட்ட தேவ கிருபையையும், தேவ தயவையும் முழுமையாக மதித்துணரத் தவறினோம். கிட்டத்தட்ட அதை ஏதோ சாதாரண விஷயமாக எடுத்துக்கொண்டு, உலகத்தாரிடமிருந்து பெரிதும் வேறுபடாத ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து வந்தோம்.

அப்படிப்பட்ட நம்மை, தேவன் பல்வேறு அனுபவங்கள் மூலமாக, இந்த உலகமாகிய எகிப்திலிருந்து பிரித்தெடுத்தாரே! அதையும் நாம் மதித்துணரவில்லை; நம்மைத் தமது "**சொந்த சம்பத்தாகவும்**," "**ஆசாரிய இராஜ்யமாகவும், பரிசுத்த ஜாதியாகவும்**" மாற்ற சர்வவல்ல தேவன் தாமே நம்மோடு போராடி வந்தார் என்பதையும் கண்டுகொள்ளாதிருந்தோம். அவர் நம்மைச் சில அனுபவங்களுக்குள்ளாகக் கடந்துபோகச் செய்து, "**தேவ பர்வதத்தினிடத்தில்**" அழைத்து வந்து, நமக்காக அவர் செய்த எல்லா பலத்த செய்கைகளையும் அதிசயங்களையும் நம் இருதயங்களிலும் சிந்தைகளிலும் நினைத்துப் பார்க்க வைத்தது வரைக்குமே, நாம் அவருடைய பராமரிப்புகளுக்கு எதிராக முறுமுறுத்துக் கொண்டுதான் இருந்தோம் – "**நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டேன்**" **(யாத். 19:4)**.

அப்போது, நமது பரிசுத்தமாக்கப்படுதலே நம்மைக் குறித்த அவரது சித்தமாயிருக்கிறது என்பதை நமக்குத் தெரியப்படுத்தினார் – அவர் "**வாக்கை உள்ளபடி கேட்டு**," அவரது "**உடன்படிக்கையைக் கைக்கொள்வதற்கேதுவான**" முற்றும் முழுமையான சரணடைதலைக் குறித்துத் தெரியப்படுத்தினார்.

முதலில் இஸ்ரயேலர் சற்று நிதானித்து, செல்லும் செலவைக் கணக்குப் பார்த்திருக்க வேண்டும், ஆனால் செய்யவில்லை. ஆவிக்குரிய இஸ்ரயேலரில் பலரும்கூட அதே தவறைச் செய்கிறார்களோ என்றும், தேவ சித்தம் செய்வதை உயரிய சிலாக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் கருதுவதற்குப் பதிலாக, இறுதி ஆசீர்வாதங்களைப் பெற வேண்டும் என்கிற ஆசையில் ஒருவேளை தங்களை அர்ப்பணித்தார்களோ என்றும் நமக்குத் தோன்றுகிறது.

நம்மைப் பொறுத்தவரையில், **தேவனுடைய பரிபூரண சித்தம் செய்வதே நமது தலையாய நோக்கமாக எப்போதும் இருக்க வேண்டும்; கர்த்தராகிய இயேசுவே அவ்வாறுதான் ஜீவித்தார். அவருக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தில் (எபி. 12:2), சந்தேகத்திற்கு இடமின்றி திவ்விய சுபாவத்தின் மகிமைகளும் உள்ளடங்கும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை; எனினும் அந்த மகிமைகளைக் குறித்து சிந்திப்பது அவருடைய பிரதான நோக்கமாகவோ மாபெரும் சந்தோஷமாகவோ காணப்படவில்லை, மாறாக, தமது பிதாவின் சித்தம் செய்வதே அவரது பிரதான நோக்கமாகவும், எல்லாவற்றுக்கும் மேலான சந்தோஷமாகவும் காணப்பட்டது.**

தம்மைத் தேவனுக்கு அர்ப்பணித்தப்போது, இறுதிப் பலன்களைக் குறித்து எதுவும் அவர் குறிப்பிடவில்லை; மாறாக, ஆவியில் "**தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்**" **(எபி. 10:7, 9)** என்றுதான் அறிவித்தார். இவ்வாறு அவருமே முதலில் "**செல்லும்**

**செலவைக் கணக்குப்பார்த்துவிட்டுத்தான்,**" தேவனுடன் உடன்படிக்கை உறவுக்குள் உட்பிரவேசித்தார். இந்தப் பலியினாலான உடன்படிக்கைக்குள் நுழைய நினைத்திட்ட அனைத்து இஸ்ரயேலருக்கும்கூட அவர் தந்த புத்திமதி என்னவெனில், முதலில் சற்று நிதானமாகச் "**செல்லும் செலவைக் கணக்குப்பாருங்கள்**" என்பதே **(லூக்கா 14:26 – 33).** ஏனெனில், இந்த உடன்படிக்கைக்குள் நுழைவது என்பது சாதாரண விஷயமல்ல, மாறாக அதில் நமக்கு இரட்டை அபாயம், அதாவது இரண்டாம் மரணம் எனும் அபாயம் காணப்படுகிறது.

ஒருவேளை, நிழலான இஸ்ரயேலர், முதலில் உட்கார்ந்து செல்லும் செலவைக் கணக்குப்பார்த்திருந்தார்களேயானால், தேவனின் பரிபூரண நியாயப்பிரமாணத்தை தங்களால் கைக்கொள்ள இயலாது என்பதை உடனடியாக உணர்ந்திருப்பார்கள். அதோடுகூட, தங்கள் பூரணமற்ற கிரியைகளினால் கீழ்ப்படிகிறோம் என்று உறுதியளித்ததற்குப் பதிலாக, தேவன்பேரில் 'ஆபிரகாமுக்கு ஒப்பான விசுவாசத்தைக்' காண்பிக்கவே முயற்சி செய்திருப்பார்கள் – அந்த விசுவாசமே ஆபிரகாமை நீதிமானாக்கியது, அதுவே "**அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது!**" **(கலா. 3:6).**

இந்த விஷயத்தில், இஸ்ரயேலர் படுதோல்வி அடைந்திருந்தனர். தங்கள் அவிசுவாசத்தினாலும் கீழ்ப்படியாமையினாலும் அவர்கள் எப்போதும் மீறுதலுக்கு உள்ளானார்கள். இதனிமித்தமே தேவன் அவர்கள்மேல் நியாயப்பிரமாணத்தைச் சுமத்துவது அவசியமாயிற்று. ஆனால், இந்த "**உபாத்தியின்**" (schoolmaster / IRVTam – "ஆசிரியரின்") கீழும் அவர்கள் சரியாகப் பாடம் கற்றுக்கொள்ளவில்லை; கற்றிருந்தார்களேயானால், முதலில் தங்கள் பாவங்களின் கொடிய தன்மையைக் குறித்து உணர்வடைந்தவர்களாய், அவற்றிலிருந்து விடுதலையடைய என்ன செய்ய வேண்டும் என்று தேடியிருப்பார்கள். அந்தத் தேடலே அவர்களை மேசியாவாகிய இயேசுவிடம் வழிநடத்தியிருக்கும்; மேலும் அவரைப் புறக்கணிப்பதற்குப் பதிலாக, அவரை ஏற்றுக்கொண்டு இருந்திருப்பார்கள் (received and accepted).

இருப்பினும், என்னதான் இஸ்ரயேலரால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள இயலாவிட்டாலும்கூட, இந்த உடன்படிக்கையும் அதன் நியாயப்பிரமாணமும்தான் அவர்களை உலகின் மற்றனைத்து தேசங்களிலிருந்தும் தனியே பிரித்தெடுத்து வைத்தது. அதுபோலவே, என்னதான் நமது பலியினாலான உடன்படிக்கையில் பொதிந்து காணப்படும் மிகவும் பூரணமான அந்த அன்பின் பிரமாணத்தை நம்மால் பூரணமாகக் கைக்கொள்ள முடியாவிட்டாலும்கூட, இந்த உடன்படிக்கையே நம்மை இந்த உலகத்தின் அனைத்து வம்சங்களிலிருந்தும் தனியே பிரித்தெடுத்து வைக்கிறது.

நிழலான இஸ்ரயேலரில் காணப்பட்ட சிலர், அந்த நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் பிறந்திருந்தபோதிலும், அது கோரிய கிரியைகளினால் அல்லாமல், மாறாகத் தேவன் நீதியாக எண்ணிய விசுவாசத்தைச் செயல்படுத்தி, அதைப் பார்க்கிலும் மேலோங்கி நின்றார்கள். இந்தப் "**பழைய ஏற்பாட்டுப் பாத்திரவான்களைக்**" (**Ancient Worthies**) குறித்தே அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர் 11ஆம் அதிகாரத்தில், "**இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றவர்கள்**" என்று சொல்லியுள்ளார் **(எபி. 11:39).**

**நம்முடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாதபடிக்கு நம்மிடமுள்ள இயலாமையினால் நாம் பொறுமையிழந்தோ அல்லது சோர்ந்துபோகவோ கூடாது என்பதற்காகவே, பரிசுத்த ஆவி அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாக, இந்தப் பழைய ஏற்பாட்டுக்காலப் பாத்திரவான்களை நம் மனதில் வைக்கும்படிக்கு நம்மை வழிநடத்துகின்றது. அவர்களுடைய விசுவாசம், அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள், அவர்களுடைய ஜீவியங்கள் மற்றும் மனஉறுதி என்பவைகளை உற்றுநோக்கும்படிக்கு நாம் அறிவுறுத்தப்படுகிறோம்.** அவர்கள் விசுவாசத்தின் சாட்சிகளாக (இரத்தசாட்சிகளாக) விளங்கினார்கள், "**உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை**" (எபி. 11:38).

தேவன்மீது கொண்ட **விசுவாசத்தினால்** தூண்டப்பட்ட அவர்களின் நம்பிக்கையானது, பல்வேறு சோதனைகள் மற்றும் தோல்விகளுக்கு மத்தியிலும் அவர்களை நிலைநிறுத்தியதோடு கூட, அந்த மாபெரும் இரட்சகரும் ஆபிரகாமின் சந்ததியுமாகிய வாக்களிக்கப்பட்ட மேசியாவை எதிர்நோக்க வைத்தது. அவர்களது அந்த மேசியா கல்வாரியில் மரித்தபோதோ, அவர்கள் ஜீவன் அடையும்படிக்கான நீதிமானாக்கப்படுதலின் அஸ்திபாரமாக அவர் மாறினார் – இவரே அவர்களின் விசுவாசத்தின் சாராம்சமும், அதைத் தொடக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிறார். இது குறித்து, பாஸ்டர் ரசல் அவர்கள் (R4320:1) பின்வருமாறு கூறுகிறார்:

> "…நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு முன்பு காணப்பட்ட ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பலர் அதனோடு பிணைக்கப்பட்டவர்கள் கிடையாது; கல்வாரியில் ஆபிரகாமின் உடன்படிக்கை உறுதிப்படுத்தப்படும் வரைக்குமே, அவர்கள் முழுமையான அர்த்தத்தில் ஜீவனுக்கென்று நீதிமான்களாக்கப்படவில்லை. அவர்களின் விசுவாசமே அந்தப் பலியின் புண்ணியங்களில் (merits) பங்கு பெற அவர்களுக்குத் தகுதியளித்தது. சொல்லப்போனால், நியாயப்பிரமாண உடன்படிக்கை சிலுவையில் இரத்து செய்யப்படுவதற்கு முன்பிருந்த அந்த நியாயப்பிரமாண யுகம் முழுவதுமே, பழைய ஏற்பாட்டுக்காலப் பாத்திரவான்கள் காணப்பட்டுள்ளனர்; அவர்கள் தங்கள் சமகால ஜனங்களை விடவும் மேலானதொரு ஜீவியத்தை ஜீவித்தார்கள். அவர்கள் என்னதான் நியாயப்பிரமாணத்தோடு பிணைக்கப்பட்டிருந்தாலும், அதற்கும் மேலாய் அதற்கு முந்தைய கிருபையின் உடன்படிக்கையின் மீதே அவர்களுக்கு ஜீவனுள்ள விசுவாசம் காணப்பட்டது. கல்வாரி பலியின் புண்ணியம் விசுவாசிகளின் சார்பாகச் சமர்ப்பிக்கப்பட்டவுடனேயே, இவர்களும்கூட தெய்வீகப் பதிவுகளில், அக்கிருபையில் பங்கடைவதற்குத் தகுதியுள்ளவர்களெனச் சேர்க்கப்பட்டார்கள்… என்னதான் அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கை நடைமுறையில் காணப்பட்டபோது வாழ்ந்தாலும், அது முடிவுக்கு வரும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து, அதில் நம்பிக்கை வைக்காமல், அதைப் பார்க்கிலும் மேலான கிருபையின் உடன்படிக்கையிலேயே நம்பிக்கை வைத்தார்கள்…"

இதன் காரணமாகவே அப்போஸ்தலனாகிய பவுல் பின்வருமாறு கூறுகிறார்:

**எபி. 12:1, 2 – "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் தொடக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை**

**நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.**"

**இப்படியாக நாம் நமது உடன்படிக்கையை மீறாமல் கைக்கொள்வதில் தோல்வியடையும் சமயங்களில், விசுவாசம் நம்மை நீதிமான்களாக்கும் என்பதை இதன் மூலம் புரிந்துகொள்ள முடிகின்றது!** **இருப்பினும்**, இது எப்போது சாத்தியமென்றால் – நாம் தேவனுடைய கிருபைக்குத் தகுதியற்றவர்கள் என்பதையும், அவருடைய பரிபூரண சித்தத்தைச் செய்ய (அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ள) நமக்குத் திராணியில்லை என்பதையும் அடையாளங்கண்டுகொண்டு, இயேசுவை **நம் விசுவாசத்தின்** அரணாக நாம் பற்றிப் பிடித்திருக்கும் வரை மட்டுமே இது சாத்தியமாகும்.

பழைய ஏற்பாட்டுக்காலப் பாத்திரவான்களால் நியாயப்பிரமாணத்தைக் **கைக்கொள்ள** முடியாவிட்டாலும், **விசுவாசத்தினிமித்தம்** அது அவர்களில் நிறைவேற்றப்பட்டதாக எண்ணப்பட்டது. அதாவது, அவர்கள் **விசுவாசத்தினால்** நீதிமான்களாக்கப்பட்டார்கள். நாமும் நம்முடைய உடன்படிக்கையை மீறாமல் **கைக்கொள்ள** இயலாதவர்களாக இருந்தாலும், அதன் நீதி நமக்குள்ளே **நிறைவேறினதாக** எண்ணப்படுகிறோம் **(உரோமர் 8:4).** அன்பே தேவனுடைய (நியாயப்)பிரமாணமாக இருக்கிறது; அது "**இதைச் செய்யாதே**" ("thou shalt nots") என்ற எதிர்மறை கட்டளையாக இருந்தாலும் சரி, அல்லது "**இதைச் செய்**" ("thou shalts") என்ற நேர்மறை கட்டளையாக இருந்தாலும் சரி, நம்மால் அதனைக் கைக்கொள்ள (keep) முடியாது. இருப்பினும், அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்! கிறிஸ்து இயேசுவில் நமக்காக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய கிருபையின் மூலம் இப்போது நம்மால் அதை நிறைவேற்ற (fulfil) முடிகிறது. **(உரோமர் 13:10).**

இது குறித்து பாஸ்டர் ரசல் அவர்கள் (R4442:5) பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

> "கிறிஸ்துவுக்கோ அந்த மூல உடன்படிக்கையோடுகூட நியாயப்பிரமாணமும் '**கூட்டப்பட்டது**'; மேலும் அவர் அந்த நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்ததன் மூலம் அதைச் சுதந்தரித்துக்கொண்டார். இப்போது அவர் நம்முடைய விசுவாசம் மற்றும் நம்மால் முடிந்தளவிலான கீழ்ப்படிதல் என்பவைகளின் அடிப்படையில், நியாயப்பிரமாணத்திற்கு அப்பாற்பட்டும், தனியேயும் நம்மை ஏற்றுக்கொண்டு வருகிறார். நாம் மாம்சத்தின்படி நடவாமல், நியாயப்பிரமாணத்தின் ஆவியின்படி (spirit of the law) நடக்கும்போது, நியாயப்பிரமாணத்தின் நீதி நமக்குள்ளே நிறைவேறினதாகவே கணக்கிடப்படுகிறது; ஏனெனில், நமக்கு ஒருவேளை பரிபூரண திராணி இருந்தால், நாம் தெய்வீகப் பிரமாணத்தைப் பூரணமாகக் கைக்கொள்வோம் என்பதையே இதன் மூலமாக நாம் நிரூபித்துக் காண்பிக்கிறோம். கிறிஸ்துவின் சரீர அவயவங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நாமோ பலியினாலான ஓர் உடன்படிக்கைக்குள்ளாக உட்பிரவேசித்திருக்கிறோம், அதன்படி நாம் நமது பூமிக்குரிய சுபாவத்தைப் பலிசெலுத்தி, நம்முடைய இருதயத்திலும், சித்தத்திலும், இயன்ற எல்லா கிரியைகளிலும், நம்முடைய மீட்பரின் சாயலடைய (copies) பிரயாசப்பட்டு வருகிறோம்.

இவ்வாறு நாம் சோதிக்கப்பட்ட பிறகு, நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், தேவன் நம்மை முழுமையாக ஏற்றுக்கொண்டு, நம் மீட்பருடையதைப் போன்ற ஆவிக்குரிய சரீரங்களை நமக்குத் தந்தருளுவார். இவ்வாறாக, நாம் கிறிஸ்துவுக்குள்ளான புதுச் சிருஷ்டிகளாக, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகவும், அந்த மாபெரும் மத்தியஸ்தரின் – அந்த மாபெரும் தீர்க்கதரிசியின், அந்த ஆசாரியரும், இராஜாவும், நியாயாதிபதியுமானவரின் – சரீர அவயவங்களாகவும் இருப்போம்; இவரே தம்முடைய ஆயிரமாண்டு அரசாட்சியின்போது, தமது இரத்தத்தினால் முத்திரிக்கப்பட்ட புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையின் கீழாக, பூமியில் நீதியை நிலைநாட்டுவார்; அதோடுகூட மனவிருப்பத்துடனும் கீழ்ப் படிதலுடனும் காணப்படும் மனுஷரைப் பாவம், சீர்கேடு மற்றும் மரணத்திலிருந்து தூக்கியெடுத்து, தேவனுடன் ஒப்புரவாக்கி நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு நேராய் வழிநடத்துவார்.

எந்த உடன்படிக்கையின் கீழாக இராஜரிக ஆசாரியக்கூட்டமாகிய முதற்பேறான வர்களின் சபை நீதிமான்களாக்கப்படுகிறது? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. நம்முடைய பதில்: எந்த உடன்படிக்கையின் கீழும் கிடையாது என்பதே. ஆபிரகாமைப் போலவே நமது நீதிமானாக்கப்படுதலும் விசுவாசத்தினாலேயே உண்டாகிறது. ‘**ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது. … அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்கு மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப் படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.’” (உரோ. 4:3, 23 – 25)**

# பாகம் எட்டு

## யாத்திராகமம் 20:2 - 32:5

**[பெரிய ஆதார வசனப்பகுதி என்பதால், வாசகர்கள் தங்கள் வேதாகமத்தில் இதனை வாசிக்கும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.]**

இஸ்ரயேலர் எகிப்து தேசத்தில் பார்வோனின் பொல்லாத ஆளுகையின்கீழும் அவனது கொடூரமான ஆளோட்டிகளின்கீழும் காணப்பட்டபோதே தேவன் அவர்களை விசேஷித்த வகையில் கையாண்டார் என்று சொல்லலாம். தங்களுடைய பிதாக்களின் பாவத்தினிமித்தமே இஸ்ரயேலர் எகிப்திற்குள் செல்ல நேர்ந்த காரணத்தினால், அவர்களை மீட்க வேண்டிய எந்தக் கட்டாயமும் / நிர்ப்பந்தமும் தேவனுக்கு இருக்கவில்லை. இருப்பினும், தேவன் அவர்கள் மேல் மனதுருகி, அவர்களைப் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின்கீழ் கொண்டுவரச் செய்ததன் மூலம் அவர்களை விடுவித்து, இப்படியாக தமது மாபெரும் அன்பையும் பராமரிப்பையும் வெளிப்படுத்திக் காண்பித்தார். பின்னர், அவர்களது சகல அனுபவங்களையும் மேற்பார்வைசெய்து, அவற்றைத் தம்மிடம் இன்னும் நெருங்கிச் சேருவதற்கான தெய்வீகப் பராமரிப்புகளாக மாறப்பண்ணினார். ஒருவேளை, அவர்கள் அந்தக் கிருபையையும் தயவையும் அடையாளம் கண்டுகொண்டு, அதன் மதிப்பை உணர்ந்திருந்தார்களேயானால், அது அவர்கள் இருதயங்களில், "**நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாகிய**" விசுவாசத்தை உண்டுபண்ணியிருக்கும்; தேவ சித்தத்திற்கு இன்னும் கண்டிப்பான கீழ்ப்படிதலைக் காண்பிப்பதற்கு நேராய் அவர்களை நகர்த்தியிருக்கும். அப்படி அவர்கள் கீழ்ப்படியும்போது, அது அவர்களை மெய்யாகவே தேவனுக்கென்று பிரித்தெடுத்து வைத்திருக்கும், அவர்களும் "**சகல ஜனங்களிலும் அவருக்குச் சொந்த சம்பத்தாய்**" (**peculiar treasure**) காணப்பட்டிருப்பார்கள்.

இருப்பினும், நடந்ததோ வேறு! இராமசேஸ், சுக்கோத்து, ஏத்தாம், பிககிரோத்து, செங்கடலின் கிழக்குக் கரை, மாரா, ஏலிம், சீன் வனாந்தரம், ஆலூஸ், தொப்கா அல்லது ரெவிதீம் என எந்த அனுபவமுமே அவர்களுக்குள் இந்த ஏற்புடைய விசுவாசத்தை விழித்தெழச் செய்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தம் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ மாட்டார்களோ என்பதைக் காணும்படிக்கு அவர்களைத் தாம் சோதிப்பதாகத் தேவன் அவர்களுக்கு அநேக சந்தர்ப்பங்களில் நினைப்பூட்ட வேண்டியிருந்தது. இருப்பினும், அவர்கள் தேவனை மறந்து, அவரது கிருபையான பராமரிப்புகளுக்கு எதிராக முறுமுறுக்கவே செய்தார்கள். இறுதியாக, அவர் அவர்களைத் தேவ பர்வதமாகிய சீனாய் மலைக்கு அழைத்து வந்து, "தேவ சித்தம் செய்யும்படிக்குத் தங்களைத் தத்தம் செய்வதே அவர்களைக் குறித்த தமது சித்தமாக இருக்கிறது" என்பதைத் தெளிவாய் அறிவித்தார். அவர்களும் "**கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்**" **(யாத். 19:8)** என்று பதிலளித்தனர்.

இங்கேயுள்ள மிகத் துல்லியமான இணையைக் (parallel) கவனியுங்கள்! ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நம்பேரிலான தேவனுடைய வழிநடத்துதலும்கூட, நாம் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனமாகிய எகிப்தில் காணப்பட்டபோதே தொடங்கிவிட்டது எனலாம்.

நாமும் நம் பிதாக்களின் பாவங்களினிமித்தமே அங்கே பிறந்தோம். அதிலிருந்து நம்மை மீட்க வேண்டிய எந்தக் கட்டாயமோ / நிர்ப்பந்தமோ தேவனுக்கு இருக்கவில்லை. இருப்பினும், தேவன் நம்பேரில் மனதுருகி, நம்மை நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின்கீழ் கொண்டுவரச் செய்ததன் மூலம் ஆதாமுக்குரிய பாவ ஆக்கினையிலிருந்து நம்மை விடுவித்து, இப்படியாக தமது மாபெரும் அன்பையும் பராமரிப்பையும் வெளிப்படுத்திக் காண்பித்தார். பின்னர், நம்முடைய சகல அனுபவங்களையும் மேற்பார்வைசெய்து, அவற்றை நாம் அவரிடம் இன்னும் நெருங்கிச் சேருவதற்கான தெய்வீகப் பராமரிப்புகளாக மாறப் பண்ணினார்.

தேவனை நாம் நம்முடைய இரட்சகராக அங்கீகரித்திருந்தாலும், அவருடைய கிருபையையும் தயவையும் நாம் மதித்துணர்ந்ததாகத் தெரியவில்லை; ஏனெனில் நமக்குள் அப்போது "**நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாகிய**" அப்பேர்ப்பட்ட விசுவாசம் எழும்பியிருக்கவில்லை; ஆம்! நம்மைப் பற்றிய தேவ சித்தம் என்ன என்பதை நிதானித்துப் பார்க்கவும், பின்னர் அதற்கு இன்னும் கண்டிப்பான கீழ்ப்படிதலைக் காண்பிக்கவும் ஏதுவாக நம்மை உந்தித்தள்ளக்கூடிய அப்பேர்ப்பட்ட விசுவாசம் நமக்குள் எழும்பியிருக்கவில்லை. ஒருவேளை அத்தகைய கீழ்ப்படிதலை நாம் காண்பித்திருந்தால், அது நம்மை உண்மையிலேயே உலகத்திலிருந்து பிரித்தெடுத்து, "**சகல ஜனங்களிலும் அவருக்குச் சொந்த சம்பத்தாகவும்**," "**ஆசாரிய இராஜ்யமாகவும், பரிசுத்த ஜாதியாகவும்**" மாற்றியிருக்குமே!

இருப்பினும், இராமசேஸ், சுக்கோத்து, ஏத்தாம், பிககிரோத்து, செங்கடலின் கிழக்குக் கரை, மாரா, ஏலிம், சீன் வனாந்தரம், ஆலூஸ், தொப்கா, ரெவிதீம் போன்ற இடங்களில் நமக்கு ஏற்பட்ட எந்த அனுபவங்களுமே நம்மிடம் இந்த விசுவாசத்தை விழித்தெழச் செய்ததாகத் தெரியவில்லை. இறுதியாக தேவன் நம்மையும் ஒரு சீனாய்க்கு – "**தேவ பர்வதத்திடம்**" - கொண்டு வந்தார்; அங்கே அவர் தமது மேற்பார்வைகள் அனைத்தையும் நமக்கு நினைப்பூட்டி, நம்மைக் குறித்துள்ள அவர் சித்தம் என்ன என்பதை, அதாவது நமது பரிசுத்தமாக்கப் படுதலைக் குறித்து (sanctification) தெளிவாய் அறியச் செய்தார். அங்கே நாமும் "**கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்**" என்று பதிலளித்தோம். (R4029:1 – ஆம் பக்கத்தைக் காண்க)

இந்த இணையான காரியங்களைக் காணும்போது, "**இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது**" **(1 கொரி. 10:11)** என்பதை நாம் மனதில் வைப்பது நலமாயிருக்கும். ஆகையால், அவிசுவாசம் மற்றும் கீழ்ப்படியாமை எனும் அதே தவறுகளுக்குள்ளாக நாமும் விழுந்துவிடாதபடிக்கு, கவனமாய் ஜெபத்தோடு பிரயாசப் படுவோமாக.

* * * * * * * * * *

இஸ்ரயேலர் தாங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுப்போம் என்றும், அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்வோம் என்றும், கர்த்தருக்குத் தங்களை

முழுதத்தம் செய்வதற்கு விருப்பமுள்ளவர்களாய் இருக்கிறோம் என்றும் அறிக்கை செய்த பிறகு **(யாத். 19:8),** மோசே அந்த உடன்படிக்கையின் கண்ணுக்குப் புலப்படக்கூடிய ஆதாரமாகவும், அவர்களைக் குறித்த தேவனுடைய சித்தமாகவும் விளங்கிய கற்பலகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக "**தேவ பர்வதம்**" மேல் ஏறிப்போனார் **(யாத். 24:12; 31:18).**

அவர் இந்தக் கற்பனைகளையும் **(யாத். 20:1 – 17)**, பல்வேறு பிரமாணங்கள் முதலியவற்றையும் **(யாத். 20:23 – 26; 21:1 – 36; 22:1 – 31; 23:1 – 33)** ஏற்கெனவே ஒரு புத்தகத்தில் எழுதியிருந்தார் **(யாத். 24:4)**. தகுந்த சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்திய பிறகு, அந்த இரத்தத்தை எடுத்து பலிபீடத்தின்மேல் தெளித்து, **அந்த (உடன்படிக்கையின்) புத்தகத்தை ஜனங்களின் காதுகேட்க வாசிக்கவும் செய்தார்**. **"கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம்" (யாத். 24:7)** என்கிற தங்கள் அர்ப்பணிப்பை அவர்கள் அங்கே மீண்டும் உறுதிப்படுத்தினார்கள். அப்போது மோசே பலிகளின் மீதமுள்ள இரத்தத்தை எடுத்து, புத்தகத்தின்மேலும் ஜனங்கள் அனைவர்மேலும் தெளித்து **(யாத். 24:8; எபி. 9:19)**, **"இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே"** என்று கூறினார். **(யாத். 24:5 – 8).**

இப்படியாக மலைக்குச் சென்ற மோசே, அங்கே நீண்ட காலம் – "**நாற்பதுநாள் இரவும் பகலும்**" – தங்க நேர்ந்தது. **(உபா. 9:9)**. அவர் ஏன் இவ்வளவு காலம் அங்கே காணப்பட்டிருக்க வேண்டும் என்ற கேள்வி இங்கே நமக்கு எழுகிறது. ஏனெனில், இந்தச் சமயத்தில்தான், மோசே "**நியாயப்பிரமாணப் பலகைகளைப்**" பெற்றுக்கொண்டதோடுகூட, ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பு, அதன் ஆசாரியத்துவம், அதன் பலிகள், அதன் ஆசரிப்புகள் சம்பந்தப்பட்ட அற்புதமான வழிகாட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார். **(யாத். 25:1 – 30:10).** **சாதாரணமாகவே, நாம் ஆசரிப்புக்கூடாரத்தைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள வேண்டுமானால், நமக்கு அநேக ஆண்டுகள் தேவைப்படும், அப்படி அறிந்துகொண்டாலும் நம்மில் எத்தனை பேர் அதின் எல்லா விவரங்களையும் உண்மையில் நினைவில் வைத்திருப்போம் என்பது கேள்விக்குறியே?!** அங்கேயோ அந்த நாற்பது நாட்களுக்குள்ளாக மோசே இவற்றையெல்லாம் மனதில் பதிய வைக்க வேண்டியிருந்தது; அவரிடம் எந்தக் கட்டிட வரைபடங்களோ (blueprints), அறிவுறுத்தல் கையேடோ (manual of instructions) அல்லது "**விசேஷித்த பலிகளின் ஆசரிப்புக்கூடார நிழல்கள்**" (Tabernacle Shadows of the Better Sacrifices) என்ற புஸ்தகத்தின் பிரதியோ கொடுக்கப்படவில்லை; மாறாக … மாறாக, "**மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு**" **(எபி. 8:5)** என்று மாத்திரமே சொல்லப்பட்டது!!!

இயேசுவின் பூமிக்குரிய ஜீவியத்தை ஏதோ சாதாரணமாகச் சிந்தித்துவிட்டுக் கடந்து போவதன் மூலமாக, நம்மால் அவருடைய மகத்துவமான குணாதிசயத்தின் மதிப்பினைப் பற்றிய உண்மையான புரிதலைப் பெற்றுக்கொள்ள முடியாது, வேண்டுமானால் இந்தப் பூமிக்குரிய ஜீவியத்தில் அவரைப் போல நடப்பதற்கு (imitate) முயற்சிக்கலாம்; அதற்கும்கூட அவரைப் பற்றிய முழுமையான புரிதல் தேவைப்படுகிறது! தேவனால் ஆவிக்குரிய மலைக்கு அழைக்கப்பட்டு, அங்கே மகிமைவாய்ந்த அந்தப் பரம "**மாதிரியை**" (கிறிஸ்துவை) பார்ப்பதன் மூலமாக மாத்திரமே நம்மால் அவரை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். இதற்காகவே,

மலையில், கிறிஸ்துவின் குணாதிசயத்தின் உண்மையான தரிசனமும், இந்தத் தெய்வீக (முன்)மாதிரியின்படியே நமது பூமிக்குரிய கூடாரங்களை எப்படி வடிவமைத்துக்கொள்வது என்பதற்கான வழிகாட்டுதல்களும் நமக்கு வழங்கப்படுகின்றன.

பூர்வகால ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியைப் பெற்றுக்கொள்வதற்கும், அதனை என்றும் அழியாதபடிக்குத் தன் மனதில் பதிய வைப்பதற்கும், அந்த நாற்பதுநாள் இரவும் பகலும், அவர் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் காணப்பட வேண்டியது அவசியமாக இருந்தது **(உபா. 9:9)**. அதுபோலவே, நாமும் பரத்திற்குரிய காரியங்களைத் தியானிக்கும் போதும்சரி, அசைபோட்டுப் பார்க்கும்போதும்சரி, அந்தப் பரம தரிசனங்களைப் புரிந்துகொள்வதற்குத் தடையாக நாம் எந்தவொரு பூமிக்குரிய சூழ்நிலைகளையோ மாம்சீக தேவைகளையோ அனுமதித்துவிடக் கூடாது. **தேவ சமுகத்தின் முன்பாக, நாம் நம்மையே மறக்க வேண்டும்**, ஆம், "**இனி நான் அல்ல, தேவனே செயல்படட்டும்!**" (let go and let God!) என்று சொல்பவர்களாய்க் காணப்பட வேண்டும்.

* * * * * * * * * *

**யாத். 32:1 – "மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள்."**

மனித இருதயம் எத்துணை திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது! **(எரே. 17:9)**. இஸ்ரயேலர் இதற்குக் கொஞ்சம் முன்பு தான், தாங்கள் தேவனுடைய தெய்வீகச் சித்தத்திற்குக் "**கீழ்ப்படிவோம்**" என்று சொல்லித் தங்களை முழுதத்தம் செய்வதாக உறுதி கொடுத்திருந்தார்கள் **(யாத். 24:7)**. கடந்த காலங்களில், அவர்கள் தேவனை மறந்ததும், அவருடைய பராமரிப்புகளுக்கு எதிராக முறுமுறுத்ததும்கூட மோசமான காரியம்தான் என்றாலும், இங்கே அவர்கள் வேண்டுமென்றே (deliberately) அவரைக் கைவிட்டது போல் தெரிகிறது. தேவன் அவர்களிடம் முன்கூட்டியே "**மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" (யாத். 20:4)** என்று சொல்லி இருந்தார். இப்படியாக, அவர்கள் அவருடைய உடன்படிக்கையைப் புறக்கணித்து அவருடைய கட்டளையை மீறியபோது, அவர்கள் ஏதோ தேவனை **முற்றிலுமாகவே உதறிவிட** (abandon) துணிந்தார்கள் என்று நாம் கருத வேண்டிய அவசியமில்லை, மாறாக அவர்கள் அவரைக் **கைவிடவே** (forsake) செய்தனர்.

அதுவரை யேகோவா தேவனுடைய புயம் மற்றும் வல்லமையின் கண்ணுக்குப் புலப்படும் பிரதிநிதியாக மோசே காணப்பட்டு வந்தார். இஸ்ரயேலரைப் பொறுத்தவரையில், பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை வெளியே கொண்டுவந்ததும் மோசேதான்; தங்களைச் செங்கடல் வழியாக அழைத்து வந்ததும் மோசேதான்; மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக்கியதும் மோசேதான்; ஏலிமின் அமைதியான ஓய்விடத்திற்குத் தங்களை

வழிநடத்தியதும் மோசேதான்; அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து ஜீவத்தண்ணீரைப் புறப்பட வைத்ததும் மோசேதான்; அமலேக்கியருக்கு எதிரான போரில் மலையின் மேல் தங்களுக்காக இடைப்பட்டு, வெற்றி அடையச் செய்ததும் மோசேதான்! அவர்கள் அவ்வாறே நினைத்துக் கொண்டு இருந்தனர்! இப்போதோ (மோசே அங்கே காணப்படாத இந்தச் சமயத்தில்), தங்கள் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் தயவுகளுக்கும் உண்மையான மூலாதாரமாக இருந்திட்ட **கண்ணுக்குத் தெரியாத** தேவன் மீதுள்ள விசுவாசத்தை நிரூபிப்பதற்கான நேரம் வந்தது.

(குறைந்தபட்சம்) மோசே அவர்களிடையே இருந்த வரையிலாவது, அவர் அவர்களின் கவனத்தை எப்போதும் தேவன்பக்கமே திருப்பிவந்தபடியால், அவர்களால் தேவனை நினைவுகூர முடிந்தது மற்றும் அவ்வப்போது நினைவுகூரவும் செய்தனர். ஆனால், தொடர்ந்து இதேமாதிரி சூழல் நிலவினால், ஆபிரகாமை நீதிமானாக்கிய அப்பேர்ப்பட்ட விசுவாசம் அவர்களில் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பில்லாது போகும். ஆகையால், கண்ணுக்குத் தெரிந்த அந்த ஊன்றுகோல் (மோசே) முதலில் அகற்றப்பட வேண்டியிருந்தது; இதன் மூலமாக அவர்கள் கண்ணுக்குத் தெரியாத அந்தத் தெய்வீகப் புயத்தின் மீது (எந்த ஊன்றுகோலும் இல்லாமல் நேரடியாக) சார்ந்து நிற்க வாய்ப்பளிக்கப்பட்டது: ஏனெனில், விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியாக இருப்பது மாத்திரமல்லாமல், அது "**காணப்படாதவைகளின் நிச்சயமுமாய்**" இருக்கிறது **(எபி. 11:1)**. அதற்கேற்ப, மோசே அவர்களுடைய முன்னிலையிலிருந்து நீக்கப்பட்டு, தேவனுடைய மலைக்கு மேலே கொண்டு செல்லப்பட்டார்.

"**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்**" **(யோவான் 4:24)** என்பதை நாம் இங்கே மனதில் வைக்க வேண்டும். இத்தகைய விஷயங்களில் தேவன் மிகுந்த வைராக்கியமுள்ளவராக இருக்கிறார். தமக்குச் சேர வேண்டிய ஆராதனைக்கும் துதிக்கும் தடையாக எவர் ஒருவரோ அல்லது எது ஒன்றோ நின்றாலும், அவர் அதை பொறுத்துக்கொள்ள மாட்டார். இதை அவரே எவ்வளவு ஆணித்தரமாக அறிவித்திருக்கிறார் என்பதை பின்வரும் வசனங்களில் நம்மால் கவனிக்க முடிகிறது:

**யாத். 20:2 – 5: "உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் <u>எரிச்சலுள்ள தேவனாயிருந்து</u> (jealous God ), என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்."**

மீண்டுமாக,

**ஏசா. 42:8 – "நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்."**

விக்கிரகங்களும் சொரூபங்களும், அவை செதுக்கப்பட்டவையாக இருந்தாலும்சரி

அல்லது வேறு எவ்வகையுடையதாய் இருந்தாலும்சரி, எல்லா நேரங்களிலும் அவை வழிபாட்டுப் பொருட்களாகக் கருதப்படுவதில்லை. பெரும்பாலும் அவை மனித மனம் ஊன்றி நிற்க விரும்பும் ஓர் “ஊன்றுகோலாக” மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அவை தேவனுக்குப் பிரியமான விசுவாசத்தினை வளர்ச்சியடையச் செய்வதற்கு ஒருபோதும் உகந்ததாக இருந்ததுமில்லை, இருப்பதுமில்லை, இருக்கப்போவதுமில்லை; ஏனெனில், அவை விசுவாசத்தின் அடிப்படை அம்சங்களையே அழித்துவிடக்கூடியவையாக இருக்கின்றன. **(எபி. 11:1)**

மோசேயை அவர்கள் நடுவிலிருந்து அகற்றியதன் மூலம், தேவன் இஸ்ரயேலருக்குத் தங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்துவதற்கும், அதன் மூலம் அதை நிரூபிப்பதற்குமான ஒரு வாய்ப்பினை அளித்தார். எப்பேர்ப்பட்ட ஒரு சிலாக்கியம்! ஆனால், அவர்கள் அதற்குத் தகுந்தபடி வாழ்ந்தார்களா? அதுதான் இல்லை! ஆவிக்குரிய இஸ்ரயேலரும் அவர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதே நிதர்சனம் [**குறிப்பு**: வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், ஆவிக்குரிய இஸ்ரயேலரும் மாம்சீக இஸ்ரயேலரைப் போலவே நடந்துகொள்கிறார்கள்].

இந்த யுகத்தின் தொடக்கத்திலும் அப்போஸ்தலர்கள் சபையுடன் காணப்பட்டு, அவர்களது கவனத்தை எப்போதும் தேவன் பக்கமே திருப்பிக்கொண்டிருந்தனர். இங்கேயும், அப்போஸ்தலர்கள் இல்லாமல்போன காலமொன்று வந்தது; அப்போது அவர்கள் அறிக்கை செய்த அந்தக் கண்ணுக்குத் தெரியாத தேவன் மீதான விசுவாசத்தைச் செயல்படுத்திக் காண்பிப்பதற்கான வாய்ப்புகள் சபைக்குக் கிடைத்தன; ஆனால், நிழலான இஸ்ரயேலைப் போலவே, ஆவிக்குரிய இஸ்ரயேலும் “**எங்களுக்குத் தெய்வங்களை உண்டுபண்ணும்**” என்று சத்தமிட்டது.

> “அந்தோ! அந்தோ! மனித வரலாற்றில் இது எப்போதும் நடந்து வருகிற காரியமாக உள்ளது. மனித இருதயம் கண்ணால் பார்க்கக்கூடிய ஒன்றையே விரும்புகிறது; அது தன் புலன்களைத் திருப்திப்படுத்தும் காரியங்களையே விரும்புகிறது. “**அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருப்பது**” **(எபி. 11:27)** என்பது விசுவாசத்தினால் மட்டுமே முடிகிற காரியமாகும். எனவே, ஒவ்வொரு யுகத்திலும் மனிதர்கள் மெய்யான தேவனுக்குப் பதிலாக போலி தெய்வங்களை உருவாக்கி அவற்றின் மீது சாய்ந்து நிற்கவே முனைந்துள்ளனர். இப்படியாகவே, சீர்கெட்டுப் போன மதங்களின் பற்பல போலிகள் நம் கண்களுக்கு முன்பாகப் பெருகியிருக்கக் காண்கிறோம். தேவ வார்த்தையின் அதிகாரத்தின்படி, இன்ன இன்னது தெய்வீக மற்றும் பரலோக யதார்த்தங்கள் என்று சொல்லப்பட்டுள்ள காரியங்களை, பெயர்ச் சபையானது பூமிக்குரிய போலிகளாக மாற்றி வைத்துள்ளது. கண்ணுக்குத் தெரியாத புயத்தைச் சார்ந்திருப்பதிலும், கண்ணுக்குத் தெரியாத பலியில் நம்பிக்கை வைப்பதிலும், கண்ணுக்குத் தெரியாத ஆசாரியரை அணுகுவதிலும், கண்ணுக்குத் தெரியாத தலைவரின் வழிகாட்டுதலுக்குத் தன்னை ஒப்புக்கொடுப்பதிலும் சலிப்படைந்த அந்தச் சபை, இத்தகைய போலிகளை தானே ‘உண்டாக்கத்’ தொடங்கியது; இவ்வாறு, காலங்காலமாக, அது தன் கையில் ‘**சிற்பக்கருவியைப்**’ பிடித்துக்கொண்டு, ஒன்றன்பின் ஒன்றாகச் செதுக்கி உருவாக்கி, அதனைப் பின்பற்றி

வருகின்றது. எப்படி ஒரு '**வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கும்**,' இஸ்ரயேலின் தேவனுக்கும் இடையே எந்தவொரு சம்பந்தமும் (similarity) இல்லையோ, அதேபோல நாம் வாசிக்கும் வேத வார்த்தைகளுக்கும் நம்மைச் சுற்றியுள்ள காரியங்களுக்கும் இடையே எந்தவொரு சம்பந்தமும் (similarity) இல்லை என்பதை நம்மால் தேவ கிருபையில் இறுதியாக அடையாளங்காண முடிந்தது." (**Charles Henry Mackintosh Commentary**)

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, பூர்வகால இஸ்ரயேலருக்கு மோசே நீண்ட காலமாகவே ஓர் ஊன்றுகோலாக இருந்து வந்தார். இப்போது அந்த ஊன்றுகோல் அவர்கள் மத்தியிலிருந்து நீக்கப்பட்டவுடன், தேவன் மீது சரியான விசுவாசத்தைப் பயிற்றுவிப்பதற்குப் பதிலாக, அவர்கள் மற்றொரு ஊன்றுகோலுக்காகச் சத்தமிடலாயினர். இது தேவனுடைய பராமரிப்புகளுக்கு எதிரான வெளிப்படையான ஒரு கலகம் என்பதை அவர்கள் உணரத் தவறினார்கள். இப்படிப்பட்டவர்களால் அவருடைய "**சொந்த சம்பத்தாக**" எப்படி மாற முடியும்?

அடுத்து, அவர்கள் ஆரோனிடம் முறையிட்டதைக் கவனியுங்கள்! இவரும் ஓர் ஊன்று கோலாகக் காணப்பட்டார்! எப்படியெனில், மோசே தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீதான முழு விசுவாசத்தோடு அடுத்த அடியை எடுத்து வைக்க முடியாமல் போனபோது, அவருக்குத் துணையாக இருக்கும்படிக்கு அனுப்பப்பட்டவரே இந்த ஆரோன்! **யாத். 3:11,12; 4:10 – 17** ஆகிய வசனங்களைப் பார்க்கவும். பின்னாட்களில் மோசே ஆரோனைச் சார்ந்து இருக்க வில்லை. இருப்பினும் இந்தச் சமயத்தில் ஆரோன் அங்கே காணப்பட்டது இஸ்ரயேலரைச் சோதிக்கும்படியான ஒரு சோதனையாக வைக்கப்பட்டது. உடனே எதிராளியானவன் அந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதைக் கவனியுங்கள்:

**யாத். 32:2 – 4 – "அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரயேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள்."**

மனித இருதயம் எவ்வளவு தந்திரமானதும் வஞ்சிக்கக்கூடியதுமாய் இருக்கிறது! **இங்கு நம்மை நாம் நிதானித்துப் பார்ப்பதே சரியாக இருக்கும்.** கண்ணுக்குத் தெரியாமல் எப்போதும் நம்மோடு இருக்கிற தேவன் மீதுள்ள விசுவாசத்தின் மூலம், நாம் கிருபையிலும் தயவிலும் வளர வேண்டும் என்பதற்காக, அவர் அநேக நேரங்களில் நமது "**ஊன்றுகோல்களை**" நம்மிடருந்து அகற்றிவிடுகின்றார். ஆனால் நாமோ, அதனிமித்தம் உண்டான வெற்றிடத்தை நிரப்பும்படிக்கு, வேறு புதிய ஊன்றுகோல்களோ, விக்கிரகங்களோ செதுக்கப்பட்ட சொரூபங்களோ வேண்டும் என்று கலகம் செய்து கூக்குரலிடுகிறோம். **ஆனால், ஒன்றை மாத்திரம் உறுதியாகச் சொல்ல முடியும்**, என்னவெனில், **நம் இருதயத்தின் இப்படிப்பட்ட கூக்குரலுக்குப் பதிலளிக்கும் விதமாக, நமக்காக "பொன் கன்றுக்குட்டிகளை" உருவாக்கித்தரும், சில "தேவ ஊழியர்கள்" (அப்படிப்பட்டவர்களை தேவ ஊழியர் என்று சொல்ல முடியுமா என்பது கேள்விக்குறியே!) எப்போதும் இருக்கவே செய்வார்கள்**; அதுவும் நாம் எகிப்திலிருந்து

வரும்போது கொண்டுவந்த பொருட்களிலிருந்தே **(யாத். 3:22)** (நமது சொந்த பங்களிப்பிலிருந்தே) அவற்றை உருவாக்குவார்கள். எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது!

இஸ்ரயேலர் கேட்ட மாத்திரத்தில், ஆரோன் அவர்களின் கோரிக்கைக்கு முழுமையாக உடன்பட்டார் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. இதைக் குறித்து பாஸ்டர் ரசல் அவர்கள் R4022:3 – ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

> “இந்தப் பொன் கன்றுக்குட்டியை உருவாக்கும் விஷயத்தில் ஆரோன் ஜனங்களோடு முழுமையாக உடன்பட்டார் என்று நாம் கருத முடியாது; மாறாக, அவர் அதைக் காட்டிலும் சிறந்ததையே அறிந்திருந்தார் என்றும், மேலானதையே நோக்கமாகக் கொண்டிருந்தார் என்றும் (we must suppose that he knew better and meant better) நாம் கருத வேண்டும், ‘ஜனங்களுடைய அதிருப்தியின் வெளிப்பாடாக இருந்த அந்த முரட்டாட்டமான கலகத்தை அடக்கி அமரச் செய்ய வேண்டும் என்கிற நோக்கில் அவர் மேற்கொண்ட ஒரு தற்காலிக உபாயமே/தீர்வே இது’ என்றும் நாம் கருத வேண்டும். ஒருவேளை, ஜனங்களின் கோரிக்கைக்கு இணங்குவது போலத் தோன்றுவதன் மூலம், மோசே திரும்பி வரும்வரை காலத்தாமதம் செய்ய ஆரோன் முயன்றிருக்கலாம் என்று நாம் நினைக்க வேண்டும். ஒருவேளை, ஜனங்களிடம் அவர்களுடைய பொன்னணிகளையும் மற்ற ஆபரணங்களையும் தருமாறு அவர் கேட்டது வெறும் தற்காலிகச் சாக்குப்போக்கான யுக்தியாகக் கூட இருந்திருக்கலாம்; இந்தக் கோரிக்கையை வைப்பதன் மூலம் அவர்கள் தயங்கித் தங்கள் ஆபரணங்களைத் தர மறுப்பார்கள் என்றும், அதன் மூலம் அவர், ‘சரி, பொன்னால் ஒழிய ஒரு தெய்வத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தச் சொரூபத்தையும் என்னால் செய்ய முடியாது, அதற்கு



உங்கள் ஆபரணங்களை நீங்கள் தியாகம் செய்தாக வேண்டும், என்னிடம் அதற்கான பொன் இல்லை' என்று சொல்லிவிடலாம் என்றுகூட அவர் நினைத்திருக்கலாம். ஆனால் பாருங்கள்! அவருடைய நோக்கம் எவ்வளவு நல்நோக்கமாகக் காணப் பட்டாலும், அவர் பின்பற்றின அந்த வழிமுறை முறையற்ற ஒன்று என்பதே நமக்குரிய பாடமாகும்."

**நாம் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளக் கூடாது, அல்லது நன்மை விளையும் என்பதற்காகத் தீமை செய்யக் கூடாது.**

வேதாகமப் பதிவு பின்வருமாறு கூறுகிறது:

**யாத். 32:5 – "ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான்."**

"**தீமைகள் ஒன்றின்பின் ஒன்றாகப் படிப்படியாக வளர்ந்து செல்லக்கூடியவை; ஒரு தவறு மற்றொன்றிற்கு வழிவகுக்கும்**. அதுபோலவே, பொன் கன்றுக்குட்டி செய்யப்பட்ட பிறகு, அதற்குப் பலியிடுவதற்காக ஒரு பொன் பலிபீடம் கட்டும் காரியம் பின்தொடர்ந்து வந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேலின் விக்கிரகங்கள் விஷயத்திலும் இது உண்மையாக இருக்கிறது. ஒரு பலிபீடம் என்பது பலி / பலியிடுதலைக் குறிக்கிறது, நம் இருதயத்தில் எதை விக்கிரகமாக நிறுவுகிறோமோ, அதற்கு நாம் இயல்பாகவே பலியிடத் தொடங்கி விடுவோம் ... சில இருதயங்களில் பல விக்கிரகங்கள் உள்ளன, சில இருதயங்களில் சில விக்கிரகங்கள் உள்ளன; ஒரு மனுஷன் எந்த விக்கிரகங்களை ஆராதிக்கிறான் என்பதைக் கண்டறிவது கடினமான காரியம் கிடையாது. அவன் எதற்குப் பலியிடுகிறானோ, அதுவே அவன் ஆராதிக்கும் காரியமாக இருக்கும். ஓர் ஆணோ ஒரு பெண்ணோ எந்தக் காரியங்களுக்காகத் தனது மேலான சிந்தனைகளையும், மேலான நேரத்தையும், விசேஷித்த செல்வாக்கையும் பலிசெலுத்தி வருகிறார்களோ, அதுவே அவர்கள் மிகவும் உயர்வாக மதிக்கிற விக்கிரகம் என்பதையும், அதற்கே அவர்கள் மாபெரும் பலிபீடத்தை அமைத்து, மிகுதியாய்ப் பலிசெலுத்துவார்கள் என்பதையும் சுலபமாகச் சொல்லிவிட முடியும்." (R4023:2)

இஸ்ரயேலர் தங்கள் தேவனாகிய யேகோவாவை மாற்றீடு செய்ய விரும்பவில்லை அல்லது சிந்திக்கவில்லை என்பது உண்மையாக இருந்தாலும், அவர்கள் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கண்ணுக்குப் புலப்படும் ஜடமான சொரூபத்திற்காகவே கூக்குரலிட்டனர். அவர்களுக்கு இந்த விருப்பம், தாங்கள் அடிமைப்பட்டு, ஒடுக்கப்பட்டுக் கிடந்த எகிப்து தேசத்திலிருந்து வந்த ஒன்றெனச் சுலபமாகச் சொல்லிவிடலாம்; ஏனெனில், அங்கேதான் அவர்கள் மற்ற தெய்வங்களின் அடையாள சொரூபங்களைக் கண்டிருந்தனர்.

இருப்பினும், இதிலுள்ள நுணுக்கமான காரியம் என்னவெனில் – மனித இருதயமானது கண்ணுக்குத் தெரியாத தேவனுடைய எல்லா வல்லமைகளையும் குணாதிசயங்களையும், கண்ணுக்குத் தெரிந்த சொரூபத்தின் மேல் சுமத்தவே ஆயத்தமாக இருக்கிறது; இவ்வாறு விக்கிரகமாக மாறிய அந்தச் சொரூபம், பிறகு மிகவும் புனிதமான ஒன்றாகக் கருதப்பட்டு, ஆராதனை பொருளாக மாறிவிடுகிறது. இந்த இடத்தில்தான், அந்த விக்கிரகமானது தேவனுக்கு மட்டுமே உரிய மகிமையையும் துதியையும் பிடுங்கிக்கொள்ளத் தொடங்குகிறது!

மனுஷருடைய இந்தச் சுபாவத்தை அறிந்த தேவன், இதனால்தான், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்களையும் சொரூபங்களையும் உண்டாக்க வேண்டாம் என்று இஸ்ரயேலருக்கு அவ்வளவு திட்டவட்டமாகத் தடை விதித்திருந்தார்! **(யாத். 20:4)**. இப்படியாக, ஏற்கெனவே மேற்கோள் காண்பிக்கப்பட்ட "**என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்**" எனும் **ஏசாயா 42:8** – ஆம் வசனத்தின் அர்த்தத்தை நம்மால் இப்போது தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

கடந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, சில அமைப்புகள் (institutions) சுபாவத்தின்படி, விக்கிரகங்களாகவோ சொரூபங்களாகவோ இராவிட்டாலும்கூட, பல ஆவிக்குரிய இஸ்ரயேலரின் இருதயங்களிலும் சிந்தைகளிலும் அவை என்னதான் தேவனுடைய இடத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும்கூட, அவை அவருக்கு மட்டுமே உரிய பயபக்தியையும், கனத்தையும், மகிமையையும், துதியையும், ஆராதனையையும் பிடுங்கிக்கொள்பவையாகச் செயல்பட்டு வருகின்றன. பெயர்ச் சபையும் அத்தகைய ஓர் அமைப்பே! மோசேயின் வாயாக (mouthpiece) இருந்த ஆரோன் நிழலான இஸ்ரயேலுக்குப் பொன் கன்றுக்குட்டி ஒன்றை ஏற்படுத்திக்கொடுத்தது போல, நவீன கால ஆரோனாகிய குருமார் வகுப்பார் (இவர்களும் வாய்க்கருவிகளே), ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கு ஒரு பொன் கன்றுக்குட்டியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். ஆனால், இப்போது மலையிலிருந்து திரும்பி வந்திருக்கும் நிஜமான மோசேயால், இந்தப் பொன் கன்றுக்குட்டியானது ஏற்கெனவே அழிக்கப்பட்டு வருவதைக் கண்டு நாம் அகமகிழ்கிறோம்.

"கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்வோம்" என்று உறுதிகொடுத்த நாம், நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியத்தில் நம் உண்மையையும் நேர்மையையும் தேவன் பேரிலேயே காண்பிக்கும்படிக்கு எச்சரிக்கையாய் இருப்போமாக. தேவனை ஆராதிக்க வேண்டுமானால், ஒரு குறிப்பிட்ட சகோதரனையோ சகோதரியையோ, ஒரு குறிப்பிட்ட குழுவையோ, ஒரு குறிப்பிட்ட வகுப்பாரையோ, ஒரு கழகத்தையோ, அமைப்பையோ அல்லது சங்கத்தையோ (society) நமது ஆராதனைக்கான வாய்க்காலாகக் கருதிவிடும் தவறை நாம் செய்யாதிருப் போமாக; மாறாக, எரிச்சலுள்ள (jealous) தேவனாகிய நம்முடைய தேவன், நாம் அவரை நேரடியாகவே – ஆவியோடும் உண்மையோடும் – தொழுதுகொள்ள வேண்டும் எனவும், வேறு யாருடையதையும் அல்லாமல் அவருடைய சித்தத்தை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டுமெனவும் விரும்புகிறார். இது தேவனுடைய பிள்ளைகள் என்று தங்களை அறிக்கை செய்துகொள்ளும் மற்ற அநேகரிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்தினாலும்சரி, அவருக்கோ நாம் விசேஷித்த சம்பத்தாய் இருப்போம்.

**அன்புள்ள ஆண்டவரே, நாங்களாகவே உருவாக்கிக்கொள்ளும் விக்கிரகங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றும், எங்களை விடுவியும்!**

"நாம் விசுவாசத்தினால் பிழைக்கும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்; நம் கண்களால் எதையும் காண முடியாது. இயேசு உன்னதத்திற்கு ஏறிச் சென்றிருக்கிறார், அவருடைய வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருக்கும்படியாகவே நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியின் வல்லமையால் இருதயத்திற்குள் கொண்டு செல்லப்படும் தேவனுடைய வார்த்தையே இம்மைக்கும் (ஆவிக்குரிய) மறுமைக்கும், இன்றைக்கும் நாளைக்குமான எல்லாக் காரியங்களுக்கும் நமது நம்பிக்கையின்

ஆதாரமாக இருக்கிறது. நிறைவேற்றப்பட்ட கிறிஸ்துவின் பலியைக் குறித்து அவர் நமக்குச் சொல்லியிருக்கிறார்; நாமும் கிருபையினால், அதை விசுவாசித்து, நாம் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை என்றறிந்து, நமது ஆத்துமாக்களை அந்தப் பலியின் வல்லமையிடம் ஒப்படைக்கிறோம். பரலோகத்திற்குள் பிரவேசித்தவரும், தேவனுடைய குமாரனும், நமக்காக எப்போதும் பரிந்துபேசுபவருமாகிய மாபெரும் பிரதான ஆசாரியராகிய இயேசுவைக் குறித்து அவர் நமக்குச் சொல்லியிருக்கிறார்; நாமும் கிருபையினால், அதை விசுவாசித்து, நாம் முற்றுமுடிய இரட்சிக்கப்படுவோம் என்பதை அறிந்தவர்களாய், அவருடைய ஆற்றலின் மேல் நம்பிக்கையோடு சாய்ந்துகொள்கிறோம். உயிர்த்தெழுந்த ஜீவனின் வல்லமையால் நாம் இணைக்கப் பட்டிருக்கிற ஜீவனுள்ள தலையைக் குறித்தும், அவரிடமிருந்து நம்மை எந்த வல்லமையாலும், தூதனாலும், மனுஷனாலும் அல்லது பிசாசினாலும் பிரிக்க முடியாது என்பது குறித்தும் அவர் நமக்குச் சொல்லியிருக்கிறார்; நாமும் கிருபையினால், அதை விசுவாசித்து, நாம் ஒருபோதும் கெட்டுப்போவதில்லை என்றறிந்து, அந்த ஆசீர்வதிக்கப்பட்ட தலையை எளிமையான விசுவாசத்தோடு பற்றிக்கொள்கிறோம். ...ஏற்ற காலத்தில் நமக்குக் கிடைப்பதற்காக, '**தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற ...அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது**' என்று அவர் நமக்குச் சொல்லியிருக்கிறார்; நாமும் கிருபையின் மூலம் அதை விசுவாசித்து, நாம் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை என்று அறிந்திருக்கிறோம்.

இவ்வாறுதான் இருக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம் நம்முடைய தேவன் நாம் இவ்வாறு இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார். ஆனால் சத்துருவோ இந்தத் தெய்வீக யதார்த்தங்களை நாம் தூக்கி எறியவும், அவிசுவாசம் என்ற '**சிற்பக் கருவியைக்**' கையில் எடுத்து, நமக்காக 'தெய்வங்களை உண்டுபண்ண' ஓயாமல் முயற்சி செய்து வருகிறான். **அவனுக்கு எதிராக விழித்திருப்போமாக,** அவனுக்கு எதிராக **ஜெபிப்போமாக, விசுவாசத்தோடு** எதிர்த்து நிற்போமாக, அவனுக்கு எதிராகச் சாட்சி பகர்வோமாக, அவனுக்கு எதிராகச் **செயல்படுவோமாக**: இதன் மூலமாக **அவன் வெட்கப்படுத்தப்படுவான், தேவன் மகிமைப்படுத்தப்படுவார், நாம் மிகுதியாக ஆசீர்வதிக்கப்படுவோம்.**

இப்போது இந்தப் பாடத்தை ஆவிக்குரிய இஸ்ரயேலுக்குப் பொருத்திப் பார்ப்போமாக: கிறிஸ்தவன் ஒருவன் உலகத்தையும், அடிமைத்தனத்தையும், பாவத்தையும் விட்டு வெளியே வந்த பிறகு, மாராவின் கசப்பான அனுபவங்களையும் கடந்த பிறகு, தேவ தயவின் வெளிப்பாடுகளையும் கண்ட பிறகு, வானத்திலிருந்து வந்த அப்பத்தையும் புசித்த பிறகு, தேவனோடு உடன்படிக்கை உறவிற்குள் முழுமையாக உட்பிரவேசித்த பிறகு – அவன் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டிய ஒரு காலம் வரும். அப்போது அவன் கர்த்தரால் சோதிக்கப்படுவான். நிழலான இஸ்ரயேலரைப் போல, அவனும் இந்த அனுபவப் பாடத்தில் தோல்வியடைந்தால், அது அவனுக்கு மிகவும் கவலைக்குரிய விஷயமாகவே இருக்கும்.

இங்கே சொல்லர்த்தமான ஒரு பொன் சொரூபத்தை எந்தக் கிறிஸ்தவனாவது

செய்வான் என்று நாம் சொல்ல வரவில்லை. மாறாக, **‘சொரூபங்களை உண்டு பண்ணுவதும், தேவனை நாம் ஆராதிப்பதிலிருந்து நம்மைத் திசைதிருப்ப அவற்றை அனுமதிப்பதும்’ ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு வரும் மிகப்பெரிய சோதனை மற்றும் பரீட்சைகளில் ஒன்று என்பதையே நாம் சொல்ல விரும்புகிறோம்**.” (R5298:4)

# பாகம் ஒன்பது

## யாத்திராகமம் 32:7 - 29,32

“அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரயேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார். பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார். மோசே தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவதென்ன? மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின்மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும், அவர்களுக்குத் தீங்குசெய்யும்பொருட்டே அவர்களைப் புறப்படப்பண்ணினார் என்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்குசெய்யாதபடிக்கு, அவர்கள்மேல் பரிதாபங்கொள்ளும். உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரயேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக்கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே என்று கெஞ்சிப் பிரார்த்தித்தான். அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார். பின்பு மோசே மலையிலிருந்து இறங்கினான்; சாட்சிப்பலகைகள் இரண்டும் அவன் கையில் இருந்தது; அந்தப் பலகைகள் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது, அவைகள் இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது. ஜனங்கள் ஆரவாரம் பண்ணுகிறதை யோசுவா கேட்டு, மோசேயை நோக்கி: பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல் உண்டாயிருக்கிறது என்றான். அதற்கு மோசே: அது ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; பாடலின் சத்தம் எனக்குக் கேட்கிறது என்றான். அவன் பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டு; அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரயேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான். பின்பு, மோசே ஆரோனை நோக்கி: நீ இந்த ஜனங்கள்மேல் இந்தப் பெரும்பாதகத்தைச் சுமத்துகிறதற்கு, இவர்கள் உனக்கு என்ன செய்தார்கள் என்றான். அதற்கு ஆரோன்: என் ஆண்டவனுக்குக் கோபம் மூளாதிருப்பதாக; இது பொல்லாத ஜனம் என்று நீர் அறிந்திருக்கிறீர். இவர்கள் என்னை நோக்கி: எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை

எங்களுக்கு உண்டுபண்ணும்; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம் என்றார்கள். அப்பொழுது நான்: பொன்னுடைமை உடையவர்கள் எவர்களோ அவர்கள் அதைக் கழற்றித் தரக்கடவர்கள் என்றேன்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக் கன்றுக்குட்டி வந்தது என்றான். ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப் படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான். அவர்கள் நிர்வாணமா யிருக்கிறதை மோசே கண்டு, பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள். அவன் அவர்களை நோக்கி: உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்தார்கள்; அந்நாளில் ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள். கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும்படி, இன்றைக்கு நீங்கள் அவனவன் தன்தன் மகனுக்கும் சகோதரனுக்கும் விரோதமாயிருக்கிறதினால், கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டை பண்ணுங்கள் என்று மோசே சொல்லியிருந்தான். ... ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான்." (யாத்திராகமம் 32:7 – 29, 32)



மோசே “**தேவ பர்வதத்தில்**” ஏறி, இஸ்ரயேலருக்காக விண்ணப்பம் பண்ணிக் கொண்டிருந்த அதே சமயத்தில், அவர்கள் கீழே, நமது கடந்த பாடத்தில் பார்த்தது போல, தங்கள் கோரிக்கையின் பேரில் ஆரோன் செய்து கொடுத்த பொன் கன்றுக்குட்டிக்கு முன்பாகத் தங்களைத் தீட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர்.

தேவன் முற்றும் அறிந்தவர்! மலைக்குக் கீழே நடந்துகொண்டிருந்த இழிவான செயலையும் அறிந்திருந்தார் என்பது அவர் மோசேயிடம் சொன்ன வார்த்தைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது: “**நீ இறங்கிப்போ; எகிப்து தேசத்திலிருந்து நீ (THOU) நடத்திக் கொண்டுவந்த உன் (THY) ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரயேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார்.**” **(யாத். 32:7, 8).**

ஓ! பிரியமானவர்களே! தேவன் நமக்குக் கட்டளையிட்ட வழியிலிருந்து நாம் விலகிச் செல்லும் ஒவ்வொரு தருணத்தையும் அவர் கண்டும் அறிந்தும் இருக்கின்றார் என்ற **யதார்த்தத்தை** நாம் எப்போதும் நம் மனதில் வைத்திருந்தால், நமது வாழ்க்கை எவ்வளவு வித்தியாசமாக இருந்திருக்கும்! பூர்வகால ஜனங்களை விடவும் நமக்கு அதிகமான சாக்குப் போக்குகள் இருக்க முடியாதே! சொல்லப்போனால், நமக்குச் சாக்குப்போக்குச் சொல்ல இடமே இல்லை. ஏனெனில், நாமும் அவர்களைப் போல வழிவிலகிடாதபடிக்கு, நம்மை எச்சரிக்கும் நோக்கிலேயே அவர்களுடைய அனுபவங்கள், தோல்விகள், கீழ்ப்படியாமை மற்றும் அவிசுவாசம் என அனைத்துமே பரிசுத்த ஆவியால் நமக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது **(1 கொரி. 10:6, 11, 15; எபி. 3:12, 16 – 19; 4:2, 6).**

**யாத். 32:9** மற்றும் **10** – ஆகிய வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, பூர்வகாலத்து ஜனங்கள் மீது தேவன் கொண்ட கடும் அதிருப்தியை இங்கே கவனியுங்கள்: “**பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.**”

ஆம் பிரியமானவர்களே! நமக்காக விண்ணப்பம்பண்ணிப் பரிந்துபேசுகிற நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மாபெரும் அன்பினால் மாத்திரமே நாம் இந்நேரம் வரையிலும் தப்பித்துக் கொண்டிருக்கிறோம்; இல்லையேல், நாம் எத்தனை முறை, எத்துணைக் கொடிய தண்டனைக்கு ஆளாகி இருப்போம் என்பதை யோசித்துப் பாருங்கள்! இந்த எண்ணமே, அவருடைய பரிந்துபேசுதல் தொடர்ந்து நமக்குக் கிடைக்கும் வகையில், புதுப்பிக்கப்பட்ட மனவுறுதியோடு பாத்திரவான்களாய் ஜீவிப்பதற்கேதுவாக நம்மை உந்தித்தள்ள வேண்டும். ஓ! எத்துணை அருமையான இரட்சகர் அவர்!

ஒருவேளை, நமது தியானங்களில், ஒருபுறம் அவருடைய நீதியையும், பிதாவின் சித்தத்திற்கு அவர் முழுமையாகக் கீழ்ப்படிந்திருந்ததையும், மறுபுறம் நம்மையும் நமது தொடர்ச்சியான பலதரப்பட்ட குறைபாடுகளையும் கணக்கில் எடுத்துப் பார்த்தோமேயானால்,

நியாயமாகத் தேவனுடைய கோபம் நீண்ட காலத்திற்கு முன்பே நம் அனைவரையும் அழித்திருக்க வேண்டும் என்பது நமக்கு எளிதில் புலப்படும்.

ஆம் பிரியமானவர்களே! ஆதாமின் சந்ததியார் அனைவரையும் அழித்துவிட்டு, உண்மையுள்ள இயேசுவின் அரையிலிருந்து (loins of the faithful Jesus) தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்திற்கும் பாத்திரமான ஒரு புதிய சந்ததியை உருவாக்குவது இன்னுமே எளிமையான காரியமாக இருந்திருக்கும் அல்லவா! நிச்சயமாக, தேவன் மோசேயிடம் சொன்ன பின்வரும் வார்த்தைகளிலும்கூட இது போன்ற ஒரு கருத்துதான் தொக்கி நிற்பது போல் உள்ளது: "**...உன்னை ஒரு பெரிய [புதிய] ஜாதியாக்குவேன்.**" சார்லஸ் எச். மெக்கின்டோஷ் (Charles H Mackintosh) என்பவரின் கி.பி. 1880-ஆம் ஆண்டு வெளியான "யாத்திராகமப் புஸ்தகத்தின் மீதான குறிப்புகள்" (Notes on the Book of Exodus) என்ற நூலிலிருந்து:

> "இங்கே மோசே முன்பாக ஒரு வாசல் திறக்கப்பட்டது; ஆனால், மோசேயோ அசாதாரணமான கிருபையையும், தன்னைப் போலவே தேவனால் எழுப்பப் படவிருந்த அந்தத் தீர்க்கதரிசியின் (கிறிஸ்துவின்) ஆவிக்கு இணையான ஓர் ஆவியையுமே வெளிப்படுத்தினார். அவர் அந்த ஜனங்கள் இல்லாமல் தான் மட்டும் மேன்மையடையவோ அல்லது எதையாகிலும் பெற்றுக்கொள்ளவோ மறுத்துவிட்டார். அவர் தேவனுடைய மகிமையையே மன்றாட்டின் அடிப்படையாக வைத்து, பின்வரும் உருக்கமான வார்த்தைகளின் மூலம் அந்த ஜனங்களை மீண்டும் தேவனிடமே ஒப்புவிக்கின்றார்: '(வ. 11) **கர்த்தாவே, தேவரீர் (THOU) மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய (THY) ஜனங்களுக்கு விரோதமாக உம்முடைய கோபம் பற்றியெரிவது என்ன?...** (வ. 13) **உமது தாசராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரயேலையும் நினைத்தருளும்: உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலப் பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்தத் தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக்கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே என்று கெஞ்சிப் பிரார்த்தித்தான்.**' இது ஒரு வல்லமைவாய்ந்த மன்றாட்டாகும். தேவனுடைய மகிமை, அவருடைய பரிசுத்த நாமத்தின் மேன்மைக்குக் களங்கம் வராமல் காப்பது, அவர் தம்மைக்கொண்டு ஆணையிட்டதை நிறைவேற்றுவது – இவற்றின் அடிப்படையில் தான் மோசே கர்த்தரிடம் அவர்தம் கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பும்படிக்கு மன்றாடினார். இஸ்ரயேலர் வெளிப்படுத்திய நடத்தையை அல்லது குணத்தை வைத்துக்கொண்டு அவரால் தேவனிடம் சென்று எந்த மன்றாட்டையும் முன்வைக்க முடியவில்லை. ஆகையால், தேவனுடைய மகத்துவமான குணத்தையே மன்றாட்டின் ஆதாரமாகக் கொண்டு கெஞ்சிப் பிரார்த்தித்தார்.
>
> "**கர்த்தர் மோசேயை நோக்கி: 'நீ (THOU) நடத்திக்கொண்டுவந்த உன் (THY) ஜனங்கள்'**" என்று கூறினார்; மோசேயோ கர்த்தரிடம், '**தேவரீர் (THOU) புறப்படப்பண்ணின உம்முடைய (THY) ஜனங்கள்**' என்றே பதிலளித்தார்... மோசே தன்னைக் கொஞ்சம்கூட நினைத்துப் பார்க்கவில்லை, தன்னை முற்றிலும் மறந்துபோயிருந்தார். அவருடைய

ஆத்துமா முழுவதும் கர்த்தருடைய மகிமை, கர்த்தருடைய ஜனங்கள் என்கிற எண்ணமே நிறைந்து காணப்பட்டது. எப்பேர்ப்பட்ட ஆசீர்வாதமான தேவனுடைய ஊழியக்காரன், அவரைப் போல எத்துணைச் சிலரே இருக்கிறார்கள்!"

இந்த மோசே என்பவர், எத்தனை தரம் எத்துணை அழகாக, <u>ஒவ்வொரு மூச்சிலும் தம் சுயத்தை மறந்து, தேவனுடைய மகிமைக்காகவே வாழ்ந்த நமது ஆசீர்வாதமான ஆண்டவருக்கு</u> நிழலாக விளங்கியிருக்கிறார்!

இந்தக் குறிப்பிட்ட சமயத்தில், மோசே ஏறெடுத்த விண்ணப்பத்தினால், தேவனுடைய உக்கிர கோபம் விலகியதினிமித்தம், அவர் தனது ஜனங்களுக்கு ஓர் இரட்சகராக மாறினார். கிறிஸ்து இந்த யுகத்தில் நமக்காக விண்ணப்பம் பண்ணுபவராக இருந்து, நம்மை நித்திய மரணத்திலிருந்து இரட்சிக்கிறார் என்பதற்கு இது எவ்வளவு பொருத்தமான ஒரு படமாக உள்ளது! அவர் நமக்கான ஒப்புரவாக்குபவராக மாத்திரம் இராமல், ஏற்ற வேளையில் உலகத்திற்கான புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் இருக்கப்போகிறார்.

ஏற்கெனவே மத்தியஸ்தர் என்கிற இந்தப் பதவி / பட்டம், தனியொருவராக, அவருக்கே உரியதாக இருந்தாலும், இந்தப் பணியில் அவர் தனித்துச் செயல்படாமல், உடன் ஊழியரைக் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் ஏற்பாடு செய்தபடியால், முன்குறிக்கப்பட்ட வகுப்பார் அனைவரும் அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாறி, அவருடைய திவ்விய சுபாவத்திலும் மகிமையிலும் பங்கடையும் வரையிலுமே, அவர் அந்தப் பணியை (மத்தியஸ்தம்) தொடங்கப்போவதில்லை. இப்படியாக, தனது ஜனங்களின் இரட்சகராகக் காணப்பட்ட மோசேயானவர், தலையாகிய இயேசுவுக்கும், அவரோடு இணைந்து உடன் பலிசெலுத்தி, மத்தியஸ்தரின் சரீர அங்கங்களாக மகிமையில் பங்கடையும் அனைவருக்கும் நிழலாக இருக்கின்றார்.

அவரைக் குறித்தே மோசே பின்வருமாறு சொல்லியிருந்தார்: "**உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக**" **(உபா. 18:15; அப். 3:22)**. இந்த மகிமையில் பங்கடையும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் தங்கள் தனி அடையாளத்தை இழந்திருந்தாலும், ஒரு வகையில் அவர்கள் அனைவருமே ஜனங்களின் இரட்சகர்களாக இருக்கிறார்கள். **ஒபதியா 1:21** – ஆம் வசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்தும் இதுவே:

"**ஏசாவின் பர்வதத்தை நியாயந்தீர்ப்பதற்காக இரட்சகர்கள்** (saviours) **சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள்; அப்பொழுது இராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும்.**"

மோசே ஏற்ற காலத்தில், அதாவது, அவர் மீண்டும் தேவனுடைய மலைக்கு ஏறியபோது, ஜனங்களின் நலனுக்காகத் தனது ஜீவனையே பணயம் வைத்தார்; அதுபோலவே கிறிஸ்துவும் செய்தார்; அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற ஒவ்வொரு பின்னடியாரும்கூட, ஜனங்களுக்காகத் தங்களது ஜீவனையே பணயம் வைக்க வேண்டியிருக்கிறது.

மோசே வெளிப்படுத்திய அந்த மகா மேன்மைவாய்ந்த குணாதிசயமானது, ஏதோ அந்தச் சந்தர்ப்பத்திற்காக மாத்திரம் வளர்த்துக்கொண்ட ஒரு தற்காலிகக் குணம் கிடையாது;

மாறாக, அது தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்ததினிமித்தமும், அந்த ஜனங்களுடைய பலவீனங்களில் அவர்களோடு பழகி இருந்ததினிமித்தமும் அவர் ஏற்கெனவே வளர்த்தெடுத்திருந்த குணாதிசயமாகக் காணப்பட்டது. ஏகமாய்த் தவித்து வருகிற இந்தச் சிருஷ்டிகள் பேரிலான நமது அன்பும், விசேஷமாக நமது சகோதர சகோதரிகள் பேரிலான நமது அர்ப்பணிப்பும் இப்பொழுதே வளர்த்தெடுக்கப்பட வேண்டியவையாகும்; இல்லையேல் நம்மால் ஒருக்காலும் உலகத்தின் அந்த மாபெரும் மத்தியஸ்தரோடு பங்கடைய முடியாது. இதுகுறித்து R4023:6 – ஆம் பக்கத்திலிருந்து சிலவற்றை இங்கே மேற்கோள் காட்ட விரும்புகின்றோம்:

> "மோசேயின் ஆவி கிறிஸ்துவின் ஆவிக்கு நிழலாக இருந்ததோடுகூட, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கப்போகிற அனைவரின் ஆவியையும் சித்தரித்துக் காட்டுவதாகவும் இருந்தது. நாமும் அதே அன்பின் மற்றும் அர்ப்பணிப்பின் ஆவியை, உடன் அங்கங்கள் மேல் மாத்திரம் கொண்டிருக்காமல், அவர்களோடுகூட தேவனுடைய மேற்பார்வையினால் நாம் எதற்காக அழைக்கப்பட்டோமோ அந்த நோக்கம் மற்றும் பணியின் மீதும் கொண்டிருக்க வேண்டும். '**சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்**.' தேவன் தமது குமாரனுக்கு உடன் சுதந்தரராகவும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியாகவும் இருப்பதற்காய் நம்மை அழைத்திருக்கிறார்; மேலும், புது உடன்படிக்கையின் ஆசீர்வதிக்கப்பட்ட ஏற்பாடுகளின்கீழ், ஆயிரமாண்டு யுகத்தில், மனுக்குலத்திற்கு உதவியளித்து அவர்களை உயர்த்திவிட்டு, கீழ்ப்படிகிற அனைவரையும் பரிசுத்த பெரும்பாதை வழியாகப் பரிபூரணத்திற்கும் நித்திய ஜீவனுக்கும் வழிநடத்தி, மத்தியஸ்தம் செய்யப் போகிற அந்த மாபெரும் வேலையில் அவரோடு பங்கு பெறுவதற்காகவும் அவர் நம்மை அழைத்திருக்கிறார். இந்த விஷயத்தில் மோசேயின் ஆவியை, அதாவது, கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிருப்பது நம்முடைய பொறுப்பாகும்; எப்படியெனில், மனுக்குலத்தை ஆசீர்வதித்து உயர்த்துவதற்கும், அவர்களைச் சரியான பாதையில் வழிநடத்துவதற்கும் நமக்கென்று வைக்கப்பட்டுள்ள அந்த மகிமையான சிலாக்கியங்கள் மற்றும் அழைப்புக்கு ஏற்றவாறு, தற்காலத்தில் கர்த்தருடைய வழிநடத்துதலைப் பின்பற்றி, நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளவும், நம்மால் இயன்ற அனைத்தையும் செய்யவும், குறிப்பாக வரவிருக்கும் யுகத்தின் மகிமையான வேலைக்காக நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும் வேண்டும்.
>
> நமது ஆயத்தத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று, பரிவிரக்கமுள்ள அன்பின் ஆவியாகும்; அது நன்றியறியாதவர்களிடமும்கூட தயவுள்ளவராகவும், இரக்கமும் நற்கனிகளும் நிறைந்தவருமாகக் காணப்பட்ட நமது பிரியமான எஜமானரைப் போன்ற சாயலடைவதற்கு நமக்கு உதவிடும். உலகத்தார் பேரிலும் இப்பேர்ப்பட்ட உயரிய சிந்தனையையே நாம் கொண்டிருக்க வேண்டும். நமது எஜமானர், '**நான் உலகத்தானல்லாததுபோல, நீங்களும் உலகத்தாரல்ல**' என்று அறிவித்தார். நாம் கிறிஸ்துவின் அங்கங்களாக – அந்த மாபெரும் மத்தியஸ்தரின் அங்கங்களாக இருக்கிறோம்; **ஜனங்களைத் தேவனுடைய தயவு மற்றும் நித்திய ஜீவன் எனும் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு – மீட்கப்பட்ட பரதீசிற்கு – நேராய் வழிநடத்தும் அந்த மாபெரும் பணிக்காக, பாடசாலை பயிற்சியையும் ஆயத்தத்தையும் இப்போது நாம் பெற்றுக்கொண்டு வருகிறோம். தேவையான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளவில்லை**

**என்றால், உலகத்தின் மீதான அனுதாபத்திலும், அன்பிலும், இரக்கத்திலும் தேவனுடைய அன்பான குமாரனின் சாயலுக்கு ஒப்பாக நாம் மாறவில்லை என்றால், அந்த மகிமையான சரீரத்தின் – இராஜ்ய வகுப்பாரின் – அங்கத்துவத்திலிருந்து நாம் தகுதியற்றவர்கள் என்று நிராகரிக்கப்படுவோம். எனவே, நாம் ஜாக்கிரதையாயிருந்து, தேவன் மீதும், சகோதர சகோதரிகள் மீதும், அயலார் மீதும், நமது எதிரிகள் மீதும்கூட அன்பு செலுத்துவதே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மாபெரும் பாடம் என்பதை நினைவில் கொள்வோமாக.** இந்த அன்பு நமக்குள் உண்டாகிப் பெருகினால், அது நம்மைத் தேவனுடைய பார்வையில் வீணராகவோ கனியற்றவர்களாகவோ இருக்கவொட்டாது; இவ்வாறு கிறிஸ்துவின் மூலமாக அந்த நித்திய இராஜ்யத்திற்குட்படும் பிரவேசம் நமக்குச் சம்பூரணமாக வழங்கப்படும். அங்கே நாம் இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தருமானவரோடு இணைந்து, உலகத்தின் மத்தியஸ்தராகவும், பூமியின் வம்சங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகிற புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும் அவர் செய்யப்போகிற மாபெரும் பணியில் பங்காளிகளாக இருப்போம்.”

இருப்பினும், இங்கே நாம் மோசேயின் குணாதிசயத்தின் இன்னொரு பக்கத்தைப் பார்ப்பது நலமாயிருக்கும்; என்னவெனில், **அவர் நீதியை விரும்பினவராக மாத்திரம் காணப்படாமல், அக்கிரமத்தை வெறுப்பவராகவும் காணப்பட்டார்** என்பது தெளிவாகிறது. இவை நிஜமான இந்த மத்தியஸ்தரின் அங்கங்களாக இருக்கப்போகிற **<u>அனைவரும் பெற்றிருக்க வேண்டிய இரண்டு முக்கியப் பண்புகளாகும்</u>**.

‘இஸ்ரயேல் புத்திரருக்கு விரோதமாகத் தேவனுடைய உக்கிர கோபம் மூள வேண்டாம்’ என்று கெஞ்சி மன்றாடிய பிறகு, மோசேயின் சொந்த கோபம் அவர்கள் மேல் மூண்டதென்பது **(யாத். 32:19)** சற்று விசித்திரமாகத் தோன்றலாம். இந்தக் கோபம் ஒரு நீதியான கோபத்தின் வெளிப்பாடு என்றே நாம் கருதுகிறோம். இதில் அவர் பாவம் செய்தார் என்று நாம் கருத வேண்டியதில்லை; அவ்வாறு கருதினால் தேவனும் அத்தகைய குற்றத்தைச் செய்ததாக நாம் குற்றம் சாட்ட வேண்டியிருக்கும். சொல்லப்போனால், நாம் “**கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்” (எபே. 4:26)** என்றே அறிவுறுத்தப்பட்டுள்ளோம்.

“நீதியான ஆவேசமாக (righteous indignation) இருக்கும் கோபத்திற்கும், அன்பற்ற, இரக்கமற்ற, அநீதியான கோபத்திற்கும் இடையே வித்தியாசம் உண்டு. வேத வாக்கியங்களிலிருந்து, **அவர் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்** என்பதை அறிந்துகொள்கிறோம். **(சங். 7:11)**. கோபம் என்றாலே பாவமான சுபாவம் என்று சொல்ல முடியாது என்பதை இந்த வேத வாக்கியம் நமக்குக் காட்டுகின்றது; ஏனெனில், தேவனிடத்தில் எந்தப் பாவமும் இல்லை, அதிலும் முக்கியமாக அவர் தமது சிருஷ்டிகளை எந்த விதிமுறைகளின் கீழ் கண்ணோக்குகிறாரோ, அதே விதிமுறைகளின்படியே தம்மையும் நடத்திக்கொள்கிறார். எனவே, கோபம் என்கிற சுபாவம் தனியாகப் பாவம் என்று ஆகாது.

தேவனைப் பொறுத்தவரையில், தவறு செய்தவனை அங்கீகரித்து, சரியானதைச் செய்தவன் மேல் சினங்கொள்ளும் தவறைச் செய்வார் என்றோ, அல்லது தவறு

செய்தவனைக் கண்டிக்காமல், சரியானதைச் செய்தவனை எதிர்ப்பார் என்றோ சொல்ல முடியாது. அவருடைய அறிவு பரிபூரணமானது என்பதால் அவருடைய நடக்கையும் பரிபூரணமானதாக இருக்கும். ஆனால், நாமோ அவ்வாறு இல்லை; நாம் கோபப்படுவது சரியானதாக இருக்கும் என்று உணரும் தருணங்களில், நாம் மிகுந்த விவேகத்தைப் பயன்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம் (குறிப்பு: நன்கு யோசித்துப் பார்த்த பிறகே, கோபத்திற்கு இடமளிக்க வேண்டும்). அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வது போல, '**கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்**.' **(எபே. 4:26)**" (R5417:5)

அக்கிரமத்தின் மீதான மோசேயின் வெறுப்பிற்கு இசைவாகவே, அவர் ஜனங்களைத் தண்டித்ததாகவும், ஆரோனைக் கடிந்துகொண்டதாகவும் நாம் காண்கிறோம் **(யாத். 32:20, 21)**. இருப்பினும், அவர்களில் சிலர் அந்தத் தண்டனையை அலட்சியம் செய்து, மோசேயின் கண்டிப்பை எதிர்த்து நின்றதாகத் தெரிகிறது. இஸ்ரயேல் பாளயத்தில் காணப்பட்ட இந்தச் சிறிய புளிப்பு, விரைவில் முழு மாவையும் புளிக்கச்செய்துவிடும் என்பதை மோசே நன்கு அறிந்திருந்தார். எனவே, தேவனுடைய கோபம் மீண்டும் இஸ்ரயேலர் அனைவர்மீதும் மூண்டு அவர்களை அழித்துவிடாதபடிக்கு, மாபெரும் கிருபைக்கும் தயவிற்கும் பாத்திரவான்களாய் நடந்துகொள்ளாத அந்தக் கலகக்காரர்களைப் பாளயத்திலிருந்து வெளியேற்றுவது அவசியமாக இருந்தது. இப்படியாக மோசே ஒரு சவால் / அழைப்பு விடுத்தார், அவர் வாசலில் நின்றுகொண்டு: "**கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள்**" என்று சத்தமிட்டார். **(யாத். 32:26).**

இப்போது அவர்கள் மோசே பக்கமா அந்தப் பொன் கன்றுக்குட்டி பக்கமா என்பது முக்கிய கேள்வியாக இருக்கவில்லை; மாறாக, யாருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிவோம் என்று அவர்கள் வாக்குக்கொடுத்தார்களோ, யாருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்வோம் என்று அவர்கள் உறுதி பூண்டார்களோ, **அந்தக் கர்த்தர் பக்கம் அவர்கள் இருக்கிறார்களா என்பதே காரியமாக இருந்தது.** அந்தச் சவால் / அழைப்பு எகிப்து தேசத்திலிருந்தோ அல்லது அந்தத் தேசத்து ஜனங்களிடமிருந்தோ பிரிந்து வரும்படி விடுக்கப்பட்ட ஒன்றல்ல; மாறாக, "தேவனுக்குச் சொந்தச் சம்பத்தாக, விசேஷித்த ஜனமாக" இருக்க விரும்பி, அதே சமயம் அவருடைய சித்தத்திற்குத் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுக்க மறுத்த **தங்களுடைய சொந்த உறவினர்களிடமிருந்தே** பிரிந்து வரும்படிக்கு விடுக்கப்பட்ட அழைப்பு என்பதைக் கவனியுங்கள். பொன் கன்றுக்குட்டி என்பது அவர்கள் தேவன் மீதான விசுவாசத்தை மறுதலித்தார்கள் என்பதைக் குறிக்கவில்லை, மாறாக அவருடைய கட்டளையை நேரடியாக மீறும்வண்ணமாக, அவர் ஏற்றுக்கொள்ளாத ஒரு வழியில் அவரை ஆராதித்ததையே அர்த்தப்படுத்தியது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தச் சவால் / அழைப்பு இப்போது நம் மத்தியிலும் வந்துள்ளது, மேலும் சுவிசேஷ யுகத்தின் முடிவு பரியந்தம், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களிடையே ஏற்படும் ஒவ்வொரு சலித்தெடுப்பின் மத்தியிலும் இது தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். வெளியாட்களிடமிருந்து நம்மைப் பிரித்துக் கொள்வது சுலபம், ஆனால் நமது சொந்த மாம்சத்தையும் இரத்தத்தையும் விட மேலாக நாம் நேசிக்கவும் மதிக்கவும் கற்றுக் கொண்டவர்களிடமிருந்து பிரிந்து வருவது என்பது ஆயிரம் மடங்கு கடினமான காரியமாக

இருக்கும். ஆனால் பாருங்கள்! சோதனை தவிர்க்க முடியாத வகையில் இவ்வாறாகவே வர வேண்டியுள்ளது!

“**கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்?**” என்பதற்கிணங்க: “**அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்**” **(யாத். 32:26)** என்று நாம் வாசிக்கிறோம். அதற்கென்று மற்ற கோத்திரத்தார் எவருமே மோசேயிடம் வரவில்லை என்று நாம் கருதக்கூடாது, மாறாக லேவி கோத்திரத்தார் கொடுத்த மறுமொழியில், அவர்கள் மற்றவர்களை விடக் குறைவாகவே வழிவிலகியிருந்தார்கள் என்பதைக் காட்டினார்கள் என்று பொருள். பல வகைகளில், இந்தக் கோத்திரம் தேவனுடைய உண்மையான அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு நிழலாக இருக்கிறது; இவர்களுடைய நேர்மை அழைப்பிற்குப் பதிலளிப் பதில் மாத்திரமல்லாமல், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதிலும் காண்பிக்கப்படுகின்றது; அதன் மூலமாக அவர்கள் கர்த்தருடைய பட்சத்தில் காணப்படாதவர்களிடமிருந்து தங்கள் ஐக்கியத்தை உண்மையாகவே துண்டித்துக் கொள்கிறார்கள். இது குறித்த மோசேயின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

**யாத். 32:27 – “உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.”**

லேவி கோத்திரத்தார் இந்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்தார்கள் **(யாத். 32:28, 29).** இவ்வாறாக மோசே தங்களை விடுவித்தவரும் இரட்சகருமாக இருக்கிறார் என்பதை ஒப்புக்கொண்டார்கள், மேலும் இஸ்ரயேலின் மகா தேவனுக்கு முன்பாக மோசே தங்களுக்காக விண்ணப்பம் ஏறெடுப்பதற்குத் தாங்கள் இன்னும் தகுதியானவர்களே என்பதையும் நிரூபித்தார்கள்.

இது சம்பந்தமாக மத்தேயுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நமது நேச மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் நமது நினைவுக்கு வருகின்றன:

**மத். 10:32, 34 – 38 – “மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைப் பண்ணுவேன். … பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத் தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினை உண்டாக்க வந்தேன். ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.”**

ஆம் பிரியமானவர்களே! எப்போதும் நம் முன் வைக்கப்படும் கேள்வி: கர்த்தருடைய

பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்பதே. உதயமாகிற ஒவ்வொரு நாளானது நம்மை நமது யாத்ரீகப் பாதையின் முடிவை நோக்கி இன்னும் கிட்டிச் சேர வைக்கிறது! உதயமாகிற ஒவ்வொரு நாளானது நம்மை நமது தேவனுக்கு நேர்மையாக இருக்கச் சொல்கிறது; ஆனால், நாம் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்கிறோமா? சத்தியத்தில் நமது தாய், தந்தை, சகோதரர் அல்லது சகோதரிகளாக இருப்பவர்கள் ஒருவேளை வழிதவறி விழுந்தாலும் கூட, நாம் கர்த்தருடைய பட்சத்தில் உறுதியாய் நிற்கக்கூடிய அளவுக்கு, நம்மை நாம் பிதாவின் சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணித்துள்ளோமா? ஒருவேளை தனியாக நிற்க வேண்டியிருந்தாலும் கூட, நாம் உறுதியாக நிற்போமா? அவ்வாறு நிற்கக் கூடியவர்களுக்குப் பின்வரும் சங்கீதக்காரனின் வார்த்தைகள் மாபெரும் ஆறுதலே:

**சங். 91:7, 8, 10, 11, 15 – "உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய். ... ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். ... அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்."**

மோசே மீண்டும் தேவனுடைய மலைக்கு ஏறிப்போய், கற்பலகைகளில் நியாயப் பிரமாணத்தின் இரண்டாம் பிரதியைப் பெற்றுக்கொள்ளச் சென்றபோது, அவர் தேவனிடம் ஏறெடுத்த வேண்டுதலைக் கருத்தாய் உற்றுநோக்குகையில், அவருடைய குணலட்சணத்தை இன்னும் முழுமையாக நம்மால் மதித்துணர முடிகிறது. அவர் யேகோவா தேவனிடம் பின்வருமாறு கூறினார்:

**யாத். 32:31, 32 – "'ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்' என்றான்."**

எப்பேர்ப்பட்ட குணம்! வெறும் வார்த்தைகளால், இந்த மகத்தான தேவ மனுஷனின் உண்மையான மகிமையை விவரிக்க இயலாதே! இதை ஆழ்ந்து சிந்திக்கும்போது நமக்குள் சிலிர்ப்பு ஏற்பட்டாலும், அந்த உணர்ச்சிகளை நம்மால் வார்த்தைகளால் விவரிக்க இயலாதே! "அவர் இந்தப் பூமியைச் சேர்ந்தவரே கிடையாது" என்று தோன்றச் செய்யும் அளவுக்கு அவருடைய குணலட்சணம் அப்பேர்ப்பட்டதாகக் காணப்படுகிறது. ஒன்றை மாத்திரம் நம்மால் சொல்ல முடியும், "**உலகம் அவருக்குப் பாத்திரமாயிருக்கவில்லை**"! அவர் வெளிப்படுத்தியது எப்பேர்ப்பட்ட **விசுவாசம்**, எப்பேர்ப்பட்ட **அன்பு**, எப்பேர்ப்பட்ட **மனதுருக்கம்**, எப்பேர்ப்பட்ட **தன்னலமற்ற தியாகம்** மற்றும் எப்பேர்ப்பட்ட **சுயத்தை ஒடுக்குதல்**!! இருப்பினும், இவை அனைத்திலும் அவர், கிறிஸ்து இயேசுவைத் தலையாகவும் சபையைச் சரீரமாகவும் கொண்ட அந்த மாபெரும் மத்தியஸ்தருக்கு ஒரு நிழலாகவே காணப்பட்டார்.

நண்பர்களே, நம்மை இயேசு கிறிஸ்துவின் அளவுக்கு ஒப்பிட்டுப் பார்க்காமல், மோசே

எனும் தேவ மனுஷனுக்கு அருகில் வைத்துப் பார்த்தாலே போதும், நாம் எவ்வளவு சிறியவர்கள், எவ்வளவு அற்பமானவர்கள் என்பது விளங்கிவிடும். **ஒருவேளை நமக்கு இந்தத் தியானத்திலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு பாடமுமில்லை என்று தோன்றினாலும் கூட, மோசே என்பவரின் இந்த அரும் முன்மாதிரி ஒன்று மட்டுமே, புதுப்பிக்கப்பட்ட பிரயாசத்தோடும் புதுப்பிக்கப்பட்ட வைராக்கியத்தோடும் நம்முடைய அநேக அநேக குறை பாடுகளையும் பலவீனங்களையும் மேற்கொள்வதற்கு நம்மை உந்தித்தள்ள போதுமானதாக இருக்கும்**. அதேசமயம், தேவன் நமக்கு முன்வைத்துள்ள அந்த உயரிய தரநிலைகளை வேறொரு பொருத்தமான சமயத்தில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நாம் ஒத்திவைக்கவும் கூடாது. **சங்கீதம் 90:12** – ஆம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மோசேயின் வார்த்தைகளே நம்முடைய ஜெபமாக இருப்பதாக:

"**நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்**."

**(ஆமென்!)**

# பாகம் பத்து


## யாத்திராகமம் 33:1-7; 31:1 - 6; 36:1-19

"கர்த்தர் மோசேயை நோக்கி: நீயும், எகிப்து தேசத்திலிருந்து நீ அழைத்துக்கொண்டு வந்த ஜனங்களும், இவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக்கொடுத்த பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போங்கள். நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும் எமோரியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் துரத்திவிடுவேன். ஆனாலும், வழியிலே நான் உங்களை நிர்மூலம்பண்ணாத படிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்றார். துக்கமான இவ்வார்த்தைகளை ஜனங்கள் கேட்டபோது, ஒருவரும் தங்கள் ஆபரணங்களைப் போட்டுக்கொள்ளாமல் துக்கித்துக்கொண்டிருந்தார்கள். ஏனென்றால், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள், நான் ஒரு நிமிஷத்தில் உங்கள் நடுவில் எழும்பி, உங்களை நிர்மூலம்பண்ணுவேன்; ஆகையால், நீங்கள் போட்டிருக்கிற உங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போடுங்கள்; அப்பொழுது நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை அறிவேன் என்று இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல் என்று கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தார். ஆகையால், இஸ்ரயேல் புத்திரர் ஓரேப் மலையருகே தங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போட்டார்கள். மோசே கூடாரத்தைப் பெயர்த்து, அதைப் பாளயத்துக்குப் புறம்பே தூரத்திலே போட்டு, அதற்கு ஆசரிப்புக் கூடாரம் என்று பேரிட்டான். கர்த்தரைத் தேடும் யாவரும் பாளயத்துக்குப் புறம்பான ஆசரிப்புக் கூடாரத்துக்குப் போவார்கள்." (யாத்திராகமம் 33:1 – 7)

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன். மேலும், தாண் கோத்திரத்திலுள்ள அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபையும் அவனோடே துணையாகக் கூட்டினதுமன்றி, ஞான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தை அருளினேன்; நான் உனக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் செய்வார்கள்." (யாத்திராகமம் 31:1 – 6)

"அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்துத் திருப்பணிகளுக்கடுத்த சகல வேலைகளையும், கர்த்தர் கற்பித்தபடியெல்லாம், பெசலெயேலும் அகோலியாபும், செய்ய அறியும்படிக்குக் கர்த்தரால் ஞானமும் புத்தியும் பெற்ற விவேக இருதயமுள்ள மற்ற அனைவரும் செய்யத் தொடங்கினார்கள். பெசலெயேலையும் அகோலியாபையும், கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலைகளைச் செய்யவரும்படி தங்கள் இருதயத்தில் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தாராகிய எல்லாரையும், மோசே வரவழைத்தான். அவர்கள், இஸ்ரயேல் புத்திரர்

திருப்பணிக்கடுத்த சகல வேலைகளுக்காகவும் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களை எல்லாம், மோசேயினிடத்தில் வாங்கிக்கொண்டார்கள். பின்னும் ஜனங்கள் காலைதோறும் தங்களுக்கு இஷ்டமான காணிக்கைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது பரிசுத்த ஸ்தலத்து வேலைகளைச் செய்கிற விவேகிகள் யாவரும் அவரவர் செய்கிற வேலையின் காரியமாய் வந்து, மோசேயை நோக்கி: கர்த்தர் செய்யும்படி கற்பித்த வேலைக்கு வேண்டியதற்கு அதிகமான பொருள்களை ஜனங்கள் கொண்டுவருகிறார்கள் என்றார்கள். அப்பொழுது மோசே இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்யவேண்டாம் என்று பாளயம் எங்கும் கூறும்படி கட்டளையிட்டான்; இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது. செய்ய வேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததுமல்லாமல் அதிகமாயும் இருந்தது. வேலைசெய்கிறவர்களாகிய ஞான இருதயமுள்ள யாவரும் வாசஸ்தலத்தை உண்டாக்கினார்கள். அதற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும், விநோத நெசவுவேலையாகிய கேருபீன்களுள்ள பத்து மூடுதிரைகளைப் பண்ணினான். ஒவ்வொரு மூடுதிரை இருபத்தெட்டு முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருந்தது; மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருந்தது. ஐந்து மூடுதிரைகளை ஒன்றோடொன்று இணைத்து, மற்ற ஐந்து மூடுதிரைகளையும் ஒன்றோடொன்று இணைத்தான். இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் ஓரத்தில் இளநீலநூலால் ஐம்பது காதுகளை உண்டு பண்ணி, அப்படியே இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்திலும் உண்டுபண்ணினான். காதுகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவைகளாயிருந்தது. ஐம்பது பொன்



**கொக்கிகளையும் பண்ணி, அந்தக் கொக்கிகளால் மூடுதிரைகளை ஒன்றோடொன்று இணைத்துவிட்டான். இவ்விதமாக ஒரே வாசஸ்தலமாயிற்று. வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டுமயிரினால் நெய்த பதினொரு மூடுதிரைகளையும் பண்ணினான். ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருந்தது. பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருந்தது. ஐந்து மூடுதிரைகளை ஒன்றாகவும், மற்ற ஆறு மூடுதிரைகளை ஒன்றாகவும் இணைத்து, இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டாக்கி, கூடாரத்தை ஒன்றாய் இணைத்துவிட, ஐம்பது வெண்கலக் கொக்கிகளையும் உண்டாக்கினான். சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் கூடாரத்துக்கு ஒரு மூடியையும் அதின்மேல் போடத் ~~தகசுத்தோலினால்~~ ஒரு மூடியையும் உண்டுபண்ணினான்.” (யாத்திராகமம் 36:1 – 19)**

**“பின்பு சிவப்புச் சாயம் தோய்த்த செம்மறியாட்டுக் கடாவின் தோலினால் அக்கூடாரத்திற்கு ஒரு மூடுதிரையைச் செய்தார்கள். அந்த மூடுதிரைக்கு மேலாகப் போடுவதற்குக் கடல்பசுத் தோலினால் (seals’ skins) மற்றொரு மூடுதிரையையும் செய்தார்கள்.” (யாத்திராகமம் 36:19 – <u>தமிழ் TCV மொழிப்பெயர்ப்பிலிருந்து</u>)**

இஸ்ரயேல் ஜனங்களுக்காக மோசே விண்ணப்பித்தபோது, தேவன் தம்முடைய தூதன் ஒருவர் அவர்களை வழிநடத்துவார் என்று உறுதியளித்திருந்தாலும், தம்முடைய கோபத்தினால் அவர்களை நிர்மூலமாக்காதபடிக்கு அவர்கள் மத்தியில் தாம் வாசம்செய்யப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

**யாத். 32:34 – “இப்பொழுது நீ போய், நான் உனக்குச் சொன்ன இடத்துக்கு ஜனங்களை அழைத்துக்கொண்டுபோ; என் தூதனானவர் உனக்குமுன் செல்லுவார்;”**

**யாத். 33:3 – “ஆனாலும், வழியிலே நான் உங்களை நிர்மூலம்பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன், நீங்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்றார்.”**

இதற்கிணங்க, மோசேயும் கூடாரத்தைப் பெயர்த்து, இஸ்ரயேலின் பாளயத்திற்குப் புறம்பே, அதாவது பாளயத்திற்கு அப்பால் போட்டுவித்தார்:

**யாத். 33:7 – “மோசே கூடாரத்தைப் பெயர்த்து, அதைப் பாளயத்துக்குப் புறம்பே தூரத்திலே போட்டு, அதற்கு ஆசரிப்புக் கூடாரம் என்று பேரிட்டான்.”**

இவ்வாறாக, இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும், தேவன் தம்முடைய ஆவியினால் வாசம் செய்துவருகிற ஆவிக்குரிய கூடாரமாகிய சபையானது, வணங்காக் கழுத்துள்ள மற்றும் விக்கிரக ஆராதனை செய்யும் சந்ததியிடமிருந்து விலகப்பட்டு, **“பாளயத்துக்குப் புறம்பே தூரத்திலே”** அமைக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், மாபெரும் விண்ணப்பம் பண்ணுபவரின் மத்தியஸ்த வேலையின் விளைவாக, தேவனுடைய கூடாரம் விரைவில் மீண்டும் பாளயத்தின் மத்தியில் நிறுவப்படும் என்பதை அறிந்துகொள்ளும்போது, அது இன்னும் ஆறுதலளிப்பதாக உள்ளது. இது குறித்து பாஸ்டர் ரசல் அவர்கள் தனது “விசேஷித்த பலிகளின் ஆசரிப்புக்கூடார நிழல்கள்” (Tabernacle Shadows of the Better Sacrifices) என்கிற புத்தகத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

> “…ஒப்புரவாக்கும் பணி முடிவடையும் போது, தேவன் மனுக்குலத்தை அங்கீகரித்து, மனுஷரிடையே தம்முடைய வாசஸ்தலத்தை இடம்பெறச் செய்வார். அப்போது எழுதப் பட்டவை நிறைவேறும்: ‘**மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது** (God’s dwelling – மகிமைப்படுத்தப்பட்ட சபை), **அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்** (ஜனங்களாக மாறியிருப்பார்கள்), **தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்**.’ (வெளி. 21:3)” (**ஆங்கிலப் பக்கம் – T76**)

மோசே பாளயத்திலிருந்து அகற்றிய அந்தக் கூடாரத்திற்கும், பிற்பாடு அதன் மத்தியில் அமைக்கப்பட்ட கூடாரத்திற்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்பட்டது. அதுபோலவே, சபையின் தற்போதைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலைக்கும், அதன் எதிர்கால மகிமைவாய்ந்த ஆவியினால் / ஆவியில் பிறந்த நிலைக்கும் இடையே ஒரு வியக்கத்தக்க வேறுபாடு காணப்படும்.

பூர்வகாலத்து ஆசரிப்புக்கூடாரம் சம்பந்தப்பட்ட அனைத்து விவரக்குறிப்புகளையும் (specifications), வடிவமைப்பையும் தேவன்தாமே வரையறுத்துக்கொடுத்து, மோசேயிடம் “**மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே**” செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். அதுபோலவே, தேவன் தாமே இந்த மாபெரும் நிஜமான கட்டமைப்பையும், அதன் கட்டுமானத்தையும், பரலோக மாதிரியின்படியே இருக்கும்படியாகத் திட்டமிட்டு, வடிவமைத்துள்ளார்.

பூர்வகாலக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஏதுவாக, தேவன் **பெசலெயேல்** மற்றும் **அகோலியாப்** என்கிற இரண்டு கைவினைக் கலைஞர்களை (Artisans) விசேஷமாக அழைத்து, அவர்களுக்கு அந்த வேலைகளைச் செய்வதற்குத் தேவையான விசேஷித்த ஞானத்தை அருளினார் என்பதை நினைவுகூருகிறோம். நிஜத்தில், ஆவிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டுவதற்காகத் தேவனால் விசேஷமாக அழைக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டுள்ள இருவர் கிறிஸ்துவும் அவரது சபையுமே!

தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் மூலமாக, தேவன் தாமே கிறிஸ்துவை எவ்வாறு நிஜமான பெசலெயேலாக அடையாளப்படுத்துகிறார் என்பதைக் கவனிக்கையில் சுவாரஸ்யமாக உள்ளது. பின்வரும் இணையான வேத வாசிப்புகளில் இதனை நம்மால் கவனிக்க முடியும்:

| | |
|---|---|
| **“பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை** | **“ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய** |

| | |
|---|---|
| **முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிற தற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்."** (யாத். 31:1 – 5) | **கர்த்தருடைய ஆவி அவர்மேல் தங்கியிருக்கும்."** (ஏசா. 11:1, 2) |

ஆனால், இந்த அடையாளம் காணப்படுதல் இத்துடன் முடிவடைகிறதில்லை! தேவன் பெசலெயேலைப் **பேர்** சொல்லி அழைத்தார் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த வகையிலும்கூட, தேவனுடைய பரிசுத்த ஆவி **இந்தப் பெயரின்** ஆழமான அர்த்தத்தின் மேல் நம் கவனத்தைத் திருப்புவதாகக் காண்கிறோம். அவ்வாறு பார்க்கையில், பின்வருபவை ஏதோ தற்செயலானவை அல்ல என்பது தெரிய வருகின்றது:

**பெசலெயேல்** என்றால் **"**தேவனின் நிழல்**"** ("the shadow of God") என்று பொருள்.

> இதைவிடவும் கிறிஸ்துவைப் பற்றிய அழுத்தமான விவரிப்பு வேறு ஏதேனும் இருக்க முடியாதே! அப்போஸ்தலனாகிய பவுல் எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில், கிறிஸ்துவைப் பிதாவினுடைய "தன்மையின் சொரூபம்" **(எபி. 1:1 – 3)** என்று குறிப்பிட்டுள்ளாரே!

அடுத்து, இந்த **பெசலெயேல்** என்பவர் ஊரியின் (Uri) குமாரனாக இருந்தார் –

**ஊரி** என்றால் "ஒளி" (light) என்று பொருள்.

> இயேசுவைப் பற்றி யோவான் பின்வருமாறு சாட்சி பகர்ந்தார்: **"உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:9).** மேலும் இயேசு தாமே, **"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவான் 8:12)** என்று அறிவித்தார்.

அடுத்து, இந்த **ஊரி** என்பவர் ஊரின் (Hur) குமாரனாக இருந்தார் –

சைரஸ் பாட்ஸ் (Cyrus Potts) அவர்களின் Dictionary of Bible Proper Names எனும் அகராதியின்படி ஊர் என்றால் "மேன்மையானவர் / உயர்ந்தவர்" (Noble) என்று பொருள். Oxford University Press Dictionary of Proper Names எனும் அகராதியின்படி இதற்கு "குகை" (Cavern) என்று பொருள்.

> இந்த இரண்டு கருத்துகளுமே நிஜமான பெசலெயேல் யார் எனும் அடையாளத்தை உறுதிப்படுத்த உதவுகின்றன. ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நமது நிமித்தம் தரித்திரராகி, ஒளியின் இராஜ்யங்களை விட்டு இருளின் நிழலுக்குள் உட்பிரவேசித்து, இப்படியாக ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசி பார்த்த இயேசுவின் மேன்மையான குணத்தை யாரால் மறுக்க முடியும்? உண்மையில் மேன்மையான குணமுடையவர்கள் மட்டுமே இத்தகைய தியாகங்களைச் செய்கிறார்கள்! இருளின் நிழல்கள் என்பது ஏதோ இந்தப் பாவத்தால் சபிக்கப்பட்ட பூமியில் வாழ்வதை

மாத்திரமல்லாமல், என்றென்றைக்கும் ஜீவிக்கும் உரிமை பெற்ற ஒரே மனிதனாக "குகைக்குள்" அதாவது கல்லறைக்குள் – மரண நிலைக்குள் செல்வதையும் உள்ளடக்கினதாக இருந்தது. நம்முடைய கர்த்தராகிய இயேசு எப்பேர்ப்பட்ட இரட்சகர்!

அடுத்து, இந்த **ஊர்** என்பவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார் –

**யூதா** என்றால் "துதிக்கப்பட்டவன்/புகழப்பட்டவன்" (praised) என்று பொருள்.

எப்பேர்ப்பட்ட அர்த்தம் வாய்ந்த ஒரு பெயர்! இயேசு தாம் மனிதனாவதற்கு முந்தைய பரலோக மகிமையின் நிலையில், தேவனுடைய சகல சிருஷ்டிகளிலும் மிகவும் உயர்ந்தவராகவும் மேன்மையானவராகவும், பரமசேனையின் வணக்கத்தையும் துதியையும் பெற்றிருந்தவராகவும் காணப்பட்டார். இந்தச் சுவிசேஷ யுகத்தில், அவர் தேவனுடைய மெய்யான அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் துதியைப் பெற்று வருகிறார்; இனிவரும் யுகாயுகத்திற்கும் அவர் வானத்திலும் பூமியிலுமுள்ள சகல சிருஷ்டிகளாலும் துதிக்கப்படவும் போகிறார்.

இவ்வாறாக, அவர் மனிதனாக வருவதற்கு முன்பாக மகிமையில் துதிக்கப்பட்டவராக / புகழப்பட்டவராகக் காணப்பட்டார்; பின் உலகத்திற்கு ஒளியாக மாறும்படிக்கு, தமது மேன்மையான குணலட்சணத்தில், தேவனுடைய பலத்த கரங்களுக்குள் தம்மைத் தாழ்த்தி, கிறிஸ்து இயேசு என்னும் மனுஷனாகி, கல்லறை (குகை) நிலைக்குள் உட்பிரவேசித்து, ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்; இப்போது தேவனால் மிகவும் உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டு, திவ்விய சுபாவத்தில் பங்கடைந்துள்ளார்; சந்தேகத்திற்கு இடமின்றி, இவர் பிதாவினுடைய தன்மையின் சொரூபமே! இப்பேர்ப்பட்ட ஒருவரிடமே, மனுஷர் மத்தியில் அமையப்போகும் மகா நிஜமான ஆசரிப்புக்கூடாரத்திற்கான விஷயங்களை (materials) ஆயத்தம்பண்ணும் மாபெரும் பொறுப்பைத் தேவன் ஒப்படைத்துள்ளார்.

தேவன் பெசலெயேலுக்கு **"பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும்" (யாத். 31:3, 4, 5)** அருளியுள்ளதாகக் கூறிய பிறகு, பின்வருமாறு கூறுகிறார்:

**யாத். 31:6 – "மேலும், தாண் கோத்திரத்திலுள்ள அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாபையும் அவனோடே துணையாகக் கூட்டினேன்."**

இங்கேயும், சபை நிஜமான அகோலியாப் என்பதற்கான அடையாளம் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக நாம் நம்புகிறோம், ஏனெனில் –

**அகோலியாப்** என்றால் "பிதாவின் கூடாரம்" (The Father's tent) என்று பொருள்.

இந்த யுகத்தில், தேவன் தமது ஆவியினால் வாசம் செய்து வருகிற கூடாரமாகிய சபையின் உண்மையான பணியை இதைவிடத் துல்லியமாகச் சொல்லக்கூடிய ஏதாகிலும் இருக்க முடியுமா? இது ஒட்டுமொத்த சபைக்கும் உண்மையாக

இருக்குமாகில், இது ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரைப் பொறுத்தவரையிலும் உண்மையாயிருக்கும். அப்போஸ்தலன் அறிவிக்கிறபடி, நாம் **"தேவனுடைய ஆலயங்களாய்"** இருக்கிறோம். **"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர் களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரி. 3:16).**

அடுத்து, இந்த **அகோலியாப்** அகிசாமாகின் (Ahisamach) குமாரனாக இருந்தார் –

**அகிசாமாக்கு** என்றால் "என் சகோதரன் ஆதரித்திருக்கிறார்" (my brother has supported) என்று பொருள்.

எப்பேர்ப்பட்ட உண்மை! ஆம்! நமது மூத்த சகோதரனாகிய இயேசுவின் ஆதரவு இல்லாமல் நம்மால் எதையும் செய்ய முடியாதே! நாம் கொடிகளாக மாத்திரமே இருக்கிறோம், நாம் நமது ஆதரவுக்காகத் திராட்சச்செடியைச் சார்ந்திருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். **"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்... என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5).**

அடுத்து, இந்த **அகிசாமாக்கு** தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார் –

**தாண்** என்றால் "நியாயாதிபதி" (judge) என்று பொருள்.

சபையானது ஏற்ற காலத்தில் உலகத்தை நியாயந்தீர்க்கும் என்பதே தேவனுடைய ஏற்பாடு (**1 கொரி. 6:2**), அந்தச் சபையில் அங்கத்தினராக மாறப்போகிற அனைவரும் இப்போது தங்களைத் தாங்களே நிதானித்துப் பார்க்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். "நம்மை நிதானமாக சரியாக நியாயந்தீர்ப்பது" (Proper Judging of Ourselves) என்கிற தலைப்பின் கீழ், பாஸ்டர் ரசல் அவர்கள் "வேதாகமப் பாடங்கள்" (Scripture Studies) எனும் ஆறாம் தொகுதியில் (ஆங்கிலப் பக்கம் 409) பின்வருமாறு கூறுகிறார்:

"அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு புதுச் சிருஷ்டியாக நமது சரியான வளர்ச்சியைப் பற்றியும், நம்மை நிதானமாகச் சரியாக நியாயந்தீர்ப்பது அல்லது தீவிரமான சுய பரிசோதனை செய்வது (criticizing) பற்றியும் குறிப்பிடும்போது: '**இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே (பயபக்தியோடே) பூரணப்படுத்தக் கடவோம்**' **(2 கொரி. 7:1)** என்கிறார். 'தன்னைத்தான் சோதித்தறியக்கடவன்' – அவன் தனது விழுந்துபோன மாம்ச சுபாவத்தின் பலவீனங்களையும் அசுத்தங்களையும் உற்றுக் கவனித்து, தன்னைச் சுத்திகரித்துக்கொள்ள நாடிட வேண்டும். **'பழைய மனுஷனின்' செய்கைகளைக் களைந்துவிட்டு, புதுப்பிக்கப்பட்டவனாய், மகிமையின் மேல் மகிமையடைந்து, நமது முன்மாதிரியும் மீட்பரும் கர்த்தருமாகிய தேவனுடைய அன்பான குமாரனின் சாயலை அதிகமதிகமாக அடைவானாக.** மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துவது என்னவெனில், **முடிந்தவரை நாம் நமது மாம்சத்தைச் சுத்திகரிப்பது மாத்திரமல்லாமல்**, புதிய சிந்தை, அதாவது, பரிசுத்தமான

தீர்மானங்கள் அல்லது புதிய சித்தம் என்பதற்கு முழுக் கட்டுப்பாடு கொடுக்கப்பட்டு, கிறிஸ்து வாழ்ந்து காண்பித்ததுபோல, எந்தவொரு எண்ணத்தையும் தேவ சித்தத்திற்குச் சிறைப்படுத்தும்படியாக, **நமது ஆவியையும், அதாவது நமது சிந்தையையும் சுத்திகரிக்க வேண்டும்** என்று வலியுறுத்துகிறார்.

இவ்வாறாக, இஸ்ரயேலரின் வனாந்தரப் பிரயாணங்கள் எனும் நிழலைக்கொண்டு, தேவனுடைய வருங்கால ஆசரிப்புக்கூடாரமாக இருப்பதற்காய் அழைக்கப்பட்ட கிறிஸ்து மற்றும் அவரது சபையினுடைய குணலட்சணம், சிந்தை, சித்தம் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றின் அழகைப் பரிசுத்த ஆவி நமக்குச் சித்தரித்துக் காண்பிக்கின்றது.

ஆனால், இந்தக் குறிப்பிட்ட வேதாகமப் பகுதியிலிருந்து நம்மால் மற்ற பாடங்களையும் கற்றுக்கொள்ள முடியும். அவற்றில் '**ஈடுபலி**' மற்றும் '**பாவநிவாரண பலி**' (sin-offering) ஆகிய உபதேசங்களை உறுதிப்படுத்தும் பாடங்களும் அடங்கும். நாம் இங்கே சற்று இடைநிறுத்தி, அந்தப் பூர்வகால ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக நின்றுகொண்டு, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தின் சில அம்சங்களைக் குறித்துத் தியானிக்கப்போகிறோம்.

"**ஆசரிப்புக்கூடாரத்தின் ஒவ்வொரு அம்சமும், தேவனுடைய பரிசுத்தவான்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட விசேஷ அர்த்தத்தைக் கொண்டிருந்தது**" என்கிற கூற்றானது அந்த ஆசரிப்புக்கூடாரத்தைக் கட்டமைப்பதில், சிறுசிறு விஷயங்கள் உட்பட அனைத்திலும் மோசே மிகுந்த ஜாக்கிரதையாக வழிநடத்தப்பட்டார் என்பதிலிருந்து நிரூபணமாகிறது. **இந்தப் பரிசுத்தவான்கள்** தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள்; இந்தத் தம்முடைய பிள்ளைகளை நிழல்கள் வாயிலாகப் போதித்து, பக்திவிருத்தியடையச் செய்யும்படிக்கு அவர் விரும்பினார். நிச்சயமாக, இஸ்ரயேலருக்குத் திருஷ்டாந்தங்களாகச் சம்பவித்து, நம்முடைய புத்திமதிக்கும், பக்திவிருத்திக்கும் ஏதுவாக நமக்காக எழுதி வைக்கப்பட்ட காரியங்கள் அடங்கிய அந்த மாபெரும் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆசரிப்புக்கூடாரம் காணப்படுகிறது.

இந்தக் குறிப்பிட்ட தியான ஆராய்ச்சியில், நாம் ஆசரிப்புக்கூடாரத்தையும் அதன் மூடுதிரைகளையும் பற்றி மாத்திரம் தியானிக்கப் போகிறோம். ஆகையால், இவை சம்பந்தமாக தேவன் கொடுத்த அறிவுறுத்தல்களை முதலில் பார்த்துவிடலாம்: (**யாத். 26:1 – 12, 14**)

1. "**மேலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலினாலும் இளநீலநூலினாலும் இரத்தாம்பர நூலினாலும் சிவப்புநூலினாலும் நெய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை** (tabernacle) **உண்டுபண்ணுவாயாக; அவைகளில் விசித்திர வேலையாய்க் கேருபீன்களைச் செய்யக்கடவாய்.**"

2. "**ஒவ்வொரு மூடுதிரையும் இருபத்தெட்டு முழ நீளமும் நாலு முழ அகலமுமாயிருப்பதாக; மூடுதிரைகளெல்லாம் ஒரே அளவாயிருக்கவேண்டும்.**"

3. "**ஐந்து மூடுதிரை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவேண்டும்; மற்ற ஐந்து மூடுதிரைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.**"

4. "**இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் கடை ஓரத்தில் இளநீலநூலால் காதுகளை**

**உண்டுபண்ணு; இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் கடைஓரத்திலும் அப்படியே செய்வாயாக.”**

5. “**காதுகள் ஒன்றோடொன்று இணையும்படி ஒரு மூடுதிரையில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணுவாயாக.”**

6. “**ஐம்பது பொன் கொக்கிகளையும் பண்ணி, மூடுதிரைகளை ஒன்றோடொன்று அந்தக் கொக்கிகளால் இணைத்துவிடுவாயாக, அப்பொழுது அது ஒரே வாசஸ்தலமாகும்.”**

7. “**வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டுமயிரால் பதினொரு மூடுதிரைகளை உண்டுபண்ணுவாயாக.”**

8. “**ஒவ்வொரு மூடுதிரை முப்பது முழ நீளமும் நாலு முழ அகலமுமாய் இருக்க வேண்டும்; பதினொரு மூடுதிரைகளும் ஒரே அளவாயிருக்க வேண்டும்.”**

9. “**ஐந்து மூடுதிரைகளை ஒன்றாகவும், ஆறு மூடுதிரைகளை ஒன்றாகவும் இணைக்க வேண்டும்; ஆறாம் மூடுதிரையைக் கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப் போடுவாயாக.”**

10. “**இணைக்கப்பட்ட ஒரு மூடுதிரையின் கடை ஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப் பட்ட மற்ற மூடுதிரையின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணி,…”**

11. “**ஐம்பது வெண்கலக் (தாமிரம் / copper) கொக்கிகளைச் செய்து, கொக்கிகளைக் காதுகளில் மாட்டி, ஒரே கூடாரமாகும்படி அதை இணைத்து விடுவாயாக.”**

12. “**கூடாரத்தின் மூடுதிரைகளில் மிச்சமான பாதி மூடுதிரை வாசஸ்தலத்தின் பின்புறத்தில் தொங்கவேண்டும்.”**

14. (இந்த 14 ஆம் வசனத்தை மாத்திரம் TCV மொழிப்பெயர்ப்பிலிருந்து வாசிக்கவும்:) “**அக்கூடாரத்திற்காக மூடுதிரையை, சிவப்புச் சாயம் தோய்த்த செம்மறியாட்டுக் கடாவின் தோலினால் செய்யவேண்டும். அதற்கு மேலாகப் போடுவதற்காக, கடல்பசுத் தோலினால் மற்றொரு மூடுதிரையைச் செய்யவேண்டும்.”**

* * * * * * * * * * *

யேகோவா தேவன் தமது மகிமையான மீட்பின் திட்டமாகிய யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தை, நித்திய நோக்கத்தை, கிறிஸ்து இயேசுவுக்குள் தீர்மானம் பண்ணியிருந்தார் என்பதை நாம் நினைவுகூர்வது நலமாக இருக்கும். **எபே. 3:9** ஆம் வசனத்தில்: “**தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே**” என்று நாம் வாசிக்கிறோம்.

ஆனால் பாருங்கள்! ஆதியிலே தேவனோடு இருந்த ‘**லோகோஸ்**’ (மனிதனாக

வருவதற்கு முந்தைய நிலை) என்பவரில் இத்திட்டம் தீர்மானிக்கப்படவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். மாறாக, அந்த வார்த்தையானவர் பிதாவோடு தமக்கு இருந்த மகிமை நிலையை விட்டுவிட்டு, அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாம்சமாக **(யோவா. 1:14)**, **‘கிறிஸ்து இயேசுவாக’** மாறினார். **‘கிறிஸ்து’** என்றால் **‘அபிஷேகம் பண்ணப்பட்டவர்’** என்று பொருள்; **நம்முடைய கர்த்தர் மனிதனாவதற்கு முந்தைய நிலையில், பிதாவினால் அபிஷேகம் பண்ணப்பட்டவராக இருக்கவில்லை**.

தேவனுடைய மனதில் கருத்தரிக்கப்பட்ட இத்திட்டமானது, குறுகிய வரம்புக்குட்பட்ட எந்தவொரு சிருஷ்டியாலும் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகும். இருப்பினும், தேவன் இத்திட்டத்தைத் தமக்குப் பிரியமான வழியில் வெளிப்படுத்தச் சித்தம் கொண்டார். அதன்படி, அவர் முதலில் பூர்வகாலத்துப் பரிசுத்த மனுஷரைத் தமது பரிசுத்த ஆவியினால் ஏவி, தம் வார்த்தைகளை எழுதும்படிச் செய்தார் **(2 பேது. 1:21)**. அதன்பிறகு, இரட்சிப்பு உண்டாக்கும் பலத்த புயமாகிய தமது குமாரனை அனுப்பினார்.

இருப்பினும், தேவனை மனுஷனுக்கு வெளிப்படுத்துவதற்காய் வரவிருந்த அந்த மேசியாவுக்கு ஏற்படவிருந்த பாடுகளையும் தாழ்ச்சியையும் குறித்துச் சாட்சி கொடுத்த தீர்க்கதரிசிகளின் செய்திகளையும் அறிக்கைகளையும் ஜனங்கள் நம்பவில்லை. இஸ்ரயேலர் அதை அவ்வாறு பார்க்க விரும்பவில்லை. இஸ்ரயேலுக்கு மீண்டும் இராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொடுக்கப்போகிற வல்லமையும் கனமும் மகிமையும்வாய்ந்த மகத்தான ஒரு மேசியாவையே, ஒரு போர்வீரனையே அவர்கள் எதிர்பார்த்தார்கள், வாஞ்சித்தார்கள். இந்த ஆசைகளால் அவர்கள் வெகுவாய்க் குருடாக்கப்பட்ட காரணத்தினால், இயேசு தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வந்தபோது, அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளாமல் போயினர் **(யோவா. 1:11)**. அதேபோல, இந்தச் சுவிசேஷ யுகத்தின் அப்போஸ்தலரும், அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களும் ஆவிக்குரிய இஸ்ரயேலரிடம் பிரசங்கித்தபோது, எந்தப் பெரிய வரவேற்பும் கிடைத்துவிடவில்லை. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் கோடிக்கணக்கான ஜனங்களில் வெகு சிலரே, தேவனுடைய கிறிஸ்துவை, இரட்சிக்கும் பலத்த புயமாக உண்மையில் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இயேசுவின் முதலாம் வருகையின் போது ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளாததற்கு ஒரு காரணம், அவர் மகிமைபொருந்திய இராஜாவாக வராமல், சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ள நசரேயனாக, உலகத்தின் பார்வையில் எந்தவொரு நடைமுறைப் பயன்பாட்டிற்கும் உதவாத மிக மென்மையான இளங்கிளையைப் போல வந்ததே ஆகும். **ஆம்! அவர் வறண்ட நிலத்திலிருந்துதுளிர்க்கிற வேரைப் போலவே இருந்தார்**. ஏதோ தாவீதின் வம்சம் அதன் வீரியத்தை / உயிர்ச்சக்தியை இழந்துவிட்டது போலக் காணப்பட்டது. இதையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது, இயேசுவின் மாம்சம், அவருடைய மனுஷீகம் மற்றும் அது சம்பந்தப்பட்ட அனைத்தும்தான் தேவனுடைய இந்த வல்லமையுள்ள புயத்தை ஜனங்களின் கண்களில் அற்பமாகக் காணப்பட வைத்தன என்பது தெளிவாகிறது.

கலிலேயாவைச் சேர்ந்த இந்தத் தாழ்மையான மனுஷனுக்குள் யேகோவா தேவன் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கச் சித்தம் கொண்டிருந்தார் என்பதை எவராலும் உணர்ந்துகொள்ள முடியவில்லை. வேதபாரகரும் பரிசேயரும்கூட இந்த நசரேயனின்

மாம்சீகக் கூடாரத்திற்குள் தேவ ஆவி வாசம் செய்ததை ஒத்துக்கொள்ளவில்லை. இவ்வாறாக, தேவன் எவருக்குள் பாவநிவாரணத்தின் இரகசியத்தை மறைத்து வைத்திருந்தாரோ, அந்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவோ, தம்மை முதலில் அடையாளம் கண்டு ஏற்றுக்கொண்டிருக்க வேண்டிய ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவருடைய மனத்தாழ்மையும் சாந்தமும் தேவனுடைய பார்வையில் போற்றத்தக்கதாக இருந்தாலும், மனுஷரால் அவை வெறுக்கப்பட்டு, அலட்சியம் செய்யப்பட்டு, புறக்கணிக்கப்பட்டன. ஆம்! அவருக்கு நாம் விரும்பக்கூடிய ரூபமோ, அழகோ, பொலிவோ இருக்கவில்லை. இது சம்பந்தமான ஏசாயாவின் தீர்க்கதரிசன வார்த்தையை நாம் வாசிக்கலாம்:

<u>ஏசாயா 53:1 – 6</u>: **"எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமும் இல்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."**

இயேசு 'லோகோஸ்' ஆக இருந்தபோது பெற்றிருந்த உன்னத நிலையையும், ஆவிக்குரிய தளத்தில் அவருக்கிருந்த மகிமையையும், அவர் மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக மாறியபிறகு அடைந்த தாழ்மை நிலையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்; ஆவியின் சுபாவத்திற்கும் மனித சுபாவத்திற்கும் உள்ள வித்தியாசத்தையும், ஆவிக்குரிய தளத்தில் அவர் பெற்றிருந்த கனத்தையும் மதிப்பையும், பின்னர் மனிதத் தளத்தில் கீழான ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்ட நிலையையும் சிந்தித்துப் பாருங்கள். இதனடிப்படையில், ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப்புற மூடுதலாகிய கடல்பசுத் தோல் மூடி எதனைக் குறிக்கக்கூடும் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

ஆம்! அப்பேர்ப்பட்ட **"ஒளியின் இராஜ்யங்களிலிருந்து இருளின் நிழலுக்கு"** அவர் தம்மைத் தாழ்த்தி இறங்கி வந்தார்.

கூடாரத்திற்கு வெளியிலிருந்து பார்க்கும்போது, அதன்மேல் போடப்பட்டிருந்த கடல்பசுத் தோல் எனும் மூடுதிரை மட்டுமே தெரியும். அது அழகாக இராமல், மாறாகச் சொரசொரப்பாக, பார்ப்பதற்கு அழகற்ற தோலாகக் காணப்பட்டது. இதைக் குறித்து சகோதரர் ரசல் அவர்கள் 'ஆசரிப்புக்கூடார நிழல்கள்' புத்தகத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

> “ஆசரிப்புக்கூடாரத்தின் மகிமையும் அழகும், அதன் பொன்னாலான சுற்றுப் புறங்களும், அழகாகச் செதுக்கப்பட்ட பொன் பணிமுட்டுகளும், விசித்திர வேலைப் பாடுகள் கொண்ட திரைச்சீலைகளும் ஜனங்களின் பார்வையிலிருந்து முற்றிலும் மூடி மறைக்கப்பட்டிருந்தது என்பதும், வெளிப்புற சூரிய ஒளிகூட உட்புகாதபடித் தடுக்கப் பட்டிருந்தது என்பதும், அதற்கிருந்த ஒரே ஒளி ‘பரிசுத்த ஸ்தலத்தில்’ இருந்த குத்துவிளக்கும், ‘மகா பரிசுத்த ஸ்தலத்தில்’ இருந்த ஷெக்கினா மகிமையும் மாத்திரமே என்பதும் சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இருப்பினும், இது அதன் ஆசரிப்புகளிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளுகிற பாடத்தோடு மிகச்சரியாகப் பொருந்தி வரக்கூடியதாய் இருக்கிறது. தேவன் அந்த நிழலான கூடாரத்தையும் அதன் அழகினையும் திரைகளாலும் சொரசொரப்பான, அழகற்ற தோல்களாலும் மூடி மறைத்ததுப் போல, ஆவிக்குரிய காரியங்களின் மகிமைகளையும் அழகுகளையும், அர்ப்பணிக்கப்பட்ட நிலைக்குள் நுழையும் ‘இராஜரிக ஆசாரியக் கூட்டத்தாரால்’ மட்டுமே பார்க்க முடியும். இவர்கள் மாத்திரமே உலகத்தாரும், வெளியிலுள்ள அனைவரும் புரிந்துகொள்ளத் தவறிய ஒரு மறைவான ஆனால் மகிமையான நிலைக்குள்ளாக உட்பிரவேசிக்கிறார்கள். அவர்களின் மகிமையான நம்பிக்கைகளும், புதுச் சிருஷ்டிகளாக அவர்கள் பெற்றிருக்கும் நிலைப்பாடும் சக மனுஷரிடமிருந்து மறைக்கப்பட்டுள்ளது.” (**ஆங்கிலப் பக்கம்** – T127)

கடல்பசு என்பது ஒரு நீர்வாழ் விலங்கு என்பதைக் கவனிக்க வேண்டும். கூடாரத்தின் மூடிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மற்ற அனைத்து விலங்குகளும் நிலவாழ் விலங்குகள் ஆகும். இது நமக்கு அழகானதொரு கருத்தை உணர்த்துகிறது: கடல்பசு தனது இயற்கையான சூழலிலிருந்து (நீர்நிலையிலிருந்து) எடுக்கப்பட்டு, அந்த ஜீவனுக்குத் தான் மரித்து, கூடாரத்தின் முதல் மூடியாக மாறுகிறது, அதுபோல, **மனுஷனாகிய** கிறிஸ்து இயேசுவாக மாறுவதற்காக, ‘லோகோஸ்’ தமது இயற்கையான சூழலிலிருந்து (ஆவிக்குரிய தளம்) எடுக்கப்பட வேண்டியிருந்தது; அவருக்குள்தான் தேவன் பாவநிவாரணத்தின் இரகசியத்தை மறைத்து வைத்திருந்தார்.

இயேசு தம்முடைய பிதாவின் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, இதைத் தவிர வேறு வழியும் இருக்கவில்லை; ஏனெனில், மனிதனை மீட்கவும், ஒரு பாவநிவாரணத்தை அல்லது ஒப்புரவாக்குதலை ஏற்படுத்தவும் கர்த்தர் ஒரு மனிதனாக, அதாவது மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக மாற வேண்டியிருந்தது. அதன் மூலமாகவே அவரால் எல்லோருக்குமான ஈடுபலியாகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்க முடிந்தது. (**1 தீமோ. 2:5, 6**)

இயேசு பாடுபடுவது அவசியமில்லாதிருந்தாலும், அவர் அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராக மரிக்க வேண்டியிருந்தது. இருப்பினும், இயேசு தம்மை அர்ப்பணித்தபோது, அவருக்குள் ஜெநிப்பிக்கப்பட்ட ‘புதுச் சிருஷ்டி’ பூரணப்பட வேண்டியிருந்தது – இது பாடுகளின் மூலமாக மட்டுமே சாத்தியமாகக்கூடிய ஒன்றாகும் (**எபி. 2:10**). இந்தப் பாடுகளினால் அவர் **துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்!**

அதேபோல, கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதைச் சகிப்பதற்கும், அவரோடு கூடப் பாடுபடுவதற்கும், அவரைப் போலவே பாடுகளின் மூலம் பூரணமடைவதற்கும், பின்னர்

ஏற்ற காலத்தில் அவருடைய மகிமையில் பங்கடைவதற்கும் நமக்கும்கூடப் பாக்கியம் கிடைத்துள்ளது. ஆனால், நாம் அவரோடு பாடுபடுவதற்கு முன்பு, இந்த ஈடுபலியின் புண்ணியத்தை நமக்கென்று உரித்தாக்கிக்கொள்வது அவசியமாக இருந்தது. அப்போதுதான் நாம் இயேசுவுக்கு உடன்-பலியிடுபவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட முடியும். இப்படியாக, அவர் **நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் என்றும், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது** என்றும் நம்மால் அடையாளங்கண்டுகொள்ள முடிகிறது.

**"நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை"** – இது எப்பேர்ப்பட்ட வாக்கியம்! நாம் தண்டனைக்குப் பாத்திரமான குற்றவாளிகள் என்பதையும், நமது அக்கிரமங்களுக்கான பலன்களை நாமே சுமந்திருக்க வேண்டும் என்பதையும், தேவசமாதானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தகுதியற்றவர்கள் என்பதையும் நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. இருப்பினும், இயேசு இவற்றையெல்லாம் நமக்காகச் சுமந்தார்! இதன் மூலமாகவே நாம் இப்போது அவருடைய பலியின் புண்ணியத்தின் மீதான விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் பட்டு (ஏற்புடையவர்களாக முன்வைக்கப்பட்டு), தேவனிடத்தில் சமாதானம் பெற்றுள்ளோம். ஆம்! **நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.**

* * * * * * * * * * *

அவர் நெருக்கப்பட்டும், துன்புறுத்தப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவுமில்லை, தேவனுடைய மேற்பார்வைகளுக்கு எதிராகக் கலகம் செய்யவுமில்லை.

இது சம்பந்தமான தீர்க்கதரிசியின் வார்த்தைகளைத் தொடர்ந்து வாசிக்கலாம்:

<u>ஏசாயா 53:7 – 9</u>: **"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஓர் ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத் தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."**

இந்த வசனங்களில்தான் ஆசரிப்புக்கூடாரத்தின் (கடல்பசுத் தோலாலான மூடுதலுக்கு அடியில் காணப்பட்ட) இரண்டாவது மூடுதலாகிய, சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் (rams' skins dyed red) மூடியின் முக்கியத்துவத்தைப் பற்றிய குறிப்பைக் காண்கிறோம்.

இயேசு முப்பது வயதை அடைந்தபோது, அவர் முதலாம் **மனிதனாகிய** ஆதாமுக்குச் சரி

சமானமான ஈடாகக் காணப்பட்டார். அவர் ஒரு பரிபூரண **மனுஷனாக** இருந்தபடியால், ஆதாமிற்கும் அவனுக்குள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட முழு மனுக்குலத்திற்கும் ஈடுபலியாகத் தம்முடைய ஜீவனை அவரால் ஒப்புக்கொடுக்க முடிந்தது. அதற்கிணங்க, தேவனுடைய சித்தத்தைச் செய்யவும், தேவன் கிறிஸ்து இயேசுவுக்குள் தீர்மானித்திருந்த அந்தத் திட்டத்தை நிறைவேற்றவும், "**அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக**" (**வெளி. 13:8**) மாறவும் அவர் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

**தேவனுக்குப் பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே பிரியமானது** என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார்; இருப்பினும், அவருடைய அர்ப்பணிப்பின்படி, அவருடைய கீழ்ப்படிதல் மரணபரியந்தம் நீடிக்க வேண்டியிருந்தது! இயேசுவும் எவ்வித தயக்கமுமின்றி, தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கும்படியாக, யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெறுவதற்காய் வந்தார்; (அவரிடம் பாவமில்லாதபடியால்) இது பாவ மன்னிப்பிற்கான ஞானஸ்நானமாக இருக்கவில்லை, மாறாக, பிதாவின் சித்தத்திற்குத் தம்மை அர்ப்பணிப்பதற்கான அடையாளமாக இருந்தது. இதன் மூலம் அவர் தமக்காக மரித்து (அதற்கேற்ப அடக்கம் பண்ணப்பட்டு – யோவான் அவரைத் தண்ணீருக்குள் மூழ்கடித்தது போல), தேவனுக்காக மாத்திரம் பிழைத்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் யோவான் கொடுத்த சாட்சியைக் கவனிப்போமாக: "**இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (தேவன் தாமே ஏற்படுத்திக்கொடுத்த ஆட்டுக்கடா).**"

இயேசு ஒருபோதும் முறுமுறுக்கவில்லை, மாறாக எப்போதும் தம்மைத் தாழ்மையாக தேவ சித்தத்திற்கே முழுமையாகக் கீழ்ப்படுத்தினார். ஆதாமுக்குள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட அனைவரும் மீட்கப்பட்டு, மீண்டும் ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கேதுவாக, தேவ ஆட்டுக்குட்டியாக அவர் மரணமடைய நேரிட்டது. இதை நிறைவேற்றும்படிக்கே, அந்த 'வார்த்தை' மாம்சமாகி, மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக மாறி, பின்னர் அந்த மனுஷீகத்தை மரணத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியமாகக் காணப்பட்டது. இதைத்தான் சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் எனும் மூடி நமக்குக் காட்டுகிறது. கிறிஸ்துவின் இரத்தத்தையும், அவருடைய புண்ணியம் நிறைந்த பலியையும் நேரடியாகச் சுட்டிக்காட்டும் ஒரே மூடி இதுவே!

* * * * * * * * * *

உலகத்தின் பாவங்களுக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமானது ஏற்கெனவே செலுத்தப்பட்டிருந்தாலும், அது இன்னும் உலகத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை. சபை அங்கங்கள் அனைவரும் அந்தப் புண்ணியத்தைப் பெற்றுக்கொண்டு, அதன் மூலம் தங்களின் நீதிமான்களாக்கப்பட்ட மனுஷீகத்தை இயேசுவின் மாபெரும் பாவநிவாரண பலியின் ஒரு பகுதியாக ஒப்புக்கொடுத்து, இப்படியாக இயேசுவோடு இணைந்து, பூமியின் வம்சங்களை எல்லாம் ஆசீர்வதிக்கப்போகிற ஆபிரகாமின் சந்ததியாக மாறும் வரைக்குமே, உலகம் அந்தப் புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளப்போவதில்லை. (**கலா. 3:29**) ஒப்புரவாக்குதலின் புண்ணியம் அல்லது பாவநிவாரணத்தின் புண்ணியம் என்பது முற்றிலும் '**மீட்கும்பொருள்**' பலியிலேயே உள்ளது; இருப்பினும், உலக மனுக்குலத்திற்கு அது பயன்படுத்தப்படும் வாய்க்காலாக, 'பாவநிவாரண பலி' (sin-offering) அமைகிறது.

ஆசரிப்புக்கூடார நிழல்களில், பாவநிவாரண நாளில், காளை மற்றும் வெள்ளாட்டுக்கடா ஆகிய இரண்டு பாவநிவாரண பலிகள் – இரண்டு விலங்குகள் – கொல்லப்பட்டன. காளை கிறிஸ்து இயேசுவையும், வெள்ளாட்டுக்கடா சபையையும் பிரதிநிதித்துவப்படுத்தின. இங்கே, உண்மையில் பாவநிவாரண புண்ணியம் எதில் காணப்பட்டது என்பதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். பாவநிவாரண பலியில் வெள்ளாட்டின் பங்கை முற்றிலுமாக நீக்கிவிட்டாலும்கூட ஜனங்களுக்கான பாவநிவாரண ஆசீர்வாதங்களில் எந்தக் குறைவும் ஏற்பட்டிருக்காது. இது குறித்து பாஸ்டர் ரசல் அவர்களின் வரிகளை மீண்டும் இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறோம்:

> **“அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளையிட்ட இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும் என்றான். மோசே ஆரோனை நோக்கி: நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கட்டளையிட்டபடியே, உன் பாவநிவாரண பலியையும் உன் சர்வாங்க தகனபலியையும் செலுத்தி, உனக்காகவும்** (‘அவரது சரீரத்தின்’ அங்கத்தினராக அழைக்கப்படுபவர்களுக்கு இது தேவைப்பட்டது) **ஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்து, ஜனங்களுடைய பலியையும் செலுத்தி, அவர்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய் என்றான்.” (லேவி. 9: 6, 7)**
>
> “நம்முடைய கர்த்தராகிய இயேசுவானவர் (பாவங்களுக்காகப் பலியிடப்பட்ட காளை), ‘அவரது சரீரமாகிய’ ‘சிறுமந்தை’ மற்றும் முழு உலக மனுக்குலம் ஆகிய இரண்டையும் மீட்பதற்குப் போதுமானவராக இருந்தார் என்பதை இந்த நிழல் சித்தரித்துக் காண்பிக்கின்றது. பாவநிவாரண பலியில் சபையின் பங்கை முற்றிலும் தவிர்த்திருக்க முடியும்: நாம் நமது ‘இடுக்கமான வழியின்’ விசேஷித்த சோதனைகளிலிருந்தும், பலி சார்ந்த பாடுகளிலிருந்தும் தப்புவிக்கப்பட்டு, மற்ற உலக மனுக்குலத்தைப் போலவே பூரண மனித சுபாவத்திற்கு மீட்டெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்த மாபெரும் பலியின் வேலைக்கு இயேசுவைத் தேர்ந்தெடுத்தது மட்டுமல்லாமல், அவரை ‘அவரது சரீரமாகிய சபைக்கு’ அதிபதியாக அல்லது தலைவராக ஆக்குவதும், இவர்களும் தங்களுடைய அதிபதியைப் போலவே மாம்சத்தில் பாவநிவாரண பலிகளாகப் (sin-offerings) பாடுபடுவதன் மூலம், ஆவிக்குரிய ஜீவிகளாகப் பூரணப்பட வேண்டும் என்பதும் யேகோவா தேவனுக்குப் பிரியமாயிருந்தது.” **(எபி. 2:10; கொலோ. 1:24)** (**ஆங்கிலப் பக்கம் – T79**)

இயேசுவின் மாம்சம், அதாவது அவருடைய மனுஷீகம், மீட்கும்பொருள் பலியைச் சாத்தியமாக்கியது. தேவனுடைய கிருபையும், அந்தப் பலியின் புண்ணியம் இப்போது நமக்குத் தரிப்பிக்கப்பட்டுள்ள காரியமும், பாவநிவாரண பலிகளில் நாம் இயேசுவோடு பங்குபெறுவதைச் சாத்தியமாக்கின. அதன்படி, பாவநிவாரண பலியின் (sin-offering) காளையில் இயேசு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதால், கர்த்தருடைய வெள்ளாட்டில் சபை பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். காளையோ வெள்ளாடோ தானாகவே பலியாகவில்லை, மாறாக இரண்டும் ஒரே பிரதான ஆசாரியரால் பலிசெலுத்தப்பட்டன; இவ்வாறு அவை அவருடைய பாவநிவாரண பலிகளாகக் (sin-offerings) கருதப்படுகின்றன.

ஆட்டுக்கடாத் தோல்களுக்குக் கீழே இருந்த இன்னொரு மூடுதலாக ஆட்டுமயிராலான

(goats' hair) மூடுதிரை காணப்பட்டது. இது நம்முடைய கர்த்தரின் பாவநிவாரண பலிகளுக்கு (sin-offerings) அடையாளமாக இருப்பதாக நாம் நம்புகிறோம், ஏனெனில், இந்த நோக்கத்திற்காகவே பாவநிவாரண நாள் ஆசரிப்பில் ஒரு வெள்ளாடு பயன்படுத்தப்பட்டது. பாவநிவாரண பலிகளில், தன்னில் தானே புண்ணியத்தைக் கொண்டிருந்த ஒரேயொரு பங்கு கர்த்தருடைய பங்காகும் – அது காளையின் மரணத்தில் குறிக்கப்பட்டது; இதுவும் – மற்ற அனைத்து பாவநிவாரண அம்சங்களையும் சாத்தியமாக்குகின்ற ஈடுபலிக்கு இணையான ஒன்று என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருந்தோம். இந்த அர்த்தத்தில் பார்க்கையில், பாவநிவாரண பலியில் இயேசுவின் பங்கு குறிப்பாக ஆட்டுக்கடாத் தோல் மூடுதலிலும், சபையின் பங்கு வெள்ளாட்டு மயிர் மூடுதலிலும் குறிக்கப்படுகின்றன.

இந்த வெள்ளாட்டு மயிர் மூடியின் சுற்றளவையும் (perimeter), ஆசரிப்புக்கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப் போடப்பட்ட **"ஆறாம் திரையையும்" (யாத். 26:9)** சேர்த்துப் பார்த்தால், சரியாக 144 முழங்கள் என வருவது மிகவும் சுவாரஸ்யமானதாக இருக்கிறது. இதனை 1000 என்கிற எண்ணைக் கொண்டு (ஆசரிப்புக்கூடாரத்தில் தேவனைக் குறிக்கும் எண்) பெருக்கினால், பாவநிவாரண பலியில் இயேசுவோடு பங்குபெறும் 144,000 பேரின் எண்ணிக்கை கிடைக்கிறது.

இருப்பினும், ஒரு பொதுவான நிழலாக, இந்த வெள்ளாட்டு மயிர் மூடியானது நமது பிரதான ஆசாரியரின் ஒரே பாவநிவாரண பலியின் இரண்டு பகுதிகளையுமே குறிக்கிறது – ஒன்று அவருடையது மற்றொன்று சபையினுடையது. இந்த இரண்டு பகுதிகள் சரிசமமான பகுதிகள் கிடையாது என்பது, மூடியின் ஒரு பகுதியில் ஆறு திரைகளும், மற்றொரு பகுதியில் ஐந்து திரைகளும் காணப்படுவதன் மூலம் குறிக்கப்படுகிறது. ஆறு திரைகளைக் கொண்ட பகுதி பாவநிவாரண பலியில் (sin-offering) இயேசுவின் பங்கு பெரியது என்பதைக் காண்பிக்கக்கூடும். இருப்பினும், இரண்டு பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே மூடியாயின **(யாத். 26:11)**; அதுபோலவே நிஜத்தில் பாவநிவாரண பலியின் இரண்டு பகுதிகளும் ஒரே பலியாகக் கருதப்படுகின்றன.

இயேசுவையும் சபையையும் ஒரே பாவநிவாரண பலியில் பிணைக்கும் அல்லது ஒன்றுசேர்க்கும் இணைப்பு யாதெனில், யேகோவா தேவனுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட "அந்தப் பரிபூரண மனித சுபாவமே" ஆகும். ஆனால், சபை உண்மையில் பரிபூரண மனித சுபாவத்தைக் கொண்டிருக்கவில்லை, மாறாகக் கிறிஸ்துவின் புண்ணியம் அவர்கள் மேல் சாற்றுவிக்கப்படுவதன் மூலம், தேவனுடைய பார்வையில் அவர்களிடம் பரிபூரண மனித சுபாவம் இருப்பதாகக் கருதப்படுகிறது. இது அந்த வெள்ளாட்டு மயிர் மூடியின் இரண்டு பகுதிகளையும் இணைக்கப் பயன்படுத்தப்பட்ட கொக்கிகள் செம்பு/தாமிரத்தினால் செய்யப்பட்டிருந்ததில் மிக அழகாக முன்வைக்கப்படுகிறது. பாஸ்டர் ரசல் அவர்கள் குறிப்பிடுவது போல, செம்பு/தாமிரம் மனித பரிபூரணத்தைக் குறிக்கிறது; 'ஆசரிப்புக்கூடார நிழல்கள்' புத்தகத்திலிருந்து இங்கே மேற்கோள் காட்டுகிறோம்:

> "…செம்பு/தாமிரம் என்பது தன் பரிபூரண நிலையில் காணப்படுகிற மனித சுபாவத்தைக் குறிக்கிறது…" (**ஆங்கிலப் பக்கம் – T18**)

இந்தப் பலியின் ஒருமைப்பாட்டை அப்போஸ்தலனாகிய பவுல் **1 கொரி. 10:16** – ஆம் வசனத்தில் பின்வருமாறு கூறுகிறார்: **"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?"** ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தைத் தொடர்ந்து வாசிக்கலாம்:

**<u>ஏசாயா 53:10, 11</u>: "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்."**

சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல் மூடி மாத்திரமே இரத்தத்தின் புண்ணியத்தைப் பற்றிப் பேசுகின்றது – இதிலிருந்து இப்புண்ணியம் முற்றிலும் இயேசுவின் பலிக்குள் மட்டுமே அடங்கியிருப்பது தெளிவாகிறது. இந்த மூடிக்கோ அல்லது இதற்கு மேலிருந்த கடல்பசுத் தோல் மூடிக்கோ எந்த அளவீடுகளும் (measurements) கொடுக்கப்படவில்லை. இதிலிருந்து நமக்கு என்ன விளங்குகிறதெனில், தமது குமாரனை, எல்லாருக்கும் மீட்கும்பொருளாக ஒப்புக் கொடுப்பதற்கேதுவாக, மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக மாறுவதற்காக, **"ஒளியின் இராஜ்யங்களிலிருந்து இருளின் நிழலுக்கு"** அனுப்பிவைத்து, இவ்வளவாய் உலகத்தை அன்புகூர்ந்த **தேவனுடைய அன்பு அளவிட முடியாததாயிருக்கிறது** என்பதேயாகும்! ஆம்! சகோதர சகோதரிகளே! அதை யாரால் அளக்க முடியும்?

மேலும், இந்த இரண்டு மூடிகளும் மற்ற இரண்டு மூடிகளைப் போலப் பிரிவுகளாக (units) பிரிக்கப்படவில்லை. சபை இயேசுவோடு பாவநிவாரண பலியிலும் (sin-offering), இராஜ்யத்தின் மகிமையிலும் பங்கடைகிறதே ஒழிய, லோகோஸ் தமது மகிமையை விட்டு மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக மாறிய **அப்பேர்ப்பட்ட தாழ்ச்சியிலோ**, அல்லது உலகத்தின் பாவங்களுக்காக அவர் **மீட்கும்பொருளாக அடைந்திட்ட ஈடுபலி மரணத்திலோ** சபையால் பங்கடைய முடியாது என்பதையே இது உணர்த்துகிறது. உலகத்தின் சார்பாகக் கொடுக்கப்படும் அந்த ஈடுபலியின் புண்ணியத்தைப் **பயன்படுத்துவது** கூட, கிறிஸ்து இயேசுவின் உண்மைத்தன்மையினால் மட்டுமே சாத்தியமாகிறது என்பதும் தெளிவாகிறது! நமது பாடுகள் அவருடைய பாடுகளாக இருப்பதாலேயே அதற்குத் தகுதி என்ற ஒன்று உண்டாகிறது; அவ்வாறே, நமக்குக் கிடைக்கப்போகும் மகிமையும்கூட, அவருடைய மகிமையாக இருப்பதாலேயே நமக்குக் கிடைக்கிறது, அவரே அதை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார். பிதாவாகிய தேவனும்கூட அதை அவ்வாறே பார்க்கிறார். அப்படியானால், எல்லாக் கனமும் மகிமையும் இறுதியில் இயேசுவின் உண்மைத்தன்மைக்கே உரித்தாகும் என்பதே நிதர்சனம். இக்கருத்து, தீர்க்கதரிசியின் வார்த்தைகளில் எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள்:

**<u>ஏசாயா 53:12</u> – "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக**

**வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.”**

தேவன் கிறிஸ்து இயேசுவுக்குத் திவ்விய சுபாவத்தின் மகிமையை அளித்துக் கனப் படுத்துகிறார். **தேவனுடைய பங்கில்** பங்கடைவதென்பது எப்பேர்ப்பட்ட ஒரு கனம் அல்லவா! இந்த மகிமையில் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்துடன், இராஜரிகப் பதவிக்கு உயர்த்தப்படுவதும் உள்ளடங்கும். கிறிஸ்துவின் உண்மைத்தன்மை மற்றும் அதன் விளைவாகக் கிடைத்திட்ட உயர்வு குறித்த முழு விவரமும் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளில் எவ்வளவு அழகாக நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது:

**பிலி. 2:6 – 11 – “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.”**

இவை அனைத்தும் ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்பட்ட அந்தப் பத்து மெல்லிய பஞ்சுநூல் மூடுதிரைகளிலும் **(யாத். 26:1)** பிரதிபலிக்கப்படுகின்றன. அந்தத் திரித்த மெல்லிய பஞ்சுநூலும் (linen), அதன் அழகான **வெண்மையும்** இயேசுவின் அடிப்படைத் தூய்மையையும் நீதியையும் பறைசாற்றுகின்றன. இளநீல நூலும் (blue) சிவப்புநூலும் (scarlet) மரணபரியந்தம் அவர் காண்பித்த உண்மைத்தன்மையைக் குறிக்கின்றன. இரத்தாம்பர நூலோ (purple) அவர் இராஜரிகக் கனத்திற்கு உயர்த்தப்பட்டதை அறிவிக்கிறது. **“வலியவரோடு (ஜெயங்கொள்ளும் சபை) கொள்ளைப் பொருளைப் பங்கிடுதல்”** (திருவிவிலியம்) என்பது, இந்தப் பத்து மூடுதிரைகளும் தலா ஐந்து திரைகள் கொண்ட இரண்டு பிரிவுகளாக இணைக்கப்பட்டிருப்பதன் மூலம் குறிக்கப்படுகிறது.

இருப்பினும், இங்கே இந்த இரண்டு பிரிவுகளும் பொன் கொக்கிகளால் (golden taches) இணைக்கப்பட்டிருந்தன; இது வெள்ளாட்டு மயிரினாலான பிரிவுகளை இணைத்த செம்பு/தாமிரக் கொக்கிகளிலிருந்து மாறுபட்டதாக இருக்கிறது. இராஜ்யத்தின் மகிமையில், இயேசுவையும் அவரது சபையையும் பிணைக்கும் இணைப்பு ஒருபோதும் மனித சுபாவமாக இருக்காது (அது எவ்வளவு பூரணமானதாகக் கருதப்பட்டாலும்சரி), மாறாகத் திவ்விய சுபாவமே அவர்களைப் பிணைக்கும் பிணைப்பாக இருக்கும். இவ்வாறாக, இயேசுவின் நீதியானது சபையின் மேல் சாற்றுவிக்கப்படுவதன் மூலம், அவர்களால் தங்கள் நீதிமான்களாக்கப்பட்ட மனுஷீகத்தை மரணபரியந்தம் உண்மையாக, தேவனுக்குப் பிரியமான பாவநிவாரண பலியாக (sin-offering) ஒப்புக்கொடுக்க முடிகிறது. தேவனுடைய சபையாகப்போகும் அனைவரும், அவர்கள் காண்பிக்கும் உண்மைத்தன்மைக்காக, இயேசுவின் உயர்வில் பங்குபெறும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள்; ஏனெனில் **“நாம் அவருடனேகூடப் பாடுபட்டால்”**

**(உரோமர் 8:17) "அவரோடேகூட மகிமையும் அடைவோம்."** அவர்களின் மகிமை இராஜரிக ஆசாரியத்துவத்திற்குரிய மகிமையாக இருக்கும். அதனால்தான் அவர்கள் பின்வருமாறு பாடுகிறார்கள் என்பதில் எந்த ஆச்சரியமுமில்லை:

**வெளி. 1:6 – "நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக."**

பூர்வகால ஆசரிப்புக்கூடாரத்தின் பத்து மூடுதிரைகளால், தனியே தேவனுடைய வாசஸ்தலம் உண்டானதுபோலவே, இயேசுவும் அவரது சபையும் (அந்தத் திரைகளில் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளபடி) மனுஷர்களிடத்தில் நிஜமான தேவனுடைய வாசஸ்தலமாக இருப்பார்கள் (**வெளி. 21:3**).

"ஆ, இவர்கள் இராஜரிக வம்சத்தாரே,
ஒரே இராஜாவின் பிள்ளைகளே,
அழிவற்ற தெய்வீகக் கிரீடங்களின் சுதந்திரரே,
இதோ, அவர்கள் மகிழ்ச்சியால் பாடுகிறார்களே!
ஏன் அவர்கள் இவ்வளவு எளியவர்களாகத் தோன்றுகிறார்கள்,
ஏன் இவ்வளவு அலட்சியம் செய்யப்படுகிறார்கள்?
ஆம்! அவர்களின் விலைமதிப்பற்ற வஸ்திரங்கள் புலப்படாதபடியால்,
உலகமோ அவர்களை அறியவில்லையே."

# பாகம் பதினொன்று

## லேவியராகமம் 8:1-36; யாத்திராகமம் 29:1-37

"கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, வஸ்திரங்களையும், அபிஷேக தைலத்தையும், பாவநிவாரணபலிக்கு ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு கூடையில் புளிப்பில்லா அப்பங்களையும் கொண்டுவந்து, சபையையெல்லாம் ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாகக் கூடிவரச்செய் என்றார். கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே செய்தான்: சபை ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாகக் கூடினபோது, மோசே சபையை நோக்கி: செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்ட காரியம் இதுவே என்று சொல்லி, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவித்து, அவனுக்கு உள்ளங்கியைப் போட்டு, இடைக்கச்சையைக் கட்டி, மேலங்கியை உடுத்தி, ஏபோத்தைத் தரித்து, அதின்மேல் ஏபோத்தின் விசித்திரமான கச்சையைக் கட்டி, அவனுக்கு மார்ப்பதக்கத்தை அணிந்து, மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளையும் வைத்து, அவன் தலையிலே பாகையைத் தரித்து, பாகையின்மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தைக் கட்டினான். பின்பு மோசே, அபிஷேக தைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி, அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தம்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணி, அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணினான். பின்பு மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, ஆரோனின் குமாரரை வரவழைத்து, அவர்களுக்கு அங்கிகளை உடுத்தி, இடைக்கச்சைகளைக் கட்டி, குல்லாக்களைத் தரித்து, பாவநிவாரண பலிக்கான காளையைக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்; அப்பொழுது அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தை எடுத்து, தன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட்டு, அதின்மேல் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு அதைப் பரிசுத்தப்படுத்தினான். பின்பு மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, குடல்கள்மேல் இருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனித்து, காளையையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான். பின்பு அவன் சர்வாங்க தகனபலிக்கு ஆட்டுக்கடாவைக்கொண்டுவந்தான்; அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான். ஆட்டுக்கடா சந்து சந்தாகத் துண்டிக்கப்பட்டது; கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே அதின் தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் தகனித்தான். குடல்களையும் தொடைகளையும் தண்ணீரால் கழுவினபின், மோசே ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான சர்வாங்க தகனபலியாகத் தகனித்தான். பின்பு பிரதிஷ்டைப்

படுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்தான்; அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். பின்பு அது கொல்லப்பட்டது; மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலது காதின் மடலிலும் வலது கையின் பெருவிரலிலும் வலது காலின் பெருவிரலிலும் பூசினான். பின்பு ஆரோனுடைய குமாரரையும் அழைத்தான்; மோசே அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலது காதின் மடலிலும் வலது கையின் பெருவிரலிலும் வலது காலின் பெருவிரலிலும் பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து, கொழுப்பையும், வாலையும், குடல்கள்மேலிருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேலிருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் வைத்திருந்த புளிப்பில்லா அப்பங்களின் கூடையிலுள்ள புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில் ஒன்றையும், ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின்மேலும், முன்னந்தொடையின்மேலும் வைத்து, அவைகளையெல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும்பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி, பின்பு மோசே அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின் மேலிருக்கிற தகனபலியின்மேல் தகனித்தான்; அவைகள் சுகந்தவாசனையான பிரதிஷ்டைப்பலிகள்; இது கர்த்தருக்குத் தகனபலியானது. பின்பு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டும் பலியாக அசைவாட்டினான். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே அது மோசேயின் பங்காயிற்று. மோசே அபிஷேக தைலத்திலும், பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோன்மேலும் அவன் வஸ்திரங்கள் மேலும், அவன் குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள்மேலும் தெளித்து, ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும், அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான். பின்பு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் நோக்கி: நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்புக் கூடாரவாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதைப் புசிப்பார்களாக என்று கட்டளையிட்டிருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் பிரதிஷ்டைப் பலிகளுள்ள கூடையில் இருக்கிற அப்பத்தையும் புசித்து, மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியிலே சுட்டெரித்து, பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருங்கள்; ஏழு நாளளவும் நீங்கள் பிரதிஷ்டைப்படுத்தப் படுவீர்கள். இன்று செய்ததுபோல, உங்கள் பாவநிவிர்த்திக்காக இனிமேலும் செய்யவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார். நீங்கள் சாகாதபடிக்கு ஏழுநாள் இரவும் பகலும் ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து, கர்த்தருடைய காவலைக் காக்கக்கடவீர்கள்; இப்படி நான் கற்பிக்கப் பட்டேன் என்றான். கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள்." (லேவியராகமம் 8:1 – 36)

"அவர்கள் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி அவர்களைப் பரிசுத்தப்படுத்தும் பொருட்டு, நீ அவர்களுக்குச் செய்யவேண்டியதாவது: ஒரு காளையும் பழுதற்ற இரண்டு ஆட்டுக்கடாக்களையும் தெரிந்துகொள்வாயாக. புளிப்பில்லா அப்பத்தையும், எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும் கோதுமையின் மெல்லிய மாவினால் பண்ணி, அவைகளை ஒரு கூடையிலே வைத்து, கூடையோடே அவைகளையும் காளையையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து,

ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசல் முன்பாகச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரினால் கழுவி, அந்த வஸ்திரங்களை எடுத்து, ஆரோனுக்கு உள்சட்டையையும், ஏபோத்தின் கீழ் அங்கியையும், ஏபோத்தையும், மார்ப்பதக்கத்தையும் தரித்து, ஏபோத்தின் விசித்திரமான கச்சையையும் அவனுக்குக் கட்டி, அவன் தலையிலே பாகையையும் வைத்து, பரிசுத்த கிரீடத்தைப் பாகையின்மேல் தரித்து, அபிஷேக தைலத்தையும் எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை அபிஷேகஞ்செய்வாயாக. பின்பு அவன் குமாரரைச் சேரப்பண்ணி, ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு நித்திய கட்டளையாக இருக்கும்படி, அவர்களுக்கும் அங்கிகளை உடுத்துவாயாக. ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இடைக்கச்சைகளைக் கட்டி, அவன் குமாரருக்குக் குல்லாக்களையும் தரித்து, இப்படியே ஆரோனையும் அவன் குமாரரையும் பிரதிஷ்டை பண்ணுவாயாக. காளையை ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகக் கொண்டுவருவாயாக; அப்பொழுது ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக் காளையினுடைய தலையின்மேல் வைக்கக்கடவர்கள். பின்பு நீ அந்தக் காளையை ஆசரிப்புக் கூடாரத்து வாசலண்டையிலே கர்த்தருடைய சந்நிதானத்தில் அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, உன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகள்மேல் இட்டு, மற்ற இரத்தம் முழுவதையும் பலிபீடத்தின் அடியிலே ஊற்றி, குடல்களை மூடிய கொழுப்பு யாவையும், கல்லீரலின் மேலுள்ள சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலுள்ள கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேல் தகித்துப்போட்டு, காளையின் மாம்சத்தையும் அதின் தோலையும் அதின் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய்; இது பாவநிவாரணபலி. பின்பு அந்த ஆட்டுக்கடாக்களில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள். அந்தக் கடாவை அடித்து, அதின் இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து, ஆட்டுக்கடாவைச் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் கழுவி, அவைகளை அந்தத் துண்டங்களின்மேலும் அதின் தலையின்மேலும் வைத்து, ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் தகித்துவிடுவாயாக; இது கர்த்தருக்குச் செலுத்தும் சர்வாங்க தகனபலி; இது சுகந்த வாசனையும் கர்த்தருக்குச் செலுத்தும் தகனபலியுமாய் இருக்கும். பின்பு மற்ற ஆட்டுக்கடாவையும் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள். அப்பொழுது அந்தக் கடாவை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனின் வலதுகாது மடலிலும், அவன் குமாரரின் வலதுகாது மடலிலும், அவர்கள் வலதுகையின் பெருவிரலிலும், அவர்கள் வலதுகாலின் பெருவிரலிலும் இட்டு, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து, பலிபீடத்தின் மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேகதைலத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவன் வஸ்திரங்களும் அவனுடைய குமாரரும் அவர்களுடைய வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படி, அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவனுடைய குமாரர் மேலும் அவர்களுடைய வஸ்திரங்கள் மேலும் தெளிப்பாயாக. அந்த ஆட்டுக்கடா பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவானதால், அதிலுள்ள கொழுப்பையும் வாலையும் குடல்களை மூடிய கொழுப்பையும் கல்லீரலின்மேலுள்ள சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலுள்ள கொழுப்பையும் வலதுபக்கத்து முன்னந்தொடையையும், கர்த்தருடைய சந்நிதானத்தில் வைத்திருக்கிற புளிப்பில்லா அப்பங்களுள்ள கூடையில் ஒரு அப்பத்தையும் எண்ணெயிட்ட அப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையும் எடுத்து, அவைகள் எல்லாவற்றையும் ஆரோனின் உள்ளங்கைகளிலும் அவன் குமாரரின் உள்ளங்கைகளிலும்

**வைத்து, அவைகளைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டி, பின்பு அவைகளை அவர்கள் கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியோடு வைத்து, கர்த்தருடைய சந்நிதானத்தில் சுகந்த வாசனையாகத் தகிக்கக்கடவாய்; இது கர்த்தருக்குச் செலுத்தப்படும் தகனபலி. ஆரோனுடைய பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டக்கடவாய்; அது உன் பங்காயிருக்கும். மேலும், ஆரோனுடைய பிரதிஷ்டைக்கும் அவன் குமாரருடைய பிரதிஷ்டைக்கும் நியமித்த ஆட்டுக்கடாவில் அசைவாட்டப்படுகிற மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப் படைக்கப்படுகிற முன்னந்தொடையையும் பரிசுத்தப்படுத்துவாயாக. அது ஏறெடுத்துப் படைக்கிற படைப்பானதினால், இஸ்ரயேல் புத்திரர் பலியிடுகிறவைகளில் அவைகளே நித்திய கட்டளையாக ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்வதாக; இஸ்ரயேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதானத்தில் ஏறெடுத்துப் படைக்கிற சமாதானபலிகளில் அவைகளே ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாயிருக்கவேண்டும். ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்கள், அவனுக்குப்பின், அவனுடைய குமாரரைச் சேரும்; அவர்கள் அவைகளை உடுத்திக்கொண்டு, அபிஷேகம்பண்ணப்பட்டுப் பிரதிஷ்டையாக்கப்படுவார்கள். அவனுடைய குமாரரில் அவன் பட்டத்திற்கு வருகிற ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனை செய்வதற்கு ஆசரிப்புக் கூடாரத்தில் பிரவேசிக்கும்போது, அவைகளை ஏழுநாள்மட்டும் உடுத்திக்கொள்ளக்கடவன். பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்து, அதின் மாம்சத்தைப் பரிசுத்த இடத்தில் வேவிப்பாயாக. அந்த ஆட்டுக்கடாவின் மாம்சத்தையும், கூடையிலிருக்கிற அப்பத்தையும், ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலே புசிக்கக்கடவர்கள். அவர்களைப் பிரதிஷ்டை பண்ணிப் பரிசுத்தப் படுத்தும்பொருட்டு, அவைகளால் பாவநிவிர்த்தி செய்யப்பட்டபடியால், அவைகளை அவர்கள் புசிக்கக்கடவர்கள்; அந்நியனோ அவைகளைப் புசிக்கலாகாது; அவைகள் பரிசுத்தமான வைகள். பிரதிஷ்டையின் மாம்சத்திலும் அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலம் மட்டும் மீந்திருந்ததானால், அதை அக்கினியாலே சுட்டெரிப்பாயாக; அது புசிக்கப்படலாகாது, அது பரிசுத்தமானது. இந்தப்பிரகாரம் நான் உனக்குக் கட்டளையிட்டபடி எல்லாவற்றையும் நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் செய்வாயாக; ஏழுநாளளவும் நீ அவர்களைப் பிரதிஷ்டைபண்ணி, பாவநிவிர்த்திக்காக ஒவ்வொருநாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவநிவாரண பலியாகப் பலியிட்டு; பலிபீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்த பின், அந்தப் பலிபீடத்தைச் சுத்திசெய்ய வேண்டும்; அதைப் பரிசுத்தப்படுத்தும்படி அதை அபிஷேகம் பண்ணக்கடவாய். ஏழுநாளளவும் பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய்; பலிபீடமானது மகா பரிசுத்தமாயிருக்கும்; பலிபீடத்தைத் தொடுகிற தெல்லாம் பரிசுத்தமாகும்.'' (யாத்திராகமம் 29:1 – 37)**

சீனாய் மலையடிவாரத்தில் காணப்படுகிற ஆசரிப்புக்கூடாரம் முன்பாக நாம் நின்றுகொண்டு, தேவன் தம்முடைய நிழலான ஆசாரியத்துவத்தை எவ்வித ஆசரிப்பின் மூலம் பிரதிஷ்டை செய்தார் என்பதை தியானித்துப் பார்க்கலாம் வாருங்கள். மீண்டுமாக, **"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு (இஸ்ரயேலருக்கு) சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரி. 10:11)** என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆசரிப்பு குறித்து **லேவியராகமம் 8** – ஆம் அதிகாரத்தில், பின்வருமாறு வாசிக்கிறோம்:

**லேவியராகமம் 8:1, 2**

**“கர்த்தர் மோசேயை நோக்கி: நீ**

1. **ஆரோனையும்,**
2. **அவனுடன் அவன் புதல்வரையும் வரவழைத்து, (திருவிவிலியம்)**
3. **வஸ்திரங்களையும்,**
4. **அபிஷேக தைலத்தையும்,**
5. **பாவநிவாரணபலிக்கு ஒரு காளையையும்,**
6. **இரண்டு ஆட்டுக்கடாக்களையும்,**
7. **ஒரு கூடையில் புளிப்பில்லா அப்பங்களையும் கொண்டுவந்து.”**

ஆவிக்குரிய ஆசாரியத்துவத்தின் அங்கத்தினராக முயற்சிக்கிறவர்கள், இந்தப் படத்தையும் அதன் ஏழு அடிப்படைப் பாகங்களையும் கவனத்தோடும் ஜெபத்தோடும் தியானித்து, அதில் தங்களது சொந்த அர்ப்பணிப்பு முன்வைக்கப்பட்டுள்ளதா என்று பார்த்திட வேண்டும். ‘**ஏழு**’ என்கிற எண்ணே பரிபூரணத்திற்கும் முழுமைக்கும் அடையாளமாக இருப்பதால், ‘**அழைக்கப்பட்டவர்களின்**’ பிரதிஷ்டை எந்தளவு பூரணமானது மற்றும் முழுமையானது என்பதையும், அந்த அழைக்கப்பட்டவர்கள், தங்களைப் பரிசுத்தப் படுத்துகின்ற அந்த ஆசரிப்பின் ஓர் அங்கமாகவே ஆகிவிடுகிறார்கள் என்பதையும் தேவன் இங்கே காண்பிக்கின்றார்.

இந்த ஆசரிப்பில், மோசே நம் பரம பிதாவாகிய தேவனை நிழலாகச் சித்தரிக்கிறார் என்பதைக் கவனிக்கவும். மோசே நிழலான ஆசாரியத்துவத்தைப் பிரதிஷ்டை செய்தது போல, தேவன் தாமே இந்தச் சுவிசேஷ யுகத்தில், தமது நிஜமான ஆசாரியத்துவமாகிய கிறிஸ்து இயேசுவையும் அவரது சபையையும் பிரித்தெடுத்துப் பிரதிஷ்டை செய்து வருகிறார். இங்கே ஆரோனும் சரி அவரது குமாரரும்சரி, மோசே கொடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டதினால் அன்றி, மற்றபடிக்குத் தங்களைத் தாங்களே பிரதிஷ்டை செய்திருக்க முடியாது. ஆவிக்குரிய ஆசாரியத்துவத்திற்கும் இது பொருந்தும்! அப்போஸ்தலனாகிய பவுல் தெரிவிப்பதும் இதுவே:

**எபி. 5:4 – “மேலும், ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.”**

இப்படியாக ஆசாரியத்துவத்திற்காக அழைக்கப்படும் ‘**அழைப்பானது**,’ தேவனுக்கிருந்த முன்குறிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே கொடுக்கப்படுகிறது. நிழலில், ‘ஆரோனும் அவனது குமாரரும் அழைக்கப்படுவதற்கு முன்பே, தேவன் ஆசரிப்புக்கூடாரத்தை எழுப்பவும், அதனைத் தனியே பிரித்தெடுத்து (பரிசுத்தப்படுத்தி) வைப்பதற்கும் கட்டளை யிட்டிருந்தார்’ எனும் காரியத்திலிருந்து அவரது முன்தீர்மானம் நிரூபணமாகிறது. அதேபோல, தம்முடைய பிரதான ஆசாரியனின் அடையாளம் (identity) என்ன என்பதையும் தேவன் முன்தீர்மானித்திருந்தார் என்று நாம் உறுதியாக நம்பலாம். இது தொடர்பாக நிழலில், ஆரோன் மட்டுமே பேர்சொல்லி அழைக்கப்படுவதையும், நாதாப், அபியூ, இத்தாமார் மற்றும் எலெயாசார் என்பவர்கள் அதேபோல் பிரதிஷ்டைக்கு அழைக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் “**அவன்**

**குமாரர்**'' என்கிற பொதுவான வார்த்தைகளாலேயே குறிப்பிடப்படுகிறார்கள் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இது எவ்வளவு இணை அர்த்தமுள்ளதாக உள்ளது!

அப்போஸ்தலன் யுகங்களுக்கடுத்த தேவனுடைய தெய்வீகத் திட்டத்தைக் குறித்து குறிப்பிடும்போது, அது **''நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த ... தீர்மானம்** (நோக்கம்)'' **(தமிழில் – எபே. 3:9)** என்று கூறுகிறார். அப்படியானால், இயேசு இந்த முன்குறிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற அழைக்கப்படவில்லை என்று ஒருவராலும் மறுத்துரைக்க முடியாதல்லவா! அந்த அழைப்பிற்குப் பதிலளிக்கும் விதமாக, அவர் தம் முப்பதாம் வயதில் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வந்தார் எனக் காண்கிறோம். இருப்பினும், அவரில் பாவம் இல்லாத காரணத்தால் இந்த ஞானஸ்நானமானது பாவ மன்னிப்புக்கான ஞானஸ்நானமாக இருக்கவில்லை; மாறாக, பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கான அவரது பிரதிஷ்டையை அடையாளப்படுத்தவே இது செய்யப்பட்டது. ஆவியில் அவர், **''தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்''** (எபி. 10:9) என்று கூறினது நமக்கு நினைவிருக்கலாம்.

அப்போதே தேவன் அவரைப் பரிசுத்த ஆவியினாலும் **(மத். 3:16; மாற்கு 1:10)**, அவரது தோழரைப்பார்க்கிலும் ஆனந்தத் தைலத்தினாலும் அபிஷேகம் செய்தார் **(சங். 45:7)** – இப்படியாக இயேசு ஒரு பிரதான ஆசாரியரானார். இயேசு அவர் தரப்பில் தம்மைத் தாமே பிரதிஷ்டை செய்தது என்பது, யேகோவா தேவனோடு தாமே ஒரு பலியின் உடன்படிக்கை உறவிற்குள்ளாக உட்பிரவேசித்தார் என்பதைக் குறிக்கிறது. அப்போதே அவர் நமக்கு பிரதான ஆசாரியரானதோடுகூட, பரிசுத்தவான்கள் அடங்கிய புதிய ஒழுங்குமுறையில் **(சங். 50:5)** முதல்வருமானார் (**எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படிக்கு** அப்படியாயிற்று – **கொலோ. 1:18**). அவருடைய சித்தம் பரிபூரணமானதாக இருந்தபோதிலும், தம் சுய சித்தத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, அதற்குப் பதிலாகத் தம் பரம பிதாவின் சித்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அழைத்திட்ட அந்தப் பலியானது 'சுயத்தை வெறுப்பதை' (self–denial) அர்த்தப் படுத்துவதாக இருந்தது – இந்தச் சுயத்தை வெறுக்கும் காரியமானது சீஷத்துவத்திற்கு அவசியம் என்று இயேசுவும் அறிவித்திருந்தார். இதுகுறித்து அவர் கூறுகையில்:

**லூக். 9:23 – ''ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.''**

அப்படியானால், அந்தச் சிலுவை என்பது, தேவனுடைய சித்தம் செய்வதால் அவர் மீது சுமத்தப்பட்ட ஒரு காரியமாக இருந்தது என்பது தெளிவாகிறது. ஆனால், இந்தப் பிரதிஷ்டை விஷயத்தில், சுயத்தை வெறுப்பது மற்றும் சிலுவை சுமப்பது என்பவை தாண்டி இன்னும் கூடுதலான விஷயம் இருக்கிறது; அது நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுப்பதாகும். நம்மில் சிலர் இவையும்கூட நமது பிரதிஷ்டையில் அவசியமான அம்சங்களாக இருப்பதை அடையாளங்காணத் தவறிவிடுகிறோம் என்பதாகத் தோன்றுகிறது. நீதியை விரும்புவதன் காரணமாகப் பிரதிஷ்டை செய்துகொண்டாலும், மறுபுறம் அக்கிரமத்தை நிஜமாக வெறுத்து விடாமல் தவறுவதற்கும் வாய்ப்புள்ளது. நீதியை விரும்புவது, அக்கிரமத்தை வெறுப்பது ஆகிய இரண்டு காரியங்களையும் செய்பவர்களுக்கு மட்டுமே **''ஆனந்தத் தைலம்''** சொந்தமாகும்

என்பதை மனதில் வைக்க வேண்டும். இயேசுவைப் பற்றிக் குறிப்பிடும்போது அப்போஸ்தலன் பின்வருமாறு தெரிவிக்கிறார்:

**எபி. 1:9 – "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்."**

இயேசுவிற்கான அழைப்பு, அவர் அதை ஏற்றுக்கொண்ட காரியம் மற்றும் அதன் விளைவாகக் கிடைக்கப்பட்ட அபிஷேகம் ஆகியவை நிழலிலும் தெளிவாக முன்வைக்கப் பட்டுள்ளன.

மோசேயின் அழைப்பிற்கு இணங்க ஆரோன் தன்னைப் பிரதிஷ்டைக்கு ஒப்புக் கொடுத்து, ஏற்ற சமயத்தில் தனது உடன் ஆசாரியருக்கும் மேலாய் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார். இருப்பினும், **குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான** இயேசுவைப் பொருத்தமாகப் பிரதிநிதித்துவப்படுத்தும்படிக்கு, நிழலில் ஆசாரியனாகிய ஆரோன் மோசேயினால் ஸ்நானம்பண்ணப்பட வேண்டியிருந்தது **(லேவி. 8:6)**. இப்படியாக ஆரோன் அடையாளப்பூர்வமாக மோசேயின் கைகளிலிருந்து சுத்தமாக வந்தது போல, இயேசு தேவனுடைய கரங்களிலிருந்து தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் வந்தார். அப்போது மாத்திரமே, ஆரோனுக்கு வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு, தேவனுடைய பிரதான ஆசாரியனாக அபிஷேகம் செய்யப்பட முடிந்தது. இயேசுவைப் பற்றிய வேதவாக்கிய சாட்சியும் எப்படி இருக்கிறதெனில்:

**எபி. 7:26 – "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான... இப்படிப்பட்ட பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்."**

ஆரோனின் குமாரர் ஸ்நானம்பண்ணப்பட்ட காரியமானது ஓர் உடன் ஆசாரிய வகுப்பார் தேவனுடைய கரங்களிலிருந்து சுத்தமும் தூய்மையுமாக்கப்பட்டு வெளிப்படுவதை அடையாளப்படுத்துகிறது. இயேசுவைப் போலல்லாமல், இவர்கள் இயல்பாகவே சுத்தமான வர்களாக இருப்பதில்லை, மாறாகப் பாவத்தில் பிறந்து, துர்க்குணத்தில் உருவானவர்கள் **(சங். 51:5)**; ஆம்! **நீதிமான் ஒருவனும் இல்லை! ஒருவனாகிலும் இல்லையே!** ஆனாலும், இவர்கள் தங்களுடைய எந்த சொந்தக் கிரியைகளைக் கொண்டோ அல்லது அவற்றின் மூலமாகவோ அல்லாமல், தேவன் ஒருவராலேயே ஆவியில் உந்தப்பட்ட விசுவாசத்தின் மூலமாக நீதிமான்களாக்கப்பட்டனர்! இவர்களும் தேவனுடைய முன்குறிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே அழைக்கப்பட்டனர்.

எப்படி ஆரோனின் குமாரர் தங்கள் ஜீவனுக்கும், தங்களுக்குக் கிடைத்திட்ட ஆசாரியத்துவ அழைப்பிற்கும் ஆரோனுக்குக் கடமைப்பட்டிருந்தனரோ அதுபோலவே, இந்த ஆவிக்குரிய உடன் ஆசாரியரும் தங்கள் ஜீவனுக்கும்சரி, தேவனுடைய அழைப்பிற்கும்சரி கிறிஸ்துவுக்கே கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒருவேளை நாதாப், அபியூ, இத்தாமார் அல்லது எலெயாசார் என்பவர்கள் ஆரோனுக்கு இரத்த உறவாக இல்லாமல் போயிருந்தால், அவர்கள் அழைக்கப்பட்டிருக்க மாட்டார்கள். அதுபோலவே, இயேசுவின் இரத்தம் இல்லை என்றால்,

உங்களுக்கோ எனக்கோ எந்த அழைப்பும் இருந்திருக்காது – அந்த இரத்தமே நமது அர்ப்பணிப்பைச் சாத்தியமாக்கி, ஏற்றுக்கொள்ளத்தக்கதாக மாற்றியது. இவ்வாறு நமக்கும் ஓர் இரத்த உறவு உண்டு, இதற்காக நாம் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், ஏனெனில் அவரே:

**கொலோ. 1:12 – 14 – "…இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினவர்… [குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."**

இதைத்தான் நாம் பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்:

**எபே. 1:3 – 6 – "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்."**

இப்படியாக இந்தப் பிரதிஷ்டை ஆசரிப்பின் முதல் இரண்டு அம்சங்களைக் கருத்தில் கொண்ட நாம், இப்போது மூன்றாம் அம்சமாகிய '**வஸ்திரங்களைக்**' குறித்துப் பார்க்கப் போகிறோம். ஆரோனோ அல்லது அவரது குமாரரோ தாங்கள் உடுத்த வேண்டிய ஆசாரிய வஸ்திரங்களைத் தாங்களாகவே கொண்டு வரவில்லை என்பதைக் கவனிக்கவும். மோசேயே இவையனைத்தையும் கொண்டு வந்தார்;

ஆரோனுடைய வஸ்திரங்களோ இரண்டு தொகுப்புகளாக (sets) காணப்பட்டன. அவருக்கென்று **"மகிமையும் அலங்காரமுமான"** வஸ்திரங்கள் என்று பொதுவாக அழைக்கப்பட்ட விசேஷித்த வஸ்திரங்கள் காணப்பட்டன **(யாத். 28:2 – 4, 36, 42)**. அவை யாவன:

1. **மார்ப்பதக்கம்** (a breastplate),
2. **ஏபோத்து** (an ephod),
3. **அங்கி** (a robe),
4. **விசித்திரமான உள்சட்டை** (a broidered coat),
5. **பொன்னினாலான பட்டயத்துடன்கூடிய பாகை** (a mitre with its golden plate),
6. **இடைக்கச்சை** (a girdle), மற்றும்
7. **சணல்நூல் சல்லடங்கள்** (the linen breeches).

இவை தவிர, ஆரோனுக்கு **"பலியிடுதலுக்குரிய வஸ்திரங்கள்"** (the sacrificial

garments) என்று நாம் குறிப்பிடும் ஒரு தொகுப்பும் இருந்தது **(லேவி. 6:9 – 11 மற்றும் 16:3, 4)**; அவை யாவன:

1. **சணல்நூல் சட்டை** (linen coat),
2. **சணல்நூல் சல்லடங்கள்** (the linen breeches),
3. **சணல்நூல் இடைக்கச்சை** (the linen girdle) மற்றும்
4. **சணல்நூல் பாகை** (the linen mitre).

உடன் ஆசாரியருக்குச் சணல்நூல் வஸ்திரங்கள் மட்டுமே இருந்தன; இவை ஆரோன் பலியிடும்போது அணிந்த வஸ்திரங்களுக்கு ஒப்பாக இருந்தாலும், அதில் சணல்நூல் பாகைக்குப் பதிலாக அவர்களுக்குக் 'குல்லாக்கள்' (bonnet) வழங்கப்பட்டன. **(யாத். 28:40 – 42)**. இந்த வஸ்திரங்கள், அதாவது 'மகிமைக்குரியவை' மற்றும் 'பலியிடுதலுக்குரியவை' ஆகிய இரண்டுமே – **"மகிமைக்கும் அலங்காரத்திற்கும்"** உரியவை என்று தேவனே அறிவித்தார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். **(யாத். 28:2, 40)**. இது எப்பேர்ப்பட்ட அர்த்தமுள்ளது!

இப்போது நாம் பலியிடுதலுக்குரிய சணல்நூல் வஸ்திரங்களை அணிந்திருந்தாலும்சரி, அல்லது எதிர்காலத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்து மகிமைவாய்ந்த விசேஷித்த வஸ்திரங்களை அணியப்போவதாக இருந்தாலும்சரி, நமது வஸ்திரங்கள் யாவும் மகிமைக்கும் அலங்காரத்திற்கும் உரியவையே!

ஆம்! இயேசுவைப் பொறுத்தவரை, பலியிடுதலுக்குரிய அந்தச் சணல்நூல் வஸ்திரங்கள் அவரது சொந்த நிஜமான நீதியையும் தூய்மையையும் குறிக்கின்றன. ஆனால் உடன் ஆசாரியர்களாகிய நமக்கோ, அந்த வெண்மையான சணல்நூல் வஸ்திரங்கள், நமது மகிமைக்காகவும் அலங்காரத்திற்காகவுமென நமக்குத் தரிப்பிக்கப்பட்டுள்ள (imputed) இயேசுவின் நீதியையும் தூய்மையையும் குறிக்கின்றன! இருப்பினும், நாம் இராஜ்யத்தின் மகிமைக்குள் பிரவேசித்து, பூமியின் வம்சங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகும் அந்த உன்னதமான மகிமையுள்ள பிரதான ஆசாரியனின் அங்கத்தினராக மாறும்போது, அந்த வெண்மையான சணல்நூல் வஸ்திரமானது நம்மிடம் சொந்தமாகக் காணப்படப்போகிற நீதியையும் தூய்மையையும் குறித்திடும். (**ஆங்கிலப் பக்கம் – T36, 29** என்பவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்)

மீதமுள்ள வஸ்திரங்கள் குறித்து இன்னும் அதிகமான விளக்கங்களைச் சொல்ல முடியும், ஆனால் இப்போது அதற்குச் சமயமில்லை. இருப்பினும், நிழலில் ஆரோன் தனக்காகவோ ஜனங்களுக்காகவோ எந்தவொரு பலியையும் செலுத்துவதற்கு முன்பாக, இந்த மகிமையுள்ள வஸ்திரங்களை அணிந்துகொண்டார் என்ற உண்மையையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

- இதன் பொருள் என்ன?

தேவன் இங்கே சொல்ல வருவதாக நாம் நம்புவது என்னவெனில், அந்தச் சமயத்தில்

ஆரோன் இந்த வஸ்திரங்களை, தனது சுதந்தரத்தின் ‘அச்சாரமாக’ (earnest) மாத்திரமே பெற்றிருந்தார் என்பதாகும். உண்மையில், இந்த மகிமையுள்ள வஸ்திரங்கள் அந்தச் சமயத்தில் ஆரோனின் கைவசம் (possession) காணப்பட்டதே ஒழிய, அவருக்குச் சொந்தமானவையாக (ownership) இருக்கவில்லை. பாவநிவாரண நாளின் முடிவில், ஆரோன் ஜனங்களுக்கு முன்பாக வெளியே வந்து பலியிட்ட பின்னரே, அந்த வஸ்திரங்கள் அவருக்கு முழுமையாகச் சொந்தமாயின! **(லேவி. 16:23, 24)** அதுபோலவே, நாம் ஜெநிப்பிக்கப்பட்ட சமயத்தில் நமது சுதந்தரத்தின் அச்சாரத்தை மாத்திரமே பெற்றுக்கொண்டோம், ஆனால் முழுமையான சுதந்தரம் என்பது நாம் நமது பலியின் உடன்படிக்கையை மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் நிறைவேற்றிய பின்னரே நமக்குக் கிடைக்கும். **(எபே. 1:13, 14)**. இது குறித்து பாஸ்டர் ரசல் அவர்கள் கூறுகையில்:

> “…இந்த உண்மைத்தன்மை, இந்தத் தினந்தோறும் மரிக்கும் நிலை, நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாகும்; மேலும், கர்த்தருடைய அடிச்சுவடுகளில் உண்மையுடன் நடப்பவர்களுக்குத்தான் – புதுச் சிருஷ்டியின் ‘**தெரிந்துகொள்ளப்பட்ட**’ அங்கத்தினராக விளங்கும் உண்மையுள்ள ஜெயங்கொள்பவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் – மகிமை, கனம், அழியாமையை வாக்களித்திருக்கிறார். ஆம்! ‘**நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்**’ **(வெளி. 2:10)** என்றே கர்த்தர் உரைக்கிறார். ஆம்! கர்த்தரும் தலையுமானவருக்கு எப்படியோ சரீரமாகிய சபைக்கும் அப்படியே! இப்படியாக, பிரதிஷ்டை என்பது ஆவியின் முதற்பலன்களைக் கொண்டுவரச்செய்கிறது; அனுதினம் காண்பிக்கப்படும் உண்மைத்தன்மையானது மேலும் மேலும் சந்தோஷங்களையும் கனிகளையும் அதிகரிக்கச்செய்து, அந்த ஆவியின் ஆசீர்வாதத்தைத் தொடரச் செய்கிறது; இப்படியாக நாம் நமது உடன்படிக்கையை நிஜமான மரணத்தில் உண்மையுள்ளவர்களாய் நிறைவேற்றும் போதே, முழுச் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டு, முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமைகளிலும் கனங்களிலும் நம்மால் பங்கடைய முடியும். **(எபே. 1:12 – 14; உரோ. 8:16, 17).**” (**ஆங்கிலப் பக்கம் – F444**)

ஆரம்பத்திலிருந்தே, தேவன் இந்தப் “**பொக்கிஷத்தை**” நம்முடையதாக எண்ணுவதற்கு அனுமதிக்கிறார். **நாம் அதை ஒரு மண்பாண்டத்தில் பெற்றிருந்தாலும், நாம் அதை உடையவர்களாய் இருக்கிறோம் என்பதே நிதர்சனம்**. இருப்பினும், இதனை நாம் தற்போது (முழு அளவில் அல்லாமல்) “**பகுதியளவிலே**” உடைமையாகப் பெற்றிருக்கிறோம்; இது ஏற்றகாலத்தில் “**முழு அளவில்**” பெற்றுக்கொள்வதற்கு, அதாவது பொக்கிஷத்தின் மீதான முழு உரிமைக்கு (full ownership) நேராய் வழிவகுக்கும்.

இந்தப் பாடமானது ஆசரிப்புக்கூடாரத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் திரைகளைத் தாங்கி நின்ற தூண்களின் மூலமாக நம் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. முதல் திரைக்குப் பின்னால் இருந்தவை, நமது தற்போதைய “**பகுதியளவு**” நிலையைச் சித்தரிக்கின்றன; அவை திவ்விய சுபாவத்திற்கு அடையாளமான பொன்னால் மூடப் பட்டிருந்தன. அவை செம்பினாலான பாதங்களில் (sockets of copper) நிறுத்தப்பட்ட

காரியமானது, நாம் "**இந்தப் பொக்கிஷத்தை** (திவ்விய சுபாவத்தை) **மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்**" என்பதைக் குறிக்கிறது. **(2 கொரி. 4:7)**. இரண்டாம் திரைக்குப் பின்னால் இருந்தவை, வரப்போகும் பூரணமான நிலையைச் சித்தரிக்கின்றன; அவையும் –

> "திவ்விய சுபாவத்தைக் குறிக்கும் விதமாகப் பொன்னால் மூடப்பட்டிருந்தன, ஆனால் அவை செம்பினாலான பாதங்களில் காணப்படவில்லை… அவை வெள்ளிப் (யதார்த்தம், சத்தியம், உண்மை) பாதங்களில் காணப்பட்டன…" (**ஆங்கிலப் பக்கம் – T114, 115**)

இவ்வாறு ஆரோன் தனது பிரதிஷ்டையின்போது, தனது சுதந்தரத்தின் அச்சாரமாகிய மகிமையும் அலங்காரமுமான வஸ்திரங்களை அணிந்திருப்பதை நாம் பார்க்கும்போது, அவர் மீண்டும் பாவநிவாரண நாளின் முடிவில் முழு சுதந்தரத்தை உடையவராக, ஜனங்களை ஆசீர்வதிக்கும்படிக்கு வெளிவரும்போது எப்படி இருப்பாரோ அவ்வாறு இருப்பதைப் போலக் காண்கிறோம். மீண்டுமாக பாஸ்டர் ரசல் அவர்களின் வார்த்தைகளை மேற்கோள் காட்ட விரும்புகிறோம்:

> "வஸ்திரம் அணிந்தவராய், அபிஷேகம் செய்யப்பட்டுக் காணப்பட்ட ஆரோன், தலையும் சரீரமுமாகிய ஒட்டுமொத்தக் கிறிஸ்துவையும், அதாவது தேவன் பூமியின் வம்சங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகிற ஆபிரகாமின் முழுச் சந்ததியையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் எனக் காண்கிறோம். ஆனால், நாம் மாபெரும் இரட்சகரைத் தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்த்துவருகிறோம் என்பதையும், மேலும் 'அனைத்து அங்கத்தினரும் சரீரத்திற்குள் வந்தடைந்து, '**பரிசுத்தத் தைலம் அங்கிகளின் ஓரங்கள் வரை**' வடிந்து, ஒவ்வொரு அங்கத்தினரையும் அபிஷேகம் செய்து, இப்படியாக அவர் வெளிப்படும் அந்த ஆயிரமாண்டு விடியலின் காலத்தை' அவரோடு சேர்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. **(லேவி. 10:7)**. அதன்பின்னர், அவர் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் பணியைத் தொடங்கிடுவார்." (**ஆங்கிலப் பக்கம் – T38**)

> "நியாயப்பிரமாணத்தின் கீழ், ஆசாரியருக்கு ஊழியத்தை ஒப்புவிக்கும் / பணிநியமன ஆசரிப்பாக இந்த அபிஷேகம்பண்ணப்படுதல் காணப்பட்டது. அவர்கள் '**பரிசுத்த அபிஷேக தைலம்**' எனப்படும் ஒரு விசேஷித்த தைலத்தினால் தங்கள் பணிக்கு அபிஷேகம் செய்யப்பட்டனர்; இது ஆசாரியர்களைத் தவிர வேறு யாருக்கும் பயன்படுத்தப்படவில்லை, இதனை வேறு யாரும் வைத்திருப்பதோ, தயாரிப்பதோ பிரமாணத்திற்கு விரோதமானதாக இருந்தது. **(யாத். 30:25 – 33, 38)**. இந்தத் தைலம் நாம் புத்திர சுவிகாரம் அடைவதற்கான பரிசுத்த ஆவியை நிழலாகக் காண்பிக்கிறது; இதன் மூலமே உண்மையான '**இராஜரிக ஆசாரியக்கூட்டமாகிய**' நாம் தேவனுடைய புத்திரராக முத்திரை போடப்படுகிறோம். எப்போதும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆசாரியர்கள் மட்டுமே இவ்வாறு அபிஷேகம் செய்யப்பட வேண்டியிருக்கிறது." (**ஆங்கிலப் பக்கம் – T28,29**)

இந்த நிழலைக் கவனமாகத் தியானிக்கும்போது, ஆரோன் மட்டுமே தனது தலையின்

மேல் "**பரிசுத்த அபிஷேக தைலத்தின்**" வார்ப்பிக்கப்படுதலைப் பெற்றுக்கொண்டார்; இதன் மூலம், ஆரோன் ஆசாரியத்துவத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டது மாத்திரமல்லாமல், அவரது முழுக் குடும்பத்தாரும்கூட அவ்வாறே அபிஷேகம் செய்யப்பட்டனர் என்பது தெளிவாகிறது. அவர் தனது உடன் ஆசாரியர்கள் அடங்கிய குடும்பத்திற்கு மேலான ஒரு தலைமை ஆசாரியனாக வைக்கப்பட்டார். இவ்வாறு உடன் ஆசாரியத்துவமானது அதன் தலை அல்லது பிரதான ஆசாரியருக்குள் அபிஷேகம் செய்யப்பட்ட காரணத்தால், ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தனித்தனியான அபிஷேகம் தேவைப்படவில்லை.

இருப்பினும், குமாரர்கள் ஒவ்வொருவரும் பிரதான ஆசாரியரின் அபிஷேகத்தில் பங்கடைந்தார்கள் என்பதைக் காட்டுவது அவசியமாகக் காணப்பட்ட காரணத்தினால், அவர்கள் ஒவ்வொருவரும் இந்தப் "**பரிசுத்த அபிஷேக தைலத்தை**" "தெளிக்கப்படுதல்" மூலமாக பெற்றுக்கொண்டார்கள் என்பதாகக் காண்கிறோம்; அதிலும் அந்தத் தைலமானது பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவாகிய பலியின் இரத்தத்தோடு கலந்த பின்னரே தெளிக்கப்பட்டது. **(லேவி. 8:30)**. 'தேவனுடைய நிஜமான ஆசாரியக்கூட்டமாகிய நாம் நமது கர்த்தரும் தலையுமானவருக்குள் அபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறோம்' என்பதையும், 'நாம் அவருடைய சரீர அங்கத்தினராக ஆக்கப்பட்டதன் மூலமாக, அவருடைய அபிஷேகத்தில் பங்காளிகளா கிறோம்' என்பதையும், இது அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் மட்டுமே நடைபெறுகிறது என்கிற உண்மையையும் இது எவ்வளவு அழகாக வெளிப் படுத்துகிறது! பாஸ்டர் ரசல் அவர்கள் கூறுகையில்:

> "பிரதிஷ்டையின் இரத்தத்துடன் கலந்த அபிஷேக தைலம் அவர்கள் மேல் தெளிக்கப்பட்டது **(வசனம் 30)**; நமது மீட்பரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்ட காரணத்தினாலேயே நமது பிரதிஷ்டை ஏற்றுக்கொள்ளப் படுகிறது என்பதை இது போதிக்கிறது; இவ்வாறு நாம் '**பிரியமானவருக்குள்**' மட்டுமே '**ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம்**' என்று சொல்லப்படுகிறது. – **எபே. 1:5, 6**." (**ஆங்கிலப் பக்கம் – T46,47**)

இப்போது பாவநிவாரண பலியைப் (sin-offering) பற்றிப் பார்க்கலாம். ஆசாரியத்து வத்தின் இந்தப் பிரதிஷ்டையின்போது, மோசேயே காளையை வழங்கினார், மாறாக ஆரோனோ அவரது குமாரர்களோ அல்ல என்பதை இங்கே மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். இங்கே பாவநிவாரண பலியாகப் பயன்படுத்தப்பட்ட விலங்கு ஒரு காளை ஆகும். காளை என்பது பரிபூரண மனுஷீகத்தைக் குறிக்கிறது; (இயேசு மனிதனாக வருவதற்கு முன்னிருந்து) லோகோசோ சபையோ அந்தப் பரிபூரண மனுஷீகத்தைக் கொண்டிருக்கவில்லை; ஆகையால், தேவனே (மோசே), பலியிடுதல் எனும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பரிபூரண மனுஷீகத்தை (காளை) ஏற்பாடு செய்து கொடுத்தார் என்பதை இந்த நிழலிலிருந்து நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

இயேசுவுக்காக அவர் ஒரு பரிபூரண சரீரத்தை ஆயத்தம் செய்திருந்தார்; "**...ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்**" **(எபி. 10:5)**. சபைக்காக அவர் தனியே பரிபூரண சரீரங்களை ஆயத்தம் செய்யவில்லை, அதற்குப் பதிலாக, தன் தலையினுடைய நீதி சாற்றுவிக்கப்பட்டு, அதன் மூலம் அதனைக் கிறிஸ்துவினுடைய பரிபூரண "**சரீரத்தில்**"

**(எபே. 1:23)** பங்கடையும்படிச் செய்தார். சொல்லப்போனால், தேவனுடைய இந்த ஏற்பாட்டின் மூலமாக மாத்திரமே, சபை அங்கத்தினரால் **"கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காகத் தங்கள் மாம்சத்தில் நிறைவேற்ற" (கொலோ. 1:24)** முடிகிறது. இதற்கு இணையாக நிழலில், ஆரோனும் அவனது குமாரரும் காளையின் தலையின் மேல் தங்கள் கைகளை வைத்தார்கள் என்பது எத்துணை அர்த்தமுள்ளதாக இருக்கிறது! **(லேவி. 8:14)**

இப்படியாகவே தேவன் சபையின் தலையாகிய கிறிஸ்துவின் மனிதப் பூரணத்தைச் சபைக்கு வழங்குகிறார். எப்படியெனில், ஒருவேளை ஆயிரமாண்டின் முடிவில் சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் பூமிக்குரிய திரும்பக்கொடுத்தலில் பங்குபெற்றால் அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அதே மனிதப் பூரணத்தை, தேவன் இப்போதே (கிறிஸ்துவிற்குள்ளாக) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கணக்கிடுகிறார். இப்படியாக (கணக்கிடப்பட்ட அர்த்தத்தில்) அவர்களிடம் இருக்கும் ஜீவ உரிமைகள் பிதாவாகிய ஆதாமிற்குள் இழந்துபோகப்பட்ட உரிமைகளாக இருக்காது, மாறாக மனிதனாகிய கிறிஸ்து இயேசுவினால் கையளிக்கப் பட்டவையாக இருக்கும். கிறிஸ்துவின் புண்ணியம் இப்படிக் கணக்கிடப்படுவதால் அல்லது சாற்றுவிக்கப்படுவதால், சபை உண்மையில் பரிபூரணமாக மாறிவிடாது, மாறாக, தனது பிரதிஷ்டையினிமித்தம் சபை **"பிரியமானவருக்குள்"** ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது **(எபே. 1:6)** என்பதையே இது அர்த்தப்படுத்துகிறது. சபையின் சொந்த மனுஷீகமானது, பாவநிவாரண நாளன்று பலியிடப்படும் பாவநிவாரண வெள்ளாட்டுக்கடாவிலோ (goat of the sin-offering) அல்லது தகன பலிகளிலோ (burnt offerings) இன்னும் குறிப்பான வகையில் காண்பிக்கப் படுகின்றது; அந்தத் தகன பலியில், தலையே முதலில் பலிபீடத்தின் மேல் வைக்கப்பட்டது, தொடைகளும் குடல்களும் (சரீரம்) கழுவப்பட்ட பிறகே, துண்டங்களாகத் தலைக்கு அருகாமையில் வைக்கப்பட்டன. **(லேவி. 8:20, 21)**. இங்கே தலை கழுவப்பட்டதாக ஒருபோதும் சொல்லப்படவில்லை என்பதைக் கவனியுங்கள்.

> "பாவநிவாரண (sin-offering) பலிக்கான காளை கொண்டுவரப்பட்டது, **'அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்;' (லேவி. 8:14)** இப்படியாக, 'இந்தப் பலி எங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது' என்பதை அர்த்தப்படுத்தினார்கள். அந்தத் தருணம் தொடங்கி, அந்தக் காளைக்குச் சம்பவித்ததெல்லாம் மனுஷராகிய இயேசுவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் நடக்க வேண்டியவைகளைச் சித்தரித்துக் காண்பித்தது. அந்தக் காளை நியாயப் பிரமாணத்திடம் (மோசே) ஒப்படைக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அது கொல்லப்பட வேண்டியிருந்தது – **'மோசே அதைக் கொன்றான்.'"** (**ஆங்கிலப் பக்கம் – T41**)

இந்தப் பிரதிஷ்டையின் ஆசரிப்பில், ஆறாவது அம்சமாக இரண்டு ஆட்டுக்கடாக்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று **'தகன பலிக்கான'** ஆட்டுக்கடா. இது காளையின் பலியில் ஏற்கெனவே சித்தரிக்கப்பட்ட அதே பிரதிஷ்டையை, வேறொரு கோணத்தில் – அதாவது **'தெய்வீக அங்கீகாரம்'** (Divine Acceptance) என்ற கோணத்தில் சித்தரித்துக் காண்பித்தது. அந்தப் பலி தேவனுக்குச் செலுத்தப்பட்டு, அவரால் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதைக் காட்டியது – அது கர்த்தருடைய பலிபீடத்தின் அக்கினியால் முழுமையாகத்

தகனிக்கப்பட்டது. தகன பலியின் இந்த அர்த்தம் குறித்து எடர்ஷைம் (Edersheim) எழுதிய ‘The Temple’ **(ஆலயம்)** என்ற நூலில், 99ஆம் பக்கத்தில் காணப்படுகிற “Burnt, Sin, Trespass, and Peace Offerings” என்ற கட்டுரையிலிருந்து சிலவற்றை இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறோம்:

> “தகன பலி – ஓலா (Olah) அல்லது கலீஈல் (Chalil). ‘ஓலா’ என்ற சொல்லின் வேர்ப்பொருள் முழுவதுமாக / ஒட்டுமொத்தமாக தேவனிடம் ‘ஏறிச் செல்லுதல்’ என்பதாகும் – இது பலியிடும் முறையையும் (mode), அதன் அர்த்தத்தையும் (meaning) சுட்டிக்காட்டுகிறது. இது தனிநபரோ அல்லது சபையோ தங்களை முழுவதுமாக தேவனிடம் ஒப்படைப்பதையும், தேவன் அவர்களை ஏற்றுக்கொள்வதையும் அடையாளப்படுத்துகிறது. அதேசமயம், **‘இரத்தஞ்சிந்துதலில்லாமல்’** இதனைச் செலுத்தவும் முடியாது. பிற பலிகள் கொண்டுவரப்படும்போது, இது பாவநிவாரண பலிக்குப் (sin offering) பின்னரும், சமாதான பலிக்கு முன்னரும் செலுத்தப்பட்டது. உண்மையில் இது முந்தைய விசேஷித்த அங்கீகாரத்தின் (previous special acceptance) அடிப்படையில் கிடைக்கும் பொதுவான அங்கீகாரத்தை (general acceptance) அர்த்தப்படுத்தியது. இது சரியாக ‘sacrificium latreuticum’ அல்லது ‘பக்தி மற்றும் ஊழியத்தின் பலி’ என்றழைக்கப்படுகிறது. இவ்வாறாக, இது நாள்தோறும் தேவாலயத்தில் செலுத்தப்பட்ட வழக்கமான காலை மற்றும் மாலை பலிக்குரிய ஆசரிப்பாக அமைந்தது; அதேசமயம் ஓய்வுநாட்கள், அமாவாசைகள் மற்றும் பண்டிகை நாட்களில், சாதாரண வழிபாட்டைத் தொடர்ந்து கூடுதல் சர்வாங்க தகன பலிகளும் செலுத்தப்பட்டன. அங்கே உடன்படிக்கையின் ஜனங்கள் தங்களது உடன்படிக்கைப் பலியைக் கொண்டு வந்தனர். இவ்வாறு கொண்டுவரப்பட்ட திரளான பலிகளானது, அவர்களின் சுயத்தைச் சரணடையச் செய்வதன் முழுமை (fulness), செழுமை (richness) மற்றும் மகிழ்ச்சியை (joyousness) வெளிப்படுத்துவதாக அமைந்தது.
>
> … தகன பலி எப்போதும் ஓர் ஆணாக இருக்க வேண்டும், ஏனெனில் அது அதிக மேன்மையையும் வலிமையையும் ஆற்றலையும் குறிக்கிறது… அந்தப் பலி முறைப்படி உப்பிடப்பட்டு, முழுமையாக தகனிக்கப்பட்டது.”

பின்னர் மற்றொரு ஆட்டுக்கடாவாகிய **“பிரதிஷ்டையின் ஆட்டுக்கடா”** பலியிடப்பட்டது. இந்தப் பிரதிஷ்டை நம் மீது ஏற்படுத்தும் விளைவைக் காண்பிக்கவே இந்தப் பலி செலுத்தப்பட்டது. மோசே அந்த விலங்கைக் கொன்ற பிறகு, அதன் இரத்தத்தைக் காளையின் இரத்தத்தைப் போலப் பலிபீடத்தின் மேல் தெளிக்காமல் **(லேவி. 8:15)**, ஒவ்வொரு ஆசாரியனின் சரீரத்தின் மீதும் பூசினான் **(லேவி. 8:23)**; இது நமது பிரதிஷ்டை என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விஷயம் என்பதைக் காட்டுகிறது. **“மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலது காதின் மடலிலும் வலது கையின் பெருவிரலிலும் வலது காலின் பெருவிரலிலும் பூசினான்”** என்று வேதாகமப் பதிவானது கூறுகிறது. இது குறித்து பாஸ்டர் ரசல் அவர்கள் கூறுவதாவது:

> “நமது பிரதிஷ்டையின் மூலம் நாம் ‘விசுவாசத்தினால் கேட்கும்’ ஆற்றலைப் பெற்றுக்கொள்கிறோம்; மேலும், தேவனுடைய வாக்குத்தத்தங்களை மதித்துணரக்

கற்றுக்கொள்கிறோம்; அர்ப்பணிப்பு செய்தவர்களைத் தவிர வேறு எவராலும் அதனை மதித்துணர முடியாது. நமது கைகள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளபடியால், நாம் நமது கைக்கு நேரிடுகிறது எதுவோ அதனைக் கர்த்தருக்கென்று முழு பலத்தோடு செய்கிறோம். நமது கால்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளபடியால், இனி நாம் 'மற்றப் புறஜாதிகளைப் போல நடவாமல்,' 'புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்கவும்,' 'விசுவாசத்தினால் நடக்கவும்,' 'ஆவிக்கேற்ப நடக்கவும்,' 'ஒளியிலே நடக்கவும்,' மற்றும் 'கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் நடக்கவும்' செய்கிறோம்.'' (**ஆங்கிலப் பக்கம் – T45**)

''ஆட்டுக்கடாவின் சிறந்த பாகங்களாக இருந்த அதன் 'குடல்களும்' 'கொழுப்பும்,' நமது இருதய உணர்வுகளையும், நமது **சிறந்த ஆற்றல்களையும்** குறிக்கின்றன. இவை ஆசாரியர்களின் கைகளில் கொடுக்கப்பட்டு 'அசைவாட்டப்பட்டன' – கர்த்தருக்கு முன்பாக பக்கவாட்டில் இடது வலது புறமாக அசைவாட்டப்பட்டன. இது எதைக் குறிக்கிறதெனில், **பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு பலி என்பது ஏதோ ஒரு நிமிஷம் மட்டும் அல்லது ஒரு வருஷம் மட்டும் தேவனுக்குக் கொடுக்கும் காரியம் கிடையாது; மாறாக, பிரதிஷ்டை என்பது நாம் நமது ஓட்டத்தை முடித்துத் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படும் வரைக்கும், நமது நேசங்களையும் ஆற்றல்களையும் தொடர்ந்து உயர்த்திப் பிடித்து, அவற்றை நிறுத்தாமல் பலி செலுத்துவதையே அர்த்தப் படுத்துகின்றது**. மோசே அந்த அசைவாட்டும் பலியை அவர்கள் கைகளிலிருந்து வாங்கிக்கொண்டார் (ஆசாரியர்கள் அதைக் கீழே வைக்கவில்லை); தேவனும் அதை ஏற்றுக்கொண்டார் என்பது அக்கினியினால் காண்பிக்கப்பட்டது. எனவே, 'இராஜரிக ஆசாரியர்களாகிய' நாம் நம்மிடம் இருக்கும் அனைத்து ஆற்றல்களையும், தேவனுடைய ஊழியத்தில் அர்ப்பணித்த பிறகு, நிறுத்தவோ கீழே வைக்கவோ கூடாது; அந்த ஆற்றல்கள் அனைத்தும் முற்றிலும் அவருடைய ஊழியத்தில் செலவழிக்கப் படும் வரையிலும், 'போதும் – மேலே வா' என்று தேவன் சொல்லும் வரையிலும் நாம் தொடர்ந்து செலுத்திக்கொண்டே இருக்க வேண்டும். நமது உள்ளத்தின் ஆழத்திலுள்ள அன்பு (குடல்கள்மேல் இருந்த கொழுப்பு) பலிபீடத்தின் மேல் வைக்கப்படும்போது, அது தேவனுடைய அங்கீகாரம் எனும் அக்கினியை மேன்மேலும் பற்றியெரியச் செய்ய உதவுகிறது. **தேவனுக்கான நமது அர்ப்பணிப்பில் எவ்வளவு அதிகமான அன்பு இணைந்திருக்கிறதோ, அவ்வளவு விரைவாக அது நமது பலியை எரித்துவிடும்**.'' (**ஆங்கிலப் பக்கம் – T45**)

இந்த அசைவாட்டும் பலியின் மேல், மோசே புளிப்பில்லாத அப்பக் கூடையிலிருந்து பின்வருவனவற்றை எடுத்து வைத்தார் **(லேவி. 8:26):**

- **புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்று (one unleavened cake),**
- **எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில் ஒன்று (a cake of oiled bread),**
- **ஓர் அடை (one wafer).**

இங்கே பிரதிஷ்டையின் மூன்று அடிப்படை சத்தியங்கள் நமக்கு அடையாளப்படுத்தப் பட்டுள்ளன: நீதிமானாக்கப்படுதல் (Justification), பரிசுத்தமாக்கப்படுதல் (Sanctification), மற்றும்

மகிமைப்படுத்தப்படுதல் (Glorification). இவை இன்றி எந்தப் பிரதிஷ்டையும் முழுமையடையாது.

இயேசுவைத் தவிர, அழைக்கப்பட்டவர்களில் அனைவரும் பாவத்தில் பிறந்தவர்கள் – **"துர்க்குணத்தில் உருவானவர்கள்."** ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அவர்கள் தங்கள் சொந்த அநீதியையும், தேவனுடைய பார்வையில் தங்களைத் தாங்களே சுத்திகரித்துக்கொள்ள முடியாத நிலையையும் உணர்ந்துகொண்டார்கள். அந்தக் காரணத்தினால், தாவீதைப் போலவே அவர்களின் இருதயத்தின் கதறலும் பின்வருமாறு காணப்பட்டது:

**சங். 51:1 – 3 – "தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது."**

இங்கே ஒரு **"நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயம்"** தென்படுகின்றது; இப்படிப்பட்ட இருதயத்தைத் தேவன் புறக்கணியார். மாறாக, அவர் தமது அன்பு மற்றும் பரிவிரக்கத்தினால் அதைக் கழுவும்படிக்கு, இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் கீழ் அமிழ்த்துகின்றார். இதுவே நீதிமானாக்கப்படுதலாகும். இதன் மூலம் ஆயிரமாண்டின் முடிவில் நமக்குக் கிடைக்க வேண்டிய பரிபூரண மனுஷீகமானது இப்போதே நம்முடையதென்று கணக்கிடப்படுகிறது. மேலும் தேவனுடைய கிருபையினால், இந்த நீதிமானாக்கப்படுதலின் மூலமாக, இயேசுவைப் போலவே நாமும் தேவனுக்குப் பிரியமான பலிகளாக நம்மை ஒப்புக்கொடுக்க முடிகிறது. இதனை வைத்துப் பார்க்கையில், நிழலில், அந்தப் **"புளிப்பில்லாத அதிரசமானது"** மனுஷராகச் சபையின் உண்மையான நீதியையும் தூய்மையையும் குறிக்கிறது.

இயேசு மற்றும் அவரது சபையின் பரிபூரண மனுஷீகம் தேவனுடைய பலிபீடத்தில் பலியிடப்படும் காரியமானது, அவர்களின் பழைய அடையாளத்தின் அழிவைக் குறிக்கின்றது. இருப்பினும், அவர்களைத் தக்கவைக்கும்படியாக (preserve), தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவர்களை ஒரு புதிய சுபாவத்திற்கு – திவ்விய சுபாவத்திற்கு – ஜெநிப்பித்துள்ளார்!

இப்படியாக, ஒருகாலமளவும் இவர்கள் தங்கள் மண்பாண்டங்களில் அவரது ஆவியைக் கொண்டிருக்கும்படி (வாசம்செய்யும்படி) அவர் கட்டளையிட்டுள்ளார். இந்த ஆவி வாசம்செய்யும் காரியமானது அவர்களின் பரிசுத்தமாக்கப்படுதலை நோக்கமாகக் கொண்டு அனுமதிக்கப்பட்ட காரியமாகும். இதன் மூலம் அவர்கள் உலகத்திலிருந்து மேன்மேலும் பிரிக்கப்பட்டு, தேவனுக்கென்று தனியே வைக்கப்படுவார்கள். எனவே, நிழலில், எண்ணெயுடன் கலந்த இரண்டாம் புளிப்பில்லாத அப்பமானது, தேவ ஆவி நமக்குள் வாசம் செய்வதைக் குறிக்கிறது – பரிசுத்தமாக்கப்படுதலைக் குறிக்கிறது.

இப்படியாக உள்ளுக்குள் வாசம்செய்யும் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட இந்த அழைக்கப்பட்டவர்கள், அதே ஆவியினிமித்தம், தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் அடிப்படையில், மகிமை, கனம், அழியாமையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கின்றனர் **(2 பேது. 1:3, 4)**. இது மகிமைப்படுத்தப் படுதல் குறித்த நம்பிக்கையைக் குறிக்கிறது. இந்த நம்பிக்கையைக் கொண்டிருப்பவன், அவர்

சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்கிறான் **(1 யோவான் 3:3)**. இப்படியாக, நிழலில் மூன்றாம் புளிப்பில்லாத அப்பமானது (wafer – அடை) மகிமை, கனம் மற்றும் அழியாமை குறித்துள்ள மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் மீதான நமது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் குறிக்கின்றது. ஓர் அடை (wafer) என்பது பொதுவாக மிக மெலிதானதாக இருக்கும். அது ஒளி புகக்கூடியது (transparent) என்று சொல்ல முடியாது, மாறாக மங்கலாக ஒளி புகக்கூடியது (translucent) என்று சொல்லலாம்! நமது நம்பிக்கையும் விசுவாசமும் அவ்வாறுதான் உள்ளது; நாம் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களின் மூலம் நம்பப்படுகிறவைகளின் அடிப்படையையும், காணப்படாதவைகளின் நிச்சயத்தையும் கொண்டிருக்கிறோம். **(எபி. 11:1)**.

இந்தப் பிரதிஷ்டை ஆசரிப்பின் ஏழாவது மற்றும் கடைசி அம்சம், ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட **'புளிப்பில்லா அப்பங்களின் கூடை'** ஆகும். ஆனால், தங்கள் பிரதிஷ்டை முழுமையடைவதற்கு, நிழலான ஆசாரியர்கள் ஏழு நாட்களளவும் ஆசரிப்புக் கூடார வாசலுக்குள்ளாக தங்கியிருக்க வேண்டியிருந்தது. அந்தச் சமயத்தில் அவர்கள் மற்ற இஸ்ரயேலர் உண்ணும் சாதாரண உணவுகளைப் புசியாமல் தவிர்க்க வேண்டியிருந்தது. அதற்குப் பதிலாக, அவர்கள் மோசேயினால் கொண்டுவரப்பட்ட **"பிரதிஷ்டைப் பலிகளுள்ள கூடையிலுள்ள"** புளிப்பில்லாத அப்பத்தையே புசிக்க வேண்டியிருந்தது **(லேவி. 8:31 – 35)**. இது எப்பேர்ப்பட்ட ஒரு நிழலாகும்!

அந்த ஏழு நாட்கள் நமது பிரதிஷ்டையின் முழுமையைக் குறிக்கின்றன, அதாவது மரணபரியந்தமான நமது அர்ப்பணிப்பைக் குறிக்கின்றன. இந்தக் காலப்பகுதி முழுவதும், பூர்வகால ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் மிகவும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ள அந்த நிலைமைக்குள்ளேயே நாம் தரித்திருக்க வேண்டும்; ஆம்! அந்த உன்னதமானவரின் மறைவிடத்தில், சர்வவல்லவருடைய நிழலிலேயே தங்கியிருக்க வேண்டும் **(சங். 91:1)**. ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதுச் சிருஷ்டிகளாகிய நாம், நிஜமான 'பிரகாரத்திற்குள்ளோ' (Court) அல்லது **'பாளயத்திற்குள்ளோ'** (Camp) செல்லும்படிக்கு வெளியே வந்துவிடக்கூடாது. இந்தக் கட்டளையை மீறுவது என்பது தெய்வீகச் சித்தத்திற்குக் கீழ்ப்படியாமல் போவதாக இருக்கும், அதோடுகூட, அது நம்மை மரணத்திற்கு ஏதுவானவர்களாகவும் மாறச் செய்திடும். மேலும், இந்தக் காலம் முழுவதும், நாம் மற்றவர்களுக்குச் சரியானதாக மற்றும் முறையானதாக இருக்கும் சாதாரண உணவுகளை (அடையாளமாகக் கூறப்பட்டுள்ளது) தவிர்த்து, தேவன் தாமே நமக்காகப் பிரதிஷ்டைப் பலிகளுள்ள கூடையில் வழங்கிய சத்தியம் எனும் புளிப்பில்லாத அப்பத்தைப் புசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

# பாகம் பன்னிரெண்டு

## எண்ணாகமம் 9:15-23; 10:1-28
## (எண்ணாகமம் 3:25, 26, 31, 32, 36, 37)

"வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமானபோது, வாசஸ்தலத்தின்மேல் அக்கினிமயமான ஒரு தோற்றமுண்டாயிற்று; அது விடியற்காலமட்டும் இருந்தது. இப்படி நித்தமும் இருந்தது; பகலில் மேகமும், இரவில் அக்கினித்தோற்றமும் அதை மூடிக்கொண்டிருந்தது. மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம்பண்ணுவார்கள்; மேகம் தங்குமிடத்தில் இஸ்ரயேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள். கர்த்தருடைய கட்டளையின் படியே இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; மேகம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள். மேகம் சிலநாள் மாத்திரம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்கியிருந்து, கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணப் படுவார்கள். மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து, விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள்; பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாணப்படுவார்கள். மேகமானது இரண்டுநாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம் பண்ணாமல் பாளயமிறங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணப்படுவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணம்பண்ணுவார்கள்; கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிடுகிறபடியே கர்த்தருடைய காவலைக் காத்துக்கொள்வார்கள்." (எண்ணாகமம் 9:15 - 23)

"கர்த்தர் மோசேயை நோக்கி: சபையைக் கூடிவரவழைப்பதற்கும் பாளயங்களைப் பிரயாணப்படுத்துவதற்கும் உபயோகமாக இரண்டு வெள்ளிப்பூரிகைகளைச் செய்துகொள் வாயாக; அவைகள் ஒரே வெள்ளித்தகட்டால் செய்யப்படவேண்டும். அவைகளை ஊதும்போது, சபையாரெல்லாரும் ஆசரிப்புக் கூடாரவாசலில் உன்னிடத்தில் கூடிவரவேண்டும். ஒன்றை மாத்திரம் ஊதினால் இஸ்ரயேலில் ஆயிரவர்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் உன்னிடத்தில் கூடிவரக்கடவர்கள். நீங்கள் அவைகளைப் பெருந்தொனியாய் முழக்கும்போது, கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக்கடவது. அவைகளை நீங்கள் இரண்டாந்தரம் பெருந்தொனியாய் முழக்கும்போது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக் கடவது; அவர்களைப் பிரயாணப்படுத்துவதற்குப் பெருந்தொனியாய் முழக்கவேண்டும். சபையைக் கூட்டுகிறதற்கு நீங்கள் ஊதவேண்டியதேயன்றி பெருந்தொனியாய் முழக்க வேண்டாம். ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள்; உங்கள் தலைமுறைதோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது. உங்கள் தேசத்தில் உங்களைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்துக்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கக்கடவீர்கள்; அப்பொழுது உங்கள் தேவனாகிய

கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவுகூரப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள். உங்கள் மகிழ்ச்சியின் நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்க தகனபலிகளும் சமாதானபலிகளும் செலுத்தப்படும் போது பூரிகைகளை ஊதவேண்டும்; அப்பொழுது அவைகள் உங்கள் தேவனுடைய சமுகத்தில் உங்களுக்கு ஞாபகக்குறியாயிருக்கும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றார். இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய்ப் புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று. இப்படியே கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்டபடி முதல் பிரயாணம்பண்ணினார்கள். யூதா சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே முதல் புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மினதாபின் குமாரன் நகசோன் தலைவனாயிருந்தான். இசக்கார் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூவாரின் குமாரன் நெதனெயேல் தலைவனாயிருந்தான். செபுலோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏலோனின் குமாரன் எலியாப் தலைவனாயிருந்தான். அப்பொழுது வாசஸ்தலம் இறக்கிவைக்கப்பட்டது; அதைக் கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள். அதற்குபின்பு ரூபன் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்குச் சேதேயூரின் குமாரன் எலிசூர் தலைவனாயிருந்தான். சிமியோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூரிஷதாயின் குமாரன் செலூமியேல் தலைவனாயிருந்தான். காத் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குத் தேகுவேலின் குமாரன் எலியாசாப் தலைவனாயிருந்தான். கோகாத்தியர் பரிசுத்தமானவைகளைச் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்; இவர்கள் வந்து சேருமுன் மற்றவர்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணுவார்கள். அதற்குப்பின்பு, எப்பிராயீம் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மியூதின் குமாரன் எலிஷாமா தலைவனாயிருந்தான். மனாசே சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குப் பெதாசூரின் குமாரன் கமாலியேல் தலைவனாயிருந்தான். பென்யமீன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குக் கீதெயோனின் குமாரன் அபீதான் தலைவனாயிருந்தான். அதற்குப்பின்பு, தாண் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி சகல பாளயங்களுக்கும் பின்னாக அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர் தலைவனாயிருந்தான். ஆசேர் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஓகிரானின் குமாரன் பாகியேல் தலைவனாயிருந்தான். நப்தலி சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏனானின் குமாரன் அகீரா தலைவனாயிருந்தான். இஸ்ரயேல் புத்திரர் புறப்பட்டபோது, இவ்விதமாய்த் தங்கள் தங்கள் சேனைகளின்படியே பிரயாணம் பண்ணினார்கள்." (எண்ணாகமம் 10:1 – 28)

"ஆசரிப்புக் கூடாரத்திலே கெர்சோன் புத்திரரின் காவலாவது: வாசஸ்தலமும், கூடாரமும், அதின் மூடியும், ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவும், வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத் தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் தொங்குதிரைகளும், பிரகாரவாசல் மூடுதிரையும், அவைகளின் வேலைகளுக்கெல்லாம் உரிய அவைகளின் கயிறுகளுமே... அவர்களுடைய காவலாவது: பெட்டியும், மேஜையும், குத்துவிளக்கும், பீடங்களும், ஆராதனைக்கேற்ற பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளும், தொங்குதிரையும், அதினுடைய எல்லா வேலைகளுக்கும் ஏற்றவைகளுமே. ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன்

**எலெயாசார் என்பவன் லேவியருடைய தலைவர்களுக்குத் தலைவனாய்ப் பரிசுத்த ஸ்தலத்தைக் காவல்காக்கிறவர்களுக்கு விசாரிப்புக்காரனாயிருக்கவேண்டும்... அவர்களுடைய காவல் விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும் அதினுடைய எல்லாப் பணிமுட்டுகளும், அதற்கடுத்தவைகள் அனைத்தும், சுற்றுப்பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளுமே.'' (எண்ணாகமம் 3:25, 26, 31, 32, 36, 37)**

## பகுதி ஒன்று

சீனாய் மலையடிவாரத்தில் இஸ்ரயேலர் சஞ்சரித்தபோது, அங்கே நடந்த சம்பவங்களிலிருந்து தேவனுடைய நீடிய சாந்தமும் பொறுமையுமுள்ள இரக்க சுபாவம் குறித்த அருமையான பாடம் நமக்குக் கிடைக்கின்றது. இஸ்ரயேலர் வேண்டுமென்றே கீழ்ப்படியாமல் போய், ஒரு பொன் கன்றுக்குட்டியை உண்டாக்கி, அதற்கு முன்பாகப் பணிந்து ஆராதித்து, தேவனோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறலானார்கள். **"மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்'' (யாத். 20:4, 5)** என்று தேவன் அவர்களிடம் திட்டவட்டமாகக் கூறியிருந்தும், தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்ணால் பார்க்கக்கூடிய ஒரு சொரூபத்தை நாடலானார்கள்.

> **விசுவாசம்** என்பது கண்காணாதவை சம்பந்தப்பட்ட விஷயமாகும் – கண் காணாதவை குறித்தே விசுவாசத்தைப் பயிற்றுவிக்க முடியும், ஏனெனில் காணுதல் என்பது ஒன்றைக் குறித்த அறிவைக் கொண்டுவருகிறது, அந்த அறிவு விசுவாசத்தினை முடிவுக்குக் கொண்டு வருகிறது.

இப்படியாக, இஸ்ரயேலர் மோசேயின் கரத்தினில் தங்கள் தண்டனையைப் பெற்றுக் கொண்ட பிறகு, தேவன் தமக்காக ஒரு வாசஸ்தலத்தை, அவர்கள் பாளயத்தின் மத்தியில் அமைப்பதற்கு அவர்களுக்கு அனுமதி அளித்தார் – அங்கே அவருடைய பிரசன்னம் மேகஸ்தம்பத்தின் மூலம் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இந்தப் பிரசன்னத்தைக் குறித்து நாம் பின்வரும் வசனப்பகுதியில் வாசிக்கிறோம்:

**எண். 9:15, 16 – "வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமானபோது, வாசஸ்தலத்தின்மேல் அக்கினிமயமான ஒரு தோற்றமுண்டாயிற்று; அது விடியற்காலமட்டும் இருந்தது. இப்படி நித்தமும் இருந்தது; பகலில் மேகமும், இரவில் அக்கினித்தோற்றமும் அதை மூடிக் கொண்டிருந்தது.''**

இதன்படி, பாளயத்திலிருந்த எந்தவொரு இஸ்ரயேலனும் தங்கள் மத்தியில் தேவன் இருக்கிறாரா இல்லையா என்பது குறித்து எந்தக் கவலையும்படத் தேவையில்லாதிருந்தது;

ஏனெனில், பகலிலும்சரி இரவிலும்சரி, அவன் தன் முகத்தை ஆசரிப்புக்கூடாரத்தை நோக்கித் திருப்பினானேயானால், அங்கே தெய்வீகப் பிரசன்னத்தின் செல்வாக்குகள் தங்கள் மத்தியில் இருந்து தங்களைப் பாதுகாத்து வருவதை அவனால் தன் கண்களால் காணவும், தன் உள்ளுணர்வினால் உணர்ந்துகொள்ளவும் முடிந்தது!

ஒருவேளை யாரேனும் இது சம்பந்தமாக கவலையோ அச்சமோ கொண்டிருந்தாரே யானால், அது அந்த நபர் தன் முகத்தைத் தேவனை நோக்கித் திருப்பத் தவறினதையே சுட்டிக்காட்டியது. இது நமக்கு எவ்வளவு பெரிய பாடமாக இருக்கிறது! நாமும் இரவுபகல் என எப்போதும் தேவனை நம் இருதயத்தில் குடிகொள்ளச்செய்திருந்தால், அவர்தம் கையால் நம்மை அரவணைத்து, பாதுகாத்து, ஆற்றித்தேற்றிடுவதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். ஒருவேளை ஏதோவொரு காரணத்திற்காக நம்மால் நம் இருதயங்களை அவருக்கு நேராய்த் திருப்ப முடியாது போகும் சமயத்தில்தான், எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை நம்மால் உணர முடிவதில்லை; இதற்குக் காரணம் தேவன் என்று சொல்ல முடியாது (அவரோ எப்போதும் நம் உடனிருப்பவராக இருக்கிறார்).

இங்கே, மன்னிப்பு பெறப்படாத பாவத்தைச் (unjudged sin) செய்துவிட்டு, குற்ற உணர்விலும் பயத்தின் கீழும் காணப்படும் ஓர் இஸ்ரயேலன், தன் அக்கிரமத்தினால் பாளயத்தில் யேகோவா தேவனுடைய பிரசன்னம் காணப்பட்ட அந்த இடத்தினை ஏறெடுத்துப் பார்க்க முடியாமலும், துணியாமலும், தன் சமாதானத்தை முற்றிலுமாக இழந்தவனாயும் காணப்பட்டிருக்கக்கூடும் என்பது உறுதி. நம்மைப் பொறுத்தவரையிலும்கூட இது உண்மையாக இருக்கிறது, மன்னிப்பு பெறப்படாத பாவம் (unjudged sin) நம்மிடம் காணப்படும் போது, நம்மால் நம்முடைய இருதயங்களை ஜெபத்தில் தேவனிடம் உயர்த்த முடிவதில்லை: நாம் பயப்படுகிறோம், நம் சமாதானத்தை இழக்கிறோம். ஆம்! தேவனுடைய பிரசன்னம் ஏற்படுத்தும் தாக்கம் இப்படிப்பட்டதாகவே இருக்கிறது. இயேசு சொன்ன அந்தப் பரிசுத்த ஆவியே, **பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்தப் போகிறது. (யோவான் 16:8)**

ஆனால், ஒருவருக்குக் குற்றவுணர்வு, கண்டிப்பு, தண்டனை மற்றும் நியாயத்தீர்ப்பாக அமைந்த அந்தச் சமுகமானது மற்றவருக்கோ மகிழ்ச்சி, சமாதானம், ஆறுதல் மற்றும் ஐக்கியத்திற்கான சமுகமாகக் காணப்பட்டது. ஆம் பிரியமானவர்களே! கருத்தாய்ப் பின்வரும் கேள்விகளை நமக்குள் நாம் கேட்டுப்பார்ப்போமாக: பரிசுத்த ஆவி நம் ஆத்துமாக்களுக்கு உண்மையிலேயே சமாதானம் கூறுகிறதா? அதை நம்மால் உணர முடிகிறதா? ஒருவேளை இல்லையென்றால், ஏன் இல்லை? (**குறிப்பு**: யோசிக்கலாம்! நம்மை நாம் நிதானித்துப் பார்க்கலாம் சகோதர சகோதரிகளே!)

இப்போது கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், பாளயத்தில் கர்த்தருடைய பிரசன்னத்தைச் சுட்டிக்காட்டிய இதே மேகமானது, இஸ்ரயேலருக்கு ஒரு வழிகாட்டியாகவும், அவர்களைக் குறித்த தேவ சித்தம் என்ன என்பதை வெளிப்படுத்திக் காண்பிப்பதாகவும் இருந்தது. அவர்கள் **எப்பொழுது நகர** வேண்டும் அல்லது **எப்பொழுது, எங்கே தங்க** வேண்டும் என்பதையெல்லாம் அது அவர்களுக்குச் சுட்டிக்காட்டியது, இதுகுறித்து நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

**எண். 9:17 – 23 – "மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம்பண்ணுவார்கள்; மேகம் தங்குமிடத்தில் இஸ்ரயேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; மேகம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள். மேகம் சிலநாள் மாத்திரம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் போது, கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்கியிருந்து, கர்த்தருடைய கட்டளையின் படியே பிரயாணப்படுவார்கள். மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து, விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள்; பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாணப்படுவார்கள். மேகமானது இரண்டு நாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரயேல் புத்திரர் பிரயாணம் பண்ணாமல் பாளயமிறங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணப்படுவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணம் பண்ணுவார்கள்; கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிடுகிறபடியே கர்த்தருடைய காவலைக் காத்துக்கொள்வார்கள்."**

ஆம் பிரியமானவர்களே! தேவனுடைய பரிசுத்த ஆவி நம்மை ஆற்றித் தேற்றுவதற்கு மாத்திரம் அல்லாமல், நமக்குக் கற்றுக் கொடுக்கவும், நம்மை வழிநடத்தவும், நாம் எப்பொழுது தரித்து நிற்க வேண்டும் மற்றும் எப்பொழுது முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதை நமக்கு அறிவுறுத்தவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. **தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜீவிப்பதே எவராலும் எதுவாலும் அழிக்க முடியாத அந்தச் சமாதானத்தை நமக்குத் தருகின்றது**. இயேசு உதிர்த்த வார்த்தைகளை நாம் இங்கே நினைவு கூருகிறோம்:

**யோவான் 14:26, 27 – "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (நினைப்பூட்டும்). சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக."**

மீண்டுமாக:

**யோவான் 16:13 – "சத்திய ஆவியாகிய அவர் (அது) வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (நடத்தும்); அவர் (அது) தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (அறிவிக்கும்)."**

* * * * * * * * * *

தன் அன்றாடப் பணிகளில் மூழ்கியிருக்கும் இஸ்ரயேலன் ஒருவன், வாசஸ்தலத்தின் மீதான மேக நகர்வைக் கவனிக்காமல் தவறவிடுவதற்கு வாய்ப்புள்ளது. அப்படிப்பட்டவர்கள் உட்பட அனைத்து இஸ்ரயேலரின் கவனத்தை ஈர்க்கும் விதமாக, ஆசாரியர் சமிக்கைகளாகவும்

அழைப்பொழியாகவும் (alarms) பயன்படுத்தக்கூடிய இரண்டு வெள்ளிப் பூரிகைகளைச் செய்யும்படி தேவன் மோசேக்குக் கட்டளையிட்டிருந்தார்.

**எண். 10:2, 8 – "சபையைக் கூடி வரவழைப்பதற்கும் பாளயங்களைப் பிரயாணப் படுத்துவதற்கும் உபயோகமாக இரண்டு வெள்ளிப் பூரிகைகளைச் செய்துகொள்வாயாக; அவைகள் ஒரே வெள்ளித்தகட்டால் செய்யப்படவேண்டும்... ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள்; உங்கள் தலைமுறைதோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது."**

இங்கே இந்த வெள்ளிப் பூரிகைகள் இரண்டும் ஒரே மற்றும் அதே வெள்ளித்தகட்டினால் செய்யப்பட்டவை, அதாவது ஒரே வெள்ளித்தகடு இரண்டு பூரிகைகளாகச் செய்யப்பட்டன என்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை இந்தக் கருத்து சரியாக இருக்குமேயானால், தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தின் மிக அழகான அடையாளத்தை இங்கே நம்மால் காண முடியும். "தேவனுடைய வார்த்தை" என்பது **ஒன்றுதான்**, அது பழைய ஏற்பாட்டிலிருந்தோ, புதிய ஏற்பாட்டிலிருந்தோ அல்லது இரண்டிலுமிருந்தோ ஒலிக்கப்படலாம். உண்மையுள்ள உடன் ஆசாரியன் ஒருவன் இந்தப் பூரிகைகளை நமக்காக ஊதுவது எவ்வளவு அவசியமாக இருக்கிறது! ஒருவேளை நம்முடைய மந்தமான சோம்பல் நிலையிலிருந்தோ அல்லது நம்முடைய அனுதின வேலைகளில் மூழ்கியிருக்கும் நிலையிலிருந்தோ நம்மை விழித்தெழுப்பி, நம்மைக் குறித்துள்ள தேவனுடைய சித்தம் என்ன என்பதை முழுமையாக உணரச் செய்வதற்கான ஓர் எச்சரிக்கை ஒலியாகக்கூட அது அமையலாம். அதேசமயம், கர்த்தர் இந்த வரிசையை மாற்றியமைத்து, நம்முடைய சகோதர சகோதரிகளை அவர்களுடைய தீய வழிகளிலிருந்தும் தவறுகளிலிருந்தும் மீட்டெடுக்கும்படிக்கு, உண்மையுள்ள உடன் ஆசாரியர்களாக மிகுந்த மனத்தாழ்மையோடு இந்தப் பூரிகைகளை ஊதுவதற்கான பாக்கியத்தை நமக்கும்கூட அளித்திடலாம். பின்வரும் வார்த்தைகளை நாம் நினைவில் கொள்வோமாக:

> "பூர்வகால இஸ்ரயேலரின் ஒவ்வொரு அசைவையும் அந்த வெள்ளிப் பூரிகை தீர்மானிக்கவும் ஒழுங்குப்படுத்தவும் செய்தது. இப்போதும் சபைக்குத் தேவையான எல்லாவற்றையும் தேவனுடைய சாட்சியே தீர்மானிக்கவும் ஒழுங்குப்படுத்தவும் வேண்டியிருக்கிறது. அந்த வெள்ளிப் பூரிகை அக்காலத்து ஆசாரியரால் ஊதப்பட்டது. அந்தத் தேவனுடைய சாட்சி இப்போது ஆசாரிய ஐக்கியத்தின் மூலம் அறியப்படுகிறது. கிறிஸ்தவனுக்குத் தெய்வீகச் சாட்சியை மீறிச் செயல்படுவதற்கோ நகருவதற்கோ உரிமை கிடையாது. அவன் கர்த்தருடைய வார்த்தைக்காகக் காத்திருக்க வேண்டும். அது கிடைக்கும் வரை அவன் அமைதியாய்த் தரித்து நிற்க வேண்டும். அது கிடைத்தவுடன், அவன் **முன்னேறிச் செல்ல** வேண்டும். அக்காலத்தில் தேவன் தம் ஜனங்களுக்கு எவ்வளவு தெளிவாகத் தம்முடைய சித்தத்தைத் தெரியப்படுத்தினாரோ, அவ்வளவு தெளிவாக இப்போதும் போராடி வருகிற தம் ஜனங்களுக்குத் தம்முடைய சித்தத்தைத் தெரியப்படுத்த வல்லவராயிருக்கிறார், தெரியப்படுத்தியும் வருகிறார். உண்மைதான், இப்போது அது பூரிகை ஒலியாலோ அல்லது மேக நகர்வாலோ அல்ல, மாறாக அவருடைய வார்த்தையினாலும் ஆவியினாலுமே நடைபெறுகிறது. நம்முடைய பிதா புலன்களால் உணரக்கூடிய எதைக் கொண்டும் நம்மை

வழிநடத்துவதில்லை, மாறாக, ஆவிக்குரிய காரியங்கள் மூலமாகவே அவர் தம் சித்தத்தை நமக்குத் தெரியப்படுத்துகிறார்." (Charles Henry Mackintosh Commentary)

* * * * * * * * * *

**எண். 10:11, 12, 13, 17, 21 – "இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய்ப் புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று. இப்படியே கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்டபடி முதல் பிரயாணம்பண்ணினார்கள்... அப்பொழுது வாசஸ்தலம் இறக்கிவைக்கப்பட்டது; அதைக் கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்... கோகாத்தியர் பரிசுத்தமானவைகளைச் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்; இவர்கள் வந்து சேருமுன் மற்றவர்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணுவார்கள்."**

நாம் நம்முடைய தியானத்தைத் தொடர்வதற்கு முன்பாக – லேவி கோத்திரத்தின் மூன்று முக்கியப் பிரிவுகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளதால் – லேவியரின் வரலாற்றில் சிலவற்றைச் சுருக்கமாகப் பார்த்துவிட்டு மீண்டும் தியானத்தைத் தொடருவது நலமாக இருக்கும்.

**"பொன் கன்றுக்குட்டியை"** நிறுவி தேவனுக்கு எதிராகக் கீழ்ப்படியாமல் போன இஸ்ரயேலரை மோசே தண்டித்த காரியத்தில், அவர்களில் சிலர், குறிப்பாக ஜனங்களின் தலைவர்கள் மோசேயை எதிர்த்து கலகம் செய்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதற்கு இசைவாக நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

**யாத். 32:26 – "பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்."**

அங்கே லேவி கோத்திரத்தார் அவரிடத்தில் கூடிவந்து, இப்படியாகத் தங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் கொண்டார்கள். ஆனால், அழைப்பிற்குப் பதிலளிப்பது மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. **"நாங்கள் கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறோம்"** என்ற தங்கள் அறிக்கையின் நேர்மையை அவர்கள் நிரூபிக்க வேண்டியிருந்தது, அதற்கேற்ப மோசே பின்வருமாறு கூறுவதாகக் காண்கிறோம்:

**யாத். 32:27 – "அவன் அவர்களை நோக்கி: உங்களில் ஒவ்வொருவனும் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பாளயமெங்கும் உள்ளும் புறம்பும் வாசலுக்கு வாசல் போய், ஒவ்வொருவனும் தன்தன் சகோதரனையும் ஒவ்வொருவனும் தன்தன் சிநேகிதனையும் ஒவ்வொருவனும் தன்தன் அயலானையும் கொன்றுபோடக்கடவன் என்று இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்."**

மேலும், **"லேவியின் புத்திரர் மோசே சொன்னபடியே செய்தார்கள்; அந்நாளில் ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள்" (யாத். 32:28)** என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு சிறிது காலத்திலேயே தேவன் மோசேயிடம் பின்வருமாறு கூறியதில் எந்த ஆச்சரியமுமில்லை:

**எண். 3:11, 12 – "பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரயேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரயேல் புத்திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன்; அவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறார்கள்."**

தேவனுடைய உயர்ந்த நோக்கங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றும்பொருட்டு, இந்த லேவியர் முதலில் ஆசரிப்பு ரீதியாகச் (ceremonially) சுத்திகரிக்கப்பட்டனர், அதன் பிறகு அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, ஆரோனால் "**கர்த்தருக்கு முன்பாக**" காணிக்கையாக ஒப்படைக்கப்பட்டார்கள். அவ்வாறு செய்த பிறகே அவர்களால் வாசஸ்தலத்தின் உண்மையான ஊழியத்திற்குள் நுழைய முடிந்தது. **(எண். 8:21, 22)**

தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் இது எப்பேர்ப்பட்ட ஒரு சித்திரமாகக் காணப் படுகிறது! நாம் "**கர்த்தருடைய பட்சத்தில்**" இருக்கிறோம் என்று அறிவிப்பது மாத்திரம் போதாது, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவருடைய காரணத்திற்கும் நோக்கங்களுக்கும் விரோதமான அனைத்தையும் நம்மை விட்டகற்றும்படிக்கு, வெட்டி எறியும் வகையில் ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இது **நமக்குள்** ஒரு கிரியை நடைபெற வேண்டுமென்று அழைக்கிறது – அதாவது, கிறிஸ்துவின் சாற்றுவிக்கப்பட்ட நீதியின் மூலம் கிடைக்கும் **சுத்திகரிப்பு நமக்குள் நடைபெற வேண்டுமென்று** அழைக்கிறது; அதோடுகூட, இது **நம்மால்** செய்யப்பட வேண்டிய ஒரு கிரியையும் முன்வைக்கிறது – என்னவெனில், **மாம்சத்திலும் ஆவியிலும் உள்ள எல்லா அசுத்தங்களையும் தொடர்ந்து கழுவி அகற்றி, உலகத்தால் கறைபடாமல் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்** என்பதேயாகும். இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டு, கறைபடாத வஸ்திரங்களுடனேகூட, நாம் நமது பிரதான ஆசாரியனாகிய இயேசுவின் கரங்களில், கர்த்தருக்குப் பிரியமான காணிக்கையாகவும், அவருக்கும் அவருடைய வாசஸ்தலத்திற்கும் ஊழியம் செய்ய அர்ப்பணிக்கப்பட்ட லேவியராகவும் மாறுகிறோம்.

எல்லா லேவியரும் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் என்றாலும், கர்த்தர் அவர்களுக்குள்ளும் சில வேறுபாடுகளை ஏற்படுத்தினார் – இது ஆவிக்குரிய லேவியரிடையே நிலவக்கூடிய சில வேறுபாடுகளைக் காட்டுவதற்காய் ஏற்படுத்தப்பட்டது.

1. **கெர்சோன் புத்திரரிடம்** மூடுதிரைகள், தொங்குதிரைகள் போன்றவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை அவர் ஒப்படைத்திருந்தார். இந்தப் பணியைச் செய்ய அவர்களுக்கு இரண்டு வண்டில்களும் நான்கு மாடுகளும் வழங்கப்பட்டன. **(எண். 3:25 – 26; 4:24 – 26; 7:7)**

2. **மெராரி புத்திரரிடம்** பலகைகள், தூண்கள், பாதங்கள், கயிறுகள் மற்றும் முளைகள் (pins) போன்றவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை அவர் ஒப்படைத்திருந்தார்; இந்தப் பணியைச் செய்ய அவர்களுக்கு நான்கு வண்டில்களும் எட்டு மாடுகளும் வழங்கப்பட்டன. **(எண். 3:36, 37; 4:31, 32; 7:8)**

3. இருப்பினும், **கோகாத் புத்திரரிடம்** பெட்டி (Ark), மேஜை, பீடங்கள், குத்துவிளக்கு போன்றவற்றுடன் தொங்குதிரையையும் (The Vail) பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது; ஆனால், இந்தச் சுமையை வண்டிகளில் கொண்டு செல்லாமல்,

கோகாத் புத்திரர் தங்கள் தோள்களில் சுமந்து செல்ல வேண்டியிருந்தது. **(எண். 3:31; 4:15; 7:9)**

**எண். 10:17, 21 – "அப்பொழுது வாசஸ்தலம் இறக்கிவைக்கப்பட்டது; அதைக் கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்... கோகாத்தியர் பரிசுத்தமான வைகளைச் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்; இவர்கள் வந்து சேருமுன் மற்றவர்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணுவார்கள்."**

மூடுதிரைகள், பலகைகள், கயிறுகள், முளைகள் (pins) போன்றவற்றைச் சுமப்பதற்காய் நியமிக்கப்பட்டு, அதற்காக வண்டில்களும் எருதுகளும் வழங்கப்பட்ட கெர்சோன் மற்றும் மெராரி புத்திரர், **<u>இத்தாமாரின் மேற்பார்வையின் கீழ்</u>** வைக்கப்பட்டார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. **(எண். 4:28, 33)** அறிவொளி கிடைக்கப்பெற்ற பரிசுத்தவான்களின் மனதிற்கு, இது "திரள்கூட்ட வகுப்பாருடைய" ஒரு முக்கியப் பண்பைச் சித்தரிப்பதாக இருக்கிறது. வாசகரே, சற்று ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்! ஒருவேளை இதில் ஏதேனும் அர்த்தம் இருக்குமேயானால், தங்கள் தோள்களில் சுமையைச் சுமந்த கோகாத் புத்திரர் **<u>எலெயாசாரின் மேற்பார்வையின் கீழ்</u>** வைக்கப்பட்டிருந்த காரியத்திலும் ஓர் அர்த்தம் இருக்க வேண்டுமல்லவா! **(எண். 4:16)** தேவ பிள்ளையே, இதைச் சிந்தித்துப் பார்! கோகாத் புத்திரருக்கு மட்டுமே அந்தப் பொன் பணிமுட்டுகளைச் சுமக்கும் பாக்கியம் கிடைத்தது. இங்கே நம்மால் "சிறுமந்தை" வகுப்பாரின் ஒரு முக்கியப் பண்பினைக் காண முடிகிறதல்லவா?

இத்தாமார் மற்றும் எலெயாசார் ஆகிய இருவருமே முறையே "திரள் கூட்டத்திற்கும்," "சிறுமந்தைக்கும்" நிழல்களாக இருக்கிறார்கள் என்பதைப் பின்வரும் விளக்கம் தெளிவாகக் காட்டுகின்றது:

ஆரோனுக்கு முதலில் நான்கு குமாரர்கள் இருந்தார்கள், அவர்கள் அனைவரும் ஆசாரியத்துவத்திற்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தனர். **(லேவி. 8 மற்றும் 9 ஆகிய அதிகாரங்கள்)** அவர்களில் நாதாப் மற்றும் அபியூ ஆகிய இருவரும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து வந்த அக்கினியால் அழிக்கப்பட்டனர். **(லேவி. 10:1, 2)** "ஆசரிப்புக்கூடார நிழல்கள்" (Tabernacle Shadows) புத்தகத்தின் 1914 பதிப்பின், **T119** – என்கிற ஆங்கிலப் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பில் பாஸ்டர் ரசல் அவர்கள் குறிப்பிடுவது போல, இந்த இரு குமாரரும்:

> "பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களில் - தேவையான இருதயத்தின் உயரிய தரநிலையை அடையத் தவறி, அதன் விளைவாக நித்திய ஜீவனுக்குப் பாத்திரராகாமல், அதற்கு மாறாக அழிவு நிலைக்குள் (இரண்டாம் மரணம்) அமிழ்ந்துபோகக்கூடிய திரளான ஜனங்களை நிழலாகக் காண்பிக்கின்றனர்."

இது உண்மையானால், மீதமுள்ள இரு குமாரராகிய இத்தாமாரும் எலெயாசாரும், பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களில் மீதமுள்ள இரண்டு வகுப்பாராகிய "திரள் கூட்டம்" மற்றும் "சிறுமந்தை" என்பவர்களை நிழலாகக் காண்பிக்க

வேண்டும். இந்த உடன் ஆசாரியரின் பெயர்களிலேயே இது எவ்வளவு அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள்.

**நாதாப்** என்றால் "தாராளமான/வரம்பற்ற" (liberal) என்று பொருள்.

**அபியூ** என்றால் "அவர் (அதாவது தேவன்) பிதாவாயிருக்கிறார்!" (he, (i.e. God) is father!) என்று பொருள்.

இந்தப் பெயர் விளக்கமும், அவர்கள் தொடர்புடைய நிழலும் **(லேவி. 10:1 – 11)** என்ன தெரிவிக்கிறதெனில்: இந்த இரண்டு குமாரரால் (நாதாப் மற்றும் அபியூ, நிழலில் மரணத்திற்கு ஏதுவான பாவத்தைச் செய்தவர்கள்) பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகுப்பார், ஒரு காலத்தில் தேவனைத் தங்கள் பிதாவாக அங்கீகரித்திருந்தாலும், பிற்பாடு உலகப்பிரகாரமான ஆவியைத் தங்கள் இருதயங்களிலும் வாழ்க்கையிலும் அனுமதித்ததன் பேரில் மிகவும் வரம்பற்றவர்களாகவும் (liberal), ஆழமற்ற மேலோட்டமானவர்களாகவும் (broad) மாறிவிடுகின்றனர். இந்தத் தேவையில்லாத ஆவி முதலில் அவர்களின் ஆவிக்குரிய பார்வையை மங்கச் செய்து, பின்னர் அதை அழித்தே விடுகின்றது. எனவே, அவர்களால் "**பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசப்படுத்தி**" பார்க்க **(லேவி. 10:10)** முடியாமல் போகின்ற காரணத்தால், கர்த்தருக்கு ஏற்புடைய தூபத்தைத்தான் தாங்கள் காட்டுவதாகத் தாங்களே நினைத்துக் கொண்டு, மாபெரும் மீறுதலுக்கு ஆளாகி, இரண்டாம் மரணத்திற்குப் பாத்திரராகிறார்கள்.

**எலெயாசார்** என்றால் "தேவனால் உதவப்பட்டவர்" (helped of God) என்று பொருள்.

ஆரோனின் குமாரரில் எலெயாசார் மட்டுமே நேரடியாக பிரதான ஆசாரியப் பதவியை அடைந்தார். இவர் இங்கே "சிறுமந்தை" வகுப்பாரைக் குறிக்கிறார் – இவர்கள் தேவனால் உதவப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்ட "இராஜரிக ஆசாரியத்துவத்தில்" அங்கத்துவமடைகின்றார்கள்.

**இத்தாமார்** என்றால் "பேரீச்ச மரங்களின் தீவு" (island of palms) என்று பொருள்.

பேரீச்ச மரங்கள் (குருத்தோலைகள்) வெற்றியின் அடையாளங்களாகும்! இத்தாமார் ஒருபோதும் பிரதான ஆசாரியப் பதவியை அடையவில்லை. உண்மையில், ஏலியின் காலம் வரைக்குமே, அவருடைய வம்சாவளியில் யாரும் அதை அடையவில்லை (**குறிப்பு**: இது கணிசமான நீண்டதொரு காலப்பகுதியாகும்). இவ்வாறாக, இந்த நிழலில் அவர்கள் பிரதான ஆசாரியத்துவத்தில் நுழையவில்லை என்றுள்ள காரணத்தால், அந்த வகுப்பார் ஆசாரியத்துவத்தைச் சுதந்தரித்துக்கொள்ள மாட்டார்கள் என்ற உண்மையானது இந்நிழலினால் உறுதிப்படுத்தப்படுகிறது – அதேசமயம், அவர்கள் பிற்காலங்களில் பிரதான ஆசாரியத்துவத்தில் நுழைந்தார்கள் என்பது இந்த நிழலுக்குச் சம்பந்தமில்லாத ஒன்றாக இருப்பதினால், பொருத்தத்தின் பேரிலும் குழப்பத்தைத் தவிர்க்க வேண்டியும், அவர்களின் நுழைவு இந்த நிழலின்

ஆராய்ச்சியிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறது. இவ்வாறு, "திரள் கூட்டத்தினர்" சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் "இராஜரிக ஆசாரியத்துவத்தில்" அங்கத்துவம் அடையத் தவறினாலும், சிங்காசனத்திற்கு முன்பாகக் குருத்தோலைகளை (palms) ஏந்தி நிற்கும் பாக்கியத்தை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். **(வெளி. 7:9)**

## பகுதி இரண்டு

### எண்ணாகமம் 4:5 - 14

**"பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூடி, அதின்மேல் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியைப்போட்டு, அதின்மேல் முற்றிலும் நீலமான துப்பட்டியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சி, சமுகத்தப்ப மேஜையின்மேல் நீலத் துப்பட்டியை விரித்து, தட்டுகளையும் தூபக்கரண்டிகளையும் கிண்ணங்களையும் மூடுகிற தட்டுகளையும் அதின்மேல் வைப்பார்களாக; நித்திய அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது. அவைகளின்மேல் அவர்கள் சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சி, இளநீலத் துப்பட்டியை எடுத்து, குத்துவிளக்குத்தண்டையும், அதின் அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், அதற்குரிய எண்ணெய்ப் பாத்திரங்களையும் மூடி, அதையும் அதற்கடுத்த தட்டுமுட்டுகள் யாவையும் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடிக்குள்ளே போட்டு, அதை ஒரு தண்டிலே கட்டி, பொற்பீடத்தின்மேல் இளநீலத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சி, பரிசுத்த ஸ்தலத்தில் வழங்கும் ஆராதனைக்கேற்ற சகல தட்டு முட்டுகளையும் எடுத்து, இளநீலத் துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியினால் மூடி, தண்டின்மேல் கட்டி, பலிபீடத்தைச் சாம்பலற விளக்கி, அதின்மேல் இரத்தாம்பரத் துப்பட்டியை விரித்து, அதின்மேல் ஆராதனைக்கேற்ற சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள்துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலசங்களையும், பலிபீடத்திற்கடுத்த எல்லாப் பாத்திரங்களையும், அதின்மேல் வைத்து, அதின்மேல் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சக்கடவர்கள்." (எண்ணாகமம் 4:5 – 14)**

நமது தியான ஆராய்ச்சியில், வாசஸ்தலத்தின் பணிமுட்டுகள் கோகாத் புத்திரரின் தோள்களின்மேல் சுமந்து செல்லப்பட்டதைக் குறித்து ஏற்கெனவே பார்த்திருந்தோம். அந்த நிழலான சித்திரத்தில், **கோகாத் புத்திரர்** என்பவர்கள் மிகவும் குறிப்பாக, **பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய புத்திரருக்கு** நிழலாக இருந்தார்கள், பணிமுட்டுகள் என்பது அவர்களுக்கு அளிக்கப்பட்ட விலையேறப்பெற்ற சத்தியங்களை அடையாளப்படுத்தின. ஆனால், அது ஒரு பொதுவான சித்திரமேயாகும்; இனி இங்கே முன்வைக்கப்படப்போகிற சித்திரத்துடன் அதனைக் குழப்பிக் கொள்ளக்கூடாது. இப்போது பார்க்கப்போகும் சித்திரத்தில், பணிமுட்டுகள்/பாத்திரங்கள் தெய்வீகச் சத்தியங்களை அல்ல, மாறாக, தேவனுடைய பரிசுத்தவான்களையே குறிக்கின்றன – இது தேவனோடும், இஸ்ரயேலின் பாளயத்தோடும் (உலகம்), அவர்கள் எந்த வகையில் தொடர்பிலிருக்கிறார்கள் என்பதன் அடிப்படையில் குறிக்கின்றன.

இந்தப் பணிமுட்டுகளுக்கும் (பாத்திரங்கள்), தேவனுக்கும் இடையே உள்ள உறவானது ஆசரிப்புக் கூடாரத்திற்குள் அந்தப் பணிமுட்டுகள் இடம்பெற்றிருந்த இடங்கள் மூலம் அழகாகச் சித்தரிக்கப்படுகின்றது. இவ்வாறு தூப பீடம், சமுகத்தப்ப மேஜை போன்றவை வெளியே இருப்பவர்களின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருந்தாலும், அவை தேவனுக்கு முன்பாக வெளியரங்கமான பொன் பணிமுட்டுகளாகவும், பரிசுத்த ஸ்தலத்தில் அவருடைய ஆசாரியர்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு உதவியாகவும் இருந்தன.

பரிசுத்த ஸ்தலமானது "**திரைக்கு இப்பக்கம்**" இருக்கும் சபையின் தற்போதைய "பகுதியளவு/குறைவான" (in part) நிலையைக் குறிக்கிறது – அதாவது, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட, ஆனால், இன்னும் ஆவியினால் பிறக்காத நிலையைக் குறிக்கிறது. உடன்படிக்கைப் பெட்டியைப் பொறுத்தவரையில், அதுவும் மறைக்கப்பட்டிருந்தது; வெளியே இருப்பவர்களுக்கு மாத்திரமல்லாமல், இன்னும் "திரைக்கு அப்பால்" கடந்து செல்லாத பரிசுத்த ஸ்தல வகுப்பாருக்கும்கூட அது மறைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அது தேவனுக்கு வெளியரங்கமாக இருக்கும் ஒரு பொன் பணிமுட்டாக, மகா பரிசுத்த ஸ்தலத்தில் அவரோடு மிக நெருக்கமாக அடையாளம் காணப்பட்டது.

மகா பரிசுத்த ஸ்தலமானது சபையின் வருங்கால "பரிபூரண" (perfect) நிலையை, அதாவது "திரைக்கு அப்பால்" ஆவியினால் பிறந்து மகிமைப்படுத்தப்பட்ட நிலையைக் குறிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் **கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் (13:10)** இதை: "**நிறைவானது** (பூரணமானது/perfect) **வரும்போது குறைவானது** (in part) **ஒழிந்துபோகும்**" என்று கூறுகிறார்.

தகனபலிபீடம், பிரகாரத்திற்குள் நுழைந்த அனைவரின் பார்வைக்கும் வெளியரங்கமாயிருந்தாலும், பரிசுத்த வாசஸ்தலத்தைச் சுற்றியிருந்த மூடுதிரைக்கு வெளியே இருப்பவர்களுக்கு அது மறைக்கப்பட்டிருந்தது. பாளயம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு நகர்ந்தபோது, அந்தப் பீடம் சபையார் நடுவே சுமந்து செல்லப்பட்டாலும், (பயணத்தின்போது) அவர்கள் காணாதபடிக்கு அதன் மேல் மூடுதல் போடப்பட்டு மறைக்கப்பட்டது. அப்படியே, தண்ணீர்த் தொட்டி (laver) என்ற ஒன்றைத் தவிர, வாசஸ்தலத்தின் மற்ற எல்லாப் பணிமுட்டுகளும் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு நகரும்போது மூடப்பட்டே எடுத்துச் செல்லப்பட்டன.

பிரகாரத்தில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பலிபீடம், பாஸ்டர் ரசல் அவர்கள் (T22) குறிப்பிடுவது போல, கிறிஸ்துவின் ஈடுபலியைக் குறிக்கிறது. "**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த**" மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின் பரிபூரண மனுஷீகத்தை அடையாளப்படுத்தும்விதமாக அது செம்பினால் (copper) செய்யப்பட்டிருந்தது. **(1 தீமோ. 2:5, 6)** கிறிஸ்து மரணபரியந்தம் உண்மையுள்ளவராக இருந்ததைத் தேவன் கண்டார்; அப்படியே நிஜமான பிரகாரத்திலுள்ள நீதிமான்களாக்கப்பட்ட விசுவாசிகள் அனைவரும் அதைக் காணும்படி அழைக்கப்படுகின்றனர். அதன் காரணமாகவே தேவன் அவரை இராஜ்யத்தின் இராஜரிக மேன்மைக்கு உயர்த்தி, "**இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.**" **(பிலி. 2:9, 10)** இருப்பினும், பூமியின்

கோடிக்கணக்கான மக்களில் வெகு சிலரே இயேசுவை ஒரு வரலாற்று நாயகனாகவோ, தாழ்மையான நசரேயனாகவோ, மற்றவர்களைப் போன்ற சாதாரண ஒரு மாம்சீக மனிதனாகவோ பார்த்திருக்கிறார்கள். அவர்கள் கண்டதெல்லாம் பலிபீடத்தின் மேல் இருந்த தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடுதலை மட்டுமே; நிழலான பலிபீடத்தை மூடியிருந்த இரத்தாம்பரத் துணியைப் போன்றே, அவருடைய உண்மையான இராஜரிகமும் அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. நிழலிலும்கூட இது அவ்வாறே ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது.

**எண். 4:1, 5, 13, 14 – "கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூடி, பலிபீடத்தைச் சாம்பலற விளக்கி, அதின்மேல் இரத்தாம்பரத் துப்பட்டியை விரித்து, அதின்மேல் ஆராதனைக்கேற்ற சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள்துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலசங்களையும், பலிபீடத்திற்கடுத்த எல்லாப் பாத்திரங்களையும், அதின்மேல் வைத்து, அதின்மேல் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சக்கடவர்கள்."**

உண்மைத்தன்மை மற்றும் நேர்மைக்கு (faithfulness, fidelity, and loyalty) இளநீலம் மிகவும் பொருத்தமான அடையாளமாகவும்; மரணத்தைக் குறிப்பதற்குச் சிவப்பு ஏற்ற அடையாளமாகவும் இருக்கின்ற அதே வேளையில், இந்தப் பலிபீடத்தை மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட துணியில், இவை இரண்டில் ஒன்றுகூட பயன்படுத்தப்படவில்லை என்பதைக் கவனிக்கலாம். மாறாக, இராஜரிகத்தின் அடையாளமான இரத்தாம்பரமே (Purple) பயன்படுத்தப்பட்டது; இது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! எப்படியெனில், இளநீலமும் சிவப்பும் கலப்பதால் இரத்தாம்பரம் உருவாவது போல, மரணபரியந்தம் இயேசு காண்பித்த உண்மைத்தன்மை (இளநீலம் + சிவப்பு) அவருடைய உயர்த்தப்படுதலுக்கு (இரத்தாம்பரம்) காரணமாக அமைந்தது.

வாசஸ்தலத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருந்த பணிமுட்டுகளைப் (பாத்திரங்களைப்) பற்றி நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

**எண். 4:7 – 12 – "சமுகத்தப்ப மேஜையின்மேல் நீலத் துப்பட்டியை விரித்து, தட்டுகளையும் தூபக்கரண்டிகளையும் கிண்ணங்களையும் மூடுகிற தட்டுகளையும் அதின்மேல் வைப்பார்களாக; நித்திய அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது. அவைகளின்மேல் அவர்கள் சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சி, இளநீலத் துப்பட்டியை எடுத்து, குத்துவிளக்குத்தண்டையும், அதின் அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், அதற்குரிய எண்ணெய்ப் பாத்திரங்களையும் மூடி, அதையும் அதற்கடுத்த தட்டுமுட்டுகள் யாவையும் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடிக்குள்ளே போட்டு, அதை ஒரு தண்டிலே கட்டி, பொற்பீடத்தின்மேல் இளநீலத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சி, பரிசுத்த ஸ்தலத்தில் வழங்கும் ஆராதனைக்கேற்ற சகல தட்டு முட்டுகளையும் எடுத்து, இளநீலத் துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியினால் மூடி, தண்டின்மேல் கட்டி,"**

வாசஸ்தலத்தில் இருந்த அதே தட்டுமுட்டுகளே பிரயாணத்தின்போது எடுத்துச்

செல்லப்பட்டன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்; இருப்பினும், ஒருபுறம் வாசஸ்தலம் ஆராதனைக்காக நிறுவப்பட்டிருக்கும்போது, அங்கே வைக்கப்பட்ட அந்தத் தட்டுமுட்டுகளுக்கும் தேவனுக்கும் இடையே இருந்த தொடர்பிற்கும், மறுபுறம் பிராயணத்தின்போது எடுத்துச் செல்லப்பட்ட தட்டுமுட்டுகளுக்கும் இஸ்ரயேலருக்கும் இடையே இருந்த தொடர்பிற்கும் பெரிய வித்தியாசம் இருந்தது. பிரயாணத்தின் போது மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட துப்பட்டிகளின் இரகசியம் இதில்தான் அடங்கியுள்ளது!

மூடியிருந்தாலும் மூடியிருக்காவிட்டாலும் பொன் குத்துவிளக்கு குத்துவிளக்கு தான் – அதில் மாற்றம் ஒன்றுமில்லை, ஆனால் (பயன்பாட்டில் வித்தியாசம் இருந்தது), அது வாசஸ்தலத்திற்குள் ஆசாரியருக்கு வெளிச்சம் கொடுக்கப் பயன்படுத்தப்பட்டது, இஸ்ரயேலரின் பயணத்திலோ அவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கப் பயன்படுத்தப்படவில்லை; சமுகத்தப்ப மேஜை எப்போதும் நித்திய அப்பத்தின் மேஜையாகவே இருந்தது, அதன் மேல் அப்பமும் இருந்தது, ஆனால் அது வாசஸ்தலத்திற்குள் ஆசாரியரைப் போஷித்தது போல, இஸ்ரயேலரின் பிரயாணத்தின்போது அவர்களுக்கு அது உணவாகவில்லை.

தகனபலிபீடத்தைப் போலவே, குத்துவிளக்கு, சமுகத்தப்ப மேஜை மற்றும் தூப பீடம் ஆகிய அனைத்தும் பாளயத்தின் வழியாக மூடப்பட்டே எடுத்துச்செல்லப்பட்டன; ஒவ்வொரு முறையும் அவற்றின் வெளிப்புற மூடியாக **கடல்பசுத் தோல்** (seals' skin) காணப்பட்டது. இது, நாம் இந்த உலகத்தின் ஊடே பிரயாணம் செய்யும்போது, தேவன் நம்மை எவ்வாறு பார்க்கிறார் என்கிற நமது உண்மையான நிலைப்பாட்டுக்கும், உலகம் நம்மை எவ்வாறு பார்க்கிறது என்கிற நிலைப்பாட்டுக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம் உள்ளது என்பதை தெரிவிப்பதுபோல் உள்ளது. தேவன் நமது விசுவாசத்தைப் பார்க்கிறார், அவர் நமது கீழ்ப்படிதலையும் பலியையும் அங்கீகரிக்கின்றார், அவற்றின் காரணமாகவே நமக்குத் திவ்விய சுபாவத்தை (பொன் பணிமுட்டுகளில் இது நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது) அருளுகிறார். உலகத்தால் நம்மை அவ்வாறு பார்க்க முடியாது, ஏனெனில் அதினால் காண முடிவதெல்லாம் நமது மாம்சத்தை மட்டுமே. பிரதிஷ்டை மற்றும் ஆவியின் ஜெநிப்பித்தலின் மூலம் ஆவிக்குரிய பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையும் பாக்கியம் பெற்று, அங்கே பொன் குத்துவிளக்கினால் அறிவொளி கிடைக்கப்பெற்று, பொன் மேஜையின் சமுகத்தப்பத்தை உண்டு, பொற்பீடத்தில் தூபத்தைப் போடுபவர்களும் இந்தப் பாத்திரங்களில் / பணிமுட்டுகளில் பிரதிநிதித்துவப்படுத்தப் படுகிறார்கள். இங்கே பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்திலிருந்து சிலவற்றை மேற்கோள் காட்ட விரும்புகிறோம்:

> "**<u>பொன் மேஜை</u>:** பரிசுத்த ஸ்தலத்தில் சமுகத்தப்பத்தைத் தாங்கி நின்ற இந்த மேஜையானது, இயேசு மற்றும் அப்போஸ்தலர் உட்பட, '**ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிற**' (தமிழில் – **பிலி. 2:14**) கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப் பட்டவர்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த சபையையும் குறிக்கிறது. உடன்படிக்கை செய்யப்பட்ட ஆவிக்குரிய நிலைக்குள் நுழையும் அனைவரையும் போஷித்து, பலப்படுத்தி, அறிவொளி அடையச் செய்வதே இந்த யுகத்தில் மெய்யான சபையின் மாபெரும் பணியாக இருக்கிறது. கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். **(வெளி. 19:7)** இந்த யுகத்தில் உலகிற்குச் சாட்சி கொடுப்பது என்பது இரண்டாம் பட்சமானதும், தற்செயலாகக் கூடுதலாக வரும்

(incidental) பணி மாத்திரமே ஆகும். சுவிசேஷ யுகம் (பாவநிவாரணபலிகளுடன் கூடிய நிஜமான பாவநிவாரண நாள்) முடிந்த பிறகு, தேவனுடைய ஏற்ற காலத்தில் உலகிற்கான முழு ஆசீர்வாதமும் பின்தொடர்ந்துவரும்.

**பொன் குத்துவிளக்கு:** இது பொன் மேஜைக்கு எதிரே நின்று பரிசுத்த ஸ்தலத்திலிருந்த அனைவருக்கும் வெளிச்சம் தந்தது; இது ஒரே பொன் தகட்டினால் அடித்துச் செய்யப்பட்ட ஒன்றாகும். இதில் ஏழு கிளைகள் இருந்தன, ஒவ்வொன்றும் ஒரு விளக்கு வீதம் என மொத்தம் ஏழு விளக்குகளைக் கொண்டிருந்தன; இது பரிபூரணம் அல்லது முழுமையைக் குறிக்கும் எண்ணாகும். இது தலையாகிய இயேசுவையும், அவர் மனுஷரிலிருந்து திவ்விய (பொன்) சுபாவத்தில் பங்கடையச் செய்யும்படிக்காய்ப் பிரித்தெடுத்து வருகிற 'சிறுமந்தை' வகுப்பாரின் கடைசி அங்கத்தினன் உட்பட ஒட்டுமொத்த சபையையும் சேர்த்தே குறிக்கிறது. நமது கர்த்தர் கூறும்போது: **'நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்' (வெளி. 1:20)**, ஆசியா மைனரிலுள்ள ஏழு சபைகளால் அடையாளப்படுத்தப்பட்ட ஏழு நிலைகள் அல்லது வளர்ச்சிகளைக் கொண்ட ஒரே சபையைக் குறிக்கிறது. ஆம்! அந்தக் குத்துவிளக்கு முதற்பேறான வர்களின் முழுச் சபையையும் குறிக்கிறது – பெயர்ச் சபையைக் குறிக்காமல், மாறாக பரலோகத்தில் பேர் எழுதப்பட்ட மெய்யான சபையை, மெய்யான ஒளி ஏந்திகளை, 'இராஜரிக ஆசாரியக்கூட்டத்தாரைக்' குறிக்கிறது.'' (ஆங்கிலப் பக்கம் – T115)

''**பொன் தூபபீடம்:** பரிசுத்த ஸ்தலத்திலிருந்த இந்தப் பீடமானது சிறுமந்தையை, அதாவது தற்போதைய பலியிடும் நிலையில் இருக்கும் பிரதிஷ்டை செய்யப்பட்ட சபையைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக, இந்தப் பீடத்திலிருந்து தேவனுக்கு ஏற்புடைய சுகந்த தூப வாசனை எழும்பினது – இது ஆசாரியர்களின் மனப்பூர்வமான ஆராதனைகளை, அவர்களின் துதிகளை, அவர்களின் மனப்பூர்வமான கீழ்ப்படிதலை – தேவ மகிமைக்காக அவர்கள் செய்யும் அனைத்துக் காரியங்களையுமே குறிக்கிறது.'' (ஆங்கிலப் பக்கம் –T120)



வாசஸ்தலத்தின் மேலிருந்த **கடல்பசுத் தோல்** மூடியானது கிறிஸ்துவின் மாம்சத்தை – அவருடைய மனுஷீகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது என்று முந்தைய பாடத்தில் சொல்லப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். இது ஒருவருடைய மனதில், "நமது மாம்சம், நமது மனுஷீகமும் கூட **வாசஸ்தலத்தின் தட்டுமுட்டுகளை மூடியிருந்த கடல்பசுத் தோல்** மூடிகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட முடியுமா?" என்கிற கேள்வியை எழுப்பலாம். இது, சபை கிறிஸ்துவின் சரீரமாகக் காணப்பட்டு, பாவநிவாரண பலியில் (sin-offering) அவரோடு கூடப் பாடுபடுகிறது என்று சொல்லும் அனைத்து வேதாகமச் சாட்சியங்களையும் உறுதிப்படுத்துகிற வெகு அழகிய படமொன்றை நமக்குக் கொடுக்கிறது. **கிறிஸ்து இயேசு ஈடுபலியாக மரித்தார், ஆனால் பாவநிவாரண பலியாகப் (sin-offering) பாடுபட்டார்**. முந்தையதில் (ஈடுபலியில்) சபைக்குப் பங்கில்லை; ஆனால், பிந்தையதில் (பாவநிவாரண பலியில்) பங்குபெறும்படி அவள் மிகவும் கிருபையாக அழைக்கப்பட்டுள்ளாள். அவள் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறாள் அல்லவா? அவரோடு கூட ஆளுகை செய்யும்படி அவரோடு கூடப் பாடுபடவும், தன் எஜமானோடு உடன் பலிசெலுத்தவும் செய்கிறாள் அல்லவா? **(உரோ. 6:3 – 5; கலா. 3:27; உரோ. 8:17; 2 தீமோ. 2:11, 12)**. பாவநிவாரண பலியில் (sin-offering) பங்குபெறும் இந்த உபதேசமே குறிப்பாக வாசஸ்தலத்திலும் அதன் ஆசரிப்புகளிலும் நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

பாவநிவாரண நாளில் செலுத்தப்படும் பாவநிவாரண பலியானது காளை மற்றும் வெள்ளாட்டுக்கடா ஆகிய இரண்டு மிருகங்களைக் கொண்டிருந்தது. இந்த இரண்டு மிருகங்களும் ஒரே பலிபீடத்தில், ஒரே ஆசாரியரால் பலியிடப்பட்டன; அவற்றின் இரத்தம் ஒரே விதமாக பரிசுத்த ஸ்தலத்தின் வழியாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு செல்லப்பட்டு, பாவநிவிர்த்தி செய்யும்படி கிருபாசனத்தின் மேலும் அதற்கு முன்பாகவும் தெளிக்கப்பட்டது. காளை, கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்தியது, வெள்ளாட்டுக்கடா (அதாவது கர்த்தருடைய ஆட்டுக்கடா) அவருடைய "சரீரமாகிய" சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்த இரண்டு மிருகங்களும் உண்மையில் ஒரே பாவநிவாரண பலியாக, அதாவது இயேசுவின் பாவநிவாரண பலியாகக் காணப்பட்டன (Jesus' sin-offering)! இப்படியாகவே மாம்சத்திலுள்ள சபை கிறிஸ்துவோடு அடையாளம் காணப்படுகிறது. தலையாகிய அவர் எவ்வளவு மெய்யாகக் கிறிஸ்துவாக இருக்கிறாரோ, அவ்வளவு மெய்யாக அவருடைய "சரீரமாகிய" சபையும் கிறிஸ்துவாக இருக்கிறாள். சவுல் சபையைத் துன்புறுத்துவதற்காகத் தமஸ்குவிற்குச் சென்று கொண்டிருந்தபோது, இயேசுவும் அவரிடம் "**சவுலே, சவுலே, நீ என்னை** (ME) **ஏன் துன்புறுத்துகிறாய்?" (அப். 9:4)** என்று சொன்னாரே!

எனவே, நாம் மெய்யாகவே கிறிஸ்து இயேசுவோடு ஒன்றாயிருக்கிறோமென்றால், நாமும் **வாசஸ்தலத்தின் தட்டுமுட்டுகளை மூடியிருந்த** கடல்பசுத் தோல் மூடுதல்களிலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது; அதேசமயம், **வாசஸ்தலத்தின் (கூடாரத்தின்) மேலிருந்த கடல்பசுத் தோல்** மூடுதலில் நாம் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை என்பதும் தெளிவாக உள்ளது. நமது நீதிமான்களாக்கப்பட்ட மற்றும் பிரதிஷ்டை செய்யப்பட்ட மனுஷீகம் அல்லது மாம்சம் இவ்வாறாக கிறிஸ்து இயேசுவோடு அடையாளம் காணப்பட்டாலும், உலகம் அதை அவ்வாறு அடையாளம் காண்பதில்லை, அடையாளம் காணவும் முடியாது. கிறிஸ்து மாம்சத்தில் பாடுபடுவதை உலகம் கண்டிருந்தாலும், அது அதனை அடையாளங்கண்டு கொள்ளவில்லை. இதுகுறித்து பாஸ்டர் ரசல் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

"...இந்த யுகத்தில் தலையும் சரீரமுமாகிய ஆசாரியன் பாவநிவாரண பலியாகப் பாடுபடுவதை உலகம் கண்டிருக்கிறது. இயேசு மாம்சத்தில் (பாவநிவாரண பலியாக – sin-offering) யூதருக்கு வெளிப்பட்டார்; பவுல் கூறுவது போல, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் அனைவராலும், '**சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசு ... விளங்குகிறார்' (2 கொரி. 4:11)** என்று சொல்ல முடியும். ஒட்டுமொத்த கிறிஸ்துவும் இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டு மாம்சத்தில் பாடுபடுவது போலவே, அவர்கள் உலகிற்கு முன்பாகவும் ஒன்றாய் மகிமைப்படுத்தப்படுவார்கள்." (ஆங்கிலப் பக்கம் –T84)

உண்மைத்தன்மை மற்றும் விசுவாசத்தை அடையாளப்படுத்தும் இளநீலத் துணியானது, "**செம்பு**" பலிபீடத்தின் மூடுதலைத் தவிர, மற்ற அனைத்து தட்டுமுட்டுகளின் மூடுதல்களிலும் காணப்படுகிறது. **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி. 11:6)** என்பதை இது சொல்வது போலத் தெரிகிறது. நிச்சயமாகவே, நாம் அவரைப் பிரியப்படுத்தவில்லையானால், வாசஸ்தல ஏற்பாட்டில் நம்மால் எங்குமே காணப்பட முடியாது... இந்த இளநீலத் துணியானது அதன் மேல் **கடல்பசுத் தோல்** மூடி இருந்தவரை வெளியே தெரியவில்லை. அப்படியே, பரிசுத்தவான்களின் உண்மைத்தன்மை தேவனால் அங்கீகரிக்கப் பட்டாலும், நமது மாம்சத்தை மட்டுமே பார்ப்பவர்களுக்கு அது மறைக்கப்பட்டதாகவே இருக்கிறது.

சமுகத்தப்ப மேஜையானது ஒரு நீல நிறத் துணியாலும் ஒரு சிவப்பு நிறத் துணியாலும் மூடப்பட்டிருந்தது. இங்கே மரணபரியந்தம் உண்மையுள்ளவர்கள் இறுதியில் உயர்த்தப்படும் இராஜரிக மற்றும் இராஜாக்குரிய கனத்தைக் குறிக்கும் வகையிலான (பிரகாரத்தின் பலிபீடத்தைப் போர்த்தியிருந்த) இரத்தாம்பரத் துணியை நம்மால் காண முடிவதில்லை. இந்த மேஜையால் குறிக்கப்படுபவர்கள் இனிப் பிரகார நிலையில் காணப்படாமல், மாறாக பரலோகப் பொக்கிஷத்தைத் தங்கள் மண்பாண்டத்தில் பெற்றிருப்பவர்களாக, பரிசுத்த ஸ்தலத்தில் காணப்படுகிறார்கள். மேஜை பொன்னினால் செய்யப்பட்டிருந்த காரியத்தில், திவ்விய சுபாவம் எனும் பொக்கிஷம் குறிக்கப்படுகிறது. இருப்பினும், இந்த மேஜையை மூடுவதற்கு ஒரு நீலத் துணியும் ஒரு சிவப்பு நிறத் துணியும் பயன்படுத்தப்பட்டதில் ஓர் அர்த்தம் இருக்கவே செய்கிறது. தகனபலிபீடத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள 'மரணபரியந்தம் உண்மையாயிருக்கும்' காரியம் என்பது வேறு, அங்கே மரணம் என்பது மனுக்குலத்திற்காக (பாளயம்) மரிப்பதைக் குறிக்கிறது; ஆனால் இங்கே உள்ள 'மரணபரியந்தம் உண்மையாயிருக்கும்' காரியம் என்பது சகோதரர்களுக்காக – அதாவது, தேவனுடைய ஆசாரியர்களாகப் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்பவர்களுக்காக – ஜீவனைக் கொடுப்பதைக் குறிக்கிறது. அத்தகைய ஆசாரியர்கள் கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கிறார்கள்.

இயேசு தம்முடைய ஜீவனை (உலகத்திற்காக மட்டுமல்லாமல்) தம்முடைய சரீரத்திற்காக, அது ஜீவனில் நிலைத்திருக்கும்படியாகக் கொடுத்ததுபோல, நாமும் சகோதர சகோதரிகளுக்காக நமது ஜீவனைக் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். "**அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:16).**

அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிப் பலியாவதில் மகிழ்ச்சியடைந்தார் என்பதைப் பின்வரும் அவருடைய வார்த்தைகளில் நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது: **“...பவுலாகிய நான் ஊழியக்காரனானேன். இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்தில் நிறைவேற்றுகிறேன்” (கொலோ. 1:23, 24).**

சகோதர சகோதரிகளுக்காகக் காட்டப்படும் அத்தகைய உண்மைத்தன்மை அவர்களின் ஆத்துமாக்களுக்குப் போஜனம் போன்றிருக்கும். இதனால்தான் நீல நிறத் துணியும் சிவப்பு நிறத் துணியும் இந்த மேஜையின் மூடிகளில் மட்டுமே காணப்படுகின்றனவே ஒழிய, பரிசுத்த ஸ்தலத்தின் மற்ற பணிமுட்டுகள் தொடர்பாகக் காணப்படுவதில்லை. இருப்பினும், ஏற்கெனவே பலமுறை கூறியது போல, மரணபரியந்தம் காண்பிக்கப்படும் அத்தகைய உண்மைத் தன்மையை உலகத்தால் மதித்துணர முடியாது, ஏனெனில் அவர்கள் **கடல்பசுத் தோல்** மூடுதலை – அதாவது நமது மாம்சத்தை, மனுஷீகத்தை – மட்டுமே பார்க்கிறார்கள்.

வாசஸ்தலத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் நின்ற ஒரேயொரு தட்டுமுட்டினைப் பற்றி நாம் பின்வரும் வசனப்பகுதியில் வாசிக்கிறோம்:

**எண். 4:5, 6 – “பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூடி, அதின்மேல் தகசுத்தோல் (கடல்பசுத் தோல்) மூடியைப்போட்டு, அதின்மேல் முற்றிலும் நீலமான துப்பட்டியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சி,”**

வாசஸ்தலத்தின் மற்ற தட்டுமுட்டுகளைப் போலல்லாமல், உடன்படிக்கைப் பெட்டியின் முழு வெளிப்புற மூடியாக இளநீலத் துணி காணப்பட்டது; அங்கே **தகசுத்தோல் (கடல்பசுத் தோல்)** மூடி வெளியே கொஞ்சமும் தெரியவில்லை. பெட்டியினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் நிலையை அடைந்தவர்கள் – அதாவது, திரைக்கு அப்பால் மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் நிலையை அடைந்தவர்கள் – தங்களை முன்னொரு காலத்தில் அறிந்தவர்களுக்கும், தங்களை வெறும் மாம்சீக மனிதர்களாகப் பார்த்தவர்களுக்கும், இனி மாம்சத்தில் காணப்பட மாட்டார்கள் என்பது எப்பேர்ப்பட்ட உண்மையாயிருக்கிறது! அவர்கள் தங்கள் உண்மைத்தன்மைக்கான பலனை, விசுவாசத்தின் ஜெயத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்; ஆனால், அது திரைக்கு அப்பால் நிகழ்கிறது என்பதையும், அந்தத் திரை மரணத்தைக் குறிக்கிறது என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும்.

அந்த நிழலில், **தகசுத்தோல் (கடல்பசுத் தோல்)** மூடியானது நீல நிறத் துணிக்கு அடியிலும், அதே சமயம் பெட்டியை நேரடியாக மூடியிருந்த திரைச்சீலைக்கு மேலேயும் இருந்ததைக் கவனித்திருப்பீர்கள். இது எத்துணை நேர்த்தியான அழகு சித்திரமாயிருக்கிறது! இது எதைக் கூறுவதுபோல் உள்ளதென்றால்: இந்தப் புதுச் சிருஷ்டிகள் இனி மாம்சத்தில் காணப்பட மாட்டார்கள், மாறாக முழுமையாகத் திவ்விய சுபாவத்தில் பங்கடைந்திருப்பார்கள்; இருப்பினும், **“மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது” (1 கொரி. 15:50)** என்கிற காரணத்தினால் அவர்களின் மாம்சம் திரைக்கு அப்பால் செல்லுவதில்லை. உண்மைத்தன்மையைக் குறிக்கும் நீல நிறத் துணி, பெட்டியின் வெளிப்புற

மூடியாக இருந்த காரியமானது, "இந்த வகுப்பார் உண்மையுள்ளவர்களாக இருந்தனர்," மேலும் மனுக்குலம் சீக்கிரத்தில் இதை அங்கீகரிக்கும்படி அழைக்கப்படும் என்பதைத் தெரிவிப்பது போலுள்ளது. இந்த ஆலய வகுப்பாரே (temple class) தங்கள் தலையாகிய கிறிஸ்து இயேசுவோடு கூடத் திரைக்கு அப்பால் மகிமைப்படுத்தப்படுவார்கள்.

**உரோமர் 11:33 – 36 – "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."**

-------------------------------



## மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்

**“கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்.” - உபாகமம் 31:8.**

“தேவனுடைய புத்திரர்கள் மீது காணப்படும் அவருடைய பராமரிப்பு மிகவும் குறிப்பிடும்படியான பராமரிப்பாகும்: அவர்களுடைய எல்லா நடைகளும் கர்த்தராலே உறுதிப்படுத்தப்படுகின்றன. மேலும், அவர்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது (லூக்கா 12:7). அவருடைய கண்கள் நீதிமான்கள் மீது நோக்கமாயிருக்கின்றன. மேலும், அவருடைய செவிகள் அவர்களுடைய ஜெபங்களுக்குத் திறந்திருக்கின்றன. இரட்சிப்பைச் சுதந்தரிக்கிறவர்களுக்கு என்று பணிவிடை செய்ய அவருடைய எல்லா தூதர்களும் பணிவிடையின் ஆவிகளாக அனுப்பப்பட்டுள்ளனர். அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும், தேவனை அன்பு செய்கிறவர்களுக்கும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடந்தேறும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பராமரிப்பு எத்துணை அருமையானதாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் காணப்படுகின்றது. மேலும் இவர்கள் இந்த வாக்குத்தத்தத்தை, தங்களுக்கான சோதனைகாலத்தின் முடிவுமட்டும் பெற்றிருக்கிறார்கள். தேவன் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கும் அனைவருக்கும் அவர் தகப்பனாயிருக்கிறார். அவருக்குப் புத்திரராய் இருப்பவர்களுக்கும், அவருக்கு அந்நியர்களாய் இருப்பவர்களுக்கும், அவருக்கு எதிரிகள் போல் இருப்பவர்களுக்கும் இடையே பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது.” R1561, c.1, p.4.